TL
V211,9mN03
N03.1
165400

உ

கணபதயே நம :

# THE VILLAGE OFFICERS' GAZETTE.

# கிராம உத்தியோகஸ்தர் கெஜட்டு.

மதராஸ் கவர்னமெண்டு தமிழ் ஜில்லாக்களிலுள்ள
கிராமாதிகாரிகளின் சீர்திருத்தத்திற்காக
மாதாந்தரம் வெளியிடப்படும்

புத். 1.] மதராஸ், ஜூன்௴ 1903௵ [நெ. 1.

## பத்திரிகா பீடிகை.

ஈஸ்வர சிருஷ்டிக்குட்பட்ட எல்லாஜீவராசிகளிலும் பகுத்தறிவாலும் பேசுந்தன்மையாலும் மனிதர் சிறப்புற்றிருக்கின்றனர். இப்படித் தொனிக்குறியவையாகத் தங்கள் கருத்துகளை பிறருக்குத் தெரிவிக்கிறது நாள்படநிற்பதற்குக் கூடாமல் அப்போதைக்கப்போதே மறந்துவிடுவதா யிருந்ததனால், இவைகளைத்தங்கள் பின்னிட்ட ஞாபகக்குறிப்புக்குச் சேமிக்கும்வகை எப்படி. யென்று யோசித்து அதன்முடிவாகத் தொனியளவில் வெளிப்படும் தங்கள் கருத்துகளை வரிவடிவில் அமைக்க ஆரம்பித்தனர். இப்படியமைத்ததை முதலில் எழுத்துகள் தொடரும் அளவிலும், பிறகு எழுத்துக்களாலாகிய சொற்கள் தொடரும் அளவிலும, அதன்பிறகு அநேகசொற்களடங்கவும் கருத்தின்முடிவைத்தெரிவிக்கும் வாக்கியரூபங்களிலும் கொண்டுமுடித்தனர். இப்படித் தங்கள் கருத்துகளைப் பூரணமாகத் தெரிவிக்கக்கூடிய வாக்கியங்களின் கூட்டத்தாலாகியதற்கே பாஷையென்று பெயு

ரிட்டனர். இத்தனைப்பருவத்தோடு மனிதர்கருத்துகளை முற்றுந்தெரிவிக்க வெளிவந்த இந்தபாஷையானது அங்கங்கே எப்படிமனிதர்கள் தேசவளப்பத்தாலும் மதவிளக்கத்தாலும், நடையுடைய நாகரீகாதிகளாலும் வேறுபட்டிருக்கின்றனரோ அப்படியேதானும் அநேகமாறுபாடுகளடைந்து வேறுவேறான பெயரால் வழங்கப்படுகின்றது. உலகத்திலே ஐரோப்பாகண்டத்தில் பிரான்சுமுதலிய பாஷைகளும், இங்கிலாந்தில் இங்கிலீஷுமுதலிய பாஷைகளும், ஆசியாவில் சீனம், துர்க்கி, பாரசீகம் முதலியபாஷைகளும், இன்னும் மற்றகண்டங்களிலெத்தனையோவிதபாஷைகளும், நாம்வசிக்கும் இந்தியாவில் ஹிந்துஸ்தான், பெங்காலி, உருடுமுதலிய வடதேசத்துபாஷைகளும் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம முதலிய தென்னாட்டுப்பாஷைகளும் அதிகநாகரீகமுடையவைகளாகச் செழிப்புற்றிருக்கின்றன. இத்தனைபாஷைகளுக்கும் மேலாகவிளங்கிச் சிறப்புற்று இணையற்றதாய்; எவ்வளவு கடினமான கருத்தானாலும் இரண்டொருவாக்கியங்களாலேயே எடுத்துக்காட்டிச் சுலபமாகத் தெரிவிக்கக்கூடியதாய்; இனியசந்தங்கொண்டு எங்கும் புகழ்பெற்ற சூரியனஸ்தமிக்காத இங்கிலீஷு ராச்சியத்தின் செல்வமாய் எல்லாராலும் எடுத்துக்கொண்டாடக்கூடியது இங்கிலீஷுபாஷையென்பது யாவருக்கும் தெரிந்தவிஷயமே. இந்தியாமுழுதிலும் எங்கும்பரவி, ஐரோப்பாவின் பிரான்சுபாஷையைப்போல, பிரசித்திபெற்ற இந்தராஜாபாஷையிலேதான் நம்மிந்தியர்களுக்கு வேண்டிய நானாவித ஆக்டுகளும, ரெகுலேஷன்களும், ஆர்டர்களும, போர்ட்டு ப்ரோஸீடிங்க்ஸுகளும் சர்க்குலர்களும் அப்போதைக்கப்போது வெளிப்படுகின்றன. இப்பாஷைபரவிய எந்தநாடும் வளப்பமுறவே, அதிலுள்ள ஜனங்களெல்லாம் நாகரீகம்பெற்று விருத்திக்குவருகிறார்கள். கல்வியறிவாற் சிறப்புற்றுச் செல்வமிகுதியைப் பெறுகிறார்கள். ஒவ்வொரு தேசமும் அதிகச்சிறப்பும் மேன்மையுமடைந்துசெழிப்புறுவதும் கல்விப்பெருக்கத்தால்தான். இதனால் குடிகள் அறிவுவிசாலிக்க

JL
V211,8 m N03
N03-1



வும் அநேகவிஷயங்களை அறியவேண்டுமென்ற அவாவோடே உலகத்திலுள்ள பத்திரிகைகளில் விசேஷமானவைகளையெல்லாம் அப்போதைக்கப்போது தருவித்து, வாசித்து, அங்கங்கே நடக்கும் விசேஷவர்த்தமானங்களையும், குடிகளின் க்ஷேமங்களையும், தேசவளப்பங்களையும் அந்தந்ததேசத்து ராஜாங்கத்தாருக்கும் குடிகளுக்கும் நடக்கும் விவகாரங்களையும், குடிகள் தங்களுக்கிருக்கும குறைபாடுகளைக் கவர்ன்மெண்டுக்குத் தெரிவித்து விதாயம்பெறும்வகைகளையும், தாங்கள்தங்கள் மேலதிகாரிகளிடம் நடந்துகொள்ளவேண்டிய முறைகளையும், அவர்கள் தங்களை எந்தவிதமான மரியாதையோடு நடத்தவேண்டுமோ அவைகளையும இன்னும் அநேக திருத்துப்பாடுகளையும் அதிகசுலபமாகவே தெரிந்துக்கொள்வதால் விசேஷ ஞானவந்தர்களாகி விவகாரவிஷயத்திலே விருத்திக்குவருகிறார்கள். எந்ததேசங்களில் இப்படி ஜனங்கள் கல்விமிகுதியால் அறிவுவிசாலிக்கவும் அபூர்வவிஷயங்களையெல்லாம் அறியவிரும்புகிறார்களோ அந்தத்தேசங்களில்தான் பத்திரிகைகள் ஆயிரக்கணக்காகவும் பதினாயிரக்கணக்காகவும் வெளிப்பட்டு, அவர்களுக்கு அநேகவித நன்மையை யளிக்கின்றன. இப்படிப்பட்ட தேசங்களிலொன்றாகிய இந்தியாவிலே இப்பத்திரிகைகள் இங்கிலாந்தில் வெளியாகிறதுபோல அவ்வளவு ஏராளமாய் வெளிவருகிறதில்லை. ஏதோசில பத்திரிகைகள் இங்கிலீஷிலும் தமிழிலும் தெலுங்கிலும் வெளிக்குவரவும், அவைகளால் நன்மையை யடைவதும் நமதுராஜதானியின் ஜில்லாக்களும், தாலுக்காக்களும், பிரதானநகரங்களுமாகவே யிருக்கின்றன. ஆனால் இங்கிலாந்து தேசத்திலே இப்படியில்லை. எல்லாருடைய கையிலும் இளஞ்சூரியன் வெயிலேறுவதற்குமுன்னே பேபர்கள் விளக்கக்காணலாம். ஆயிரக்கணக்காகவும் பதினாயிரக்கணக்காகவும் சம்பாதிக்கக்கூடிய அறிவாளிகள் கையிலும் பேபர்தான். அன்னாடம்வேலைசெய்து பொழுதுபோக்கும் உழைப்பாளியின் கையிலும் பேபர்தான். அங்கங்கே சிறுகிராமங்களிலேகூட மூலை

165400



முடுக்குகளில் வேலைசெய்து காலங்கழிப்பவர் கையிலும் பேப்பர்தான். அங்கங்கே கிராக்கி யில்லாமல் சும்மாநிற்கும் சத்த வண்டிகளி லமர்ந்திருக்கும் வண்டியோட்டுவோன்கூட அந்த [illegible] வேபோக்காமல் கையிலே பேபரோடிருப்பான். கடைச்சாமான் வாங்கப்போகும் சிறுமியர்கூடத் தாங்கள் திரும்பிவருகையில் பேப்பருங்கையுமாய் வருவார்களென்றால், எவ்வளவு பேபர் தினமொன்றுக்கு வெளியாகிறதென்பதை இதை வாசிக்கிறவர்களே இலேசாகத் தெரிந்துக்கொள்ளலாம். இதுபோலவே நம்மிந்தியாவிலும் அங்கங்கே பெரிய பெரிய கிராமங்களிலும் சிறுகிராமங்களிலும் உள்ளவர்களெல்லாம் இப்படிப்பட்ட பத்திரிக்கைகளிலும் தங்களுக்கென்றே அனேகவிஷயங்களடங்கிய பத்திரிகையொன்று வெளி வந்து பலன்தருவதால் எவ்வளவு விருத்தியையடைவதற்கு ஏதுவாயிருக்கிறது? பத்திரிகைகளின் நன்மைகளை தற்காலத்திலடைந்து வரும் ஜில்லாக்களையும், தாலூக்காக்களையும், பெரியபட்டணங்களையும்விட எவ்வளவோசிறந்து இவைகளுக்கெல்லாம் தாயகமாய் விளங்குவது கிராமங்களாக விருக்கிறதை யாவரும் அறிவார்கள். எப்படி ஒருராச்சியம் ஏற்படுத்துவதற்கு ஜில்லாக்களும், ஜில்லாக்கள் ஏற்படுவதற்கு தாலூக்காக்களும், அவசியமானவைகளாக விருக்கின்றனவோ, அப்படியே இத்தனைக்கும் ஆதாரமாய் அழகுபெறச்செய்வது கிராமங்களாக விருக்கின்றன. எப்படி நீர்மட்டங்கண்டு அடியிலிடப்பட்ட அஸ்திவாரத்தால் மேற்கட்டிடங்களெல்லாம் வலுப்பெற்று நீடித்து நிற்குமோ, அதுபோலவே ஒரு பெரியராச்சியமும் தன்உட்பிரிவுகளில் கடைசி அங்கமாகிய கிராமங்களெல்லாம் செழித்து க்ஷேமமடைவதால், வலுப்பெற்றுவிருத்திக்குவரும். பிரமாண்டமான ஒருஆலமரத்தின் ஏராளமானசாகைகள் (கிளைகள்) எல்லாம் துளிர்த்து இலைகள்விட்டு பச்சென்று விளங்கி துலைதூரத்துக்காக்ஷியாய்த் தோன்றுவதுபோல, பிறராச்சியங்கள் மதிக்கப்பிரபலங்கொள்ளும். லக்ஷக்கணக்காக ஜனங்களடர்ந்த துலைதூரங்களுக்கெல்லாம் வேண்டிய

JL
V2:8...



அளவுக்கு உணவாதிகளையும், சாமான்களையும் உவந்தளித்து, தாய்போலவிளங்குவதும் கிராமங்களே. கிராமவிளைச்சலில்தான் பட்டணவாசிகளெல்லாம் செழிப்புற்றிருப்பது. கலியாணப்பெண்ணானவள் தாய்வீட்டை நாடிச்சென்று நாலுநாளாகிலுந்தங்கி வருவதுபோல, நகரவாசிகளும் வருஷவாரியிலே தங்கள்தங்கள் தாயகமாகியகிராமாதிகளுக்குச்சென்று, சிலநாட்கள் அங்கேதங்கி, தங்கள் தங்கள் ஆயாசத்தைத் தீர்த்துக்கொள்வார்கள். இதனாலேயே செல்வச்செழிப்பும் நாகரீகச்சிறப்புமுற்ற தனவந்தர்களும் குணவந்தர்களும் பட்டணவாசிகளாகத் தற்காலத்தில் விளங்கினாலும், ஆதியிலே கிராமவாசிகளென்றே ஏற்படுகிறது. ஆகையினாலே அநேகதாலூக்காக்களும், ஜில்லாக்களும், அபாரசெல்வத்தோடும் அநேகவித சௌகரியத்தைக் கொண்டு அஷ்டலக்ஷ்மிகளும் தமதிஷ்டம்போலக் கொஞ்சிவிளையாடும் பிரதானப்பட்டணங்களும் விரும்பி எதிர்பார்க்கக்கூடிய ஆதாரபூதமாய் கைம்மாறுவேண்டாக் கார்முகில்போலத் தாராளமாக எதையுமளித்துத் தளராத்தனஞ்சயக்குன்றம்போல விளங்கியிருப்பவை கிராமங்களே. ஆகையால் இராச்சியத்தின் ஆதாரம்எங்கே என்றால், கிராமங்களே. இதனால்தான் கவர்ன்மெண்டார் கிராமங்களின் க்ஷேமவிஷயத்திலே அதிக கியாபகம்வைத்து, எப்போதும் அவர்கள்விருத்தியைநாடி, அடிக்கடி கவர்னர்அவர்கள் அந்தந்த ஜில்லாக்களிலுள்ள முக்கியபட்டணங்களையும், கிராமங்களையும் கவனிக்கும்படி நேரில்போய்ப்பார்த்து, குடிகள்குறைகளைக்கேட்டுப் பதிலளிப்பதும், போர்டார் அவர்களும் கலெக்டர்களும் அப்போதைக்கப்போது ப்ரோஸீடிங்சுகளும், ஸர்க்குலர்களும் பிரப்பித்து, சப்டிவிஷனல் ஆபீசர்களைக்கொண்டு அவைகளை அநுஷ்டானத்திற்குக் கொண்டுவந்து அவ்வளவு ஜாக்கிறதையாகப்பார்த்து வருகிறார்கள், அப்படி சப்டிவிஷனல் ஆபீசர்களால் அனுப்பிவிக்கும் உத்திரவுகளை யெல்லாம் நடவடிக்கைக்குக் கொண்டுவருவது கிராம உத்தியோகஸ்தர்களைப் பொறுத்ததாகவிருக்கிறது. ஆகையால் கிராம உத்தியோகஸ்தர்களா

கிய முனிசீப்புதார், மணியக்காரர், கணக்கப்பிள்ளை, பெரியதனக்காரர், நாட்டாண்மைக்காரர் முதலியவர்களை எல்லாம் கவர்ன்மெண்டு, போர்டு முதலான மேலானஇடங்களிலிருந்து பிறப்பிக்கப்படும் உத்திரவுகளைத்தெரிந்துகொள்ளும் சக்தியுடையவர்களாகி உலகவிஷயங்களையும் கவனித்துத் தூரதேசத்துச் சமாசாரங்களைக் கிரகித்துக் கல்விவிசாலிக்கவும், தங்களுக்குண்டாகியகுறைகளைஎல்லாம் நேராக மேலதிகாரிகளுக்குத் தெரிவித்து நன்மையையடையவும் கௌரவத்தைக்கொள்ளவும் அந்தந்தக் கிராமங்களுக்கும் அதிகச்சிறப்புண்டாகுமென்பதற்கு வேறுதிருஷ்டாந்தம் வேண்டுவதில்லை. ஆகையால் இப்படி இவர்கள் விருத்திக்குவருவதற்கும் ஷை விஷயங்களெல்லாம் அடங்கியபத்திரிகையொன்று மாதம் மாதம் புத்தகரூபமாக சொற்பவிலைக்கே வெளிக்குவந்து இவ்வளவு பயனுந் தருவதால், இதை யொவ்வொருகிராமாதிகாரியும் ஆதரித்து, முன்வந்து கையொப்பமிட்டு அபிவிருத்திக்குக் கொண்டுவரவேண்டுமென்பதே எமது கோரிக்கை.

ஆயிரக்கணக்காக அங்கங்கே பரவியுள்ள கிராமங்களிலே ஜனங்களுக்கு வேண்டிய க்ஷேமங்களைக்கருதி அதிகாரிகளாக விளங்கும் முனிசீப்பு, மணியம், கர்ணம், முதலிய அந்தஸ்துகளுக்கு கௌரதையை யதிகரிக்கச்செய்து அவர்களுக்குண்டாகிய அதிகாரத்தினளவை உயர்த்திக்காட்டித் திட்டம்பெறச்செய்வதோடு, தற்காலம் கவர்ன்மெண்டாரால் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் சொற்பசம்பளத்தையும் அதிகப்படுத்தி, உற்சாகத்தோடும் அவர்கள் வேலைகளை கவனிக்கச்செய்வதற்காக கவர்ன்மெண்டுக்கு மனுசெய்து கேட்டுக்கொள்ளுவது, கிராமமுனிசிப்பு முதலியவர்களுக்கு இவர்கள் மேலதிகாரிகளாகிய ரெவனியு இன்ஸ்பெக்டர், சப்மாஜிஸ்ட்ரேட், தாசில்தார் முதலானவர்களால் ஒழுங்கீனம, மரியாதைத் தாழ்வு முதலானவை நேரிடும்பக்ஷத்தில், அவைகளைப்பற்றி டிவிஷனல் ஆபீசர், கலெக்டர்,



ரெவினியு போர்டார் முதலியவர் கவனிப்புக்குக்கொண்டுவந்து பரிகாரம்பெறுவதும் இதுவரையிலும் வெளிவந்திருப்பதும் இனிமேல் வெளிவரப்போவதுமான ஆக்டுகளும் ரூல்சுகளும், கவர்ன்மெண்டார் ஆர்டர்களும், போர்ட்டு ப்ரோஸீடிங்க்ஸ்களும், ஜுடிஷியல் (ஹைகோர்ட்டார்) தீர்மானங்களும், பிரதிஜில்லாக்கலெக்டருடைய மாதமாதம் வெளியாகும் ஸர்க்குலர்களும் தெரிவிக்கப்படுவது, இதுவுமல்லாமல் துலைதூரத்துத் தந்திசமாசாரங்களும், விசேஷங்களும், கைத்தொழில், விவசாயம், கல்வி, வர்த்தகம் முதலியவைகள் அபாரகல்வியால் அதிகச்சிறப்புற்ற அறிவிற்சிறந்த அநேககனவான்களின் அபூர்வசரித்திரங்களும் நீதிமுறைகளும், பூகோளக்ககோளசாஸ்திர விளக்கங்களும் முனுசீப்பு கர்ணம்முதலான பரீக்ஷைக்குரிய புஸ்தகங்களின்விவரங்களும், அவைகளி லடங்கியுள்ள விஷயங்களை கிரகித்து பரிக்ஷையில் தாங்கள் செய்யவேண்டிய ஜவாப்புகளுக்கு வேண்டிய கவனக்குறிப்புகளும், ரெவினியு சம்பந்தமான மற்றுமுள்ள கிராம சட்டம் (விலேஜ் மானுயல்), தாலூக்காசட்டம் (தாலூக் மானுயல்) சம்பந்தமான கேள்விகளும், ஜவாப்புகளும் கிராமமுன்சீப்பு கோர்ட்டின் தீர்மானம், பிராதுகொடுக்கும்விதம், சாக்ஷி, வாக்குமூலம் வாங்கும் விவரம் முதலானவைகளை எப்படி நடத்தவேண்டுமோ அவைகளைத்தெரிவிக்கக்கூடிய விவரங்களின் மாதிரிகள், மற்றுமுள்ள விசேஷவர்த்தமானங்கள் இவைகளையெல்லாம் விவரமாய்த்தெரிவிப்பது ஆகிய இவைகளையெல்லாம் இந்த கிராம உத்தியோகஸ்தர் கெஜட்டில் கிராமாதிகாரிகளும் ஜனங்களும் அதிசுலபமாகத் தெரிந்துகொள்ளலாம்.

## இங்கிலீஷ் ராச்சியம்.

### இதனால் இந்துக்களுக்குண்டாயிருக்கிற பலவிதநன்மைகள்.

உலகத்தின் சப்ததீபங்களிலுஞ் சிறந்த ஜம்புதீபத்தின் மேற்குப்பாகத்தில் மகாஉன்னதமாகச்சிறந்துவிளங்குவது ஐரோப்பா

கண்டம். இதைத்தான் நம்முடைய பெரியகாவியமாகிய மகா
பாரதத்திலும், இராமாயணமுதலிய பெரியசரித்திரங்களிலும்
இளாவிருதகண்டம் என்று சிறப்பிக்கப்பட்டிருக்கிறது. கல்வியி
லும், நாகரீகத்திலும் மேன்மையுற்று வியாபாரத்தினால் அபிவிரு
த்திகொண்ட இந்தசெழித்தகண்டத்தின் வடமேற்கிலுள்ள ஒரு
சிறிய தீவானது முதல்முதல் ப்ரிட்டன் என்னும் ஒருஜாதியாரால்
குடியேறப்பெற்றிருந்தது, இவர்களிலநேக பிரிவினையுண்டாகி
சண்டை சச்சரவுகளுண்டாகவும் ஜர்மானியாதேசத்தின் ஒரு
பாகத்திலிருந்த ஆங்கில்ஸ்என்னும் ஒருவகுப்பு ஜாதியார் இதைக்
கைப்பற்றிக்கொண்டு, நாளடைவிலே குடியேறி, ஏழுவிதமாக
பிரித்து ஒவ்வொன்றுக்கு ஒவ்வொரு சிற்றரசன் ஏற்பட்டு
இவைகளுக்கெல்லாம் முதன்மையாக அவர்களிலேயே ஒரு
அரசன் ஏற்பட்டு ஆண்டுவரும்படியாயிருந்தது. இந்தஏற்பாடா
னது சிலநூற்றாண்டுகளே நீடித்திருக்கவும் கடைசியில் ஒரே அர
சனுடைய ஆளுகைக்குள்ளாகி ஆண்டு வரும்படியாய் விட்டது.
அகண்டபரந்த ஆகாசத்திலே துலை தூரத்திலிருந்து கொண்டு தன்
னளவில் சிறுத்துக்காட்டும் ஒருநட்சத்திரமானது உலகமெல்லாம்
எப்படிப்பிரகாசிக்குமோ, அப்படியே ஐரோப்பாக்கண்டத்தின்
மற்ற தேசங்களுக்கும் உலகத்திலுள்ள மற்றக் கண்டங்களுக்கும்
பிணையிட்டுப்பார்க்கும்பொழுது எவ்வளவோ தன்னளவில் சிறு
த்துக்காட்டினாலும், செல்வச்செழிப்பிலும் சிறந்த கல்விச் செழி
ப்பிலும் யூகைத்திறத்திலும் ஊக்கத்திலும் உறுதிப்பாட்டிலும்
ஒப்பற்றதாய் உன்னதங்கொண்டு உலகவிளக்கமாயுள்ளது நமது
இங்கிலாந்து சீமையே. எங்கும்புகழ்கொண்டு எல்லாக்கண்டங்களி
லும் தன்னதிகாரத்தை நிலைநிறுத்திய இந்த ராச்சியபரிபாலன
ஒழுங்கின்விவரத்தை இங்கேஒருவாறு சுருக்கிச்சொல்வோம்:—

உலகத்திலே இராச்சியபாரம் நடத்துவது மூன்றுபிரிவா
கவுள்ளது. இவைகளில் ஏகசக்கிராதிபதியாய் சிம்மாதனமேறும்
அரசன் தன்னிஷ்டம்போல எதையும் நடத்தும்படியாக அதி
காரம்வகித்தல் ஒன்று. இதற்குத்தான் சுயஅரசுஎன்று பெயர்.



இப்படிச்சிம்மாதனம் ஏறிய இராஜேஸ்வரன் தன் வல்லேக்குட்
பட்ட ஜனசமூகங்களிலே கல்விக்கடலாய் அறிவிற்சிறந்து கால
வர்த்தமானங்களுக்குத்தக்கபடி எதையுங்கண்டறிந்து, விஷயங்க
ளை நடத்தக்காட்டி விவேகபுருஷர்களாய் விளங்குவோரைத்தெரிந்
தெடுத்து அவர்கள்சமூகத்தால் சபையொன்றேற்படுத்தி, அவ
ர்களாலே ஜனங்களுக்குண்டாகிய நன்மைகளுக்கு ஒழுங்குண்
டாக்கி அவைகளின்படியேதான் நடத்தல்ஒன்று. இதற்குத்தான்
அளவுள்ள (நிதானங்கொண்ட) இராச்சியமென்றுபெயர். குடி
கள் தங்கள்தங்களில் தக்க விவகாரபுருஷர்களாக உள்ளவர்களை
க்கொண்டு மகாஜனசபையொன்றேற்படுத்தி அதற்குச்சபாநாயக
மாக அப்போதைக்கப்போது தங்களால் நியமிக்கும் ஒருவரை
க்கொண்டு நடத்துவதொன்று. இதற்குத்தான் குடியரசென்றுபெ
யர். தற்காலம் தன்வாக்கினின்றும் புறப்படுவதே சட்டங்களா
கக்கொண்டு அரசுபுரிவதை ருஷியாதேசத்திலும் ஜனங்களே
அடிக்கடி கூட்டங்கூடி பிரசிடெண்டு ஒருவரை யேற்படுத்தி
இராஜகாரியங்களை நடத்திவருவதைப் பிராஞ்சு தேசத்திலும்
அமெரிக்காவின் ஐக்கியமாகாணத்திலும்; சட்டநிரூபண சபை
யாரின் ஆலோசனையைஏற்று அதிலுள்ள நியாயங்களை அங்கீகரி
த்து நிதானங்கொண்டு நீதிசெலுத்துவதை இங்கிலாந்திலும்
இதின்குடியேற்றநாடுகளாய் எங்கும் பரவியுள்ள ஏராளமான
இந்தராச்சியத்தின் எந்த பாகத்திலும் காணலாம். இங்கிலாந்
திலே இராஜாவசிக்கும் லண்டன்பட்டணத்திலே இராச்சியபா
ரம் நடத்துவதற்காக இரண்டுமகாசபைகள் ஏற்பட்டிருக்கின்ற
ன. இவைகளில் ஒருசபையில் இராஜபரம்பரையான ட்யூக்,
ஏர்ல், வைகவுண்டு முதலாகிய சிறந்த பட்டங்களை வகித்து
ப்பிறவிச்செல்வர்களாய் மகாமேன்மையுற்றவர்களும் லக்ஷிக்க
ணக்கான வரும்படிகொண்ட ஏராளமான பூஸ்திதிகளினாலும்
உதாரகுணங்களினாலும் உலகத்திற்குவேண்டிய அநேகநன்மை
களைநாடி விசேஷமாய்ப் பாடுபட்டு விருத்திக்குக்கொண்டுவந்
து கீர்த்திக் கொள்வதாலும் ஜனங்களுக்கு வேண்டிய பொது

நன்மையை நாடி அநேக திருத்தப்பாடுகளைச்செய்து அவர்கள் க்ஷேமத்தையே கோருவதாலும் எல்லாராலும் மதிப்புற்றவர்களாய் சிறந்திருக்கிறார்கள். இவர்களில் ஒவ்வொருவரும் இராச்சியத்தின் க்ஷேமவிஷயத்திலே எவ்வளவோ கருத்தைச் செலுத்துகிறவர்கள் இராஜாவினுடைய எண்ணம்போல நடப்பவர்கள் எள்ளளவு பொய்கூட இன்னதென்றுதெரியாத ஸ்படிகம்போல விளங்குமனதையுடைய. இவர்களடங்கிய இந்த சபையைத்தான் அவுஸ் ஆப் லார்ட்ஸ் என்று சொல்வார்கள் இன்னொரு சபையில்தான் அந்தந்தமாகாணத்து குடிகள் சபைகூடி தங்கள் தங்கள் பிரதிநிதியாக ஏற்படுத்தும் அதிமேதாவிகளான ஜனங்களின் க்ஷேமத்தையேநாடி அதற்காக அநேக சட்டதிட்டங்களையெல்லாம் அப்போதைக்கப்போது விவகாரத்திற்குக் கொண்டுவந்து வெளிப்படுத்தி விருத்தியைநாடுவோரும் பொதுஜனவிசேஷங்களை அப்போதைக்கப்போது கவனித்து அவைகளுக்கு வேண்டிய திருத்தப்பாடுகளை அடிக்கடிச்சபையின் கவனத்திற்குக்கொண்டுவந்து நன்மையைச்செய்வார்கள்.

(இன்னும்வரும்.)

## தர்பார்கொண்டாட்டம்

——)o(——

### டில்லிமாநகரில்

நமது ஏழாவது எட்வர்ட் சக்கிரவர்த்தி அவர்களுக்கு

நடந்தேறிய மகுடாபிஷேக

### வரலாறு.

---

ஆதிகாலந் தொடங்கியே கீழ்த்திசை நாடுகளிலே முக்கியமாய் இந்தியாவிலே இராஜதர்பார்கள் நடந்து வருகிறதாக நம்முன்னோர் சொல்லவும், சரித்திர பூர்வமாகவும் தெரிந்து கொண்டிருக்கிறோம். அநேக



மாயிர வருஷங்களாக விடாது தொடர்ந்து வரும் இந்த வழக்கத்தையொட்டியே நமது லார்டு கர்ஸன் அவர்களும் சக்கிரவர்த்தியாகிய புதிய அரசரின் முடி சூட்டும் சிறப்பை நடத்தினதேயல்லாமல் வேறில்லை. தர்பார் என்ற வார்த்தையே பாரஸீகபாஷையிற் பிறந்தசொல். அதன் பூர்வார்த்தம் என்னவென்றால், அரசர் கொலுமண்டபம் என்பதே, பிறகு அதிற்கூடும் பெருங்கூட்டத்தார்க்கு ஆகியது. இங்கிலீஷ் பாஷையிலே கூட இந்த தர்பார் விஷயத்தைப் பற்றிச் சுருக்கமாகவும், கண் கூடாக நடந்ததுபோலவும் டேனியல் புத்தகத்தில் எழுதியிருக்கிறது. அது வருமாறு:—

“அப்போது நேபுகாத்நேஷார் என்னும் அரசன் தன்னால் ஏற்படுத்திய விக்கிரகத்தின் பிரதிஷ்டைக்காகப் போய்க்கொண்டாடும்படி இளவரசர்களும், கவர்னர்களும், காப்டன்களும், நீதியதிபரும், பொக்கிஷாதிகாரிகளும், மந்திரிமார்களும், நாட்டாண்மைக்காரரும், மற்று முள்ள இராஜ துரந்தராளும் ஒன்று கூடும்படி செய்தியனுப்பினான்” என்பதே கிறிஸ்துவுக்குமுன் 6-வது நூற்றாண்டிலே கீழ்நாட்டுத் தர்பார் இப்படியாக நடந்து வந்தது இந்தக்கிறிஸ்துவுக்குப்பின் 20-வது நூற்றாண்டிலும் அப்படியேதான் நடந்து வருகிறது.

அகண்டு பரந்த இந்த ஆசியாகண்டத்திலே இந்தச் சரித்திர பூர்வமான இராஜ தர்பாரை நடத்துவதற்குத் தக்கஸ்தானமாக இந்தியாவின் பூர்வ இராஜதானியாகிய டில்லியை விடவேறே எந்த இடமும் ஏற்படக்கூடவில்லை. எண்ணிக் கைக்கடங்காத எத்தனையோ வருஷங்களாக இப்படிப்பட்ட சரித்திர பூர்வமான இராஜ ஆடம்பர விசேஷ வைபவங்கள் நடந்தேறிய க்ஷேத்திரமாகவிருக்கிறது. முற்காலத்திலே, இப்போது டில்லி இருக்கும் இடத்திலே முன்னே பதின் மூன்று வேறு வேறான நகரங்கள் ஏற்பட்டு விஸ்தரித்துச் செழிப்புற்றோங்கி கடைசியாக க்ஷீணித்துப்போய் விட்டன. சிற்ப நூல்களையும் புராதனப் பொருளாராய்ச்சியையு மேற்கொண்ட மாணாக்கர்களுக்கு இந்த இடமானது இயற்கையாகவே காலக்கிரமத்தில் ஒழுங்குபடுத்திய அநேக வஸ்துக்களடங்கிய ஒரு பெரிய பொருள் காக்ஷிசாலையாக விருக்கிறது.

வட இந்தியாவிலே விசேஷித்திருந்த சிற்ப நூல்களின் அநேக திரிகளை டில்லிபட்டணத்தின் சுற்றுப்பக்கத்திலே சில மைல் தூரங்

களுக்குள்ளாகவே பார்க்கக்கூடியதாக விருக்கிறது. இராஜபுத்திர அதிகாரத்திலிருந்தமாதிரியும் மற்ற இதர தேசங்களிலிருந்து துருக்கிய ஆப்கானியர்களால் கொண்டுவந்து ஏற்படுத்தப்பட்ட மாதிரிகளும் மொகலாயர்களாலே விருத்தி செய்யப்பட்ட விநோத அலங்கார மாதிரிகளும் இந்த தலை நகரிலிருந்து ஒரே ஒழுங்கில் காணப்படும் அநேக பாரியபட்டணங்களில் பார்க்கலாம். எப்படி குட்டுப்மினார் என்னும் மசூதியில் இந்துக்களின் புராதன ஆலயங்களின் அநேக ஸ்தம்பங்கள் மகம்மதியர் கட்டடங்களின் மத்தியில் சிறந்து காட்டுகின்றனவோ அப்படியே அநேக இடங்களில் ஒரே கட்டடத்தில் இந்துக்கள் வேலைத்திறமும் ஸர்ஸேனியர் வேலைப்பாடும் பக்கத்துக்கும் பக்கமாக விளங்குவதைப் பார்க்கக்காணலாம். தேசமுழுதும் பரவியிருக்கும் சில பூர்வீகசாசனங்களையும் இங்கே காணலாம். அருகமதத்தை முன்னுக்குக் கொண்டுவந்த அசோகமாராஜாவாலே ஏற்பட்ட சட்டதிட்டங்களடங்கிய உன்னதஸ்தானங்களில் டில்லிமாநகரமும் ஒன்று. எங்கும் பிரக்கியாதி கொண்ட இந்நகரில் இரண்டுபெரிய ஸ்தம்பங்களின்னும் நிலைபெற்றிருக்கின்றன. இவைகளில் அந்த புகழ்கொண்ட குணசீலரான பௌத்தச் சக்கிரவர்த்தியானவர் தம்முடைய உலகப்பிரசித்தயான மத சம்பந்தமுடையதும் இராஜாங்கத்தை யடுத்ததுமான நியாயவிஷயங்களெல்லாம் தம்முடைய மநோஅபிப்பிராயப்படி எழுதிவைத்தனர். இந்தஸ்தம்பங்கள் டில்லியில்ஸ்தாபித்தது துர்க்கியவம்சத்து மகம்மதியசக்கிரவர்த்தியாகியபிரோஜ்ஷா டோக்லாக் என்பவர். அசோகராச்சியத்தின் எந்தபாகத்திலேயோ தொலைதூரத்திலிருந்ததை எடுப்பித்துவந்து, தனக்கு அப்போது இராஜதானியாயிருந்த டில்லியிலேஸ்தாபித்து அந்த இந்துஅரசனுடைய பேர்அழியாதிருக்கும்படிச் செய்தான் என்று விளங்குகிறது. இவ்வாறாக, இப்போதுதான் கொஞ்சகாலத்துக்குமுன்னே அசோகராஜனுடைய நீதிகளடங்கிய ஸ்தம்பங்களிலொன்று மறைந்து கிடந்து வெளிவந்திருக்கும் மைசூர் இராச்சியம் வரைக்கும் அவனதிகாரம் ஊடுருவிச் செல்லும்படி ஆண்டுவந்த முதல் முதல் பெரிய சக்கிரவர்த்தி யென்று புகழ்கொண்ட புண்ணியசீலனை இந்த ராஜாங்கத் தலைநகரோடு சம்பந்தித்துச் சொல்வதிற் தக்கதே.

(இன்னும்வரும்.)



# கிராம ஒழுங்கும் கட்டுப்பாடும்.

## கிராம முனிசிப்பும் மற்ற அதிகாரிகளும்.

முன்னமே சொல்லியிருக்கிறதுபோல இந்தியாவிலே அநேகவித ஸிவில் உத்தியோகஸ்தர்களிருக்கிறார்கள். இராஜப்பிரதிநிதி யென்ன கவர்னர்கள், உதவி கவர்னர்கள். கௌன்ஸில் மெம்பர்கள், போர்ட்டுமெம்பர்கள், ஹைகோர்ட்டு ஜட்ஜிகள், ஜில்லாக்கோர்ட்டு ஜட்ஜிகள், கலெக்டர்கள், சப்கலெக்டர்கள், ஹெட் அஸிஸ்டாண்டு கலெக்டர்கள், போலீஸ் சூப்பிரண்டாண்டுகள், அஸிஸ்டெண்டுகள், டிப்டிகலெக்டர்கள், ஏறக்குறைய இதே அதிகாரத்தையொத்த எத்தனையோ மற்ற ஆபீசர்களும் இருக்கின்றனர். இவ்வளவு ஆபீசர்களிருந்தும், கிராம முனுசிப்பு தன்னுடைய அவ்வளவு சிறிய வட்டாரத்திலே நன்மை தீமைகளைச்செய்வதில் எவ்வளவோ அதிகாரம் அடைந்திருக்கிறது போல எந்த ஆபீசருக்கும்அவ்வளவு அதிகாரம் கிடையாது. இந்த கிராம முக்கியாதிகாரிக்கு அநேக பெயர்களுண்டு. இந்த ராஜதானியின் வடபாகத்திலே பெத்தகாபு, ரெட்டி, மணிகார் என்றும் தக்ஷணத்திலே மணியக்காரன் அல்லது முனிசிப்புதார் என்றும்பெயர். ஏறக்குறைய எல்லாக்கிராமங்களிலும் இரண்டு உத்தியோகஸ்தர்களுண்டு மாஜிஸ்ட்ரேட்டு அதிகாரத்தைச்செலுத்த முனிசிப்பும், ரெவினியு வசூலுக்காக மணியக்காரனுமுண்டு. அப்படியிருந்தும் ஜனங்களுக்குள்ளும் மேலான அதிகாரிகளாலும் கிராமத்தில் தலையாக கிராம மாஜிஸ்ட்ரேட்டுகளையே நடத்திவரப்படுகிறது. சாதாரணமாக இந்த கிராம முனுசிப்பு ஜமேஜுக்காரனாகவும் நிலபல முடையவனாகவும் அந்தஸ்த்தை வகித்தவனாகவும் இருக்கிறதைப்பார்க்கிறோம். அநேக கிராம வழக்குகளிலும் சிறுகுற்றங்களிலும் தனக்குப் பூரண அதிகாரம் உண்டு ஒரு மனிதனை ஜெயிலுக்கனுப்பவும் அதிகப்படித்தரமான அபராதம் விதிக்கவும் தனக்குச் சக்தி யில்லாமற் போனபோதிலும், சாதாரணமாக ஒரு குற்றவாளியை கிராமக் கொட்டடி அல்லது சாவடியில் 12-மணி நேரம் அடைத்து வைக்கவும் 1 ரூபாய் வரையில் அபராதம் போடவும் அதிகாரம் உண்டு. இப்படி விதிக்கும் தண்டனைக்கு அப்பீலே கிடையாது. மொத்தத்திலே இந்தியாவின் ஜனங்கள் சமாதான முள்ளவர்களாகவும் சாதுக்களாகவு மிருக்கிறார்கள். இவர்களுக்குள்ளவே சண்டைச்சச்சரவு விவாதங்களும் கோர்ட்டாலே முடிவு பெறுகிறதேயல்லாமல் மேலான கோர்ட்டு ஜட்ஜிக்குக் கொண்டு வருவதற்குப் பிரியமில்லாதவர்கள். எந்த கிராமத்திலே கிராம முனுசிப்பு நிதானங்கொண்டு யோக்கியதை வகித்து தன்னுடைய வேலைகளை சரிவர நடத்தக்கூடுமோ அந்த கிராமத்திலே பிரியாதுகளிருக்கவே யிராது. ஏனென்றால் அந்த உத்தமனை கிராமாதிகாரியின் அதிகாரத்திற்கும் தீர்ப்புக்கும் உள்பட்டு நடக்க ஜனங்கள் பிரியமுடையவர்களாகவே யிருக்கிறார்கள். ஆனால் அந்த கிராமாதிகாரியார பக்ஷங்கொண்டு ஒரு கக்ஷியில் சேர்ந்து விடுவதால் கிராமத்திற்குத்தான் அதிக உபயோகமுள்ளவனா யிருப்பதைவிட்டு நீங்கி அதிக தீங்குசெய்கிறவனாய் விடுகின்றான். கிராமத்தாருக்கு அவனிடத்திலிருந்த நம்பிக்கை

ப்போய்விடவும் அவன் செய்யும் தீர்ப்புகளுக்கெல்லாம் குறை சொல்ல ஆரம்பிக்கின்றனர். விவாதங்களும் சண்டை சச்சரவுகளும் திருப்திகரமான வழியில் சமாதானத்தோடே முடிவு பெறாது. சிறுகுற்றங்களெல்லாம் மலைபோல் வளர்ந்து விடும். போலீசாரும் மேலதிகாரிகளும் உள நுழையும்படியாய் விடும். அதனால் அந்த கிராமம் வருஷக்கணக்காக அமைதியையும் ஆறுதலையையு மடையாமலிருக்கும். கிராம முனுசிப்பு விஷயமாய் இரண்டு முக்கியமான கவனிப்பு உண்டு. அவைகளும் ஜனங்கள் நடந்து கொள்ளவேண்டியவை, முனுசிப்பு நடத்திக்காட்டவேண்டியவை என்பவைகளே. இலங்கையிற் பிறந்தவனெல்லாம் இராவணனென்பதுபோல எல்லாருமே முனுசிப்பு ஆகமாட்டார்கள். ஒருவன் தான் தலைவனாக இருக்கக்கூடும் அவனுக்குட்பட்டு தான் மற்ற ஜனங்கள் நடக்கவேண்டும். ஆகையால் ஜனங்கள் தங்கள் கிராம முனிசிப்பை நியாயதிகாரியின் பிரதிநிதியாகக் கொண்டு அடிக்கடி அப்படிச் சம்பவிக்கக்கூடிய கலகமிட்டு விவகாரநடவடிக்கைகளுக்கு இடைஞ்சல்செய்வது முதலானவைகளை எந்த முகாந்தரத்திலும் செய்யவே கூடாது. முனிசிப்புமோ தான் நியாயதுரந்தரனாய் விவகாரம் நடத்தும் வரையிலுந்தான் ஜனங்களிடத்தில் மதிப்புண்டாக்கி சவுரணையைப் பெறலாமென்பதை நினைக்கக்கூடும். ஜனங்களை நெருக்கி வருத்தவாவது லஞ்சம் வாங்கவாவது வீணாகிய அவதூறுகளாலும் குற்றச்சாற்றுகளாலும் அவர்களை லாசடைப்பண்ணவாவது தன்னுடைய அதிகாரத்தை உபயோகிப்பானானால் ஜனங்களெல்லாம் ஒன்றுகூடி நாளடைவிலே தன்னை அந்த முனிசிப்புவேலையினின்றும் நீக்கிவிடும்படியாய் நேர்ந்தவிடும். முனிசிப்புக்கு அடுத்தபடி தான் மணியக்காரன். கிஸ்திபந்தி அல்லது கவர்ன்மெண்டாரால் விதிக்கப்பட்ட அளவுபடி ரெவினியுதண்டல் செயவதைப் பொறுத்தது இந்தஅதிகாரியைத்தான். முனிசிப்பும் மணியமும் ஒரே பேர்வழிபார்க்கும் படியாக எப்போதாவது நேரிவதுண்டு. இப்படி நேரிடுமானால் சாதாரணமாக இதுவும் ஒரு சாய்கால்தான் ஏனென்றால் இந்த இரண்டு அதிகாரமும் ஏறக்குறைய ஒன்றையொன்று ஒத்திருப்பதால் இவர்களுக்குள்ளே அடிக்கடி விவாதமுண்டாகிப் பொறாமை நேரிடுகிறது. அப்படி யுண்டாகிற விவாதத்தினால் ஊர் இரண்டுபட்டு இவர்கள் அவைகளுக்குத் தலைமையாகித் தாராளமாய் சச்சரவு செய்கிறார்கள். இப்படி ஒருதரம நேரிட்டுவிட்டாலோ, ஊரின் நிம்மதியே போய்விட்டது. தங்கள் அதிகாரிகளிலேயே மாச்சரியமும் விவாதங்களும் உண்டாகிவிடவே, ஜனங்களுக்குத் தீராதகஷ்டமாய்விடும். மேலே சொன்னதுபோல இந்த இரண்டு வேலையும் ஒருவரைப் பொருத்ததானாலோ ஒருசச்சரவுமில்லை. ஊரில் கலகமேயிராது. எல்லாம் சுபமாய் முடியும்.

ரெவினியு வசூலாகும்போது இன்னொரு முக்கியமான அதிகாரி அவ்விடத்தில் இருக்கவேண்டியதா யிருக்கிறது. இந்த அதிகாரியைத் தான் கர்ணம் என்று சொல்லுகிறது. வசூல் நடந்து கொண்டு இருக்கும்போது இந்த அதிகாரி பக்கத்திலிருந்துகொண்டு குடித்தனக்காரன் தான் செலுத்தவேண்டிய பணத்தைக் கட்டவும் அதை தன்னுடைய கணக்குப்பட்டியில் பதிவுசெய்துகொண்டு அந்தப்பணங் கட்டினவனுக்கு ரசீது



கொடுக்கின்றான். கிராமத்தைச்சேர்ந்த எல்லாக்கணக்கும் கணக்கப்பிள்ளையைச் சேர்ந்ததுதான். இதுவும் அநேகவித பிரிவினையுடையதாயிருக்கிறது. இவைகளெல்லாம் முனுசிப்புதாருடையவும் மணியக்காருடையவும் அதிகாரத்துக் குட்பட்டதாகத்தான் கொள்ளவேண்டியது. கிராம மாஜிஸ்ட்ரேட்டால் வாய்மொழியாய்ச் சொல்லுகிற எல்லா ரிப்போர்ட்டுகளையும தன்கைப்படத்தான் எழுதுகிறது. மணியக்காரன் வசூல் செய்கிற ரெவினியூ கணக்குகளையும பயிர் விருத்திக் கணக்குகளையும் தானேதான் பார்க்கவேண்டும், இப்படியாக முனிசிப்புதாருக்கும் மணியக்காருக்கும் கணக்கனுடைய உதவி அவசியமாயிருக்கிறது. மழையின் அளவெடுத்து, ஜனங்களுக்கு வேண்டிய ஜலத்தின் அளவும் எடுத்து எழுதிவைக்க வேண்டும். எழுதபபடிக்கத் தெரிந்த ஆசாமி அநேகமாய் இந்த அதிகாரியாகத்தான் காண்கிறோம். டெல்டா ஜில்லாக்களிலே இந்த வேலையில் அநேகமாய்ப் பிராமணர்களே இருக்கிறார்கள். ஆனால் கிராமத்தலைவர் மாத்திரம் சூத்திராாகத்தா னிருக்கிறார்கள. தன்னுடைய திறமையின் வல்லபத்தால் கர்ணம் வேலை பார்ப்பவரே உண்மையில் கிராமத்தலைவரென்று சொல்லவேண்டும். ஏனென்றால் மேலுக்கு மாத்திரங் கீழதிகாரியாக நடந்துகொள்ளுமிவர்கள் மேலதிகாரிகளைத் தங்கள் சமயம நடத்தவும் தங்கள் செல்வாக்கு அவர்களிடம் செல்லவும் செய்துகொள்ளுகிறார்கள் கபடமுள்ள கணக்கன் ஒருவன் சாதாரணமாக அநேக தீமைகளுக்குக் காரணமாய் விடுகின்றான். அப்போது கணக்குகளெல்லாம் தாறுமாறாய்விடும். குடித்தனக்காரருக்கு ரசீதுகள் சேரமாட்டா அவர்கள் கட்டும் வசூல் பணங்கள் சிலசமயங்களில் துர்விநியோகமாக எடுத்துக் கொள்ளப்பட்டு தங்களுக்குத்தாங்கள் கட்டின பணத்திற்கு ரசீது பெறாததனால் ஜனங்கள் மறுபடியும் இரண்டாமுறை அந்தத்தொகையைக் கட்டும்படி நேரிடும்.

ஆகையால் முனிசிப்பு அல்லது மாஜிஸ்ட்ரேட்டே கிராமத்தார் சமாதானமாய் வாழ்வதற்கும் அவர்கள் க்ஷேமத்திற்கு பொருப்பாளியாயிருக்கவேண்டும். ஒரு ரூபாய்க்குட்பட்ட சிறு குற்றங்களை விசாரித்து 12 மணி நேரம் கிராமச்சாவடியிலும் 6 மணி நேரம் தொழுக்கட்டையிலுமிட்டு குற்றவாளிகளைத் தண்டிக்கிறார். பெருங்குற்றச் சம்பவங்களும் அடிக்கடி அங்கங்கே உண்டாகும். கொள்ளைநோய்களையும் நாடோடிகளாய்த் திரியும் கூட்டக்காரர்கள் வரவையும் பற்றி மேலதிகாரிகளுக்கு ரிபோர்ட்டு செய்யவேண்டியது கிராமத்தின் ஆடுமாடுகள் நிறைந்தபட்டிகளைப் பரிசீலனை செய்யவேண்டும். உண்மையிலே கிராம அடங்கலையும் சுற்றிப்பார்த்து அதனுடைய நடவடிக்கைகளையும் சாதாரணமாய்க் கவனிக்க வேண்டியது. கிஸ்திவசூல் செய்வதும், பயிர்ப்புலன்களுக்கு நீரளந்து விடுவதும் பயிராயிருக்கும் நிலத்தைப் பார்வையிடுவதும் அந்தந்த நிலவாரி எல்லைக்குறிப்புக் கணக்கு வைப்பதும் பொது வசூலைச் சேர்ந்த எல்லாவிஷயங்களையும் கவனிப்பதுமே தன் வேலைகளாகக்கொண்டு மணியக்காரன் முனிசிப்புக்கு உத்தாசையாய் வேலை நடத்துகிறதும் வழக்கமாயிருக்கிறது. ஊர்க்கணக்குகளைத் தன்வசமாகக்கொண்டு முனிசிப்புதார் அல்லது மணியக்காரரால் கையெழுத்துப்போட்ட ரிப்போர்ட்டுகளை எழுதுகிறதே தன் வேலையாகக்கொண்ட கணக்கனை இந்த முனுசிப்பு

மணியம் வேலைபார்க்கும் இரண்டு அதிகாரிகளும் தங்கள் குமஸ்தாவாகக் கொண்டு வேலை நடத்துவார்கள். கிராம முனுசீப்பு நடத்தக்கூடிய வேறொரு முக்கியமான வேலை ஸிவில் விவகாரங்களுக்கு முடிவுசொல்வதே 20 ரூபாய்க்கு மேற்படாத தொகை யளவுக்கும் அந்தத்தொகை பொறுமான மற்ற சாமான்களைப் பற்றியும் முண்டாகும் எல்லா வியாச்சியங்களையும் தான் விசாரித்து முடிவு சொல்லலாம் இப்படிப்பட்ட வியாச்சியங்களில் கிராமமுனுசீப்பு கொடுக்கும் தீர்மானத்தை டிஸ்ட்ரிக்டு முனுசிப்பினால் அனுப்பிவைக்கப்பட்ட சேவகனால் நிறைவேற்றப்படுகிறது. கக்ஷியின் இருதிறத்தாரும் எழுத்துமூலமாய்ச் சமாதானமாகும் பக்ஷத்தில் கிராமமுனுசீப்பு 200 ரூபாய் வரையிலும மதிப்புப் பெறும்படியான வியாச்சியங்களுக்குத்தானே முடிவுசொல்லலாம். கக்ஷிகாரர் தங்கள்வியாச்சியத்தை பஞ்சாயத்தால் முடிவுக்குக் கொண்டுவர வேண்டுமென்ற பக்ஷத்தில் பணவிஷயமாகவும் சொத்துக்கள் விஷயமாகவும் எவ்வளவு தொகைக்கானாலும் வியாச்சியங்களுக்கு முடிவு சொல்லலாம் இந்த விஷயத்திலே தான் முனுசீப்புக்குப் பூராவும் அதிகாரம் உண்டென்பதைக் காணலாம் இந்த அதிகாரத்தைக் கிராமத்தார்களின் க்ஷேம லாபத்திற்காக உபயோகிப்பதால் அந்தக் கிராமமுழுதிலும் சர்வாதிகாரச் சாய்காலைப் பெறலாம்.

## கிராமச்சிப்பந்திகள்.

—)o(—

கீழ்ப்பட்ட வேலைக் காரர்களாகிய கிராமத் தலையாரி, வெட்டியான் அல்லது கட்டுப்பாடி என்று அந்தந்த இடங்களுக்குத் தக்கபடி சொல்லப்படுகிற இவர்களால்தான் முனிசிப்புதாரரின் உத்திரவுகளெல்லாம் நிறைவேற்றப்படும், இந்தச்சிப்பந்திகள் தொகை அந்தந்த கிராமத்துக்குத்தக்கபடி ஒன்றுமுதல் மூன்று அல்லது நாலுபேர்வரையிலும் இருக்கக்கூடும். கிராமத்தலையாரிதான் அந்தக்கிராமத்துக்கு போலீசுக்காரன் அவன் இராவிலே ஊருக்குக்காவல் வேலைசெய்து இருட்டுமுதலானவிஷயத்தில் ஆள்களைப்பிடித்து வைக்கலாம் முனிசிப்பு அனுப்புகிற நோட்டீசுகள் அதில்குறித்த நபர்களுக்குச் சேர்ப்பிக்கவேண்டியது தாலூக்கா கஜானாவுக்கு பணம்போகும்போது கூடப்போகவேண்டியது. குளங்களிலிருந்தும் கால்வாய்களிலிருந்தும் நீர்பாய்க்கப்பட்ட கிராமங்களிலே இதற்கென்றே பிரத்தியேகமாக வெட்டியான் அல்லது நீர்கண்டி என்பவன் இருக்கின்றான் அவனுடையவேலை கிராம நிலங்களுக்கு நீர்பாய்ச்சுவதும் நிலங்களுக்கு அளவெடுப்பதும் எல்லைக்குறிப்பின் அளவுக்குச்சங்கிலிப்பிடிப்பதுமாக விருக்கின்றன. கிராமச்சாவடியைப்பார்த்துவருவதும் சிலசமயங்களில் பிரயாணிகளுக்கு வேண்டிய உதவிசெய்வதும் அவன்வேலைதான். கவர்ன்மெண்டு அளவுக்கு முனிசிப்பு, மணியம், கணக்கப்பிள்ளை, தலையாரி இவர்கள்தான் அதிகாரம்பெற்ற கிராமாதிகாரிகள். முற்காலங்களிலே இவர்களுக்கு நிலமானியமுண்டு. அநேகமாய்த்தானியங்களாகவே கிராமத்தார்களிடத்திலிருந்து கட்டணம்பெற்றுவந்தார்கள். இக்காலத்திலே அநேகஜில்லாக்களில் நிலமானியமாகிய இனாம்கள் எடுபட்டுப்போகவும் மாதச்சம்பளம் பெற்றுவருகிறார்கள்.



இப்படி கவர்ன்மெண்டாரால் அங்கீகாரஞ்செய்யப்பட்ட கிராமாதிகாரிகளேயல்லாமல் தங்கள் வீட்டுநடவடிக்கைகளுக்கு வேண்டியஅளவுக்கு கிராமத்தாரால் ஏற்பட்டிருக்கும் சிப்பந்திகள் ஏராளமாயிருக்கிறார்கள். ஊர்வண்ணான், அம்பட்டன், குசவன், சக்கிலி, தச்சன், கம்மாளன், ஜோசியன், (இச்ஜோசியன்தான் நல்லது பொல்லாததுகளெல்லாம் நாள்கள் ஏற்படுத்தி வருங்காலத்தை யெடுத்துச்சொல்லி மழையிருக்கிற நிலைமையையும், மழைபெய்வதையும் தானியங்களின் காலவிலைகளையும் கணிப்பவன்) சிலகிராமங்களிலே வித்துவான்களும் உண்டு. இவர்கள் சிலசமயங்களில் பிள்ளைகளுக்குப் பாடங்கற்பிக்கும வாத்தியாராகவிருக்கிறார்கள். இவர்களெல்லாம அந்தக்காலங்களிலே நிலமானியங்களடைந்திருந்தார்கள். இவைகளையெல்லாம் நெடுநாளைக்குமுன்னமே கவர்ன்மெண்டாரால் எடுப்பட்டுப்போகவே கிராமத்தார்களில் ஒவ்வொருவனும் அவர்களிடத்தில் தனக்குவேண்டிய வேலைகளைவாங்கிக் கொண்டு அதற்குப்பதிலாக கொஞ்சம் தானியமோ பணமோ வருஷவாரியில் கொடுத்து வருவதால் ஜீவிக்கிறார்கள்.

இவ்வாறாக இதனால் என்ன விளங்குகிறதென்றால் பிரதிகிராமமும் தன்னிடத்திலேயே ஒரு சிறிய குடியரசை வகித்திருக்கிறதாகத் தெரிகிறது. ஜனங்களின் பாதுகாப்புக்கும் க்ஷேமத்திற்கும் வேண்டிய சுயஅதிகாரத்தத்துவத்தை நடத்துவதற்காக வேண்டிய ஒவ்வொரு வஸ்துவும் இதில் விளங்குவதால் இதை ஏறக்குறைய முற்றிலும் சுயநாடு என்று சொல்லலாம். தன்னிடத்திலுண்டாகும் எல்லா விவாதங்களையும் தீர்மானத்திற்குக் கொண்டுவர அதிகாரியுண்டு அதற்கு வேண்டியவைகளை யெல்லாம் நடத்திக்காட்டவேண்டிய சிப்பந்திகளுண்டு வேறு அதிகாரிகள் இதில் தலையிட்டுக்கொள்ள வேண்டுவதேயில்லை. கிராமத்தின் அங்கங்களாகிய அதிகாரிகளெல்லாம் ஒற்றுமையோடு நடந்துகொள்ளுகிற வரையில் எல்லாரும் விரும்பக்கூடிய இந்த நிலையானது நீடித்திருக்கும் எப்படி பலசுள்ளிகள் சேர்ந்த ஒருகட்டானது ஒடிபடாமல் நிலைநின்று அதுவே தனிதனிச் சுள்ளிகளாகப் பிரிக்கப்படவே சுலபமாக ஒடிப்பட்டுப்போகுமோ, அப்படியே ஒருகிராமமும் அதிலிருக்கும் குடிகளின் ஒற்றுமைபாட்டால் நிலைநின்று விளங்கி அவ்வொற்றுமை நீங்குவதால் பிரிவுண்டாகவே, நிலைதளர்ந்து நீடித்திராது. ஆகையால் கிராமத்தார் ஒன்று சேர்ந்து பொதுநன்மைக்குப் பாடுபட்டு தங்கள் மேலதிகாரிகள் தங்கள் வேலைகளைச் சரிவரச்செய்யவும் கிராமக்குடிகள் அவர்களுக்கடங்கி நடப்பதால் அந்த கிராம முழுதும் சந்துஷ்டி யடையும். இப்படி ஒற்றுமைக்கொண்ட கிராமத்தாரால் தங்களுக்கு யாதாவது குறைகளிருந்து மேலதிகாரிகளுக்கு தெரிவிக்கும் பக்ஷத்தில் கிராம ஒற்றுமைப்பட்டால் அப்படிச் செய்யும் விண்ணப்பமானது விருதாவிற்போகாமல் கவனிக்கப்பட்டு அதற்குண்டான நியாயத்தைப் பெறுமென்பதை யுறுதியாகச் சொல்லலாம். இவ்வொற்றுமைப்பாடு கொஞ்சம் தளரவும் ஜனங்கள் சச்சரவு கொண்டு ஒருவர்க்கொருவர் சதிசெய்ய ஆரம்பிக்கவே சலனமற்றிருந்த கிராமத்திற்கு அநேகவித சங்கடமுண்டாகிறது. ஒன்று மூன்றாகவும்

பிரியாதுகள் அதிகமாகி அயலார்தலையிட்டு விவகாரம் செய்யவந்து அப்படிவந்தவர்கள் தங்களுக் கநுகூலமாகவேண்டிய பிரயத்தனப்படுவார்கள். இதனால் கிராமத்திற்கு கெட்டபேருண்டாகி மேலதிகாரிகளுக்கு இதனிடத்திலிருந்த மதிப்புபோய் இதின எண்ணங்களெல்லாம் முடிவுபெறாது. குற்றங்கள் அதிகரிக்கும். கிராமமுழுதும் இரண்டு பட்டுப் பிரிவினையுண்டாகிக் கக்ஷிகள் ஏற்பட்டுவிடும். இதனால் கிராமத்தினிலைமை அடியோடே போய்விடும்.

## அம்மைக்குத்துதல்.

---

இதினுடைய கருத்து என்னவென்றால் ஆடுமாடுகளாகிய நாற்கால் ஜீவன்களில் உண்டாகி அவைகளில் முக்கியமாய் பால்கறக்கும் பசுக்களின் மடியிலும் மடிக்காம்புகளிலும் பரவிய காலிவைசூரி என்னும் வியாதியிலிருந்து எடுக்கப்பட்ட பாலை யெடுத்து வைப்பதனால் வைசூரியினின்றும் பிரஜைகளைக் காப்பாற்ற வேண்டுமென்பதே. இதினுடைய விஷத்தினாலே இந்த மகாபயங்கரமான வியாதியின் மும்மரத்தை யடக்கிப்போடலாமென்ற நோக்கம் முதல் முதல் யாருக்குப் பட்டது? இதைப்பற்றி சரித்திரத்திலும் எழுதக்காணோம். இதைக் கண்டுபிடித்தவர் பெயரும் ஜாதியும் அப்படியேதான் தெரியாமற் போய்விட்டது எல்லாவிஷயத்திலும் யோசித்துப்பார்த்த இத்தேசத்தாருக்குத் தானிருக்கவேண்டும். ஒரு எண்ணமானது ஒருவனுக்கே உதிக்கலாம் அல்லது ஏககாலத்திலேயே அநேகருடைய மனதிற்படலாம். அல்லது பூபாகத்தின் வேறு வேறான இடங்களில் வேறு வேறான சமயங்களில் உண்டாகலாம் பெரும்பாலும் ஒரு நோக்கம் புஷ்களமாய்ப்பெருகி வெளிப்படுவதும் அதற்கென்றே அவதரித்த அறிவாளிகளின் மனதிலிருந்தே வெளிப்படுகிறது. நியூட்டன் என்ற மேல்நாட்டு தத்துவசாஸ்திரியால் பூமி எதையும் ஆக்ரஷிக்கிற, (இழுத்துக்கொள்ளுகிற) தென்பதைக் கண்டுபிடித்ததற்கு முன்னமே எத்தனையோ ஆயிரக்கணக்கான (சீமை) இலந்தைப்பழங்கள் மரங்களிலிருந்துப் பழுத்து கீழே விழுந்துகொண்டு தானிருந்தது அவைகள் இந்த நியூட்டன் துரைக் கவனித்துப் பூமிக்குமேலே போகும் எதையும் கீழ்முகமாக தன்னிடத்திற்கு இழுத்துக்கொள்ளும் சக்தியுண்டென்பதைக் கண்டுபிடித்ததுபோல இன்னும் யாராவது கண்டுபிடித்தார்களா இல்லை ஜேம்ஸ்வாட்ஸ்துரை ஸ்டீம் எஞ்சின் கண்டுபிடித்ததற்கு முன்னே எத்தனையோ கொப்பரைகளிலிருந்து நீராவிகள் வெளிப்பட்டுக்கொண்டிருந்தன. அவைகளை யாராவது கவனித்தார்களா? இல்லவே இல்லை. இந்த வியாதியானது தானாய் உட்பிரவேசித்து மும்மரங்கொள்வதைவிட சாந்தப்பட்டு தன்வலுவு குறைந்து போகிறதை இந்த வைசூரிப்பாலை பசுக்களிலிருந்து எடுத்து வைப்பதால் கண்டுபிடித்தார்கள். இப்படி அம்மைக்குத்தப்பட்ட குழந்தைகளுக்கு மறுபடியும் அம்மைவார்க்



கும் பக்ஷத்தில் அவ்வளவாகக் கெடுதலையை யுண்டுபண்ணுகிறதில்லை. இதனால் ஜனங்களுக் குண்டாயிருக்கும நன்மைகளுக்கோ அளவில்லை. இதுவிஷயமாக கவர்ன்மெண்டார் அதிகப்பிரயாசை யெடுத்துக்கொண்டு எத்தனையோ லக்ஷக்கணக்காக திரவியத்தைச் செலவிட்டு இதற்கென்றே ஒரு டிபார்ட்மெண்டை ஏற்படுத்தி நடத்திவருகிறார்கள்.

1798-ம் வருஷத்திலே மாடுகளெல்லாம் இந்தத்தொத்துவியாதியினாலே பிடிக்கப்படவும், காலஞ்சென்ற டாக்டர் ஜென்னர் என்பவர் கோவைசூரியினால் அம்மைக்குத்தப்பட்டவர்களுக்கு அம்மையினால் யாதொருகெடுதலையும் சம்பவிக்கிறதில்லையென்பதைக் கண்டுபிடித்து ஜனங்களுக்கு அவர்செய்தநன்மையினாலே அவருடையபெயருக்கு அழியாதபுகழுண்டாயிற்று. தாம்செய்துவந்த வைத்தியவேலையின் இடையிலே சாத்தியமான அனுபவத்திற்குக்கொண்டுவந்து ஜாக்கிறதையாக ஒவ்வொன்றையும் பரிசோதித்து விடாமுயற்சியினாலே எடுத்தகாரியம் நிறைவேறவும் எல்லோருக்கும் பயன்படும்படி வெளியிட்டனர்.

இதை உடனே அவர் சிலருக்குச்செய்து பரீக்ஷித்து தாம்கொண்ட எண்ணம்போலச் சரியாய்க் கூடிவரக்கண்டார். ஜனங்களின் க்ஷேமத்திற்காக டாக்டர் ஜென்னர் கண்டுபிடித்ததின் பலனைப் பரவவொட்டாமல் செய்வதற்காக முதலில் பொறாமையும் அலக்ஷியமும் ஏடாகோடமும் இகழ்ச்சியும் குடிகொண்டவர்களால் எத்தனையோவித இடையூறுகளுண்டானாலும் நாள் விருத்தியிலே இப்படி அதிப்பிரயாசையோடுங் கண்டுபிடித்ததின் உண்மையானது வெளிவந்தது. எல்லாவைத்திய சாஸ்திரிகளும் இதை அநுசரித்து இதனிடத்தில் பிரீதிகொண்டு சிறப்பித்ததனால் நாகரீகமுற்ற இந்த உலகத்தின் எல்லாப் பாகங்களிலும் பரவி நித்திய அநுஷ்டானத்திற்கொண்டு வரப்பட்டு எத்தனையோ லக்ஷக்கணக்கான ஜீவன்களை இந்த கொடூரமான அம்மை யென்னும் கொள்ளைநோயின் வாய்க்கு இலக்காகாமல் தப்பித்துக்கொள்ளச் செய்கிறது.

அம்மைக்குத்துதல் அடியிற்கண்ட மூன்றுவிதமாகச்செய்து வருகிறார்கள் :—

ஒருபிள்ளையின் கையிலிருந்து மற்றொருபிள்ளையின் கைக்கு எடுத்துவைப்பதாலும் கண்ணாடிக்குழாய்களில் பத்திரமாய் காப்பாற்றப்பட்டு சீமையிலிருந்துவரும் (Lymp.) லிம்ப் என்னும் பாலை எடுத்துவைப்பதாலும். கோவைசூரியால் பிடிக்கப்பட்டிருக்கும். பசுமாட்டின் மடியிலிருந்து நேராய் எடுக்கப்பட்ட பாலை வைப்பதாலும் அம்மைக் குத்தப்படும்.

அம்மைக்குத்துகிற விதம் எப்படி யென்றால், சாதாரணமாக மேற்சொல்லியபடி மூன்றுவிதமான வைசூரிப்பாலை யெடுத்து தாஷ்டீகமானது. நோய் நொடியில்லாத, குழந்தைகளின் இரண்டு புஜங்களின் முன்பக்கத்திலே ஒவ்வொரு புஜத்திலும் மூன்று இடங்களில் கொஞ்ச

ம்ரத்தங்காணும்படி கீறி அதன் மூலமாக ஷை பாலை உட்செலுத்தலாம். அப்படிச்செய்த மூன்றாம் நாள் அந்தந்த தேகத்திற்குத் தக்கபடி காய்ச்சல் முதலானது முண்டாகி ஏழெட்டுநாள் வரையில் அதனுடைய வேகத்தைக்காட்டி 10-ம நாளிலிருந்து குழந்தையானது சுதாரித்துக்கொண்டு முன்னிருந்த பிரகாரம் தன்பலம் தனக்கு வரவும் எப்போதும் போலாய்விடும். அம்மைக்குத்தும் வகையும் ஒழுங்கும் ஒரேதன்மையாய் புஜங்களில் இன்னவிடத்தில்தான் வைக்க வேண்டுமென்பதும் இத்தனைப்புள்ளிகள்தான் வைக்கவேண்டுமென்பது புள்ளிகளுக்கு இடையில் இவ்வளவு இடம் இருக்கவேண்டுமென்பது கவனத்துடன் வாக்ஸிநேஷன் கோடில் சொல்லியிருக்கிற பிரகாரம் நடப்பிக்கவேண்டும். இத்தேசத்து ஜனங்கள் சாதாரணமாகவே அஜாக்கிறதையானவர்கள் ஆகையால் கவனியாம லிருப்பதால் அம்மைக்குத்தின இடங்களில் அதிகபுண்ணாகும்படி இடங்கொடுத்து விடுகிறார்கள், ஈ முதலானது மொய்க்கவிடாமல் அதிக கவனமாய்ப் பார்த்துவருவதால் சீக்கிரத்தில் ஆறி வடுவிட்டுச் சுகமாகும்.

(இன்னும் வரும்)

கிஸ்திவசூலாகிற

## விஷயமாயுண்டாயிருக்கும்

ஏற்பாடு.

அந்தந்த கிராமங்களின் குடிகள் கட்டவேண்டிய கிஸ்தியை வசூல்செய்கிறவிஷயத்திலே மேலான அதிகாரிகளான ரெவினியு இனிஸ்பெக்டர்கள் டிப்டிதாசில்தார்கள், தாசில்தார்கள் முதலானவர்கள் ஏற்றுக்கொண்டுசெய்யும் சிரமத்தைக்கொடுக்காமலே கிராமாதிகாரிகளே வசூல்செய்யும் மொத்தபணத்தைக் கஜானாவுக்கு அனுப்பவேண்டுமென்பதாக உத்திரவுபிறந்திருக்கிறது. ஆனால் தாசில்தார் முதலான மேலதிகாரிகள், கிராமஉத்தியோகஸ்தர்கள் நீர்வைகளைச்சரியாய் வசூல்செய்து ஜாக்கிரதையாகக் கொண்டுபோய்ச் செலுத்துகிறார்களாவென்று கவனித்து அப்படி நடக்கத்தவறின கிராம உத்தியோகஸ்தர்களை யெச்சரிக்கைச்செய்தும், கண்டித்தும், கவனமாய் வேலைபார்த்து வருவார்களென்று கோப்பபடுகிறது. ஆகையால் கிராம உத்தியோகஸ்தர்கள் வசூல்விஷயத்தில் கொஞ்சம் அசட்டையா யிருந்துவிட்டாலோ அவர்களுக்கு அநேகவிதத்திலும் துன்பந்தான்.

அப்போதைக்கப்போது ஏற்படும் கவர்ன்மெண்டுக்குச் செலுத்த வேண்டிய வசூல் தொகையானது இன்னமாதங்களில்தான் கட்டவேண்டுமென்று தீர்மானம் செய்யப்பட்டிருக்கிறதனால் அந்தந்தமாதத்திற்



செலுத்தும்படி ஏற்பாடாகும் தொகையை அந்தந்தமாதத்திய 10-ம் தேதிக்குள் செலுத்திவிடவேண்டும். அப்படிக்கட்டினதுபோக 10-க்கு மேல் நிற்கும் பாக்கி தொகைதான் கிஸ்திபாக்கியென்று பெயர்.

சிலஜில்லாக்களில் கிஸ்திபாக்கிக்காக டிமாண்டு பிறப்பிக்கும் அதிகாரத்தைச் சோதனையாக (As a Trial) கிராம முனிசிப்புகளுக்குக் கொடுக்கப்பட்டுவருகிறது. அதில் மேலதிகாரிகளின் திருப்திகரத்தை யொட்டியே வேலைநடந்து வருவதால் அந்த அதிகாரத்தை ஸ்திரமாக கிராமமுனிசிப்புதாரர்களுக்குக் கொடுத்துவிடுவார்கள். இப்படி யிந்த க்கிராமமுனிசிப்புதாரர்கள் ஷை அதிகாரத்தை வகிப்பதால் அதிகசௌகரியமும் அதிகநன்மைகளுமுண்டு, உதாரணமாக:—அடிக்கடி டிமாண்டில் கையெழுத்து வாங்குவதற்காக தாலூக்காவுக்குப்போய் அங்கே இரண்டுநாளோ அல்லது மூன்றுநாளோ காலங்கழித்துக்கைப்படிச் சிலவுசெய்து காலதாமதமாவது நின்றுபோகவும் நாட்சிலவும் படிச்சிலவும் கூடிவரும்.

ஆகையால் அந்தந்தத் தாலூக்காவின் தாசில்தாரர்களும் அவர்களுக்கு மேலதிகாரிகளான கலெக்டர்களும் இந்தடிமாண்டு பிறப்பிக்கும திகாரத்தை ஸ்திரமாகக் கிராம முனுசிப்புகளுக்குச் கொடுக்கும் படிச்சிபாரிசுசெய்வதும் அதிகநன்மையே.

கிராமமுனிசிப்புகள் வசூல்செய்வதில் ஒருகிராமத்திலே முகாம்போட்டுக்கச்சேரி ஏற்படுத்தி அந்தவிடத்தையே ஸ்திரமாகக்கொண்டு வழக்கமாய் நடத்திவரவேண்டும் இந்தப்படி செய்யவேண்டு மென்பதை ஸ்டாண்டிங் ஆர்டரில் காணலாம்.

(இன்னும்வரும்.)

## கிராம உத்தியோகஸ்தர்களைப் பற்றியும் கிராம நவுக்கர்களைப்பற்றியும் வெளிவந்திருக்கும் போட்டார் அவர்களின் ஸ்டாண்டிங் ஆர்டர்.

கிராமத்தலைமை உத்தியோகத்தைக் கௌரவமுள்ளதாயும், சிரேஷ்டமானதாயும் அவாவுடன் இச்சிக்கத்தக்கதாயும் இருக்கும்படி கவர்ன்மெண்டார் முயற்சிசெய்வதில் தங்களுடைய உதவியைத் நாடினவர்களாயிருக்கிறார்கள். இந்த முக்கியமான முடிவானது அந்தந்த டிஸ்டிரிக்டு அதிகாரிகளான கலெக்டர்கள் தங்கள் கீழ்உத்தியோகஸ்தர்களிடத்தில் காருண்யத்தையும் சாந்தகுணத்தையும் காட்டுவதாலும் படித்தவர்களையும் குணசாலிகளாயுமிருக்கப்பட்டவர்களைத் தாசில் உத்தியோகத்திற்கு நியமித்துக் கவர்ன்மெண்டாருடைய அபிப்பிராயங்களை அவர்களுக்குத்தெரிவித்து அந்த அபிப்பிராயங்களின் பிரகாரம் பூரணமனதுடனேயும் காரியசாதகமாகும்படியான ஊக்கத்துடனேயும நடத்திவருகிறார்களாவென்று கலெக்டர்கள் கவனிப்பதாலுமே வுண்டாகக்கூடியதென்று கவர்ன்மெண்டாரும் போர்டாரும் அபிப்பிராயப்படுகி

ருர்கள். இதுவிஷயத்தில் இன்னவிதிகள் திடமானவையென்று ஏற்படுத்தக்கூடாமையா யிருப்பதால் அப்படி ஏற்படுத்துவது அவசியமாயிருக்கிறது. ஆனால் கவனிக்கவேண்டிய நியாயமானது எதுவென்றால் தகுந்த காரணங்களின்றி கிராமத் தலைவர்களையும் நௌக்கரிகளையும் அவர்களிருப்பிடத்திலிருந்து வரவழைத்துவிடக்கூடாது. இல்லாமலும் சௌகரியப்பட்டபோதெல்லாம அதிமுக்கியமானவைகளல்லாத விஷயத்தில் கிராமத்தலைவர்களிடமிருந்து முக்கியமாய் மணியக்காரர்களிடமிருந்து ஏதாவது சமாச்சாரங்களாவது காரணங்களாவது தெரிந்துக்கொள்ளவேண்டுமானால் அப்படிப்பட்டவைகளைத்தெரிந்து கொள்ளும் பொருட்டு அவர்களை நேராய் ஆஜராகச்செய்வதற்குப் பதிலாக அவர்களுக்குத் தாக்கீது அனுப்பி அது மூலமாய்த் தெரிந்து கொள்ளவேண்டியது. கிராமத்திலிருந்து தாலூக்கா கஜானாவுக்கு இருசால் அனுப்பும்போதெல்லாம் கிராமத்தலைவராகிய மணியக்காரர் கூடப்போகவேண்டியது அனாவசியமென்று பரிஷ்காரமாய்த்தெரிந்து கொள்ளவேண்டியது. நம்பிக்கையுள்ள சேவகன் வசம் கணக்குடன் பணம்கொடுத்தனுப்புவதே போதுமானது. அப்படிக்கிக் கொண்டுபோக சேவகனில்லாதபக்ஷத்திலேதான் தாங்களேநேரில்கொண்டுபோய்ச் செலுத்திவரலாம் என்று கவர்ன்மெண்டார் விரும்புகிறார்களென்று போர்டார் அவர்கள் 1885-ம் வருஷத்தில் பிப்ரவரி 20உயில் பிறப்பித்திருக்கும் ஒட்டுத்தரவு (Supplimental Order) விஷயத்தில் கவனஞ்செலுத்தும்படிக் கட்டளையிட்டிருக்கிறது.

இதுவிஷயமாய்க் கலெக்டர்கள் கிராமகணக்கர்களுடைய ஹோதாவின் நிலைமையை உயர்த்துவதற்கு கூடியவரையில் வேண்டிய பிரயத்தனம் செய்யவேண்டியது.

கிராமமுனுசிப்புகள்.

## கிரிமினல் விவகாரவிஷயமாய்

நடத்துக்கொள்ளவேண்டிய விவரங்கள்.

—)o(—

கிராம முனுசிப்புகள் மாஜிஸ்ட்ரேட்டு அதிகாரத்தை வகித்து 1 ரூக்கு மேற்படாத சாதாரணமான திருட்டுக்கேசுகளை விசாரணைசெய்து முடிவுசெய்வதற்கு மதராஸ் 1821-ம வருஷத்திய 4-வது ரெகுலேஷன் 6-வது பிரிவைக்கொண்டும் தூஷணமாய்ப் பேசுதல் சொற்பகலகங்கள், சண்டை, சச்சரவுதாக்குதல் முதலிய பொது ஜனநடவடிக்கைக்கு விரோதமாகிய குற்றங்களை விசாரிப்பதற்கு 1816-ம் வருஷத்திய 11-வது ரெகுலேஷன் 10-வது பிரிவினாலும், அமுல்நடத்தலாம்.

மேற்கண்ட கேஸ்களை மாஜிஸ்ட்ரேட்டு அதிகாரம்வகித்த கிராம முனுசிப்பு ஆனவர் வாய்மொழியாகவே பிரியாதின் ஆரம்பமுதல் முடிவு வரையிலும் அமுல்நடத்தி தீர்மானம்செய்யவும் அப்படிச்செய்த விசா



ரணைமுடிவை சுருக்கமாக A பாராப்பிரகாரமுள்ள ரிஜிஸ்டரில் எழுதிப்பூர்த்திசெய்யலாமென்றும் சட்டத்தில் சொல்லியிருக்கிறது. ஆனால் எல்லா நடவடிக்கைகளையும் இப்படி வாய்மொழியாக நடத்துவதால் பின்னிட்டு ஞாபகக்குறிப்புக்கு வேண்டியவிவரங்கள் எழுத்துமூலமாயில்லாததனால் குறையாயிருப்பதோடு கல்விப்பெருக்கத்தாலும் நாகரீகத்தாலும் விருத்திக்கு வந்துகொண்டிருக்கும் இக்காலத்துக்கு அது எவ்வளவும் பொருந்தாததென்று எண்ணுவதற்கு இடமிருக்கிறது. ஆகையால் விசாரணைசெய்யப்பட்ட கேஸின் விவரங்கள் சுருக்கமாய் நோட்டு எடுக்கப்பட்டு எழுத்துமூலமான ரிக்கார்டு ஏற்படவேண்டுமென்று இதனால் விளங்குகிறது.

ஒருவன்பேரில் குற்றம் ஏற்பட்டு அப்படி அவன்செய்த குற்றத்தைத் தீர்மானம் செய்பவர்மாத்திரம் தெரிந்துகொண்டு குற்றவாளிக்குத்தீர்மானம்செய்வது திருப்திகரமானதல்லவென்றும், ஒருவனைத்தண்டிப்பது அவன்தான் செய்தகுற்றத்தை உணர்ந்து இனிமேலப்படிச் செய்யாமலிருக்கவும் மற்ற ஜனங்கள் இதைக்கவனித்து இப்படிப்பட்ட விஷயங்களில் ஜாக்கிரதையாய் நடந்துகொள்ளுவதற்கென்றே நியாயவிசாரணையும் தெண்டனையும் நடந்துகொண்டு வருகிறது. இதனால் விலேஜ்மாஜிஸ்ட்ரேட்டுகள் குற்றக்கேசுகளை விசாரணைக்குக்கொண்டுவந்து விவரமாக விவகாரம் நடத்தி அந்தக்கேசில் அவைகளைக்கேட்டு ஒருகடுதாசியில் எழுதி அவர்களுக்கு வாசித்துக்காட்டி அவர்கள் சம்மதித்து கையெழுத்துப்போடவும் அல்லது கைநாட்டு போடவும் அதுவே பிராதாக[illegible] அமுல்நடத்தலாம்.

(இன்னும்வரும்.)

கிராம முனுசிப்புகள்

## சிவில்விவகார விஷயமாய் நடத்து

கொள்ளவேண்டிய விவரங்கள்.

—):o:(—

தென் இந்தியாவின் தமிழ்ஜில்லாக்களிலுள்ள கிராம[illegible]கள் தாங்கள் நடத்த வேண்டிய சிவில்விவகாரங்களைத் தங்கள் [illegible]களில் சரிவரநடத்துகிறார்களாவென்று சற்றுக்கவனித்துப் பார்ப்போம்.

கிராம முனுசீப்புகோர்ட்டுகளில் அநேகமாய் அவைகளுக்குவேண்டியவைகள் எல்லாம் ஒழுங்கான முறைப்படி இல்லை என்றே சொல்லலாம்.

1-வது தாங்கள் நடத்தும் சிவில்விவகாரங்களுக்கு வேண்டிய ரிகார்ட்டுமுதலானதும் சரியாய் வைக்கிறதில்லை, அநேக இடங்களிலே ரிகார்ட்களேகிடையாது. 2-வது ஒன்றுக்கும் உதவாதபழைய பாரங்களையே உபயோகித்து வருகிறார்கள். 3-வது தாங்கள் கோர்ட்டு நடத்துவதில் அதற்கென்று இதர ஆபீசுகளிலும் கோர்ட்டுகளிலும் ஒரு கால நிர்ணயம் செய்து நடத்துகிறது போல நடத்துகிறதில்லை இன்னும் இப்படிப்பட்ட அசந்தர்ப்பங்கள் அநேகமாக விருக்கின்றன ஆகையால் அவைகளை

165400
600 008.
JL
V211,8mN-3
N-3-1

யெல்லாம் ஒழுங்குபடுத்தவும், கிரமமாக ரிக்கார்டுகள் முதலானவை ஏற்படுத்தவும் தங்கள் கோர்ட்டுகளை இத்தனை மணிக்கு ஆரம்பித்து இத்தனை மணிக்கு முடிவுக்கு கொண்டுவரவேண்டு மென்பதும், ஆகியவைகளையெல்லாம் சட்டங்களையநுசரித்து ஏற்பட்டிருப்பதால் அடியில் விவரித்திருக்கும் அப்படிப்பட்ட திருத்தமான ஏற்பாடுகளை எல்லாக்கிராம முனுசிப்புகளும் கவனித்து உபயோகப்படுத்தி நடத்திவருவதால் மேலதிகாரிகளுக்கு மதிப்புண்டாகி இக்கிராமாதிகாரிகளெல்லாம் சிலாகிக்கக்கூடிய மாதிரியாக நடத்திவரும் விவகாரங்களைக் கவனித்து வருவதுடன் இக்கிராம முனுசிப்புகள் மாஜிஸ்ட்ரேட் முதலான கோர்ட்டுகளுக்கு விவகார விஷயமாய் ஆஜராகும்போது தக்கமரியாதை செய்து போலீஸ் ஸ்டேஷன் ஆபீசர்களுக்கு ஷை கோர்ட்டுகளில் எப்படி ஆசனமளித்து நடத்திவருகிறார்களோ அப்படியே தங்களையும் நடத்தப்பட்டு கவுரதை யடையக்கூடும். இப்படி கண்ணியம் பெறுவதால் மேலதிகாரிகளுக்கு இந்த கிராம முனிசிப்புகளிடத்தில் மதிப்பும் அந்தந்த கிராமக்குடிகளுக்கு இவர்கள் பேரில் பயபக்தியும் உண்டாகி எல்லாநன்மைக்கும் இடங்கொடுக்கும்.

தான்கொண்ட அபிப்பிராயத்துக்கு விவரம் சொல்லிக் குற்றவாளியும் ஜனங்களும் அறியும்படிச்செய்து கூடியவரையில் விரிவாக நடத்திக்காட்டுவதே தக்கதாக விருக்கிறது.

ஆகையால் இது விஷயமாக கிராம மாஜிஸ்ட்ரேட்டுகள் தங்கள் கேசுகளை விசாரணை செய்வதில் அடியில் விவரித்திருக்கும் சிலவிஷயங்களை கவனிப்பார்களாக :—

முதலாவது:— பிராது பிடிக்கும இடம்,

கக்ஷிக்காரர்கள் பிரியாது கொண்டு வந்தால் அது நல்ல கடிதத்தில் கருப்பு மையினால் தெளிவாக அந்தந்த கிராமத்தில் வழங்கும பாஷையிலே அர்த்தம் விளங்கும்படியாக எழுதியிருக்கிறதாவென்று பார்த்து கிராம மாஜிஸ்ட்ரேட்டானவர் நேரில் வாங்கவேண்டும்.

கக்ஷிக்காரர்கள் ஏதோ அசந்தர்ப்பத்தினால் எழுத்து மூலமாய்ப் பிராது கொடுக்க சக்தியற்றவர்களாயிருந்தால் ஷை பிராதை தாங்கள் வாய்மொழியாய்ச் சொல்லவும் கிராம முனுசிப்பு ஆனவர் அவைகளைக்கேட்டு ஒரு கடிதாசியில் எழுதி அவர்களுக்கு படித்துக்காட்டி அவர்கள் சம்மதித்துக் கையெழுத்துப் போடவும் அல்லது கைநாட்டுப் போடவும் அதுவே பிராதாக ஏற்றுக்கொண்டு அமுல் நடத்தலாம். கிராம முனிசிப்புகள் கவனிக்கவெண்டிய வைகளில் முக்கியமான வைகளை அடியில் விவரிப்போம்- அவை மருமாறு:—

முதலாவது ஒவ்வொருகிராம முனுசிப்பும் தன்னுடைய கோர்ட்டுக்குக் கொண்டுவரப்படும் பிரியாதை வாங்கிக்கொண்டு அதில்தான் அந்த அங்கீகரித்த தேதியையும் சுருக்கமாகத் தன்கையெழுத்தை (Initial) யும் போட்டு அதன்பிறகு.

(இன்னும்வரும்.)



# ஹைகோர்ட் வியவஹாரம்.

1902வரு ஜூலை 23உ யில்

ஹானரபில். ஜஸ்டிஸ். போடாம்துரை அவர்கள்.

" " ஸர். வெ. பாஷியம் அய்யங்கார் அவர்கள்.

## மூனபாகநடந்தேறிய ஹைக்கோர்ட்டு தீர்மானம்.

வியாச்சியமூலம் :—பொருமையாலுண்டான வியாச்சியம்.
நரசிங்கராவ் (முதல்பிரதிவாதி) அப்பீல்தாரி.
முத்தையாப்பிள்ளை (வாதி) எதிர்வாதி.

பொருமை காரணமான வியாச்சியம் :—போலீசுக்கு அறிக்கை போலீசார் விசாரித்து மாஜிஸ்ட்ரேட்டின்முன் சார்ச்செய்தல்; மாஜிஸ்ட்ரேட்டின் விசாரணையில் குற்றவாளிவிடுதலை; போலீசுக்குத்தெரிவித்தவர்பேரில் (பகைகாரணமாக) மானநஷ்டவியாச்சியம்; ஏற்றுக்கொள்ளக்கூடிய விவரம :—

A. என்பவன் போலீசுக்குத்தெரிவித்து போலீசார் விசாரணையின் பேரில் B. என்பவனைச் சார்ச்சுசெய்யக் கேட்டுக்கொள்ளுதல் B. என்பவன் மாஜிஸ்ரேட்டு விசாரணையின்பேரில் விடுதலையடைதல் B. என்பவன் இப்போது பகைகாரணமாகத் தன்பேரில் செய்த தாவாவுக்காக A. யின்பேரில் மானநஷ்டத்திற்குப்போகுதல்.

இந்தகேஸ் பகைகாரணமாகக் கொண்டுவரப்பட்டது.

கேஸ்வரலாறு :—

வாதியாகிய முத்தையாபிள்ளை என்பவர் 1898-ம் வருஷத்தில் பொன்னுக்குடிகிராமத்திலே கிராமமுனுசிப்பாக ஆக்டிங்வேலை பார்த்துவந்தார். அப்போது விவசாயத்தொழில் செய்யும் முதல் பிரதிவாதியாகிய அந்த கிராமத்தில் சிலநிலங்களையுடைய நரசிங்கராவ் என்பவர் ஸ்டேஷன் அவுஸ் ஆபீசரிடத்திலே வாதியாகியாகிய முத்தையாபிள்ளை மேல் திபாக்கிக்காகத் தன்னுடையசாமான்களை யறியவிலே வைக்கவேண்டுமென்ற எண்ணத்தோடே வீட்டின்வெளிக்கதவை வலுவுக்குள்ளேசாதமாக உடைத்துவிட்டதாக அறிக்கைபண்ணினார். அதின்பேரில் ஸ்டேஷன் அவுஸ் ஆபீசர் விசாரணைபண்ணி கடைசியாக வாதி (முத்தையாப்பிள்ளையை) பாளையம்கோட்டை 2-வது வகுப்பு மாஜிஸ்ரேட் முன்னிலையில் கேஸ்விசாரிக்கும்படி சார்ச்செய்தனுப்பிவிட்டார். அந்தமாஜிஸ்ரேட்டு கேஸை விசாரணைசெய்து தள்ளிவிட்டார். வாதியாகிய

முத்தையாப்பிள்ளை அப்போது மானநஷ்டத்திற்காக வியாச்சியம் தொடுத்தனர். பிரதிவாதிகள் நெ. 2 முதல் 6 வரையிலும் முதல்பிரதிவாதியோடு இதகேஸ் ஜோடித்துக் கொண்டுவந்ததில் கலந்திருந்ததாய்ச் சொல்லப்பட்டது. அதுகாரணமாக. அவர்களும் இந்தக்கேசில் சேர்க்கப்பட்டார்கள்.

முதல்உத்திரவு :—

முதல்பிரதிவாதி வாதியை (முனிசிப்பை) க்குறித்துப்பொருமையாகவும், தக்ககாரணமும் முகாந்தரமு மில்லாமலும் கிரமினலில் பிரியாது செய்ததுண்டா என்பதே. டிஸ்டிரிக்டு முனுசிப்பு உண்மையிலே இந்த முதல் பிரதிவாதியானவர் மாஜிஸ்ட்ரேட்டுக்கு நேரில் கேஸ்கொண்டுபோனதில்லையென்றும் போலீசார் விசாரணைசெய்து சார்ச்சுசெய்தார்களென்றும் தெரிந்துக்கொண்டார். இந்தவாதி கபடமற்றவனென்றும் முறையிடப்பட்ட நடவடிக்கையை நடத்தினவனல்லவென்றும் சொல்வதற்குப்போதிய சாக்ஷியமில்லையென்றும் கூடத்தெரிந்துகொண்டார் இதற்குப்போதுமான நியாயங்களும் யூகிக்கக்கூடிய வஷியங்களும் இல்லையென்றுங்கண்டு வழக்கைத்தள்ளிவிட்டனர்.

வாதி (முனுசிப்பு) இதன்பேரில் சப்ஜட்ஜிக்கு அப்பீல் செய்துக்கொண்டனர்.

(இன்னும்வரும்.)

## 1903-ம் ௵த்திய பிப்ரவரி 6௳ 45-ம் நெம்பருள்ள செட்டில்மெண்டு போர்ட்டாருடைய ப்ரோஸீடிங்ஸ்.

செட்டில் மெண்டில் இறைப்புநஞ்செய்யென்று தாக்கலாயிருக்கும் நிலங்களில் சாகுபடியாயிருக்கும் இரண்டாவது போக பயிர்களுக்கும் இறைப்பு வஜா கொடுக்கவேண்டிய மேரையை எல்லா ஆபீசர்களும் தெரிந்து நடந்து கொள்வதற்காக அடியிற்கண்ட கற்பனைகள் பிறப்பிக்கப்படுகின்றன.

ஒருபோகம் நஞ்செய்நிலத்தில் ஏறியிருக்கும் இரண்டாம் போகப்பயிருக்கு பசலி ஜாஸ்திமாதிரி தீர்வைவிதித்தால், செட்டில்மெண்டு டிபார்ட்மெண்டில் விதிக்கப்பட்டிருக்கும் உத்தரவை அதாவது ஒரு ஏக்ராவுக்கு 8 அணா அநுசரிக்க வேண்டியது. ஆனால் தண்ணீர்த்தீர்வை, மாதிரித்தீர்வை விதித்தால் இறைப்புவஜா தண்ணீர்த்தீர்வையில் நாலில் ஒருபாகத்திற்கு மேற்படக்கூடாது.

## 1903-ம் ௵ மார்ச்சுமாதம் 12௳ யுள்ள மதராசு ஹைக்கோர்ட்டார் அவர்களுடைய ப்ரோஸீடிங்ஸ்.

கிராம முனுசிப்புகள் தாங்கள் பைசல்பெய்த வழக்குகளின் ரிக்கார்டுகளை சிவில்கோர்ட்டுகைட் 151-ம் பாகம் B. அட்டவணை 2-வது அவிட்டத்தில் கண்டிருக்கிற காலநிர்ணயப்படி பரிகரிக்கலாமா என்கிற விஷயத்தைக்குறித்து தெரியப்படுத்தவேண்டுமென்று ஆக்டிங்டிஸ்ட்



ரிக்ட் ஜட்ஜி அவர்கள்எழுதிக்கொண்ட லெட்டர்வாசிக்கப்பட்டது.

ரூல்ஸ்படி பரிகரிகப்புக்கு லாயக்கான தங்கள் கோர்ட்டு சகலரிக்கார்டுகளையும் பரிசீலனைசெய்து பரிகரிக்கவேண்டியதற்காக கிராமமுனுசிப்புகள் டிஸ்ரிக்ட்டு முனுசிப்புகளுக்கு அனுப்பவேண்டியது. என்று தீர்மானமாயிருக்கிறது..

# NEWS and NOTES.

## விசேஷவர்த்தமானங்கள்.

### அம்சபக்ஷிகள்.

இவ்வபூர்வ பக்ஷிகளைப்பற்றி இதிகாசாதி புராணங்களிலேயும் நைஷதம் என்னும் சிறந்தநூலிலேயும் சிறப்பித்திருக்க வாசித்திருந்தேனேயல்லாமல் ஆழ்ந்த கங்கைசூழ மிகவனியின்கண்ணே யாருங் கண்கூடாகக் கண்டதில்லையாம். அப்படியிருக்க ஆஸ்திரேலியா கண்டத்திலே இவ்வன்னபக்ஷிகள் அகப்படுமென்று எப்படியோதெரிந்துகொண்ட இலங்கைத்தீவின் கண்டி பட்டணத்து க்வீன்ஸ்ஹோட்டல் மானேஜர் அப்பட்டணத்து ஏரியை அழகுசெய்யுமாறு அப்பக்ஷிகள் மூன்றை அதிப்பிரயாசையோடு வரவழைத்தனராம், அனிச்சமலரினும் அதினுட்பமான இக்ககனவாசிகளில் இரண்டு வருகிறவழியிலேயே இறந்துபோகவும், ஒன்றுதான் உயிரோடு கண்டிக்குக்கொண்டுவரப்பட்டு ஏரியில் விடப்பட்டது. நளன்கதையில் வர்ணித்திருக்கும் அவ்வளவு சிறப்பையுங் கொண்டு வெகுஉல்லாசமாய் நீரில்விளையாடிக்கொண்டிருந்த அவ்வன்னத்தினழகைக்கண்டு திசயிக்காதவர் ஒருவருமில்லையாம். சென்றதுக்குமுன் வெள்ளிக்கிழமை மாலையில் 4-மணிசுமாருக்கு ஹோட்டல் வேலைக்காரனொருவன் அன்னத்திற்கு அன்னமிட ஏரிக்கரைக்குப்போனபோது அங்கு அவ்வம்ச பக்ஷியைக்காணமையால், உடனே போலீசுக்குத்தெரிவித்தனனும். அன்றையத்தினம் ஒரு ஸ்திரியானவள் அவ்வனத்தையெடுத்து ஹோட்டலில் கொண்டுபோய்க் கொடுக்கச்சென்றனளாம, அப்போதங்குவந்த அவளைச்சேர்ந்தவனொருவன் அதைப்பிடுங்கிக்கொண்டு தன்வீடுபோய்ச்சேர்ந்தானும் போலீசார் அந்த ஸ்திரீயின் மூலமாய் இவனிருப்பிடமறிந்து சென்று இராவில் வீட்டைச்சோதனைபோடவே அங்கொருமூலையில் அந்த அதிசயபக்ஷியின் இறகுகள் இட்டப்பதைத் தெரிந்து அவனையும் அந்த ஸ்திரீயையும் பிடித்துக் கோர்ட்டுக்குக்கொண்டுபோய் மாஜிஸ்ட்ரேட்டுக்கு முன்விசாரணை செய்ததில் குற்றம். ஏற்படவும் அந்தத்திருட்டு ஸ்திரீகு 3 மாதம் கடினகாவலும் அவனுக்கு 6 மாதம் கடினகாவலோடு 100 ரூபாய் அபராதமும்போடப்பட்டதாம் அன்னத்தின் விலை 125 ரூபாயாம் அகப்படாத பொருளை இப்படி அந்நியாயம்செய்த பாவிகளை என்னசெய்தால் தான் தீராது இந்தியாவிலே இடபக்ஷிகள் இமோத்திரியிலே யிருக்கிறதாகக் கேழ்வியல்லாமல் யாரும் பார்த்த தில்லையாம்.

## ஓர் ஆண்வேஷ காரி.

ருஷியாவின் தென்பாகமாகிய மஸ்கோவ் நாட்டின் கீய்என்ற பட்டணத்தில் ரெயில்வே கம்பனியி லொருபோர்மெனன அலெக்ஸான்டர்ரோடிஷவிஸ்கி என்பவனொருவனுக்கு நேர்ந்துவிட்ட ஒரு அகாலவிபத்தால் தனது ஒரு உள்ரகசியம் வெட்டவெளி யாகிவிட்டது. இவன் 4-வருஷங்களுக்கு முன்னே இந்த கம்பனியில் வந்துசேர்ந்து குணத்திலும் நன்னெறியிலும நல்லபெயரெடுத்து தனதுவேலையிலும் தளராமுயற்சியுடையவனென நன்குவிளங்கி படிப்படியே காவல்காரனிலிருந்து போர்மென் உத்தியோகத்திற்கு வந்தனன். இவனது விடாமுயற்சியை நன்கு கவனித்த யாவருமிவன் சீக்கிரத்தில் கம்பனியின் பெரிய ஒரு உத்தியோகத்திற்கு வந்துவிடுவானென மதித்திருந்த காலத்தியாலிவனுக்கு நிகழ்ந்துவிட்ட விபத்தானது எல்லாவற்றையும் கெடுத்துவிட்டது. அந்தவிபத்தால் ஷை அலெக்ஸாண்டர் ரோடிஷவிஸ்கி ஆண்பிள்ளையல்லாது பெண்ணென்று பட்டபகலாய் விட்டது. இப்பெண் யாரெனில் ருஷியதலை நகராகிய ஸெண்ட் பீட்டர்ஸ் பார்க்கின் ஒருபெரும் உத்தியோகஸ்தரின் ஒரே ஒரு அரும்புத்திரி. இவளோமெத்த செல்லபிள்ளையாக வளர்ந்து கல்வியில்தேர்ந்து லத்தின்பாஷையையும் கற்று வெள்ளிபதக்க மொன்று பெற்று நல்லமேன்மையாய் வரும்நாளில் தானொரு ஆண்சிங்கமபோல் விளங்கவேண்டு மென்கிற எண்ணம் தனக்குள் உதித்ததானது அவளை அப்படியே ஏகாந்தமாக 4-வருஷங்களுக்கு முன் வீட்டைவிட்டு புறப்படவைத்துவிட்டது. இவளது பெற்றோர் இவளை எங்கெங்கும்தேடி காணுது இறந்துபோய் விட்டிருப்பாளென நினைத்துவிட்டிருந்ததனது கடைசியாக இவள் அலெக்ஸாண்டர் ரோடிஷவிஸ்கி என்னும் ஆண்வேஷமாக உயிருடனிருக்கிறுளென கேட்க அவர்கள் மனம் என்ன ஒரு குதூகலமடையும் இவள் எடுத்த ஒரு முயற்சியானது சரித்திரங்களைக்கூடியிருக்குமாகில் ருஷிய பெண்மணிகளுக்கு என்ன ஒரு அரும் பிரயாசையான முன்மாதிரியாக விருந்திருக்கும்.

---

வால்மீகி யென்னும் மகரிஷி இராமாயணத்தைச் செய்ததின் தாத்பரியம் இன்னதென்று பண்டித மன்மத நாத்டட் தெரிவிக்கிறுர். புண்யம் என்பதை ராமனுகவும் பாபத்தை ராவணனுகவும் ஏற்படுத்தி இருவருக்கும் சண்டையை யுண்டாக்கி இராமன் வெற்றியடைந்தானென்று முடித்து புண்யமே முடிவில் ஜயமடையுமென்று குறிப்பிட்டிருக்கிறுர். மகானுகிய அம்மகரிஷியின் கருத்து ஸர்வஜனங்களுக்கும் தெரியவேண்டி ஸ்ரீமத்ராமாயணம் எழுதப்பட்டது. வியாஸர் மகாபாரதத்தில் மேற்கூறிய உண்மையை விளக்கியிருக்கிறுர். புண்ய ரூபிகளாகிய பாண்டவர்கட்கும் பாபிகளாகிய கௌரவங்களுக்கும் நடந்த சண்டையில் பகவான் பாண்டவ ஸகாயனுயிருந்தாரென்றும் பாண்டவர்களே ஜெயித்தனரென்றும் கூறி பாபம் அபஜெயமடையுமென்பதைக் குறிப்பிட்டிருக்கிறுர். ராம மூர்த்தி வல்லமையுடையவராயினும் தந்தைசொ



ன்மிக்க மந்திரமில்லை யென்றுணர்ந்து பிதிர்வாக்ய பரிபாலனம் செய்யும்பொருட்டு கிடைக்கவேண்டியபட்டத்தையிழந்து காட்டுக்குச் சென்றுர். அக்காலத்திலும் அவ்வுத்தமனே சரணுகதி யென்றும் அவருடைய ஸமீபத்திலிருப்பதே பேரின்பமென்றும் அறிந்த பதிவிரதாசிரோமணியாகிய ஸீதை அரண்மனையை விட்டு புருஷனேடு கானகம் சென்றுள். லக்ஷ்மணன் ஸஹோதரவாஞ்சையைக் காட்டுவதற்காக பகவானேடு கஷ்டமனுபவித்தான்.

---

"ஆதியைத்தொழு" என்று ஔவை கட்டளை யிட்டிருக்கிறுள் அதன் பொருள் எல்லாவற்றுக்கும் மூலகாரணமாயிருக்கும் முதல்வனுகிய பரமேஸ்வரனை தியானம்செய்யென்பது. கஷ்டமுண்டானுலும் சுகமுண்டானுலும் அவைகட்கென்ன காரணமென்றறிவது புத்திசாலிகளின் இயல்பு. ஒருவிடத்தில் கூடாரமடித்ததுரை அங்கே ஸுவாஸனை வீசியதைக்கண்டு என்னகாரணமென்றுர். சேவகர்கள் ஸமீபத்தில் சந்தனவிருக்ஷங்களிருக்கின்றன. அதனுடன் அருகே பூந்தோட்டங்களுமுண்டு என்றனர். ஓகோ அவையன்றே காரணம். ஆதலின் இனி எப்போதும் கூடாரத்தை இங்கேயே அடியுங்கள் என்று உத்தரவுசெய்து தாம் ஷை விருக்ஷத்தையும் சோலையையும் நாடிச்சென்றுர். இதுபோல் நாம் அனுபவிக்கும் சுகங்களுக்கும் நம்முடைய ஜனனத்துக்கும் ஆதிகாரணமான கடவுளை யறிந்து அவரையே ஆசிரயித்துக் கொண்டிருப்பது நன்மை. நோயால் கஷ்டப்படும்போது அதைத்தீர்ப்பதற்கான பச்சிலையைத் தேடிச்செல்வது வழக்கம். அம்மாதிரியே ஸர்வதுக்கங்களையும் நாசம்செய்யவல்ல பகவானுடைய பாதங்களை நாம் தேடிச்செல்லவேண்டுமென்றே? அவருடைய ஸ்மரணையே நம்மனதிற் பதிந்திருக்குமாயின் அதைவிட வேறு ஆனந்தம் வேண்டியதில்லை.

## அமெரிக்காவில் வெள்ளம் புரண்டது.

—)o(—

நம்முடைய தேசத்தில் பகலாயிருந்தால் எந்ததேசத்தில் இரவாகவிருக்கக்கூடுமோ அப்படிப்பட்ட அகண்ட பரந்த அநேக உன்னத பர்வதங்களையும் நீண்டநதிகளையும் அழகாகக்கொண்டு அதிசிறப்புற்ற அமெரிக்கா கண்டத்தின் ஐக்கிய மாகாணத்திலுள்ள பல இடங்களில் பெரிய வெள்ளம் புறப்பட்டு வீடுவாசல்களை யெல்லா மடித்துக்கொண்டு போய்விடவும் சுமார் 20000 ஜனங்களுக்குமேல் ஆதாரமின்றி அவதிப்படுகிறுர்கள் மற்றொரு மாகாணமாகிய கானலாவில் ஒரு பட்டணத்திலே தீவிபத்து நேரிட்டிருக்கிறது. இதனுல் பட்டணமுழுதும் எரிந்துகொண்டிருக்கிறதாம். ஆனுல் பிராணனைக் காப்பாற்றிக் கொள்ளும் பொருட்டு 7000 ஜனங்கள் வரையிலும் அப்பட்டணத்தை விட்டு ஓடிப்போய் விட்டார்களாம். மற்றவர்களெல்லாம் அங்கங்கே எரிந்துகொண்டிருக்கும் வீடுகளின் மேற்றட்டுகளில் தாவிநின்று கீழே எரிந்துகொண்டுவரும் நெருப்புக்கு இரையாக வந்து விழுந்து உயிர்விடும் தருவாயி லிருந்தனராம்.

இந்தியாவில் 1850-வருஷம் ஒவ்வொருமனிதனுக்கும் நாளொன்றுக்கு 2-அணுவும், 1882-வருஷத்தில் ஒன்றரையணுவும், 1900-வருஷத்தில் முக்காலணுவும் வரும்படி மிகுதி ஆருகலாயிற்று இந்த பெரிய லாபத்திலிருக்கையில் தான் ஆங்கில இராஜ தந்திரிகளெல்லாம் இந்தியாதரித்திரமாயில்லை, மிகச் செழுமையாய்ச் செல்வத்தோடிருக்கிற தென்கின்றனர். முக்காலணு பெருஞ்செல்வம் போலும், ஆயினும் இந்த 1903-வருஷம் எங்கும் செழிப்பாகவே யிருக்கலாம்.

## காதைக்கடித்த திருடன்,

வடக்கே பட்ஜ் பட்ஜ் என்றபட்டணத்தில் ஒரு திருடன் ஒரு சாவகாரியின் வீட்டிற் புகுந்து தனக்குவேண்டிய அளவு பொருள்களைத்திருடி மூட்டையாகக் கட்டுந்தருவாயில் வீட்டெஜமானன் திருடனை நேரிலே பார்த்து விட்டான். என்ன செய்வான் யிவன் உடனே திருடனைப்பிடித்துக் கொள்ளவும் இருவருக்கும் மல்லை யுத்தம்நடந்ததில் திருடனுக்கு வீட்டுக்காரன் கைப்பிடியினின்றும் தப்பித்துக்கொள்ள சாத்தியப்படாமல் உடனே தோன்றிய ஒரு யுக்தியால் வீட்டுக்காரன் காதை வெடுக்கென்று கடித்ததினால் அந்த வலிபொறுக்க மாட்டாமல் வீட்டுக்காரன் சடக்கென்ன தன்பிடியை விட்டுவிட்டான் திருடனும் கம்பிக் காட்டினான் (ஓடிப்போனானாம்) ஆனால் திருடன் போலீசார் வசம் அகப்பட்டு விசாரிக்கப்பட்டு இரண்டு வருஷம் கடுங்காவலும் அதில்மூன்று மாதம் தனிக்காவலும் இருக்கும்படி தண்டிக்கப்பட்டானும் வீட்டுக்காரனுக்கு பொருள் விரயம் ஜாஸ்தியாகா விட்டாலும காதின்வலி ஜாஸ்தியாய் இருந்ததாம்.

---

வீணை வாசிப்போர்க்கும் இன்பமுண்டு, கேட்போர்க்கும் இன்பமுண்டு. அழகைப்படைத்தவர்க்கும் ஆநந்தமுண்டு. அதைக்கண்ணாரக்கண்டு அனுபவிப்பவர்க்கும் ஆநந்தமுண்டு. அதுபோல் கருணைபாராட்டும் கடவுளும் கிர்யாகர்த்தர். அதைத் தியான முதலியவற்றால் அடையும் நாமும் ஆநந்தர்களே. இவ்வாறே இட்டவனும் மகிழ்ச்சியடைகிறான். இரப்பவனும் மகிழ்ச்சி அடைகிறான். புண்ய காரியங்கள் எப்போதும் சுகரமென்பதிற் சிறிதும் ஸந்தேகமில்லை.

## போலீசு சீர்திருத்தம்.

போலீசு விசாரணைக் கமிட்டியாரால் செய்யப்பட்டிருக்கும் ரிபோர்ட்டின் கருத்தின்படியே ஷை இலாகாவில் வேண்டிய திருத்துப்பாடுகள் செய்கிறவிஷயத்தில் தற்காலம் இந்தபோலீசு டிபார்ட்டுமெண்டுக்கு செலவழியும் தொகைக்கு அதிகமாக 3 கோடி ரூபாய்செலவாகக்கூடும் என்று உத்தேசிக்கப்படுகிறது. என்று பிரகரிக்கப்பட்டிருக்கிறது.



## இடத்துக்குத்தகுந்தமகிமை.

சீமை (இங்கிலாந்து) யிலே ஏழைப்பட்டவன் ஒருவன் பழமையான புஸ்தகங்களை யெல்லாம் ஒன்று சேர்த்து ஒருகடையில் கொண்டுபோய் ½ ரூபாய்க்கு விற்றானாம் அதை வாங்கின கடைக்காரன் அதிசயமான புஸ்தக மொன்றதி லிருக்கக்கண்டு அதை மாத்திரம் அவன் 7½ ரூபாய்க்கு வித்தானும் இரண்டாவது வாங்கினவன் அதை 4 பவுனுக்கு வித்தானும், 3 வது பேர்வழியதை 400 பவுனுக்கு விற்கவும் 4வது பேர்வழியதை 1000 பவுனுக்குக் குறைந்து கொடுக்கிறதில்லை யென்று பிரசித்தப்படுத்தி யிருக்கிறானும். அவ்வளவு அருமையான புஸ்தகம் என்னவென்றால் சுமார் 400 வருஷத்திற்கு முன்னே அச்சிடப்பட்ட லாட்டின் பாஷையி லெழுதிய ஜெப (Prayer book) புஸ்தகமாம்;

---

“முன்னுக்கெல்லாம் வெயில் பின்னுக்கெல்லாம் மழை” என்பது போல் முதலில் பகவான் வறுமையைக் கொடுத்தாலும் கடைசியில் மிகுந்த கிருபையைச் செய்வாரென்பது நிச்சயம்.

---

கிராமங்களில் சாவி முதலியவைகளால் விளை வில்லாமல் போய்விட்டால் தீர்வைவஜா செய்து கொடுக்க விண்ணப்பம் எழுதுவதற்கு முத்திரை ஒட்டும் வழக்கத்தை இப்போதெடுத்து விட்டபடியால் இனி எழுதும் விண்ணப்பங்களுக்கெல்லாம் ஸ்டாம்பில்லாமலே எழுதிவிடலாம், சாவியாய் விட்டதே என்று தாங்கள் தெரிந்து கொண்டதுபோல் வஜாசெய்யும் அதிகாரிகளும் தெரிந்து கொண்டிருப்பார்களென்று சும்மாயிருக்கலககாது, விண்ணப்பங் கொடுத்தபின்பே சுற்றிப்பார்த்து வேண்டியதைச் செய்வார்களாம்.

---

தென்னிந்தியா ரெயில்வே தொடரில் 3-வது வகுப்புவண்டிகளில் போகும் பிரயாணிகளுக்குண்டாயிருக்கும் கஷ்டங்கள் சொல்லி முடியாது. வண்டியில் போதுமான விளக்குவெளிச்சம் கிடையாது ஜனங்களின் வசதிக்கு ஏற்ற விசாலம்கிடையாது. வண்டிபோய்க் கொண்டிருக்கும்போது ஆட்டமுமதிர்ச்சியும் அதிகம். இவைகளையெல்லாம் நிவர்த்திக்கும்படி தென்னிந்தியா ரெயில்வேகம்பெனியார் ஷை 3-வது வண்டிகளை பிரயாணிகளின் வசதிக்காகப் புதியமாதிரியாகச் செய்துவருகிறார்களென்று தெரியவருகிறது.

---

இந்தியாவிலு மற்ற கண்டங்களிலும் நாய்கடியால் மாண்டுபோகிறவர்களை கணக்கிடமுடியாது. இவர்களுக்கென்று கவர்ன்மெண்டார் அநேகஇடங்களில் வைத்தியசாலைகள் ஏற்படுத்தி வருகிறார்கள். வடஇந்தியாவில் இவர்கள் ஏற்படுத்தியிருக்கும் நாய்கடிச் சிகிச்சை சாலை போல தென்னிந்தியாவிலும் ஸ்தாபிக்கக்கருதி அதற்கேற்ற இடம் பெங்களூர் என்று நிர்மாணித்ததாகத் தெரியவருகிறது.

## ஓர் அதிசயவிருக்ஷம்

மத்தியமாகாணத்துக் (Central Provinces) காடுகளிலே செழித்துவிளங்கு ஒருகாட்டில் ஒருநூதனமரமிருக்கிறதாம். அம்மரத்திலைகளைத்தொட்டாலும் தேகத்தில் ஒருவித உணர்ச்சியுண்டாகி நரம்புகளெல்லாம் தளர்ச்சிகொண்டு நடுங்க ஆரம்பிக்குமாம். இதனால் அதனிடத்தில் மின்சாரம் அதிகமாயிருக்கிறதாகத் தெரியவருகிறது. 70 அடி தூரத்திலிருக்கும் ஊசியைக்கூட அவ்விலைகளிழுக்கின்றனவாம். பக்ஷிகளும் வேறுகுரங்கு அணில் முதலாகிய ஜந்துக்களும் அதினுட்கார்ந்ததை இதுவரையிலும் யாரும்பார்த்ததில்லையாம். ஈஸ்வர சிருஷ்டியில் இதுவுமோர் அதிசயம்தான்.

## ஒரு இருப்புப்பாதை.

சென்னை இருப்புப்பாதைக் கம்பெனியார் ஆவடியிலிருந்து காஞ்சிபுரத்துக்கு ஒரு லேசான இருப்புப்பாதை போடுவதற்கு வேண்டிய பிரயத்தனங்கள் செய்துக்கொண்டிருக்கிறபடியால் அப்பாதை போடுவது அனேகமாய் உறுதியாகக்கூடும்.

## கிருஷ்ண பாகவதர்.

பகவத்காலக்ஷேப சபாரஞ்சித சிரோமணியாகிய பிரமஸ்ரீ கிருஷ்ணபாகவதரவர்கள், மகோதர வியாதியால் வருந்திக்கொண்டு அபாயகரமான ஸ்திதியிலிருக்கிறதாகக் கேள்விபட்டு வொவ்வொருவரும் மனந்துடித்து வருந்தாமலிரார்கள். கடவுள் கடாக்ஷித்து நம்பகவத சிகாமணியை இக்கொடிய வியாதியினின்றுந் தப்புவிக்கும்படி சகலஜனங்களும் சகலலோக புவனகர்த்தாவாகிய சர்வேஸ்வரனைப் பிரார்த்திப்பாராக.

## வேல்ஸ் இளவரசர் இந்தியாவுக்கு வருகிறது.

நம்மிந்தியாவைப் பார்க்கவேண்டுமென்ற அபாமேற்கொண்ட நமது வேல்ஸ் இளவரசரும் அரசியாரும் வருவதற்காக கிங் ஆல்பர்ட் என்ற அழகிய கப்பல் ஒன்று தயாராகி வருகிறதாம். அது அநேகமாய் வருகிற செப்டம்பர் மாதம் அல்லது ஆகஸ்டு மாதம் இங்கிலாந்தைவிட்டுப் புறப்படுமாம்.

OFFICE OF THE REGISTRAR
REGISTERED
13 OCT 1903
MADRAS

உ

கணபதயே நம:

# THE VILLAGE OFFICERS' GAZETTE.

# கிராம உத்தியோகஸ்தர் கெஜட்டு.

மதராஸ் கவர்ன்மெண்டு தமிழ் ஜில்லாக்களிலுள்ள

கிராமாதிகாரிகளின் சீர்திருத்தத்திற்காக

மாதாந்தரம் வெளியிடப்படும்.

புத். 1.] மதராஸ், 1903 வரு ஜூலைமீ 15உ [நெ. 2.

## கிராமமுனுசிப்புகளுக்கு மாஜிஸ்ட்ரேட்டு அதிகாரம் கொடுத்திருப்பதின்பலன்.

காருண்யம் பொருந்திய கவர்ன்மெண்டார் அவர்களால் ஆதிதொடங்கியே ஏற்படுத்தப்பட்டு இன்னும் நடவடிக்கையிலிருந்துகொண்டு வருகிற மாஜிஸ்ட்ரேட்டு அதிகாரமானது சொற்ப உத்தியோகஸ்தர்களாகிய கிராமமுனுசிப்புகளுக்குக் கொடுக்கப்பட்டிருப்பதால் ஜனங்களுக்கு அநேகவித கஷ்டநஷ்டங்களுண்டாவதற்கு ஏதுவாயிருக்கின்றனவென்று ஏதோ சிலர் அபிப்பிராயப்படலாம். அப்படி அவர்கள் சொன்ன அபிப்பிராயம் வெகு ஜனசம்மதமான தல்லவென்று அடியில்வரும் விவரங்களால் நன்றாக விளங்கும்.

உலகத்திலே பிரதி மனிதனும் ஒவ்வொரு விதமான எண்ணத்தோடே நடவடிக்கையோடுமே கூடினவனாகத்தான் பிரவர்த்திக்கிறதைக் காண்கிறோம். ஒரேகிராமத்தில் உத்தமமான வழியிலே பிரவே

சித்து ஒருவருக்கும் இடையூறு புரியாமல் தாங்கள் என்னமோ தங்கள் குடும்பமென்னமோ அதுவரைக்கும் வேண்டியவைகளைக் கவனித்துக் கண்ணியமாய்க் காலங்கழிப்பவர்கள் சிலரும், சாதாரணமாக லௌகிக விஷயங்களை மேற்கொண்டு மனுஷத்தனத்தினால் மற்றவர்களுக்குமதிப்புண்டாக்கி விவகார புருஷர்களாய் வெளிவந்துலாவுவோர் சிலரும், புத்திசாலிகளாய் அதிகவாசிப்பினால் அகண்ட கல்விக்கடலாய் அநேக விஷயங்களை அதிநுட்பமாகத்தானே கிரகித்துக்கொண்டு பொதுஜனநன்மைக்கென்றே பாடுப்பட்டு அவர்களடையவேண்டிய நன்மைகளுக்காக அநுகூலமானவைகளை யெல்லாம் அப்போதைக்கப்போது அநுஷ்டானத்திற்குக் கொண்டுவந்து அவர்கள் மனதிற்குச் சந்துஷ்டியை யுண்டுபண்ணி அதனால் அதிகதிருப்தியை யடையும் அறிவாளிகள் சிலரும், உலகம் இன்னதென்றே தெரியாமல் ஏதோ முன்னோர்கள்தேடி வைத்த பொருளால் ஒருவேலையிலும் தலையிடாமல் காலையில் எழுந்திருப்பதும் காலைக்கடன் முடிப்பதும் உடனே ஆகாரம் செய்வதும் ஊரையொருசுத்து வீணே சுத்திவந்ததும் வந்த ஆயாசம் தீர்ந்ததும் ஸ்நானத்திற் கெழுந்தருளி ஆற்றிலோ குளத்திலோ அனைவரையிலும் தேகசுத்தி செய்துகொண்டு வீட்டுக்கு வந்ததும் அகப்பட்டதை வயிற்றிற்குப் போட்டுவிட்டு உடனே உண்ட இளைப்புத் தொண்டருக்கு முண்டென்பதை மறவாது உறங்கிவிழித்து ஊர்சுற்றிவந்து அந்த இரா உணவுக்கு எதிர்பார்த்து அதுவும் வளமாய்க்கிட்டவும் அயர்ந்து நித்திரைகொண்டு அடுத்தநாள் காலையில் மறுபடியு முன்போலவே ஆரம்பிப்போர் சிலரும், அருக்கன் எப்போது குணகட லுதிப்பானோ அண்டைவீட்டில் சண்டைபிடிப்போமோ மண்டை யுடைப்போமோ தண்டம் கொடுப்போமோ என்ற இதுவே யெண்ணமாய் இரவெல்லாம் இமைக்கிறதும் விழிக்கிறதும் உறங்குகிறதுமாயிருந்து பொழுதுவிடிந்ததும் போருக்குப் புறப்படுவோர் சிலருமாக அடங்கியுள்ள ஒரு கிராமத்திலே முன்சொன்னபலராலும் ஊரின் க்ஷேமத்திற்கு யாதொரு கெடுதலையு மிராவிட்டாலும், வேலைவித்தில்லாமல் விசனமென்பதைச் சொர்ப்பனத்திலுங் கண்டறியாத வீண்காலம் போக்குவோர்களும் அண்டை அயலெல்லாம் அதிர்ந்து போகும்படி யடிக்கடி சண்டையிட்டு அநேகருக்கு இடைஞ்சல் செய்வோர்களுமாகிய பின்சொன்ன சிலர்கள் ஒவ்வொரு கிராமத்திலு மிருக்கலாமே? அப்படிப்பட்டவர்களை அத்துமீறி நடக்கவொட்டாமலும் நல்லவழியிலே பிரவர்த்திக்கும்படியும் ஒழுங்கு படுத்துவது ஊரின் தலைவனைப்பொருத்த தென்பதைக்



கவனித்த கவர்ன்மெண்டார் அப்படிப் பிரதிக்கிராமத்தின் தலைமையாய்விளங்கும் கிராம முனுசிப்புக்கு இந்த மாஜிஸ்ட்ரேட்டு பவர் பூராவுமிருந்தால்தான் கிராமங்கள் சீர்படும் ஒழுங்குபட்டு அமைதிக்குவரும் எல்லாம் அமரிக்கை கொள்ளும் என்பதைத் தெரிந்துகொண்டுதான் சுமார் 80 வருஷங்களுக்கு முன்னமே சிலசட்டங்களும் ரெகுலேஷன்களும் இதற்கென்றே ஏற்படுத்தினார்கள். அவைகளில் 1816 ம் வருஷத்திய 11 வது ரெகுலேஷனும், 1821 ம் வருஷத்திய 4 வது ரெகுலேஷனும் மற்றும் சில ஆக்டுகளும் இன்னும் அமுலில் இருந்து கொண்டிருக்கின்றன. இவைகள் பொதுஜன நன்மைக்காக நடவடிக்கையில் இருந்து கொண்டிருக்கவேண்டு மென்பது மேலேசொல்லிய காரணங்களால் அவசியமானதே. நூற்றுக்கணக்காகவும் ஆயிரக்கணக்காகவும் ஜனங்களடங்கிய ஒவ்வொரு கிராமத்தின் தலைமை யதிகாரிக்கும் அவ்வளவு அதிகாரமில்லாவிட்டால் ஊர் அடங்கியிராது. ஜனங்களுக்கும் திருப்தியிராது அதனால் ஜனங்கள் அவரவர்களிஷ்டம்போல நடப்பார்கள். ஆகையால் இவைகளை யெல்லாம் சரிவர ஒழுங்குபடுத்தி நடத்திக்கொண்டு போகக் காரியஸ்தனாகவும் தண்டிக்கு மதிகாரத்தை வகித்தவனாகவும் கிராமத்தலைவன் விளங்கினால்தான் கூடிவரும்.

அக்காலத்திலேற்பட்ட சட்டங்களிலே 1816 வருஷத்திய 11 வது ரெகுலேஷன் 10 வது செக்ஷன் பிரகாரம் துர்ப்பாஷைகள் சாதாரண அடிபிடி சண்டை சச்சரவு முதலான அற்ப குற்றங்களைப்பற்றி விசாரணைசெய்து தண்டிக்கும் அதிகாரமும் 1821 ம் வருஷத்திய 4 வது ரெகுலேஷன் பிரகாரம் சொற்பத்திருட்டுகளை விசாரிக்கும் அதிகாரமும் முனுசிப்புதாருக்கு கொடுத்திருப்பதால் இப்படிச் சம்பவிக்கும் கேசுகளை யெல்லாம் அந்தந்தக் கிராம முனுசிப்புகள் அந்தக்கேசுகள் நடக்கப்பட்ட இடங்களிலேயே விசாரணை செய்து முடிவுசெய்வதால் ஜனங்களுக்கு அதிகஸுலபமாகவே பிரயாணச்செலவு சாப்பாட்டுச் செலவு தேகபிரயாசை முதலானவைகளில்லாமல் தாங்களிருக்கும் இடத்திலேயே நியாயம் பெறுகிறார்கள். இப்படிக் கிராமாதிகாரிகளுக்கு மாஜிஸ்ட்ரேட்டு அதிகாரத்தைக் கொடுத்துச் சொற்பகேசுகளை அங்கங்கேயொழித்து ஜனங்களுக்குப் பலவிதத்திலும் சௌக்கியத்தை யுண்டுபண்ணியிருக்கிறார்கள் என்பதை எளிதில் தெரிந்துகொள்ளலாம்.

(இன்னும் வரும்)

# இங்கிலீஷ் ராச்சியம்.

## இதனால் இந்துக்களுக்குண்டாயிருக்கிற பலவித நன்மைகள்.

---

(முன் தொடர்ச்சி.)

குடியேற்றநாடுகளிலும் தங்களுக்குக்கீழ்ப்பட்ட இந்தியாமுதலிய தேசங்களிலுமுள்ள குடிகளின் குறைகளையெல்லாம் எடுத்துத் தெளிவாகக்காட்டி மணிக்கணக்காகவும் ஜாமக்கணக்காகவும் விடாமழைபோல விஷயங்களை எடுத்துப் பேசி விஷயசாதனையைக் கொள்ளும் வாசாவல்லவர்களான பிரசங்கரத்நாகரங்களும், எப்போதும் குடிகளின் சுகத்துக்கு யாதொருகுறைவும் வரக்கூடாதென்ற நோக்கத்தோடே எந்நேரமும் இதேகவலையாய் இமைகொட்டாது காத்துவருவோரும். எவ்வளவு கடினமான விஷயமானாலும் மனப்பூட்டுக்கு எட்டாதவைகளானாலும் எவ்வளவோ ஆழ்ந்தகருத்தோடு கூடியதானாலும் சிக்குப்பட்டவிவகாரங்களாய்ச் சிந்தைக்கெட்டாதவைகளானாலும தங்கள் அபாரபுத்தியாலும் அதிநுட்பயுக்திகளாலும் நிதானித்து நேர்மைகொண்டு வெளிப்படுத்தி விவரங்காண்போரும், அரசிறை நிர்வாகவிஷயங்களிலும் அயல்நாட்டுமன்னர் விஷயங்களிலும் கவனத்தைச்செலுத்தி இராச்சியத்திற்கு யாதொருயிடையூறும் வாராதபடி காத்துவருவோருமாகிய இவர்கள் எல்லாம் நிறைந்து இளஞ்சூரியனைப்போலக் கதிர்விட்டு ஒளிபரப்பிப்பிரகாசிக்கவும் இவர்களடங்கிய சபையைத்தான் அவுஸ் ஆப் காமன்ஸ் என்பார்கள். இப்படிப்பட்ட அபாரசத்தியோடே விஷயங்களையெடுத்துச் சாமக்கணக்காகப்பேசி ஆயிரக்கணக்காகத் தம்மைச்சூழ்ந்திருக்கும் தங்களுக்குச்சமதையான புத்திகூர்மையுள்ள அவ்வளவுபேர்களையும் தாங்கள்பேசும்விஷயத்தையே கவனிக்கச்செய்யும் திறமைவாய்ந்த ஜெயசாலிகளாக நிறைந்துள்ள இந்தஇரண்டுசபைகளும் இணையற்றதாய் கோடிசூரியப்பிரகாசமாய்எங்கேபார்த்தாலும் பலவிதவர்னங்களோடுங்கூடிப் பார்க்கப்பார்க்கப்பிரமிக்கச் செய்வனவாய் ஆயிரக்கணக்கான ஜனங்கள்



டங்கக்கூடியனவாய் அகண்டு பரவி அண்டமளாவிய ஆக்ருதிகொண்டு அதியுன்னதககாக்ஷியாய் அவைகளின்கொண்டல் கவியும் கொடுமுடிகளெல்லாம் புண்டரீகாக்ஷன் பொன்முடிபோலும்பொலிவுற்றுப் புவிபோற்ற விளங்காநிற்கும். மநுஷகளுக்குவேண்டிய நன்மைகளைநாடி அப்போதைக்கப்போதுண்டாகும் அநேகஆக்டுகளும் திருத்தப்பாடுகளும் முதலில் மேலேசொன்ன அவுஸ் ஆப் காமன்ஸ் என்னும் மகாசபையில் ஒருவரால் பிரேரேபித்து அதையெல்லோருங்கவனிப்பார்கள். அப்படிக்கவனித்தவர்கள் தங்கள் தங்கள் கருத்துக்கெட்டிய அதற்குச் சேர்க்கவோ குறைக்கவோ வேண்டிய அபிப்பிராயங்களை துண்டுகடிதங்களில் எழுதி மறுநாள் கொண்டுவருவார்கள். அப்படிக்கொண்டுவரப்பட்டவைகளைச் சேகரித்துப்பிரிவுபடுத்தி அதில் பெரும்பாலார் அபிப்பிராயப்பட்டவைகளைக் கூட்டியுங்குறைத்தும் இரண்டாவதுமுறை முன்போலவே எல்லாருடைய அங்கீகாரத்திற்கும் செல்லவிடுவர். அதிலும் ஏதாவது திருத்துப்பாடுகளிருந்தால் அவைகளையும் பெரும்பாலார் சமயததின்பேரில் கூட்டியுங்குறைத்தும் முடிவாக மூன்றாம்முறை சபைக்குக் கொண்டுவருவார்கள் இந்தத்தடவையில் இதற்குப்பில் என்று பெயருண்டாகி இந்த மகாசபையில் அங்கீகரிக்கப்பட்டதாய் அவுஸ் ஆப் லார்ட்ஸ் என்னும் மகாசபைக்குப்போகும். அங்கேயும் மூன்றுதரம் இந்தபில் ஆனது அச்சபை நிறைந்தவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டு ஏதாவது கூட்டிக்குறைக்க வேண்டுவதிருந்தால் அவைகளும் நிறைவேறப்பட்டு அந்தச்சபையிலும் அங்கிகரிக்கப்பட்டுக் கடைசியாக அரசச்சக்கிரவர்த்தி அவர்களின் அங்கீகாரத்திற்குப்போகும இத்தனைவித அந்தஸ்தோடே அநேக திருத்துப்பாடுகளடைந்து முறையாய்வந்ததைச் சக்கிரவர்த்தி அவர்கள் அங்கீகாரத்தில் தம்முடைய முத்திரையிடவும் அந்தபில் ஆனது சட்டம் என்ற பெயர்பெற்று ராச்சியமெல்லாம் பரவி ஜனங்களுக்கு நன்மையை யளிக்கிறது. ஆகையால் இங்கிலாந்தில் அரசரும் அவருக்குக்கீழ் அவு

ஸ் ஆப் லார்ட்ஸும், அவுஸ் ஆப் காமன்ஸும் குடிகளுமா
யிருக்கிறார்கள். குடிகளின் அபிப்பிராய மெல்லாம் ஒன்றுசேர்ந்த
ஒருவாக்கும், அவுஸ் ஆப் காமன்ஸ். அவர்களின் அபிப்பிராய
த்தை அனுசரித்தவர்கள். அவுஸ் ஆப் லார்ட்ஸ் அவர்களின்
எண்ணம்போல் எதையும் நடத்தவல்லவர். இராஜா இவ்வளவு
ஒற்றுப்பாடுள்ள ராச்சியத்தின் அதிகாரத்துக் குள்ளடங்கிய
எந்தநாடும் செழித்து பச்சென்று விளங்குவதற்குத் தடை
யென்ன இருக்கிறது. இவ்வளவு பத்ததியிலே இருக்கிறபடியி
னால்தான் இந்த ராச்சியமானது அரசுரிமை நடத்துவதற்கு
ஆயிரக்கணக்கான அதிகார அந்தஸ்துக்களை ஏற்படுத்தி
அவைகளுக்கு வேண்டிய சம்பளப்பட்டிகளையும் ஏற்படுத்தி
எவ்வளவோ விமரிசையாக நடத்திவருகிறார்கள். இராஜாங்கத்
தின்வேலையை எத்தனையோ பிரிவாகப்பிரித்து ஒவ்வொருபிரி
வின் தலைமையானவர்களுக்கும் ஆயிரக்கணக்காகச் சம்பளம்
அளித்துவருகிறார்கள். நம்முடைய இந்தியாவிலே இங்கிலீ
ஷ-அரசாக்ஷியினால் அநேக நன்மைகளுண்டாயிருக்கின்றன.
ஹிமசேதுபரியந்தமாக விசாலித்து அகண்டபாரத இத்தேசத்
தை அவர்கள் அநேகவித இராஜதானிகளாகவும், மாகாணங்க
ளாகவும், உட்பட்ட நாடுகளாகவும், அங்கங்கே பிரித்து அவை
களில் இராஜதானிகளுக்குக் கவர்னர்களையும், மாகாணங்களுக்
கு உதவி கவர்னர்களையும், உட்பட்டநாடுகளுக்கு அவைகளுக்
குரிய மகாராஜாக்கள், நவாப்புகள், ராஜாக்கள், பாளையப்பட்டு
கள் ஜமீன்தார்கள் முதலானவர்களையும் கொண்டு அந்தந்த இ
டத்திற்குத்தக்கபடி ஆக்டுகளும் ஆர்டர்களும் ஏற்படுத்தி நட
த்திவருகிறார்கள். ஒருஇராஜதானியை யெடுத்துக்கொண்டால்
அதற்குத்தலைமையாக கவர்னரும் அவருடைய பார்வையின்கீழ்
பப்ளிக்டிபார்ட்டுமெண்டு, ரெவினியு டிபார்டுட்மெண்டு, லோ
கல்பண்டு முனிசிபல்டிபார்ட்டுமெண்டு, ஜுடிஷியல் டிபார்ட்
டுமெண்டு, பொலிடிகல், மெரீன், எக்ளிஸியாஸ்டிகல் முதலானடி
பார்ட்டுமெண்ட்களும் அமைந்திருக்கின்றன,போலீசுமுதல் வேற



கோர்ட்டுவரையிலுள்ள எல்லாவிதவிவகாரங்களும் ஜுடிஷி
யல் டிபார்ட்டுமெண்டில் முடியும், கிராமமுனிசிப்பு மணியத்
திலிருந்து ரெவினிபோர்ட்டுவரையிலுள்ள எல்லாவிதவிவகாரங்
களும், ரெவினியூடிபார்ட்டுமெண்ட்டில் முடிவுபெறும், ரோட்டு
கள் மராமத்து பெரியபெரிய கட்டடங்களின் நிர்மிதம், பழுதுபா
ர்த்தல் முதலானவைகளும் காட்டிலாகா சம்பந்தமானவைக
ளும் பப்ளிக் வொர்க்ஸ் டிபார்ட்டுமெண்ட்டிலும், முனிசிபாலிடி
கள் டிஸ்ட்ரிக்ட்போர்ட்ஸ் தாலூக்போர்டஸ் யூனியன் பஞ்சா
யத்துக்கள் முதலானவையெல்லாம் லோகல்பண்டு முனிசிப
ல்டிபார்ட்டுமெண்டிலும் மதசம்மந்தமானவைகளெல்லாம் எக்
லீஸியாஸ்டிகல் டிபார்ட்டுமெண்ட்டிலும் அபாரமானசக்தியோ
டே ஏராளமானசாமான்களையும் எத்தனையோ ஆயிரக்கணக்கா
ன ஜனங்களையும் இந்தஉலகத்தின் எந்தபாகத்திற்கு வெகு
இலேசாகக்கொண்டு செல்லும் மரக்கலங்களுக்கும் ஸ்டீமர்களுக்
கும் அவைகள் தங்கும்துறைமுகங்களுக்கும் சம்பந்தமானவை
கள் எல்லாம் மெரீன்டிபார்ட்டுமெண்ட்டிலும், இராஜாங்கத்தை
யடுத்த விஷயங்களெல்லாம் பொலிடிகல் டிபார்ட்டுமெண்டி
லுமுடிவுபெறும், இப்படி 22 ஜில்லாக்களாகப் பிரிவினையுற்ற
இந்த இராஜதானியின் அவ்வளவு விவகாரங்களையும் மேலேகா
ட்டிய இத்தனை டிபார்ட்டுமெண்டுகளிலே நடத்தி ஜனங்களைப்
பாதுகாத்து வருகிறார்கள். ஸ்ரீமகாபாரதத்திலே ஒருபாகத்தி
லே அக்காலத்திய போலீஸ்காபந்தைப்பற்றி வெகுதெளிவாய்
ச்சொல்லியிருக்கிறதைக்கண்டு அக்காலத்து நமது தமிழ்அர
சின் தன்மையையும் தற்காலத்திய இங்கிலீஷ் அரசாக்ஷியின்
தன்மையையும் ஒத்திட்டுப்பார்க்கப்போனால், எவ்வளவோவித்
தியாசமான பேதத்தைப்பார்க்கலாம்.—இந்திரப்பிரஸ்தத்திலே
பாண்டவர்கள் ஏகசக்ராதிபதியாய் செங்கோல்நடத்திவருகையில்
ஒருநாளையதினம் ஒருஏழைப்பிராமணன்வீட்டில் திருடர்கள்புகுந்
து திரவியங்களைக்கொள்ளைகொண்டு போனதற்கு அப்பிராமண
ன்முற்றத்தில் கட்டியிருந்த பசுக்கூட்டங்களையும் கொண்டுபோ

ய்விட்டனராம். இதற்காக அந்தப்பிராமணன் இந்தக்காலமானால் என்னசெய்திருப்பான்? உடனேஒரு ஆள்மூலமாகப் போலீசுக்குத்தெரிவித்தால் எவ்வளவோ அமுலுக்குக்கொண்டு வரப்பட்டு நியாயத்தையடைவான். அப்படிஇக்காலத்தில் திருடுவதற்குப்பிரயத்தனப்படவே சாத்தியமாகாது. அந்தக்காலத்திலே அந்தஏழைப்பிராமணன் இராப்பத்துநாழிகைக்குமேல் நடந்த இந்தவிவகாரத்தை யெடுத்துமுறையிட்டுக்கொள்ள ஏற்றஅதிகாரிகள் அருகிலில்லாமையால் அரண்மனை அந்தப்புரத்துக்கு ஓடி ஓ அர்ச்சுனா! மாடுபோச்சுதடா! மற்றுமுள்ளபண்டங்களும் பறிபோய்விட்டது! இதோதிருடர்கள் போகிறார்கள்! என்பின்னே வாடா! இளஞ் சிங்கமே! திருடர்களைக்காட்டுகிறேன் அவர்களைத் தீட்டி என் திரவியத்தையும் பசுக்களையும் எனக்கு மீட்டுக் கொடடா! வென்று முறையுமிடவும், இராஜாவாகிய அர்ச்சுனனும் எவ்வளவோவிவகாரத்தால் அலுத்து அப்போதுதான் ஆயாசந்தீர்க்க அம்ஸதூளிகாமஞ்சத்திலேபடுத்து அரைக்கண்கூடப்போட்டிரான், ஆரியன் அலறுகிறது காதில்கேட்டதும் அப்படியே தடாலென்றெழுந்து, அவ்விடத்திற்கோடி, உடனே பிராமணனுக்கு அபயஸ்தங்கொடுத்து, அரைக்குட்சென்று அங்குற்றசில அசந்தர்ப்பங்களையும் கவனியாமல், வில்லம்பேந்தி விப்பிரனோடேசென்று, திருடர்களை மடக்கிச்சம்மரித்து, பிராமணனுக்கு மாடுகளையும திரவியத்தையு மீட்டுக்கொடுத்தான் என்றெழுதி யிருக்கிறது. இந்தச்சொற்பவிஷயத்திற்கே அரசனே நேரில்போய் இவ்வளவு வேலைசெய்தானென்றால், ஊரில் போலீஸ் எங்கேபோச்சுது. மற்றுமுள்ள அதைச்சேர்ந்த உத்தியோகஸ்தர்களில்லையா வென்றால் அக்காலத்தில் இவைகளெல்லாம் இல்லவேயில்லை. அரசனுக்குக் குடிகள் கப்பங்கட்டுகிறதும் அரசன் இஷ்டபோகமாய் அனுபவித்துவருகிறதும் மறுதேசத்தரசன் படையெடுத்துவந்தால், அவனோடு மன்றாடி ஜெயம்பெற்றால் இராச்சியமடைகிறதும் தோற்றால் பாரியாய்ப்பெண்டுபிள்ளைகளோடு ஓடிப்போகிறதுமா யிருந்ததேயல்லாமல்



இந்த இங்கிலீஷ் இராச்சியத்தைப்போலஇவ்வளவுவிவரங்கண்டு செய்தவர்கள் எவருமில்லை. இந்தத்தமிழ் ராச்சியம் தானா இப்படி என்றால் இதற்குப்பின்னால் அரசாண்டு வந்த மகம்மதிய (நவாபு) துரைத்தனமும் அப்படியே தானிருந்தது. இந்த மகம்மதியராளுகையிலே அவர்கள் இட்டது சட்டம்தான். ஸ்ரீஜாதிகள் வெளியே வரலாமா ஒருவன் பச்சென்று விளங்கி வெளியே வரலாமா நல்ல துணிகட்டலாமா, ஒருவனிடத்தில் பணம் அதிகமாக விருப்பதாய்த் தெரிந்தால்போதும்; உத்தியோகஸ்தர்களுக்காவது நன்மையுண்டா? ஒவ்வொருவருக்கும் வருஷக்கணக்கான பாக்கிதான், சமயம் வந்து நவாபு கண்திறந்தாலோ அவன்பாக்யவான்தான் இதுவும்இவ்வளவுமௌடீக ராச்சியம் தான், ஆனால் இப்போதைய இங்கிலீஷ் ராச்சியமோ எல்லாராலும் கொண்டாடக்கூடியது. இரவிலே பதினைந்துநாழிகையிலேகூட நடுரோட்டிலே பொன்கட்டிகளைக்கையிலே ஏந்திக்கொண்டு நிர்ப்பயமாய்ச் செல்லலாம், எவ்வளரூப ஸ்ரீஜாதிகளெல்லாம் எவ்வளவோ தாராளமாய் வெளியேபோகலாம், யாராவது ஏறெடுத்துப்பார்க்கக்கூடுமா? உடனே இண்டியன் பினல்கோடு செக்ஷன்கள் ஆள்களைக்கொண்டுபோய் அக்கரைக்கு அனுப்பிவிடும். யாராவது தாக்ஷிணியமாகப்பேசப்போமா? உடனேசிக்ஷை. இப்படியெடுத்ததற்கெல்லாம் சிக்ஷைகள் ஏற்பட்டிருப்பதால் ஜனங்கள் நிர்ப்பயமாய் நிம்மளமானமனதோடும் பச்சென்றுவிளங்கிச்சுகமாக வாழ்ந்துவருகிறார்கள்; அரசாங்கத்தில் பாரிய உத்தியோகங்களையெல்லாம் தங்கள் அபாரசக்தியாலும் அதி சூக்ஷ்மபுத்தியாலும் வகித்து ஆயிரக்கணக்கான சம்பளத்தைப் பெறுகிறார்கள். சட்டநிரூபண சபையிலே கூடமெம்பர்களாகிய மேதாவிகளாகவும் விளங்குகிறார்கள். இந்த இங்கிலீஷ் இராஜ்யத்திலே எத்தனையோ கோடிக்கணக்கான ஜனங்கள் உத்தியோக விருத்தியினாலேயே ஜீவிக்கிறார்கள். இவ்வளவுகோடி ஜனங்களுக்கும் சுகத்தையளித்துவரும் இந்தஉத்தமமான இராஜ்யமானது மேலும் மேலும் விருத்தியாகி வெகுசெழிப்புற்று நீடூழியாய் நிலைத்தி

ருக்கும்படி கிராமவாசிகளே, கிராமாதிகாரிகளே, நாமெல்லோரும் சர்வவல்லமையுள்ள சர்வேஸ்வரனைத் துதிசெய்வோமாக. ஓம் சுபம். சுபம்.

---

## கிராமங்களின்
## ரெவினியூ விவகார நடவடிக்கைகள்.

சிறந்தோங்கி மாட்சிமைகொண்ட நம் சென்னை இராஜதானியின் ஒவ்வொரு ஜில்லாவிலுமுள்ள அநேக தாலூக்காக்களின் ஆயிரக்கணக்கான கிராமங்களிலே அந்தந்த கிராமத்தின் கவர்னராக விளங்கும் கிராமாதிகாரிக்கும் இப்படிப்பட்ட கிராமங்கள் எத்தனையோ அடங்கியுள்ள தாலூக்காவின் தலைமையாக விளங்கும் தாசில்தாருக்கும் இடையிலே விளங்கி இவர்களுக்குண்டாயிருக்கும் அதிகாரத்தோரணைகளைப் பொருத்திக்காட்டி அதன் காரணமான சம்பந்தத்திற்கு ஒரு சங்கிலித் தொடர்போல விளங்கும் உத்தியோகத்திற்குத்தான் ரெவினியூ இன்ஸ்பெக்டர் என்றுபெயர். கீழ் அதிகாரிகளிலே முக்கியமானவர்களில் இவர் ஒருவர். நன்றாய்க்கவனித்துப்பார்க்கும் பட்சத்தில் கிஸ்திவசூல் விஷயத்திலும் சாகுபடி விஷயங்களிலும் மேலதிகாரிகள் கவனத்திற்குக்கொண்டு போகக்கூடிய அநேக ரிபோர்ட்டுகளின் சரியான மாதிரி இவரைப் பொருத்ததாக இவர் ஜாக்கிறதையாகவும் கவனிப்பாகவும் பார்க்கவேண்டியதாக விருக்கிறது. மாமூலாயிருக்கிற சில தானியங்களின் அளவைப்பற்றியோ, பயிர் செய்யப்பட்டிருக்கிற நிலங்களின் விஸ்தீரணத்தைப்பற்றியோ ஆடுமாடுகளின் கொள்ளைநோய்களைப் பற்றியோ இன்னும் இப்படிப்பட்டவைகளில் எதைப்பற்றியோ தெரிந்துகொள்ளும்படி கவர்ன்மெண்டார் அவர்களிடமிருந்து யாதாவது கேழ்விபிறக்கும் பட்சத்திலே ரெவினியு போர்டிலிருந்து இதைப்பற்றிய ஆர்டர் ஒன்று ஜில்லாக்கலெக்டருக்கு அனுப்பப்படுகிறது. அந்தக்கலெக்டர் அதை டிவிஷனல் ஆபீசருக்கு அனுப்புகிறார். அவர் அதைத் தாசில்தாருக் கனுப்பவும் தாசில்தார் அதை ரெவினியூ இன்ஸ்பெக்டருக்கு அனுப்புகிறார். சாதாரணமாக இந்த ரெவினியூ இன்ஸ்பெக்டர் அதற்கு வேண்டிய தகவல்களை யெல்லாம் கிராமாதிகாரிகள் மூலமாகச் சேகரித்து அனுப்பவும் அவைகளிலிருந்து தான் கவர்ன்மெண்டு ரிபோர்



ட்டுகள் தயாராகின்றன. சாகுபடி சாவியாய்ப் போகவும் அதைப்பற்றி உழுது பயிர்செய்கிறவ னொருவன் முறையிட்டாலும் சரி, அல்லது கிராமாதிகாரியின் அக்கிரமமான நடவடிக்கையைப்பற்றி பிராது செய்தாலும்சரி, இந்தப்பிராதைச் சாதாரணமாய்க் கலெக்டர் அல்லது டிவிஷனல் ஆபீசர் தாசில்தாருக்கனுப்பவும் அவர் அதை ரிவினியு இன்ஸ்பெக்டருக்கு அனுப்புகிறார்.

ஒவ்வொரு தாலூக்காவிலும் இரண்டு அல்லது மூன்று ரெவினியு இன்ஸ்பெக்டர்க ளிருக்கிறதுண்டு இவர்களுக்கு என்று பிர்கா (Firkha) அல்லது டிவிஷன் ஏற்பட்டிருக்கிறது. இந்த பிர்கா அல்லது டிவிஷனிலடங்கிய கிராமங்களும் அவைகளின் அதிகாரிகளும் இந்தரெவினியு இன்ஸ்பெக்டர் அதிகாரத்திற்கு உட்பட்டவர்கள்தான். இவர் ஷை கிராமங்களைப் பார்வையிடும்படி சர்க்கூட்டில் போகும்போது அந்தந்த கிராமத்தில் இவர் போயிறங்கினதும் அந்தக்கிராமத்தின் அதிகாரிகள் எல்லாம் இவரிடம் ஆஜராகி இவர் கேழ்க்கும் கேழ்விகளுக்கு உத்தரவு சொல்லவேண்டும், இப்படி யிந்தரெவினியூ இன்ஸ்பெக்டர் தன் பிர்காவுக்குள்ளடங்கிய பிரதிக்கிராமத்தையும்போய் இன்ஸ்பெக்ஷன் செய்து (பார்வை யிட்டு) திரும்பவேண்டும் அப்படி ஒவ்வொரு கிராமத்தையும் பார்வையிடும்போது முக்கியமாய் நிலங்களில் விளைச்சல் எப்படி யிருக்கிறதென்று பார்க்கவேண்டும். குளம் சுத்தமாயிருக்கிறதா வென்று பார்வையிட வேண்டும், மழைபெய்ததை யளவைக்கவனிக்கவேண்டும். கிஸ்திவசூலின் ஸ்திதியைப் பரிசோதனைசெய்து கிராமக் கணக்குகள் சரியாய் வைக்கப்பட்டிருக்கிறதா வென்று பார்த்துக்கொண்டு ஜமாபந்திக்கு முன்னே சிலநிலங்களை அளவிடவேண்டுமென்பதுகூட அவரைப் பொருத்ததுதான். நிலம் சாகுபடியாகாததைப் பற்றியாவது அல்லது ஜலக்குறைவு, சாகுபடி சாவியாய்ப்போனதைப் பற்றியாவது, அல்லது அதிக மழையினாலும் வெள்ளத்தினாலும், குருக்குத்தி (பயிரழிவு) யினாலும் உண்டான நஷ்டத்தைப்பற்றியாவது பிராதுகளுண்டானால் இந்த ரெவினியூ இன்ஸ்பெக்டரானவர் ஷை நிலங்களை நேரில்போய்ப் பார்வையிட்டு தன்னுடைய ரிபோர்ட்டை மேலதிகாரிக்கு அனுப்பவேண்டும். இப்படி இதனால் ரெவினியூ இன்ஸ்பெக்டரானவர் ஒரு முக்கியமான ஆபீசர் என்றும் இவரிடத்தில் குடித்தனக்காரர்களுக்கும் கிராமத்தார்களுக்கும் அதிக மரியாதையும் விசேஷமதிப்பு முண்டென்றும் தெரியவருகிறது. இப்படிப்பட்ட பொருப்பு

ன்ன வேலைகளை வகிக்ககூடியவர் நல்லபாலியமாயும், சுறுசுறுப்புள்ளவராயும், நன்றாக வாசித்தவராயும் நல்லகுணசாலியாயும் நிதானங்கொண்டவராயு மிருக்கவேண்டும். அப்படிக்கில்லாமல் சிலசமயங்களில் விருத்தாப்பியம் சுறுசுறுப்பின்மை, காரியத்தை நடத்திக்காட்டப்போதுமான சக்தியில்லாமை இவைகளை யுடையவர்கள் வரும்படியாய் நேர்ந்துவிட்டாலோ அந்த டிவிஷனுக்கோ பிர்காவுக்கோ வேலைகள் சரியாய் நிறைவேறமாட்டா. அடிக்கடி மொட்டைப்பிராதுகள் கிளம்பிக்கொண்டேதா னிருக்கும். அதனால் அந்தடிவிஷனில் கலகமிராமலிராது. சிலகாலம் ரெவினியு இன்ஸ்பெக்டராக வேலையிலிருந்திராதவரை தாசில்தாராக நியமிக்கக்கூடாதென்று ஒரு ரூல் ஏற்படுவது ஒரு நல்லவிஷயம்தான். அநேக வருஷங்களாக கிளார்க்காக வேலைபார்த்து வந்தபிறகு அந்த ஒருவரைத் தாசில்தாரராக நியமிக்கப்படுகிறது அடிக்கடி நேரிடுகிறது. இந்த கிளார்க்கு என்ற அந்தஸ்தில் அவர் தன் வேலையைச் சரிவர, நடத்திவந்திருக்கலாம் எல்லாவிதமான பரீக்ஷைகளிலும் தேறியிருக்கலாம். மொத்தத்தில் ஆபீசவேலையில் தேர்ச்சியடைந்திருக்கலாமே யல்லது தேசத்தின் வளமையையும் அதிலிருக்கும்குடிகளின் மாதிரியையும் குணாதிசயங்களையும் பழகித்தெரிந்து கொள்ளப்போதிய அனுபவத்தை யடைவதற்குச் சாவகாச மில்லாதவராகி இதன்பலனாக தனக்கு தாசில்தார் வேலைகிடைத்தபோது அடிக்கடி அநேகதப்புகள் செய்தும் ஒருவேளை கஷ்டமும் நேர்ந்துவிடும் வாலிபச்சிறுவர்களை இரண்டு மூன்று வருஷம் ரெவினியு இன்ஸ்பெக்டராக வேலைசெய்யும் படியாக நியமிப்பதால், அவர்கள் அநுபவபூர்வமாக அநேக விஷயங்களை விஸ்தாரமாகத் தெரிந்து கொள்ளுகிறார்கள். அது அவர்களுக்குப் பின்னிட்டு அதிகபலனைக் கொடுக்கும். ஒருவயதுசென்ற அல்லது மற்றபடி உபயோகமற்ற குமஸ்தாவை இந்தச் சிறந்த உத்தியோகத்தி லமர்த்தி இந்த ரெவினியு இன்ஸ்பெக்டர் வேலையை இப்போது இருக்கிறதுபோல அடிக்கடிப் பார்க்கப்படுவதிலும் நல்லபடிப்போடு தங்களால் செய்து முடிக்கக்கூடிய முக்கியமான வேலையைச்செய்ய அதியுக்தமான இளமைப்பருவ முடையவர்களும் கெட்டிக்காரருமானவர்களைக் கொள்ளலாம்.

ரெவினியூ இன்ஸ்பெக்டர்கள் கிராமத்தார் சபைகளிலே கலந்துகொண்டு தன்னுடைய சாய்காலைச்செலுத்தி பணமும் மற்ற காய்கறி பண்டங்களும் அவர்களிட மிருந்து பெறலாமே, கிராமத்தார்க



ளும் அநேக பெரிய விஷயங்களெல்லாம் ரெவினியு இன்ஸ்பெக்டரின் ரிபோர்ட்டுகளைப் பொருத்த தென்று தெரிந்தவர்க ளாகையால், அவர்கள், சந்தேகமில்லாமல், அந்த ரெவினியூ இன்ஸ்பெக்டர் தயவைநாடி அவாவோடே தயாராயிருப்பார்கள் என்று சொல்லலாமே இப்படிப்பட்ட சந்தேகங்களுக்கெல்லா மிடம்கொடாதபடி ரெவினியு இன்ஸ்பெக்டராக வருகிறவர் போதுமான யோக்கியதையை யுடையவராகவே இருப்பதாகத்தான் அபிப்பிராயப் படவேண்டும், என்பதிற்றடை என்ன இருக்கிறது.

வயது சென்றவர்களைவிட நன்றாக வாசித்த சிறுவர்களை நியமிப்பது அதிகநன்மையைத் தருமென்றதற்கு இதுவும் ஒருகாரணமாகும். எப்படி யென்றால் சிறுவர்களுக்கோ சம்சாரபாதை கிடையாது, அதனால் பணத்தாசையில் அவ்வளவாக அவாவைக்கமாட்டார்கள் வயதுசென்றவர்களுக்கோ அப்படியல்ல; சாதாரணமாக அவர்கள் பெரிய குடும்பபாரத்தைச் சுமந்தவர்களாய் அதன் ஆதரிப்பின்பொருட்டு தங்கள் சொற்பசம்பளம் போதாது என்று சட்டத்துக்கு விரோதமாக இனாம் வரிசைகள் பெறுவது ஒரு பேராச்சரிய மாகமாட்டாது. வாலிபர்க்கோ இப்படிப்பட்ட அவாவுக்கு இடமில்லை. இயற்கையாகவே கைநீட்டாமல் கண்டிதமாய்த் தங்கள் வேலையைப் பார்த்துக்கொண்டு தங்கள் விருத்திக்கு வேண்டிய ஆதரவின் அபிவிருத்தியை நாடுவார்கள். சட்டத்துக்கு விரோதமான மாதிரியாக காசுபறிப்பதற்கு அநேக வழிகளுண்டு. எப்படி யென்றால் சில ரெவினியு இன்ஸ்பெக்டர்கள் பட்டாக்களை அவரவர்களுக்குக் கொடுக்கும்போது பிரதிபட்டாதாரரையும் ஏதோ இரண்டணா மூன்றணா கொடுக்கும்படி செய்துகொள்ளலாம். இதுவு மல்லாமல் குடித்தனக்காரரால், தங்கள்பேரில் பொய்க்கேசுகள் வந்துவிடும் என்ற பயத்தினாலே பணமோ அல்லது காய்கறி பண்டங்களோ கொடுக்க நேரிடலா மல்லவா? இன்னும் இதர கேசுகளிலேகூட அவைகள் உண்மையாக நடந்தவைகளானாலும் அப்படியேயொன்று மில்லாத தாக்கிவிட்டு மேற்சொன்னவைகளைப் பெறலாமே இப்படி யெல்லாம் நடப்பதாயிருந்தாலோ இவைகள் எல்லாம் ஜனங்களுக்குப் பெரும்பாரமாகி தேசத்தின் சரியானவும் நியாயமானவுமான நடவடிக்கைகளுக்கு இடையூறுண்டாக்கும் என்பதற்குத் தடையென்ன? இத்தியாதி காரணங்களையும் நன்றாக அறிந்தவர்களாகத் தான் ரெவினியு இன்ஸ்பெக்டர்கள் தேசத்தின் க்ஷேமம் அவ்வளவும் தங்க

ளுடைய யோக்கியதையைப் பொருத்ததாக எண்ணித்தான் தாங்கள் செய்கிற வேலைகளில் ஒருவிதமான வைராக்கியத்தையும் கெட்டிக்காரத்தனத்தையும் காட்டி மேலானவும் மிகவும் முக்கியமானவுமான தாசில்தார் டிப்டிகலெக்டர் வேலைகளுக்கு ஒவ்வொரு விதத்திலும் லாயக்குடையவர்களாக எடுத்துக்காட்டும்படி முயலுவார்களாக.

(இன்னும்வரும்).

## கிஸ்தி வசூலாகிற விஷயமாயுண்டா யிருக்கும் ஏற்பாடு.

(முன்தொடர்ச்சி)

வசூல் செய்யும் வேலையை நிரந்தரமாக ஒரே இடத்தில் வைத்துக்கொள்வதால் உண்டாகும் அநேக நன்மைகளை அடியில்வருமாறு காணலாம் :—

1. குடிகள் கிஸ்தியைச் செலுத்தும்படி அங்குமிங்கும்போய் அலையவேண்டிய அவசியமில்லாமல் சுலபமாகவே குறிப்பிட்டயிடத்தில் கொண்டுபோய்க்கட்டுவதால் தேகப்பிரயாசையும் வழிச்செலவும் குறையும்.

2. கிராமத்தலைவர் வீடுவீடாய்ப்போய்த் தண்டவேண்டிய அவசியமில்லை. அதற்கென்று பிரத்தியேகமாக ரசீது கொடுக்கவும் அப்படி வசூல்செய்த பணத்தை வீடுகொண்டுபோய்ச்சேர்த்துக் காப்பாற்றிவரும் கவலையே வேண்டுவதில்லை.

3. குறிப்பிட்ட ஒரேஇடத்திலிருந்துதான் வசூல்செய்யவேண்டுமென்ற உத்திரவைக் கிராமமுனுசீப்புகள் இரண்டு மூன்றுமாதம் வரைக்கும் விடாப்பிடியாய் அமுலுக்குக் கொண்டுவந்தால்தான் அதின்விபரத்தை எல்லா ரயித்துகளும் நன்றாய்த்தெரிந்துகொண்டு அப்படியே செய்துவர சுலபமாயிருக்கும். ஆகையால் இதுவிஷயமாய் போர்டு ஸ்டாண்டிங் ஆர்டரின்படி ஒரேஇடத்தில் கிஸ்திவசூல்வேலையை ஸ்தாபித்து பணத்தைக்கட்டும்படிச் செய்யும்வழக்கத்தைக் கட்டாயப்படுத்திவரவேண்டுமென்பது ஒவ்வொருகிராமமுனுசீப்பு கவனத்திலுமிருக்கவேண்டியதே.



பாக்கிதாரர்கள் சாதாரணமாய் 10௳ க்குள் பணம்செலுத்தாதபக்ஷத்தில் அவர்களுக்காக டிமாண்டுபெற்றுக்கொண்டு முதலில் அவர்களுடைய ஜங்கம சொத்துக்களாயுள்ளவைகளை ஜப்திபண்ணி ஏலத்திற்குக் கொண்டுவரவேண்டியதற்கு 3-ம் நெ. ஏலநோட்டீசு தயார்செய்து தாசில்தார் அவர்களுக்கு அனுப்பவேண்டியது. டை ஜங்கம சொத்துக்களை ஜப்திசெய்கிறவிஷயத்தில் கிராமமுனுசீப்புகளும் மணியக்காரர்களும் ஜாக்கிரதையாகவும் ரூல்களை அநுசரித்தும் சரியாய்த்தாங்கள் செய்யவேண்டிய வேலைகளில் பிராதுக்கிடமில்லாமல் நடந்துகொள்ளவேண்டும் இதைநடத்துகிறவர்கள் பொறுப்பாளிகளாகவும் மேற்கொண்டுவரும் கேள்விகளுக்கு ஜவாப்புதாரிகளுமா யிருக்கிறார்கள்.

(இன்னும்வரும்).

## கிராமமுனுசீப்புகள் கிரிமினல் விவகாரவிஷயமாய் நடந்துக்கொள்ளவேண்டிய விஷயங்கள்.

(முன்தொடர்ச்சி).

ஒருவன் பிராது கொண்டுவந்தால் அதில் கவனிக்கவேண்டிய அம்சங்கள்:

1. வாதியின் பெயர், பிரதிவாதியின்பெயர், சாக்ஷிகளின்பெயர், இவர்கள் தலைப்பு பெயர்கள், தொழில் இருப்பிடம் முதலானவைகள் சரியாகவும் திருத்தமாகவும் நல்ல மையில் எழுதியிருக்கவேண்டும்.
2. பிராதில் கண்டகுற்றம் நடந்த சரியான இடமும் அதின் சுருக்கமான விவரமும் தெளிவா யிருக்கவேண்டும் அதோடு அதுசம்பவித்த தேதியும் மணிநேரமும் குறிப்பிட்டிருக்க வேண்டும்.

கிராம மாஜிஸ்ட்ரேட்டானவர் இத்தியாதி அம்சங்களெல்லாம் கொண்டுவந்த பிராதில் சரியாய் அமைந்திருக்கிறதா என்று பார்த்து எழுதிக்கொண்டு பிராதுகொண்டுவந்தவனைப் பிரமாணம் பண்ணச்சொல்லி அதின்பேரில் உடனே கேஸை விசாரணை செய்யவேண்டும். அப்படி விசாரணைசெய்த கேஸின் சாராம்சத்தைத் தனியே எழுதி அதில் பிராதுகொண்டுவந்தவர் கைநாட்டோ அல்லது கையெழுத்தோ போடவும் அதனடியில் "என்முன்பாக எழுதிவைத்து பூர்த்தி செய்யப்பட்டது" என்று சர்ட்டிபிகேட்டு எழுதித்தன் கையெழுத்தையும் அதில்போடவேண்டும்.

எழுத்துமூலமாக வானாலும் சரி அல்லது வாய்மொழியாய்ச் சொல்லப்பட்டு எழுதி வாங்கினதானாலும் சரி அப்படி வாஙகப்பட்ட பிராதானது தன்னுடைய பரிசிலனையில் வந்ததா யிருந்தால் தான்கிராமமேஜிஸ்ட்ரேட்டானவர் பிராதுக்காரனைப் பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யக்கூடும்.

வேண்டிய அம்சங்களெல்லாம் சரியாய் எழுதப்பட்டும் எழுத்து மூலமாய்க் கொடுக்கப்பட்ட பிராதானாலும் அதில் கண்ட கேசானது தான் விசாரிக்க அதிகாரமில்லாததாக விருக்கும் பட்சத்தில் அந்தபிராது எந்த அதிகாரமுள்ள கோர்ட்டில் தாக்கல் செய்யவேண்டுமோ அந்தகோர்ட்டுக்குக் கொண்டு போகும்படி "வாபசு செய்யப்பட்டது" என்று அதின் பேரில் எண்டார்சு செய்து தன் கையெழுத்து போட்டு அந்தபிராதை பிராதுகொண்டுவந்தவனிடம் திருபகொடுத்து விடவேண்டியது. இப்படி இந்தபிராது எழுத்துமூலமா யில்லாமல் வாய்மொழியாகச் சொல்லப்பட்டதானால் உடனே அந்தப்பிராது செய்தவனை அந்தக்கேசை நடத்தவேண்டிய தக்க கோர்ட்டுக்குப் போகும்படி வாய்மொழியாகவே உத்திரவு செய்தனுப்பிவிடலாம். பிராது தன்னுடைய பார்வைக்குவந்து எந்த கிராம மாஜிஸ்ட்ரேட்டாரிடம் கொண்டு வரப்பட்டிருக்கிறதோ அதை பிராதுக் காரனுடைய பிரமாணத்தின்பேரில் உறுதிமொழி விசாரணை செய்ததின் பிறகு அதைப்பற்றி நீர்க்காலோசனை செய்து நடவடிக்கை நடத்துவதற்குப் போதுமான முகாந்திரங்கள் அதில் ஏற்படாத பட்சத்தில் அந்தக்கேசை விசாரணை செய்யாமலே தள்ளிவிடலாம் அப்படித் தள்ளிவிடும்படி நேரிடும் ஒவ்வொரு தடவையிலும் அப்படிச் செய்ததற்குப் போதுமான நியாயங்களைத் தனக்குத்தோன்றிய வரையில் சுருக்கமாக குறித்து ரிகார்டு செய்யவேண்டும்.

கிராம மாஜிஸ்ரேட்டானவர் யாதொரு பிராதைப் பிடித்து அதிலெழுதியிருக்கும் குற்றத்தைக் குறித்த நடவடிக்கைக்குக் கொண்டுவரப் போதுமான முகாந்திரமிருக்கிறதென்று அபிப்பிராயப்பட்டால் குற்றம் சாட்டபட்டவனைத்தன் முன்பாகவிசாரணை செய்வதற்கு வரவழைத்து நடவடிக்கை நடத்த ஆரம்பிக்கவேண்டியது. குறித்ததினத்தில் ஆஜராகும்படி குற்றம் சாட்டப்பட்டவனுக்கு கிரமமாய்ச் சம்மன் பிரப்பிக்கவேண்டியது இப்படிப் பிரப்பிக்கும் சம்மன் அநேகமாய் எழுத்துமூலமாகவே தானிருக்கவேண்டியது இந்தச் சம்மனில் விசாரணை செய்யப்போகிற கோர்ட்டின் பெயர், குற்றம்சாட்டப்பட்டவன் பெயர், சாட்டப்பட்ட குற்றத்தின் விவரம், ஆஜராகவேண்டிய இடம், காலம் இவைகளெல்லாம் தெளிவாய்காணப்பட்டிருக்கவேண்டும் இதோடுகூட "ஆஜரானபின்பு கோர்ட்டார் உத்திரவன்னியில் இவ்விடத்தைவிட்டுப்போகக்கூடாது" என்று காணவேண்டும். இப்படி இரட்டைப்பிரதி (Original and Duplicate) யாக எழுதி தன் கையெழுத்தும் கோர்ட்டு முத்திரையும் போடவேண்டும் இப்படி எழுதப்பட்ட சம்மனை விலேஜ் போலீஸ் (தலையாரிகள்) மூலமாய்க் குற்றம் சாட்டப்பட்டவனுக்குச் சேர்ப்பிக்கவேண்டியது.

(இன்னும்வரும்).



# தர்பார்கொண்டாட்டம்.

—)o(—

## டில்லிமாநகரில்
## நமது ஏழாவது எட்வர்ட் சக்கிரவர்த்தி அவர்களுக்கு
## நடந்தேறிய மகுடாபிஷேக
## வரலாறு.

(முன்தொடர்ச்சி).

இருபத்தொரு நூற்றாண்டுகளுக்கு முன்னேயிருந்த ஹிந்துகேசரியினுடைய முதல் முதல் வெளியிட்ட இராஜ விளம்பரமானது அழியாத எழுத்துக்களாலே எழுதப்பட்டும் இருக்கிற விடந்தெரியாம லிருந்தபோதிலும் தன்னை லக்ஷியம் வைத்து நாடிவருவோருக்கு மாத்திரம் தளராத் தனஞ்சயம்போல விளங்கித் தன்னைஸ்தாபித்த மகாபுருஷனுடைய மகத்துவத்தை வெளியிடுகிறது. தற்காலத்திலே நம்முடைய இப்போதைய கேசரிஹிந்து என்னும் பட்டம் வகித்த இராஜன்னலாகிய ஏழாவது எட்வார்டு சக்கிரவர்த்தி அவர்களின் இராஜ விளம்பரமானது நம்முடைய குடிகளின் நன்மைக்கும் க்ஷேமத்திற்கும் வாசிக்கப்படவேண்டுமென்பது ஒரு பொருத்தமான விஷயம்தான். இப்படிப்பட்ட விசேஷ வைபவத்தின் முடிசூட்டுக் கொண்டாட்டத்தை நடத்துவதற்காக நமது இராஜப்பிரதிநிதி அவர்கள் ஒழுங்குபடுத்திய பெருங்காக்ஷிக்கு முன்னே பூர்வீக கீழ்நாட்டுக் கர்ஜுடைய ஆர்பாட்டங்களும், இராஜகோலங்களும், ஆதிகாலத்திய ரோமாபுரியின் அபாரமாக இராஜகவிகளால் வர்ணிக்கக்கூடியவிசேஷாலங்காரங்களும் என்னென்று மதிக்கப்போகும்? இந்த தர்பாரின் மனிதனுடைய அறிவினால் நிதானித்து இன்னதென்று யூகித்து ஏற்படுத்தக்கூடாத வர்ணனையை எழுதச் சத்தியில்லாதவனாய் இரண்டாயிரம் கரங்களை யுடைய வாணாசூரனும், எடுத்துரைக்கக் கூடாதவனாய் இரண்டாயிரம் நாவையுடைய இராஜசர்ப்பமும் (ஆதிசேஷனும்), இன்னதென்று மதிப்பிட்டு அறியக்கூடாதவனாகவே முன்னை யூழ்வினையை மநுக்களுக்கு முற்று மெழுதிவைக்கு முன்னவனும் (பிரமாவும்) அப்போதே இவ்வவனியை யகன்றுபோயினர் என்றால், இந்த டில்லிநகரின் தர்பாரைஎத்தன்மையாய் நம்மால் வர்ணிக்கப்போகும்? இவ்வளவு விசேஷ ஆடம்பரத்தை இந்த டில்லியில்தான்நடத்தவேண்டுமென்பதற்கு எத்தனையோ காரணங்களுண்டு. இவைகளில் முக்கியமானவை இந்த நகரமானது புராதனமானதாயும், ஆக்கினை சக்கரங்கொண்ட அஜாத சத்துருக்களான அநேக சக்கி

ரவர்த்திகளின் இராஜதானியாகவும் விளங்குவதோடு இதற்கு முன்னே இதே இடத்திலேயே பதின்மூன்று வேறுவேறான பெரிய பெரிய நகரங்களெல்லாம் ஏற்பட்டு விஸ்தரித்துச் செழிப்புற்றுக் கடைசியாக க்ஷீணித்துப்போகவே கெடுநாளைய நகரமென்பதைச் சிறப்பித்துக் காட்டுகிறது.

இவ்வளவு சிறப்புற்ற இந்த இடத்தில்தான் இராஜப்பிரதிநிதியாகிய லார்டுகர்ஜான் அவர்களும் தாம் எடுத்த காரியம் நிறைவேறத்தக்க விதாயம் மேண்டுமென்பதை யோசித்து அப்படியே சென்ற செப்டம்பர்மீ 5உயில் ஸிம்லாவில் இந்தத் தர்பார் விஷயமாக அடியிற்கண்டவைகளைக் குறிப்பிட்டுப்பேசும்படி ஒரு மந்திராலோசனை சபையைக்கூட்டினர் அவை வருமாறு:—

அரசர்கள் தங்கள் ராச்சியபாரத்தை வகிக்கும்படிச் சிம்மாதனமேறும்போது அதை விசேஷமாய்க் கொண்டாடிக் களிப்பதில் அவர்களுக்கும் பிரஜைகளுக்கும் சந்திப்பு நேரிட்டுச் சந்தோஷிப்பதும் அதனால். ஜனங்களிடத்தில் அரசர்களுக்கு ஒருவித பிரீதியும், ஜனங்களுக்குத் தங்கள் அரசர்களிடத்தில் ஒருவித விசுவாசமுமுண்டாகி இருதிறத்தார்க்கும் எவ்வளவோ நன்மைகள் உண்டாகின்றன. இதுவும் நம்மிந்தியாவிலே அநுபவபூர்வமாக அடிக்கடி நடந்தேறி வருகிறதேயல்லாமல் புதிதாய் நடத்துவதொன்றுமில்லை.

அந்தக்காலங்களிலே இந்தியாவில் அல்லது இந்தியா பரவிணபாகங்களிலுள்ள ஒவ்வொருஅரசனும் அனுஷ்டித்துவந்ததைத்தற்காலத்திலும் ஒவ்வொருஆஸ்தானபூபதியும் நடத்திவருவதேயல்லாமல் வேறில்லை. ஆகவே அகண்டபூமண்டலாதிபதியாய் முடிசூடுவதென்றால் எவ்வளவோவிசேஷமாகக் கொண்டாடக்கூடியதே. இதை உலகத்தில் ஒத்துக்கொள்ளாதவர்கள் இல்லவேயில்லை. உலகபத்ததியில் உயர்ந்து, லௌகீக விவகாரங்களிற் சிறந்து ஆசாராதிகிரமவரிசைகளிலும் அதிஉன்னதங்கொண்ட இந்தஅந்தஸ்தை ஆதியிலே அநேகவிதத்திலும் நன்மைகளையோநாடி புண்ணியஞ்செய்து புவிவந்தவர்களுக்கே யுரிமையானது அப்படிப்பட்டவர்கள் அதுவிஷயமாய் நாடியடையவேண்டுவது நல்ல பொருத்தமுற்றதே. இப்படிப்பட்ட வைபவத்திலே என்வரையிலே ஒரு சக்கிரவர்த்தி காலஞ்செல்லவும் அப்பட்டத்தை அவருக்குப்பின் வந்தவரடைந்து சக்கிரவர்த்தியானார் என்பதாக உத்தியோக முறைமையில் சொல்லிக்கொள்வதைவிட அதில் அதிகமாக ஏதோ விசேஷங்களுண்டென்று எனக்குத் தெரிகிறது. அங்கங்கே மூலை முடுக்குகளிலே உலகமே இன்னதென்று தெரியாது உண்டுடுத்து உறங்கி விழித்துக் காலங்கழிக்கும் லக்ஷக்கணக்கும் கோடிக்கணக்குமான ஜனங்களுக்கு



இதைப்பற்றிய யோசனை யொன்றுமேயில்லாவிட்டாலும், ஜனசமூகத்தின் பெரும்பாலார் பாஷாக்கியானம், விசாலபுத்தி, பகுஜனப்பிரீதி கொண்டவர்களாய் இப்படிப்பட்ட விசேஷ வைபவத்தால் அரசருக்கும் குடிகளுக்குமுண்டாயிருக்கும் நன்மைகளின்னவை யென்பதைத் தெரிந்துகொண்டு, அதற்குத்தக்கபடி நடத்திக்காட்டுவது அவர்களைப் பொருத்ததாயும் முக்கியமானதாயுமிருக்கிறது. (இன்னும் வரும்)

---

# கிராமமுனிசீப்புகள்.

## சிவில் விவகார விஷயமாய் நடந்து

### கொள்ள வேண்டிய விபரங்கள்.

—(-:-)—

(முன்தொடர்ச்சி)

அப்படிக் கொண்டு வரப்பட்ட பிராது சரியான மாதிரியாகக் கோர்ட்டின் நிபந்தனைகளையும் சட்டங்களையும் அநுசரித்துக்கொண்டு வரப்பட்டிருக்கிறது தானா வென்றும் அந்தப்பிராது சம்மந்தப்பட்ட கிராமமுனிசீப்பு கோர்ட்டாரால் அங்கீகரிக்கப்பட்டதாவென்றும் பிராதில் பிராது கொண்டுவந்தவனால் இன்னும் ஏதாவது திருத்திக்கொடுக்கவேண்டிய திருக்கிறதாவென்றும் பிராது கொடுத்த தேதியிலிருந்து அல்லது அங்கீகரிக்கப்பட்டதேதியிலிருந்து காலநிர்ணய சட்டப்படி 3 வருஷ காலாவதி காலத்துக்குள்பட்டதுதானாவென்றும்இன்னும் இவைபோலொத்தவைகளில் கவனிக்கவேண்டியவைகள் யெல்லாம் சரியாயமைக்கப் பட்டிருக்கிறதா வென்றும்ஆலோசிக்கவேண்டியது. இப்படிக் கவனிப்பதில்ஏதாவதுஅப்படிப்பட்ட குறைகள் ஏற்படுமோனால் அவைகளைத் திருத்தி கோர்ட்டில்மறுபடியும்தாக்கல் செய்யவேண்டியது என்று தோன்றினால். அவைகளைப் பிராதின்பேரில் சுருக்கமாக யெழுதி எண்டார்ச செய்து திருத்தி அல்லது வேறே புதிதாக எழுதிக்கொடுக்க 3 நாளோ அல்லது கோர்ட்டார்அபிப்பிராயப் படுகிற அத்தனை நாட்கள் கெடுவைகண்டு எழுதி அதைப்பிராது கொண்டுவந்தவனிடம் திருப்பிக்கொடுத்து விடவேண்டியது. பிராதில் ஏதாவது திருத்தவேண்டியதாயிருந்து பிராதை வாபசு செய்யும் விஷயத்தில் அடியிற்கண்டிருக்குமாதிரியாக எழுதவேண்டும்:—

எண்டார்சு.

இந்த விண்ணப்பம் அர்த்தமாகக் கூடியதாய்த் தெளிவான நடையில் எழுதாததினால் வாப்சு செய்யப்பட்டது. இதைப் புதிப்பித்து 4 நாளைக்குள்ளாக தாக்கல் செய்யவேண்டியது.

இ. மு. கோர்ட்
தேதி ... ... 190 . } கிராமமுனுசிப்பு.

எண்டார்சு.

—:o:—

குற்றம் நடந்த காலமும் இடமும் குறிக்கப்படாததால் இந்த விண்ணப்பம் வாப்சு செய்யப்பட்டது.

இ. மு. கோர்ட்
தேதி ... ... 190 . } கிராமமுனுசிப்பு.

## அம்மைக் குத்துதல்.

(முன்தொடர்ச்சி.)

நம்முடைய தேசத்திலே உண்மையில் விசாரிக்குமிடத்தில் நன்றாக வாசித்து அதிகதெளிவுகொண்ட பெரிய இடங்களிலே அம்மைக்குத்துதல் அங்கீகரிக்கப்பட்டுப் பரவிவருகிறது. அதாவது நாகரீகமுற்று விவகார புருஷர்களாய் விளங்குவோர்தான் இதன்பலனை அறிந்தவர்களாய் சுகமடைகிறார்கள். ஆனால் ஜில்லாக்களின் உள்நாடுகளி லிருப்பவர்களோ இது விஷயத்தில் கவனித்தவர்களல்ல. நாம் அவ்விடங்களிலேபோய் உள்நுழைந்து பார்த்தால், அம்மை வலியினால் அங்கங்கே குழிகுழியாய்ச் சொள்ளைவிழுந்து அங்கவீனங் கொண்டவர்களும், கண்போனவர்களும், கண்ணில் பூவிழுந்தவர்களும், கைகால்கள் சுரிசல்கட்டிப்போனவர்களும், இன்னும் பலவித அங்கவீனங் கொண்டவர்களும் அடிக்கடி நம்மெதிரில்வரச் சந்திக்கிறோம். ஜனங்கள் கர்நாடகப்பழக்கத்தை இன்னும் விடாதவர்களாய் இப்படி அம்மைக் குத்துவதால் தங்கள் கிராமதேவதைகளுக்குக் கோபம்பிறந்துவிடும் அதனாலநேக ஆபத்துக்கிடமுண்டாமென்ற முழுநம்பிக்கையோடே அம்மைக்குத்துவதற்கு விரோதமாக நடந்து வருகிறார்கள். இதன் பலன் என்னவென்றால், அம்மையானது அதிகரித்து மும்முரமாய்க் கிராமங்களிலே நுழைந்து, ஊரையாமெப்போது முன்னம் அம்மையால்



பீடிக்கப் படாதவர்களையும், அம்மைக்குத்தப்படாதவர்களையும் தாக்கி அதிலும் ஐந்து வயதுக்குட்பட்ட அநேக குழந்தைகளை அப்படியப்படியே தனக்கிரையாக்கிக் கொள்ளுகிறது. இப்படிப்பட்ட தொத்து வியாதியை மும்முரிக்கும்படிச் செய்யாம லடக்கிவிடுவதற்குத் தக்க கோடாலியாக அம்மைக்குத்துதல் ஏற்பட்டிருக்க, அதை ஜனங்கள் அநுஷ்டிக்காததற்கு மன்னிப்பே கிடையாது. காருண்ணியம் கொண்ட நமது கவர்ன்மெண்டார் இதற்கென்றே போதுமான சிப்பந்திகளை ஏற்படுத்தி அவர்களை நம் வீட்டுக்கே அனுப்பிவிக்கிறார்கள். ஜனங்கள் சாதாரணமாய்த் தங்கள் தெரியாத் தனத்தால் பிராணாபாயகரமான சோம்பேறித் தனத்தாலும் குழந்தைகளின் சுகத்தை மாத்திரமா அவைகளின் அருமையான உயிரையொட்டிய விஷயங்களையுங் கவனியாது அடியோடே கைநழுவவிட்டு விடுகிறார்கள். மதராசிலே வருஷவாரியிலே பிரசுரிக்கப்படுகிற மரணவிவர ரிஜிஸ்டரில் பதிவுசெய்திருக்கிறதைக் கவனித்துப் பார்த்தால் நாம் ரொம்பவும் இதுவிஷயமாய் அஜாக்கிறதையாகத் தானிருந்து வருகிறதாகத் தெரிந்து கொள்ளுகிறோம்.

அம்மைக்குத்துகிறது அதிகசுலபமானதாயும் அதிக பாதைமுதலானவைக ளில்லாதவைகளாயும் இருக்கிறபடியினாலே நம்முடைய குழந்தைகளுக்கு அம்மைக் குத்து வைத்து பாதுகாப்பது நமது கடமையா யிருப்பது மல்லாமல் நாம் நம்மாலானவரையில் நாம் சந்திக்கிற அறியாத ஜனங்களில் ஒவ்வொருவருக்கும் இதைப்பற்றி எடுத்துச்சொல்லி இந்த நன்மையினாலே அவர்களும் சுகமடையும்படிச் செய்வது நமது கடமையா யிருக்கிறது.

## கிராமாதிகாரிகளுக்கு சம்பந்தப்பட்ட ஆர்டர்கள்.

ஒவ்வொரு கிராமகர்ணமும் இந்த அனுபந்தத்தை வரிசைக்கிரமமாய் புஸ்தகமாய்த் தைத்துவைக்க வேண்டும். அதில் அஜாக்கிறதையாயிருந்தால் அதற்கு அவன் உத்திரவாதியாவான். ஷை புஸ்தகம் கிராமணிக்கார்களை சேரவேண்டியதுடன் ஒவ்வொரு கர்ணமும் அதை தன் உத்தியோகத்திற்கு யார் வருகிறாரோ அவனிடத்தில் ஒப்பிவிக்க வேண்டியது.

I.

1903ளு மேமீ 5உ யின்னா 70-வது ஜெ. போர்டு உத்திரவினால் திருத்தப்பட்ட பழயின் போர்டு [illegible]யான உத்திரவின் 102-வது நெம்பரின் 1 & 2 இந்த பிரிவுகளை திருச்சிராப்பள்ளி ஜில்

லாவிலுள்ள டிவிஷனல் ஆபீசர்கள்; தாசில்தார்கள் டிப்டி தாசில்தார்கள், கிராம உத்தியோகஸ்தர்கள் இவர்களுடைய அறிவிப்புக்காகவும் வழிகாட்டுகைக்காகவும் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிறது.

I - வது வாக்கியம்.—தாசில்தாருக்கும் டிப்டி தாசில்தாருக்கும் ரிபோர்ட்டு செய்வதைப்பற்றி—கிராமத்தில் வாந்திபேதி, அம்மை அல்லது வேறு பெருவியாதி உண்டானால் அதைப்பற்றி கிராம முன்சிப்பு, அவர் ஊரிலில்லாத காலங்களில் கிராம கர்ணன் தாசில்தாருக்கு அல்லது டிப்டி தாசில்தாருக்கு உடனே ரிபோர்ட்டு செய்யவேண்டும் மியுனிசிபல் டவுனுக்கு 5-மயிலுக்குள்ளாக இருக்கும் கிராமமாக இருந்தால் ரிபோர்ட்டின் நகல் ஒன்று மியுனிசிபல் கவுன்சில் சேர்மானுக்கும் உடனே அனுப்பவேண்டும் ரிப்போர்ட்டு எந்தவிதமாக சீக்கிரத்தில் போய் சேருமோ அவ்விதமாக அனுப்பவேண்டும். அதாவது தந்தி தபால், அல்லது ஒரு ஆள்வசம் அனுப்பவேண்டும்.

II - வது வாக்கியம்.—கலெக்டருக்கும் மெடிக்கல் உத்தியோகஸ்தருக்கும் அறிவிப்பதைப்பற்றி—வியாதிகண்ட இடத்திற்கு சமீபத்திலுள்ள வைத்தியசாலையின் மெடிக்கல் சபார்டினேட்டுக்கும், ஜில்லா கலெக்டருக்கும் சம்மந்தப்பட்ட மியுனிசிபல் சேர்மானுக்கும் டிஸ்டிரிக்டு மெடிக்கல் அண்டு சானிட்டேரி ஆபீசருக்கும் தாலூக்கா போர்டு பிரசிடெண்டுக்கும் தாசில்தார்களும், டிப்டி தாசில்தார்களும் வியாதிகண்டிருப்பதைப்பற்றி உடனே ரிப்போர்ட்டு செய்யவேண்டும். அம்மை வார்த்த கேசாக இருந்தால் வாக்சினேஷன் டிப்டி இன்ஸ்பெக்டருக்கும் சர்க்கில் வாக்சினேட்டருக்கும் தெரிவிக்கவேண்டும்,

## II.

1903-௵ மார்ச்சு ௴ 10௳ யுள்ள 76-வது நி. போர்டு உத்திரவு.

ஸ்பெஷல்பண்டு கோடின் 40-வது பிரிவின்படி நிர்ணயிக்கப்பட்டிருக்கிற (26-நெ. நமூனாவின்படி) இரிகேஷன் செஸ்ஸு தொகையின் வரவு செலவு பாக்கியை காட்டும்படியான ஸ்டேட்டுமெண்டை தாசில்தார்கள் ஹுசூர் ஆபீசுக்கு வழக்கம்போல் அனுப்பிவரவேண்டும்.

2. தாலூக்காவிலிருந்து பிரதிமாதம் அனுப்பப்படும் லாண்டு ரிவினியூ செஸ்ஸுகள் இவைகளின் வரவு செலவு பாக்கி ஸ்டேட்டுமெண்டின் செஸ்ஸுகளைத்தவிர மற்ற ஸ்பெஷல் பண்டுகள் என்னும் ஐட்டத்தில் இரிகேஷன் செஸ்ஸு தொகையை சேர்க்கக்கூடாது.



## III.

1864௵த்திய II-வது ஆக்டின்படி நிலத்தை விற்பனை செய்வதைப்பற்றி.

1864௵த்திய II-வது ஆக்ட்டின் 36-வது பிரிவின்படி ரிவினியூ பாக்கிக்காக நிலங்களை ஏலம்போடுவதைப்பற்றி பிறப்பிவிக்கப்படும் 7-நெ. ஏலநோட்டீசுகளை பிரப்பிவிப்பதில் ஏலதேதிக்கு குறைந்தமட்டில் ஒரு மாதத்திற்கு முந்தி அவைகள் கிராமத்திற்குப்போய்ச் சேர்ந்துவிட சௌகரியமாக இருக்கும்படி ஏலதேதியை தாசில்தார்கள் தாக்கல்செய்து ஏலநோட்டீசை கிராமமுன்சிப்புகளுக்கு அனுப்பவேண்டும். கிராம உத்தியோகஸ்தர்கள் அந்த நோட்டீசை மரங்களில், அல்லது வேலிகளில் அல்லது குடிசைகளில் அல்லது அதற்காக ஒரு குச்சியை நட்டு அந்த குச்சியில் கட்டித்தொங்கவிடவேண்டும். அந்த நோட்டீசை தண்டோரா மூலமாயும் கிராமத்தில் பிரசித்தம்செய்யவேண்டும். நோட்டீசு எவ்விதமாக எந்ததேதியில் பிரசித்தம் செய்யப்பட்டதென்று கிராம முன்சிப்பும் கர்ணமும் ஒன்றுசேர்ந்து ஒரு ரிப்போர்ட்டு தாசில்தாருக்கு அனுப்பவேண்டும். தாசில்தார்கள் இந்த ரிப்போர்ட்டை ஏலம்போடும் உத்தியோகஸ்தருக்கு அனுப்பவேண்டும் அந்த உத்தியோகஸ்தர் அதை ஏலரிக்கார்டுடன் சேர்த்துவைக்கக்கூடும்.

2. யாதாமொரு காரணத்தினால் நோட்டீசுகள் கிராமத்திற்கு போய்ச்சேருவதில் தாமதம் நேரிட்டு ஏலதேதிக்கு ஒரு மாதத்திற்கு முந்தி பிரசித்தம்செய்ய முடியாவிட்டால் கிராம உத்தியோகஸ்தர்கள் அதை பிரசித்தம் செய்யலாம். அவ்விதமாக பிரசித்தம் செய்யாததற்கு முகாந்தரத்துடன் தாலூக்காவுக்கு வாப்ஸ் செய்துவிடவேண்டும். தாசில்தார்கள் வேறுதேதியை நிர்ணயித்து புதிதாக ஏலநோட்டீசுகளை தயார்செய்து அனுப்பப்படும்.

3. ஏலத்தை நடத்தும் தாசில்தார்கள், டிப்டி தாசில்தார்கள், ரிவினியூ இன்ஸ்பெக்டர்கள், ஏலம்போட ஆரம்பிப்பதற்கு முந்தி ஆக்டிலும் போர்டு நிலையான உத்திரவிலும் விதித்திருக்கிறபடி ஏலநோட்டீசை வாசித்துப்பார்த்து அது ஏலதேதிக்கு ஒரு மாதத்திற்கு முந்தி பிரசித்தம் செய்யப்பட்டதாவென்று திருப்திசெய்துகொள்ளவேண்டும்.

4. இந்த உத்திரவை கவனிக்க யாதாமொரு உத்தியோகஸ்தர் தவறிவிட்டால் பாக்கிதாரனுக்கு உண்டாகும் நஷ்டத்திற்கு அந்த உத்தியோகஸ்தரையே ஜவாப்தாரியாக்கப்படும்.

## IV.

கிராமமுன்சீபுகள் ரிவினியு வேலைக்காக தலையாரிகளை உபயோகப் படுத்திக்கொண்டு வருவதாக டிஸ்டிரிக்டு மேஜிஸ்டிரேட்டாருடைய தகவலுக்கு கொண்டுவரப்பட்டிருக்கிறபடியால், அடியிற்கண்ட கற்பனைகள் தாசில்தாருடையவும் டிப்டி தாசில்தாருடையவும் அறிவிப்புக்காகவும் வழிகாட்டுகைக்காகவும் பிறப்பிவிக்கப் பட்டிருக்கின்றன.

2. போலீசாருடன் ரோந்து சுற்றுகிறதை ஒத்த போலீஸ் வேலை தலையாரிகளின் கடமைகளில் முக்கியமானது. அவர்களுக்கு ரிவினியு வேலை இடுவது அவர்களுடைய எதார்த்தமான வேலைக்கு குந்தகமாக இருக்கும். தலையாரிகள் போலீஸ் வேலைதனை பார்ப்பதைவிட்டு அவர்களை கூப்பிடக்கூடாதென்றும் ஏதோ விசேஷித்த காலங்களில் ரிவினியு வேலை செய்யும்படி உத்திரவு செய்யலாமென்றும் தாசில்தார்களும் டிப்டி தாசில்தார்களும் கவனிக்கவேண்டியது.

## V.

இந்தியா கவர்ன்மெண்டாருடைய உத்திரவை அனுசரித்து உப்பின்பேரில் ஏற்பட்டிருந்த தீர்வையை மணு ஒன்றுக்கு ரூ. 2—8—0 யிலிருந்து ரூ. 2—0—0 க்கு 1903௵ மார்ச்சு௴ 18௳ முதல் குறைக்கப்பட்டிருக்கிறதென்று இதினால் சகலமானவர்களுக்கும் அறிவிக்கப்படுகிறது.

2. உப்பை உபயோகப் படுத்துகிறவர்களில் மிகவும் ஏழையாயிருக்கிற வகுப்பினருக்கு முக்கியமாக சகாயம் உண்டுபண்ண வேண்டுமென்கிற கருத்துக்கொண்டு கவர்ன்மெண்டார் தீர்வையை குறைக்கிறார்கள். இந்த சகாயத்தில் ஏழைகளுக்கு ஒரு பாகம் கிடைக்குமென்பதில் யாதொரு சந்தேகமில்லை.

## VI.

டிஸ்டிரிக்டு பாரஸ்டு ஆபீசருடைய 1903௵
த்திய 93-வது நெ. சர்வீஸ் உத்திரவு.

அமுலிலிருக்கும் பர்மிட்டு விதிகளின்படிக்கும் இனி பிரப்பிவிக்கப்படும் விதிகளை அனுசரித்தும் பர்மிட்டுகள் பிரப்பிவிக்க கலெக்டரவர்களுடைய அனுமதியைப் பெற்று திருச்சினாப்பள்ளி தாலூக்கா புங்கனூர் கிராம முன்சீபுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.



## VII.

### நோட்டீஸ்.

இந்த உத்திரவு கிடைத்த தேதி முதல் ஒரு வாரத்திற்குள்ளாக தங்கள் கையிலிருக்கும் பர்மிட்டு புஸ்தகங்களை சம்பந்தப்பட்ட ரேஞ்சாபீசர்களுக்கு வாபஸ்செய்துவிட்டு, பர்மிட்டுகளில் கண்ட தொகையை முன்னுடி செலுத்தி பர்மிட்டுகளை வாங்கிக் கொள்ள வேண்டுமென்று பர்மிட்டு பிரப்பிவிக்கும் உத்தியோகஸ்தர்களுக்கும், பர்மிட்டு பிரப்பிவிக்க பாரெஸ்ட்டு டிபார்ட்டுமெண்டாரால் அதிகாரம் கொடுக்கப் பட்டிருக்கிற கிராம உத்தியோகஸ்தர்களுக்கும் இதனால் அறிவிக்கப் படுகிறது.

2. மேலே குறிக்கப்பட்டிருக்கிற காலத்திற்குள்ளாக அவர்கள் பர்மிட்டுகளில் கண்ட விலையை முன்னுடி கொடுத்துவாங்கிக்கொள்ளாவிட்டால் அவர்களை வேலையிலிருந்து நீக்கி முன்னுடி பணங்கொடுத்து வாங்குவதற்கு சக்த்தியும் பிரியமும் உள்ளவர்களை நியமிக்கப்படும் என்பதையும் இதினால் அறிவிக்கப் படுகிறது.

### விளம்பரம்.

இத்துடன் சேர்ப்பிக்கப்பட்டிருக்கிற நமூனாவில் கிராம உத்தியோகஸ்தர்களால் கொடுக்கப்படும் அத்தாட்சிகள் இல்லாமல் மறு உத்திரவுவரையில் பட்டா நிலங்களிலுள்ள மரங்களை வெட்டி அப்புறப் படுத்தக்கூடாதென்று மணப்பாறை டிப்டி தாசில்தார் டிவிஷனிலுள்ள எல்லா கிராம உத்தியோகஸ்தர்களுக்கும் பாரெஸ்ட்டு சிப்பந்திகளுக்கும் அறிவிக்கப்படுகிறது. 7-வது கலத்தில் தாக்கல்செய்யவேண்டிய வண்டிபாரங்களில் உத்தேசமதிப்பை கிராம உத்தியோகஸ்தர்கள் ஜாதாவை நேரில் பார்வையிட்டு தீர்மானிக்கவேண்டியது. இத்தனை அத்தாக்ஷிகள் கொடுக்கப்பட்டனவென்றும் இன்னநிலத்திலிருந்து அப்புறப்படுத்துவதற்காக கொடுக்கப்பட்டனவென்றும் தகவலை காட்டும்படியாக கணக்கு ஒன்று கிராம முன்சீப்பு வையம்பட்டி ரேஞ்சாபீசருக்கு பிரதிமாதமும் அனுப்பவேண்டும். பட்டாதாரன் அல்லது ஜெமீன்தார் அல்லது குடியானவன் பட்டா நிலங்களிலிருந்து மரங்களை வெட்டி

ஞல் வெட்டுகிறவர்கள் பாரெஸ்டு கண்டிராக்ட்டர்களாக இருந்தாலும் இல்லாவிட்டாலும் அதைப்பற்றி கிராம உத்தியோகஸ்தர்கள் ரேஞ்சாபீசருக்கு ரிப்போர்ட்டு செய்யவேண்டும். ரேஞ்சாபீசர் ஜாகாவை நேரில்பார்த்து அது கவர்ன்மெண்டு புறம்போக்கு அல்லது பாரெஸ்ட்டு ரிசர்வுகளுக்கு சமீபத்திலிருந்தால் அதைப்பற்றி டிஸ்டிரிக்டு பாரெஸ்டாபீசருக்கு ரிப்போர்ட்டு செய்யவேண்டும். கவர்ன்மெண்டு புறம்போக்குகளிலிருந்தும் ரிசர்வெட் பாரெஸ்டுகளிலிருந்தும் மரங்களை திருட்டுத்தனமாய் வெட்டிக்கொண்டுபோவதை தடைசெய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்று கிராம உத்தியோகஸ்தர்களும் பாரெஸ்டு சிப்பந்திகளும் இதனுல் எச்சரிக்கப்படுகிறுர்கள்.

| ஆஜராக்காளின் பெயர். | கிராம மி. ரும் பேரும். | பட்டாதாரின் பெயர். | நிலத்தின்விவரம். | விஸ்தீர்ணம். | தீர்வை. | மரங்களின் மதிப்பு வண்டி பாரம். | கொடுக்கப்படும் தேதியும் அளவும். | ஆஜர்செய்யவேண்டிய டாளு. |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | |

———

## ரிவினியு போர்டார் அவர்களின் செட்டில் மெண்ட்டு டிபார்ட்டு மெண்ட்டு ப்ரோஸிடிங்க்ஸ்.

—:-:-:-:—

62-ம் நெம்பர் ஸ்டாண்டிங் ஆர்டரை சீர்திருத்தல்.

1903-ஞ பிப்ரவரிமீ 25உ யில் 24 நெ. ரிவினியூ போர்ட்டார் அவர்களின் தீர்மானம்:—

போர்ட்டு ஸ்டாண்டிங்க் ஆர்டரில் அடியில் வரும் சீர்திருத்தங்கள் செய்து கொள்ளவேண்டியது.

ஸ்டாண்டிங்க் ஆர்டர் 62 பாரா VII. பக்கம் 230. (vii)-வது பாராவிற்குப்பதிலாக அடியில் வருவதை வைத்துக் கொள்ள வேண்டியது.

(VII) இனும் நிலத்தை சோடி கொடுத்துவிட்டு அதற்குப்பதிலாய் ரயித்துவாரி பட்டாவை அங்கீகரித்தல்.



(a) இனும் செட்டில் மெண்டு காலத்தில் பைசலாகி குயிட்ரெண்டு ஏற்படுத்தின இனுங்கள் விஷயத்தில் இனும் செட்டில் மெண்டு காலத்தில் பைசலான இனும் நிலத்தின்பேரில் செலுத்தவேண்டிய குயிட்ரெண்டானது அதின் மேல் இப்போது ஏற்பட்டிருக்கும் ரயித்துவாரி செட்டில் மெண்டு தீர்வைக்குச் சரியாகவோ அல்லது அதற்கு அதிகமாகவோ யிருந்தால் இனும் தாரன் அதின் இனும் பட்டாவை சோடி கொடுத்துவிட்டு அதற்குப் பதிலாக அந்நிலத்திற்கு ரயித்துவாரி பட்டா அங்கீகரித்துக் கொள்ளலாம்.

(b) ஊழிய இனும் நிலங்கள் விஷயம்.—

ஒருஊழிய இனும் நிலத்தின் பேரில் செலுத்த வேண்டிய ஜோடியானது இப்போதிய ரயித்துவாரி செட்டில் மெண்டு பிரகாரம் அந்த நிலத்தின்பேரில் ஏற்படுகிற தீர்வைக்குச் சரியாகவோ அல்லது அதிகமாகவோ யிருந்தால் அந்த இனும் தார் செய்யவேண்டிய ஊழியம் பொது சௌக்கியத்திற்கு அவசியமாயிருந்து இது காரணமாக அந்தநிலம் இனுமாகவே நீடித்து இருக்கவேண்டியதாய் ஏற்பட்டால், இந்தஇனும் பட்டாவை ஜோடிகொடுத்துவிட்டு அதற்குப் பதிலாக ரயித்வாரி பட்டாவை ஒப்புக் கொள்வதைத் தடை செய்யவேண்டியது. ஷை ஊழியம் அநாவசியம் என்று ஏற்படும் பக்ஷத்தில் ஷை இனும் நிலத்தை சர்க்கார் தாக்கல் செய்து கொள்ள வேண்டியது.

A. கம்மிங்
செக்ரிட்டெரி.

———

## சுகாதாரம்.

———

சர்வாண்டபுவன லோக கர்த்தாவாகிய சாக்ஷாத் கடவுளால் அளிக்கப்பட்ட நம்முடைய தேகமானது அநிநுட்பத்திலும் நுட்பமான தங் அபாயத்திற்கு ஈடுபெட்டதாய் "கேற்றிருக்த தேகம் இன்றில்லையே" என்று சொல்லும் பெருமையுடைத்தானதாய் எவ்வளவோ பணவிரயம் செய்து அநேக சன்னமாக விழைக்கப்பட்டு, சாதாரண திருஷ்டி மாத்திரத்தாலேயே நிதானிக்க சாத்தியப்படாத தன்மையையுடைய அவ்வளவு சிறியவும் மற்றும் பெரியவுமான எத்தனையோ கருவிகளைக்கொண்டு ஏற்படுத்தப்பட்டு, காலக்கிரமங்களைக்காட்டி வரக்கூடிய கடியாரத்தை யொத்து, அதனிடத்திலே மனுஷியனுடை யுக்திக்கும் புத்திக்கும் எட்டாததாய் திருஷ்டிக்கு புலப்படாததாயுள்ள அ

நேக யந்திரங்களெல்லாம் அங்கங்கே அசைவுற்று வேலைசெய்து வரவும் ஒழுங்குபெற்று தான் செய்துவரும் வேலைகளில் சற்றேனும் தவறுதலில்லாததாகி தன்னைச் சிருஷ்டித்த மகாபுருஷனுடைய காலஅளவுவரையிலும் கண்டிப்பாய் வேலை நடத்தி வருவதில் அணுவளவும் பிசகாததாய் ஒப்பற்று விளங்குவது இவ்வுத்தமதேகம். இப்படிக் கடவுளா லளித்த இத்தேகத்திற்கு எத்தனையோகாபந்துகள் அக்கடவுளாலேயெ ஏற்பட்டிருந்தும், நம்முடைய அஜாக்கிரதையினாலே இந்த அருமையான தேகத்தை எத்தனையோவித கஷ்டத்திற்குள்ளாக்கி அதோடுகூட எமனுக்கு இரையாக்கும்படி யாகவும் கொண்டுவந்து விடுகிறோம். இப்படி நம்மாலுண்டாகும் அஜாக்கிரதையான விஷயங்களை நமது கவர்ன்மெண்டா ரவர்கள் கவனித்து அதிப்பிரயாசை யெடுத்துக்கொண்டு அதற்கென்றே பிரத்தியேகமாக ஒரு டிபார்ட்டு மென்று ஏற்படுத்தி, அதற்குத் தலைமையாக சானிடேரி கமிஷனர் என்பவரை ஏற்படுத்தி, எவ்வளவோ பணச்செலவு செய்து குடிகளின் பிராணத்தை ரக்ஷித்து வருகிறார்கள். இவ்வளவு ஜாக்கிரதையோடு இவ்விஷயத்தில் கவனித்து வந்தும் ஈஸ்வர சம்மதத்தால் இற்கையாகவே இருந்தாற்போலிருந்து சில இடங்களில் பேதிமுதலிய தொற்று வியாதிகள் தோன்றி ஜனங்களைத் தொந்தரவு செய்ய ஆரம்பிக்கின்றன. அந்தக்காலங்களில் பாரியப் பட்டணங்கள் தவிர மற்றக்கிராமாந் தரங்களிலே ஜீவரக்ஷார்த்தமாக அநேக உபாயங்களைத் தேடியும் மேலதிகாரியினிட மிருந்து வரப்பட்ட ஆர்டர்களை அநுசரித்தும் கிராமாதிகாரிகள் எவ்வளவு சிரமை எடுத்துக்கொண்டு விஷயங்களை நடத்தினாலும் சானிடேஷன் மாத்திரம் சரிவர நடத்தப் படுகிறது கிடையாது. ஏனென்றால் கிராமத்தி லுள்ளவர்கள் இப்படிப்பட்ட தொத்து வியாதிகள் தோன்றிய சமயத்திலே தாங்கள் கவனிக்கவேண்டிய விடுகள் முதலானவைகளைச் சுத்தமாய் வைத்திருக்கவேண்டும். தேகம் சுசியா யிருக்கவேண்டும், ஆடைகளெல்லாம் அப்போதைக்கப்போது துவைத்து உலர்த்தப்பட்டு உடுத்தவேண்டும், துர்க்கந்தமானவும் அசுசமானவுமான வஸ்துக்களெல்லாம் அகற்றப்பட வேண்டும் என்ற விஷயங்களிலே கிஞ்சித்தும் கவனியாதவர்களாய் வரம்புகடந்து தப்பிதங்களைச்செய்வது சகஜமானதுபற்றி இதை நிவர்த்திக்கும்பொருட்டு கிராமமுனுசிப்புகள் மாஜிஸ்ட்ரேட்டுக்கு ரிப்போர்ட்டு செய்து அப்படிச்செய்தவர்கள் சிட்சையடையும் விஷயமாய் சாக்ஷிகள்தேடி



தாம் எழுதிய ரிப்போர்ட்டின் கேசுக்கு முடிவுபெறவேண்டியதா யிருக்கிறது. (இன்னும்வரும்).

# ஹைகோர்ட் வியவஹாரம்.

(புத். க. நெ. க., 26-வது பக்கத்தொடர்ச்சி).

சப் ஜட்ஜியானவர் இந்த அப்பீலை ஏற்றுக்கொண்டு முதல்பிரதிவாதியின் பேரில் 200 ரூபாய்க்கு வாதிக்கு டிக்ரிகொடுத்தனர். அதின்பேரில் 2-வது அப்பீலை முதல்பிரதிவாதியானவர் ஹைகோர்ட்டில் தாக்கல் செய்தனர்.

இதில் அப்பீல்தாரி (முதல்பிரதிவாதி) பக்கம்.

Mr. M. R. இராமகிருஷ்ண ஐயர், அவர்களும்.

எதிர்வாதி (முனிசிப்புதார்) பக்கம்.

Mr. V. C. சேஷாசாரியார் அவர்களும்.

வாதித்தார்கள்.

தீர்மானம் :—கீழ் அப்பீல் கோர்ட்டு டிக்கிரி ரத்தாகவேணுமென்று நினைக்கிறோம். பொறாமையினாலெடுத்த வியாச்சியத்தின் நடவடிக்கைக்காகச் சார்ஜு செய்யப்படக்கூடியதை முதல்பிரியாதி செய்தவனென்பதேயாம். இந்தக்கேசிலே முதல்பிரதிவாதி போலீசுக்கு கிரிமினல் நடவடிக்கையில் கேஸுகொண்டுபோனாலும் வாதியை அவன் உண்மையாகவே சார்ஜு பண்ணினவனல்ல. அவன் போலீசுக்கு அறிக்கைமாத்திரம்செய்து போலீசார்தான் விசாரித்து வாதியைச் சார்ஜு செய்ய நினைத்ததாகத் தெரியவருகிறது. போலீசார் செய்த நடவடிக்கைக்கு முதற்பிரதிவாதி உத்திரவாதி யாகமாட்டான். ஆகையால் பொறாமைகாரணமாக உண்டான வழக்காக அவன்பேரில் நடத்தக்கூடிய விவகார நடவடிக்கைகள் ஒன்றுமில்லை.

ஆகையால் நாங்கள் சப்ஜட்ஜியின் டிக்கிரியை ரத்துசெய்து அடிஷனல் டிஸ்ட்ரிக்டு முனிசிப்பின் தீர்மானமே (சரியென்பதாக) அமுலுக்குக்கொண்டுவந்து இந்தக்கோர்ட்டிலும் கீழ்க்கோர்ட்டிலுமுண்டான செலவுஉட்படக் கட்டிக்கொடுக்கும்படித் தீர்மானித்தோம்.

## பசுவின்மோர்.

—(÷)—

இந்துக்களைப்போல மோரில் பிரியமுடையவர்கள் உலகில் எவருமில்லையென்றே சொல்லத் துணியலாம். அதன் அபாயகுணங்களைக் கண்டே நம் பெரியோர்கள் அதனைத் தாராளமாய் நாம் அநுதினம்

உபயோகிக்கும்வண்ணம் ஏற்பாடு செய்தார்கள் போலும். அதன்தன்மை இன்னதென்று அறியாமலே நாம் அதனைக் கல்பகோடி காலமாய்உபயோகித்து வருகின்றோம். மேல்நாட்டார் அதன் குணத்தை இப்பொழுதுதான் கண்டுபிடிக்கலாயினர். ஹெல்த் (Health) என்ற பத்திரிகை இதனைப்பற்றிக் கூறுவதாவது :—"மோரின் புளிப்பு (Lactic acid) இரத்தக்குழல்களில் படியக்கூடிய எவ்வித மண்ணையும் போக்கிவிடும். ஆகையால் அது யாதொரு அடைப்புமின்றித் தாராளமாய் ரத்தம் ஓடும்படி செல்லுகின்றது. அதனால் கணுக்களைச் சுற்றி யாதொரு கெட்ட பதார்த்தமுந் தங்கி எரிச்சல் முதலியன உண்டாக்காமல் பாதுகாக்கின்றது. தசைநார்களில் விஷப்பொருள்கள் யாதொன்றுந் தங்குவதில்லை. இரத்தக்குழல்கள் திமிர்த்துப் போவதாலேயே அநேக வியாதிகள் உண்டாகின்றன. மோரை தாம் தாராளமாய் உபயோகித்து வந்தால் 20, 25-வருஷங்களுக்கு இவ்விதத் திமிர்ப்பு உண்டாகமற்றமக்கும். மலச்சிக்கலால் சந்துவாதம் (Gout) உண்டாகிறது. மோரை உபயோகித்தால் இதற்கு கலத்தை உண்டாக்கும். அதன் உபயோகம் நுரையீரல், தோல், பிருக்கம், (Kidney) முதலியவற்றைத் தூண்டுதல் செய்வதே. அது இரைப்பைக்கும் நல்ல சிவப்பும் சுகமுமான இரத்தத்தைக் கொடுத் துதவுகின்றது. சந்துவாதத்தினால் துன்பப்படுவோர் மாம்சம், தித்திப்பான பண்டங்கள், வாசனைத்திரவியங்கள், ரொட்டி முதலியவைகளைக் கண்ணாற் பார்க்கவு மொண்ணாது. முட்டைகள் புதிதாய்ப்பறித்த பழவர்க்கங்கள், காய்கறிகள் இவைநன்மை பயக்கும். கணுக்களில் வீக்கங்கண்டால் ஒருவன் இன்று கடைந்த மோரை வேண்டியமட்டும் உண்ணுதல் நலம்." புளித்து நாற்றமெடுத்த மோரை என்றும் உபயோகியாமல் நீக்கல் நலம். "நீர்க்கருக்கி மோர்பெருக்கி நெய்யுருக்கி யுண்பவர் தம் பேருரைக்கிற் போமே பிணி" யென்று கூறும், நம் பதார்த்தகுண சிந்தாமணி. "நீரைவிட்டு மோரைப்பெருக்கு" என்பது நம் பழமொழி. ஆகையால் கூழ்போன்ற கெட்டி மோரை உபயோகியாமல் நீக்கல் நலம். எருமை மோர் மந்தத்தை யுண்டுபண்ணக்கூடியதாகையால் பசுவின் மோரே மிக்கநலம்.

# NEWS and NOTES.

## விசேஷ வர்த்தமானங்கள்.

—:-:-:-:—

### அடித்த குற்றத்திற்காக தர்மம் செய்தல்.

—:—:=:—:—

பம்பாயில் ஒரு கம்பெனிக்கு ஏஜண்டாயிருக்கும் காப்டின் க்ராகோ வென்பவர் பாரிஸ்டராகிய மிஸ்டர் பட்ருடின் டயாப்ஜி என்பவரை யாதொருகாரண மில்லாமலே அடித்து அவமானப் படுத்தியதாகக் குற்றம் சாட்டப்பட்டு விசாரணையில் வந்தபோது அந்த ஏஜண்டு தமது குற்றத்தை ஒப்புக் கொண்டதனால் மிஸ்டர் டயாப்ஜியானவர் அந்த ஏஜண்டை கோர்ட்டார் தண்டித்தே தீரவேண்டுமென்கிற பிடிவாத மொன்றுமில்லை யென்றும் ஆனால் அவ 1000. ரூபாயை ஏதேனும் ஒரு தருமத்துக்குக் கொடுத்து மன்னிப்புக் கேட்டுக் கொள்வதாயிருந்தால், சமாதானமாய்ப் போகச்சித்தமா யிருப்பதாயும் சொன்னாராம். அவர்சொல்லியபடியே அந்த ஏஜண்டு மன்னிப்புக் கேட்டுக் கொண்டதோடு ரூபாய். 500 தர்மத்துக்கு கொடுப்பதாக ஒத்துக் கொண்டபடியால் பாரிஸ்டர் மிஸ்டர் பட்ருடின்டயாப்ஜி அவருடன் சமாதானமாய்ப் போனார்.



### காஷ்மீரில்
### பரோடா மகாராஜா அவர்களின்
### நன்கொடை.

இந்தியாவின் வட கோடியிலிருக்கும் இந்தக் செழிப்புற்றுச் செல்வம் நிறைந்த தேசத்தின் சிறுநகராகிய ஸ்ரீ நகருக்குப்போயிருக்கிற பரோடா மகாராஜா அவர்கள் அப்பட்டணத்திலுள்ள ஹிந்துமகமதிய பாடசாலைகளைப்போய்ப்பார்த்து அவைகளின் அபிவிருத்திக்காரணமாகத்தான் காஷ்மீர்வாசிகள் உயர்ந்தநிலைமைக்கு வரவேண்டுமென்றும் இது விஷயமாய் இந்துக்களும் மகமதியர்களும் ஒற்றுமைகொண்டு உழைத்துவரவேண்டுமென்றும் பெண்கல்வியை அதிகமாக விருத்திசெய்யவேண்டுமென்றும் எடுத்துப்பேசினதுமன்றி அப்பட்டணத்தில் (ஸ்ரீநகரில்) உள்ள மகமதிய பள்ளிக்கூடத்திற்குத்தாம் காஷ்மீரைவிட்டுப்போவதற்குமுன் நன்கொடை யனுப்புவதாகவும் வாக்களித்தனரென்று கேழ்க்கும் ஒவ்வொருவரும் மகாராஜா அவர்களுக்குக் கல்வி அபிவிருத்தியில் இவ்வளவு கவனிப்பதைப்பற்றிச் சந்தோஷிக்கிறார்கள்.

### வித்தியாவிர்த்தி.

—(:+:)—

நமது இந்தியாதேசத்தில் ஸ்திரீகள் ஏதாவது காரியங்களைச் செய்து ஜீவிப்பது அவமானமென்று நினைத்திருக்கின்றனர். அமெரிக்கா முதலிய தேசங்களில் புருஷர்களைப் போலவே ஸ்திரீகளும் வேலைசெய்து அதனால் வரும்பொருளைக்கொண்டு ஜீவிக்கிறார்கள். இவ்விதம்செய்வோர்களின் தேசங்களெல்லாம் ஸுபிக்ஷமும் தர்மமார்க்கமும் நன்றாய் விளங்க நிலைத்திருக்கின்றன. துராலோசனைகளும், கெட்டகாரியங்களைச் செய்யவேண்டுமென்ற புத்தியும், அதர்மகிருத்யங்களை அனுசரிக்கும் மனமும் உத்தியோகமில்லாமல் காலைமாதிரிஇன்றுகாலை நீட்டிக்கொண்டு உட்கார்ந்திருக்கும் மூட ஸ்திரீகளுக்கு உண்டாகிறதே யொழிய ஸதாகாலமும் ஸத்வியாபாரத்தில் பிரவேசித்து ஸன்மார்க்க நடத்தையோடிருப்பவர்களுக்கு உண்டாகா. அநேக யுவதிகள் அவித்யாவதிகளாய் அந்தகாரத்தில் மூழ்கி அந்யருக்கு ஸங்கடத்தை யுண்டாக்குகின்றனர். ஆகையால் நமது ஸ்திரீகள் வித்யாப்பியாஸம் செய்து புத்திவிருத்தியடைந்தால் தேசத்துக்கு க்ஷேமமாகும், இதிற் சிறிதும் சம்சயமில்லை.

## நம் இந்தியா மந்திரியின் ஓர் பதில்.

கொஞ்ச காலத்துக்கு முன்னே சென்னை ஹைகோர்ட் ஜட்ஜ்களில் ஒருவராகிய ஆனரெபில் ஸர். வெ. பாஷியம் ஐயங்கார் வேலையைவிட்டு நீங்கிவிடுவதற்காகத் தம்முடைய ராஜிநாமாவை சென்னைக் கவர்ன்மெண்டாருக்கனுப்ப, அவர்களும் அவருடைய விண்ணப்பத்தை யொப்புக்கொண்டார்க ளென்பதையும், அப்படி யொப்புக்கொண்டபின்னர் மீண்டும் ஆறுமாதம அவர் வேலை பார்க்கும்படி இந்தியா மந்திரியின் உத்தரவு கிடைத்த தென்பதையும் யாரும் அறிவார்கள். அச்சமயத்தை யொட்டி மதுரையிலிருந்து இந்தியா மந்திரிக்கு ஸர். பாஷியம் ஐயங்கார் இன்னும் சிறிதுகாலம் ஜட்ஜாகஇருக்கும்படி உத்தரவாகவேண்டு மென்று ஒரு விண்ணப்பம் அனுப்பப்பட்டதாய்க் காண்கிறது. அவ்விண்ணப்பத்துக்கு இந்தியா மந்திரியிடமிருந்து பதில் வந்திருப்பதாகவும், அதனில் 60 - வயதுக்கு மேல் ஒருவரும் ஹைகோர்டு ஜட்ஜாயிருக்கக் கூடாதென்கிற விதி யோசித்துத்தான் செய்யப்பட்டதென்றும், அதனை மாற்றமுடியாதென்றும், ஸர். பாஷியம் ஐயங்கார் அந்த விதியை, வேலையை ஒப்புக்கொள்ளும்போது, அறியாதவரல்லரென்றும், இப்பொழுது அவரை மீண்டும் ஆறுமாதத்துக்கு வேலைபார்க்கச் சொல்லியிருப்பதனாலே அவ்விதி மீறப்பட்டதெனக் கருதப்படக் கூடாதென்றும் அவர் தற்கால அவசியத்தை உத்தேசித்தே யங்ஙனம் வேலையிலிருக்கும்படி செய்யப்பட்டாரென்றும் சொல்லப்பட்டிருப்பதாகவும் அறிகிறோம.

## சபல புத்தி.

பம்பாய் பட்டணத்தில் சம்புப்பிரகாச பிஷம்பர்பிரகாச் என்ற அறுபதுவயதுக் கிழவன், சென்ற ஏப்ரல்மாசத்தில் ப்புராவில் ஆறுவயதுள்ள சுந்தரியென்ற பெண்குழந்தையைத் தொட்டதாக ஒரு சாதாரண ஜூரியால் மாஜிஸ்ட்ரேட் முன்பாக விசாரிக்கப்பட்டான்; இந்தசுந்தரியை 9 - வயதுள்ள சியூன் என்று இன்னொருபெண் அந்தக் கிழவன் வீட்டுக்கிட்டுக்கொண்டுபோக, அந்தப் போக்கிரிக்கிழவன் இரண்டு குழைந்தைகளையும் தொட்டுத் தொந்தரவு செய்தானும், சுந்தரியின் தாய் சாயந்திரம் வேலைசெய்து வீட்டுக்குத் திரும்பி வந்தபோது அவளுடன் புகார் சொல்லிக்கொள்ள, அந்தத் தாயானவள் அந்தக்கிழவன் தாடியைக் கெட்டியாய்ப் பிடித் திழுத்துக்கொண்டுபோய் போலீஸாரிடத்தில் அவன்பேரில் புகார் செய்தானாம். போலீஸார் கேஸை விசாரணைக்குக் கொண்டுவந்து அது மாஜிஸ்ட்ரேட்டால் விசாரிக்கப்பட்டபோது ஜூரிகள் கிழவன் குற்றஞ் செய்தவனென்றே ஒரேமனதாய் அபிப்பிராயஞ் சொல்ல அந்தக்கொடிய பாபிஷ்டிக் கிழவன் 5 வருஷம் கடுங்காவல் தண்டனை யடைந்தான். அறுபது வயதாகியும் சபலபுத்தியால் பாவக்கிரியை செய்த இந்தக் கிழவனுக்கு இது ஒரு கடினமான தண்டனையென்று சொல்லத்தகாது.

உ

கணபதேநம:

# THE VILLAGE OFFICERS' GAZETTE.

# கிராம உத்தியோகஸ்தர் கெஜட்டு.

மதிராஸ் கவர்ன்மெண்டு தமிழ் ஜில்லாக்களிலுள்ள

கிராமாதிகாரிகளின் சீர்திருத்தத்திற்காக

மாதாந்தரம் வெளியிடப்படும்.

புத் 1 ] மதராஸ் 1903ஹு ஆகஸ்டுமீ 15உ [நெ 3.

## கிராமங்களுக்குக் கிராமபஞ்சாயத்து வேண்டியது அவசியமா?

நம்முடைய இந்தியாவிற்கு எத்தனையோ ஆயிரக்கணக்கான மைல்களுக்கப்பால் வடமேற்குமூலையிலும் ஐரோப்பாக்கண்டத்திற்கு மேற்கிலுமாக வமைந்துள்ள பிரிட்டானியா என்னும் தீவிலே ஆங்கிலேயர் முதல் முதல் குடியேறி வாழ்ந்துகொண்டு வரும்நாளில், ஒவ்வொருகிராமத்திலும் ஒவ்வொருகுடும்பத்தின் தலைவனே அக்குடும்பத்தின் விவகாரங்களைப்பரிசீலனைசெய்து அக்குடும்பத்தி லப்போதைக்கப்போதுண்டாகும் சச்சரவு விவாதங்களையும் சரிவரநடத்திக்கொண்டு போகும் பொறுப்பை வகித்தவனாய்விளங்கி, பிரதிமாதத்திலும் கூடும் கிராமக்கூட்டத்திற்குத் தான்போய் ஆஜராகி அந்தந்தமாதத்திய நடவடிக்கைகளின் விவரங்களை அக்கூட்டத்தில் தெரிவித்து அக்கூட்டத்தின் தலைவர்களால் அப்போதைக்கப்போது ஏற்படும் உத்திரவுகளையும் சட்டதிட்டங்களையு மநுசரித்து மேற்கொண்டு நடக்கவேண்டியவைகளைத் தன் குடும்பங்களில் நடத்திவந்ததாகவும் இப்படிக்கூடும் கிராமக்கூட்டத்தார் தங்களில் விவகார புரு

ஷர்களாகவும் பரோபகாரத்தை நாடினவர்களாகவும் ஜனங்களின் க்ஷே
மத்தின் பொதுநன்மைக்காகப் பாடுபடுகிறவர்களாகவும் நடுநிலைமை
கொண்டவர்களாகவும் போதியவயதுடையவர்களாகவு மமைந்துள்ளவர்
களை அயனாந்தரமாகவோ அல்லது வருஷாந்தரமாகவோ கூடிக்கொண்டு
வந்த பெரியகூட்டத்திற்குத் தங்கள்பிரதிநிதியாக விஷயங்களை யெடுத்து
ப்பேசும்படி நியமகம்செய்தனுப்புவார்கள். இந்தபெரிய கூட்டத்தில்தான்
அநேக கருத்லானவும் அதிககஷ்டமானவும் சாதாரணபுத்திகோசரத்தி
ற்கு எட்டாதனவுமான எல்லாவித விவகாரவிவாதங்களுக்கும் தகவல்
ஏற்பட்டு முடிவுபெறும். இந்தபெரிய கூட்டமானது அந்தந்த கிராமங்க
ளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட விவகாரத்தை மேற்கொண்ட விவேக
புருஷர்களாய் நிறையவும் அந்தந்தக் கிராமங்களில் பொதுவாய் நடக்கும்
விஷயங்களையும் கிராமங்களின் பிரதிகுடும்பத்திலு முண்டாகும் விவாத
ங்களில் காடுமுரடானவைகளையும் தெளிவாக எடுத்துக்காட்டப்படவும்
ஒவ்வொரு விஷயத்தையும அவ்விஷயசம்பந்தமான கிராமவாசிகளாயங்கு
வந்திருப்பவரே யல்லாமல் இதரகிராமப் பிரதிநிதிகளும் கலந்து யோசி
த்துமுடிவுசொல்லும்படி நேரிடுவதால் விஷயமானது எளிதில் கிரகிக்கப்
பட்டு விவரம் ஏற்படவும், முடிவுபெறவே பெருமிதங்கொண்டு விளங்கும்
இந்தப்பெரிய கூட்டத்திலும் சிக்கறுத சிலவிவகாரங்களை மாத்திரம்
அப்படியே நிறுத்திவைத்து அப்படிப்பட்ட விவகாரங்களை யெடுத்து யோ
சித்து முடிவுசொல்வதற்கென்றே பிரத்தியேகமாய்க் கூடும் மகாசபை
யில் அவ்விவகாரங்களின் சிக்குகளெல்லாம் அவிழ்ந்துபோகவும் விதாய
ங்களேற்பட்டு முடிவுபெறும். இப்படி அக்காலத்தில் ஆரம்பத்திலே
ஜனங்கள் விவகாரவிஷயங்களிலே கூட்டங்கூடி ஒவ்வொருவிஷய
த்திற்கு முடிவு ஏற்படுத்திவந்தார்களாம். இப்படி அந்தகாலத்திலுண்
டாகும் விவகாரவிஷயங்களை எழுத்துமூலமாகவும் பதிவுசெய்து வந்
தார்கள். கூட்டங்களைக் கூட்டுவித்து விவகாரங்களை நடத்தி அவை
களின் முடிவுகளுக்கு ரிக்கார்டு ஏற்படுத்தி அவைகளை பின்னிட்ட
விவகாரங்களுக்கு மேற்கோளாகக் கையாண்டு பழகிவரவே விவகாரங்
களில் தோரணையேற்பட்டு விவரங்காணவே மாதாந்தர அயனாந்தரமா
கக்கூடிவந்தக் கூட்டங்களின் தொகை குறைய ஆரம்பித்து மகாசபை
யொன்று மாத்திரமே கூடும்படியாய் வந்துவிட்டது அப்படிக்கூடிய
மகாசபையிலிருந்து அரசன் ஏற்படவும் அவ்வரசனைத் தங்களுக்குத்
தலைமையாகக்கொண்டு தங்கள் அபிப்பிராயத்தை யெல்லாந் திரட்டி
ஒழுங்குபடுத்தி சட்டதிட்டமுண்டாக்கி அவைகளை அரசன் அங்கீகரி



க்கவும் அமுலுக்குக்கொண்டுவந்து அவைகளின்படியே பிரதிமனுஷ்
யனும் நடக்கவேண்டுமென்பதைப் பிரசித்தப்படுத்தி அவைகளின்ப
டியே ஜனங்கள் நடக்கிறார்களா என்பதைக் கவனிக்கும்படி சிப்பந்
திகளையேற்படுத்திக் கவனிக்கப்படுகிறது. இப்படி ஏற்பட்ட பெருத்த
அரசாக்ஷியின் அங்கங்களின் கடைசி அங்கமாகிய கிராமங்களிலுள்ள
ஜனங்களின் நடவடிக்கைகளைக் கவனிக்கும்படி கிராமங்களுக்குத் தலை
வர்களாக ஏற்பட்டவர்களைக்கொண்டும் கிராமமுனிசீப்புகளைக்கொண்டு
ம் இக்கிராமங்கள் அநேக மடங்கியுள்ள தாலூக்காக்களுக்கு வேண்டி
யவைகளைக் கவனிக்கும்படித் தாசில்தார்களைக்கொண்டும் இத்தாலூக்கா
க்களநேகமடங்கியுள்ள ஜில்லாக்களையும் அவைகளின் பிரதானநகரங்
களையும் கவனிக்கும்படிக் கலெக்டர்களைக்கொண்டும் இந்தஜில்லாக்களட
டங்கிய இராஜதானிகளைக் கவனிக்கும்படி கவர்னர்களையும், இந்தக்க
வர்னர்களைக் கவனிக்கும்படி கவர்னர்ஜனரலையும் அதற்குமேலாக ஸெ
க்ரேடரீ ஸ்டேட் ஆப் இந்தியா என்னும் அதிகாரியையும் ஏற்படுத்
தி அதற்குமேலாக அரசனே கவனிக்கும்படியாகவும், மேற்பட்டுள்ள
இந்த அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு நானாவிதசட்டங்களும் ரெ
குலேஷன்களும் ஆர்டர்களும், சர்க்குலர்களும் ஏற்பட்டு அந்தந்த
க்கிராம அதிகாரிகளெல்லாம் சரிவரக் கவனித்து நடத்திவருகிறதினா
ல் நாகரீகம் அதிகரிக்கவும் கல்வி அபிவிருத்தியுள்ள இக்காலங்களில்
ஜனங்கள் ஒற்றுமையுடையவர்களாகத் தங்கள் அதிகாரிகளின் உத்தி
ரவுகளுக்குக்கீழ்ப்படிந்து நடப்பதில் கவனிக்கவேண்டியவைகளை யெல்
லாம் கவனிக்கவும், அக்காலத்தைப்போலக் கூட்டங்கள்கூடி முடிவு
சொல்லும்படியான விவகாரங்கள் ஏற்படுவதாகக் தொன்வதற்கில்லை.
அப்படி யேகதேசத்திலே ஏதாவதேற்பட்டாலும் படிப்படியாக மேல
திகாரிகளேற்பட்டிருப்பதால் மேலிடங்களிலே கவனிக்கப்பட்டு முடி
வுசொல்லப்படும் கிராமத்தலைவர்கள் கிரமமாக நடுநிலைமைகொண்டு
யாதொரு விஷயத்தையும் கவனிக்கும்பட்சத்தில் கிராமங்களில் கலக
மென்பதற் கிடமிராது கலகமில்லாதவிடத்தில் விவகார விரிவுக்கு
இடங்கொடாது. இது இப்படியிருக்கவும் பிரிட்டிஷ் இராஜாங்கமுறை
[illegible]ப்பரவப்பரலக் கிராமபஞ்சாயத்துகள் என்று ஏற்பட்டு கிராமவி
ஷயங்களை நடத்திக்கொண்டு போனவழக்கமானது எடுபட்டுப்போய்
விட்டதென்றும், இப்போது கிராமங்களில் ஒற்றுமையென்ற பெயரேயி
ல்லாமல் கிராமப் பொதுவான விஷயங்களில் ஒன்றுசேர்ந்து முயலு
ம்விஷயத்தில் நடந்துவந்த வழக்கத்தைக் கிராமஜனங்கள் மறந்துவி
ட்டார்கள் என்றும் அற்பவிஷயங்களிலும் கிராமஜனங்கள் விரோத

மும் மனஸ்தாபமுமே பாராட்டுகிறார்களென்றும் கக்ஷிப்பிரதிகக்ஷிகள் தலைகளம்பிவிட்டன என்றும் கிராமத்திற் பெரியோர்கள் சொற்படி நடந்துவந்த கிராமத்தார்களுக்குச் சுகம் கிடைத்துவந்த தென்றும் அப்பேர்பட்ட நல்ல ஏற்பாடு நின்றுபோய் விட்டதைப்பற்றி அநேகர் வியசனப்படுகிறார்களென்றும் சாதாரணமாகப் பத்திரிகைகளிலும் வெளிவரப்பார்க்கின்றோம். இக்காலத்தில் ஆங்கிலேயர்கூட கிராம பஞ்சாயத்துக்களைப்புதுப்பிக்க வேண்டுமென்று கோரி அதற்குத்தக்க ஆலோசனைகளைச் சொல்லி வருவதோடு, பம்பாயைச்சார்ந்த கனவானொருவர் மிஸ்டர் லாலுபாய் ஸாமல்தாஸ் என்பவர் இது விஷயமாய் ஒரு புஸ்தகமொன்று அச்சிட்டு வெளிப்படுத்தி அதில் நம்முடைய கருத்தாக, பொதுவாய் நம்முடைய தேசத்திலே கிராமசமுதாய ஏற்பாடு அழிந்துபோய் விட்டபோதிலும் சில இடங்களில் அது முற்றிலும் அழிந்துபோகாமல் இருந்து வருகிறது. அவ்விடங்களில அதைப்புதுப்பித்தும் பலப்படுத்தும்படியான ஏற்பாடுகள் செய்யவேண்டும். கிராமப்பஞ்சாயத்தார்களை டிஸ்ட்ரிக்ட் அதிகாரிகளைக்கொண்டு நியமிக்கச்சொல்லி அவர்களுக்குச் சில நியாயவழக்குகளைத் தீர்மானிக்கவும் சில பத்திரங்களை ரிஜிஸ்டர்செய்யவும், போலீசு மாஜிஸ்ட்ரேட்டதிகாரங்கள் செலுத்தவும்,கிராமச்சுகாதார நிலைமையைக்காப்பாற்றல்,பஞ்சகாலத்தில் ஜனங்களுக்கு உதவிசெய்தல் எல்லைக்கல்லுகளைப் பார்வையிடல், கிராமமந்தைகள், காடுகள் இவைகளைப்பாதுகாத்தல் கலால்கடைகளை வைத்தல் எடுத்தல் கிராமஸ்திதியைப்பற்றி ஜில்லாக்கலெக்டருக்கு அப்போதைக்கப்போது தெரிவித்தல் ஆகிய இவைகளைச்செய்யவும் அதிகாரம் கொடுக்க வேண்டும் என்று தெரிவித்திருக்கிறார் என்பதையும் கவனிக்கிறோம்.

இப்படிக் கிராம விஷயங்களை நிர்வாகிக்கிறதில் ஜனங்களுக்கு சுதந்தரம் கொடுத்தாலும், பஞ்சாயத்துகள் ஸ்தாபித்து மேற்குறித்த அதிகாரங்கள் கொடுத்தாலும், நன்மையைக் கொடுக்கத்தக்க ஏற்பாடாகக் கொள்ளவேண்டியதானாலும், இக்காலத்திலே இப்படிப்பட்டவை எவ்வளவுவரையில் சாத்தியப்படக்கூடுமென்பதை ஆலோசிக்கத்தான் வேண்டும். முற்காலத்தைப்போல ஜனங்கள் கிராமத்திலேயே வசிப்போர்களாய், ஒரேஜாதியைச் சேர்ந்து விவசாயத்தையே செய்து உறவும் நேசமுமாக இருப்பதில்லை. கிராம சமுதாயப்பான்மை இல்லவேஇல்லை தற்காலத்திலே பிரதி கிராமத்திலும் பிராமணன் சூத்திரன் மகமதியன், முதலான எல்லோருமே மிராசுதாரர்களாக இருக்கிறார்கள். ஆகையால் இவர்களிடத்தில் பழையமாதிரியான ஒற்றுமையும் பெரியோர்



சொல்வதை மற்றோர் கேட்பதும் எப்படிமுடியும்? கிராமத்தாரிலே கூட பிரதி மனுஷியனும் தன்சுதந்தரத்தையே நாடுகின்றான். கிராமப்பஞ்சாயத்தாரைக் கொண்டு வழக்குத்தீர்த்துக் கொள்வதற்கு இக்காலத்திய கிராமத்தார்கள் ஒப்புக்கொள்வார்களா? அருகாமையிலே முனுசீப்பு கோர்ட்டிருக்கிறது வக்கீல்களும் தரகரிகளும் எங்கும் நிறைந்து இருக்கிறார்கள். அவர்களோ கோர்ட்டு வழக்குகளைப் பெருக்கித் துட்டு சம்பாதிப்பதிலேயே கண்ணாயிருக்கிறார்கள் அப்படி யிருக்கையில், முனுசீப்பு கோர்ட்டுகளில் பணத்தையும் காலத்தையும் செலவுசெய்து பகைபாராட்டி உற்சாகங்கொண்டு வழக்காடுவோர்களேயன்றி கிராமத்தில் இரண்டாம் பேரறியாமலும் உற்சாகமில்லாமலும் வழக்கைத்தீர்த்துக்கொள்ள நம்மவர்க ளிசையார்கள்.

நம்முடைய சென்னை ராஜதானியிலேயுள்ள கிராம முன்சீப்புகளுக்கு 20 ரூபாய் அடங்கின கேசுகள் வரையிலும் தீர்ப்புக் கொடுக்கலாமென்ற சட்டம் இருந்தும் அதை எந்த கிராமத்தான் கவனிக்கும்படியாயிருக்கிறதென்றும் லாப்பாயிண்டுகளில் மிக்க தேர்ச்சியடைந்து பேர்போன ஆசாமிகள் அங்கங்கே பிரதி கிராமத்திலும் எவ்வளவோ பேர்களிருக்கிறார்களென்றும், வழியில்போகிற வழக்கைக்கூட விலைக்குவாங்குவதே இவர்கள் தொழிலாக ஒற்றுமையென்பதே ஊர்க்கிராமங்களில் இல்லவே இல்லையென்றும், இதுவுமல்லாமல் மொத்தத்திலே படிப்பும் பொதுநலப்பிரியமுமில்லாத கிராமங்களில் ஒற்றுமையை விருத்திக்குக்கொண்டுவந்து ஊராருக்கு நன்மையை யளிக்கக்கூடிய கிராம பஞ்சாயத்தை எப்படி நிலை நிறுத்த முடியுமென்றும அபிப்பிராயப் படுவதையும் கவனித்துபார்க்கும் விஷயத்தில், சில கிராமங்களில் ஏதோ இவ்வபிப்ராயத்தை யொட்டியே விவகாரங்கள் நடந்து வந்தாலும் மொத்தத்திலே யோசித்து பெரும்பான்மையான கிராமங்களில் ஜனங்களின் நடவடிக்கைகளையும் அக்கிராமத்தலைவர்களின் தாங்கள் நிர்வாகித்து வரும் அதிகார தோரணைகளின் பத்ததிகளையும், அவர்கள் தாங்கள வகித்திருக்கும் அதிகாரங்களின் தன்மையை இன்னதென்று உள்ளபடியே தெரிந்துகொண்டவர்களாய் அதனிடத்தில் சரியான திருஷ்டியைச்செலுத்தி எப்படிப்பட்ட விவகாரமானாலும் சரிவர ஒழுங்குபடுத்திக் கொண்டு போகும் விமரிசைகளையும் அவர்கள் தங்கள் அதிகாரத்துக்குட்பட்ட குடிகளைக்கொண்டனைத்துப் போவதிலும், தங்கள் மேலான அதிகாரிகளுக்குத் தாங்கள் நடந்துகொள்ள வேண்டியவைகளில் அதிக திருப்திகரத்தை யுண்டாக்கி அவர்களுக்குத் தாங்கள் செய்யவேண்டிய மரி

யாதைகளிலும், தவறுதலில்லாதவர்களாய் பெருந்தன்மையையே வகித்து கெம்பீரமாக எதையும் நடத்திக்காட்டிக் காரியஸ்தர்களாக விளங்குவதையும், மேலதிகாரிகளும் அவர்களிடத்தில் கவனம் வைத்து அவர்கள் விருத்திக்குவேண்டியவைகளை அதிககண்டிப்பான உததிரவுகளுடனே தாக்கீதுகள் முதலானவைகளை யனுப்பி முன்னுக்குக்கொண்டுவந்ததில் ஊக்கத்தோடு நடத்திவரும் விடாமுயற்சிகளையும், நிதானிக்கும்பக்ஷத்தில் அந்தந்த கிராமத்தலைவர்களாக விளங்கும் முனுசீப்புகளே மகஙள் தங்கள் கிராம விவகாரங்களையெல்லாம் தாங்களே முடிவுக்குக்கொண்டுவந்து பைசல்செய்து கொள்ளுகிற விஷயத்தில் வல்லவர்களாகவே யிருக்கிறார்கள். அட்படி அவர்களாலும் முடிவுபெறாத விவகாரங்களுக்கு அடுத்த மேலதிகாரிகள் படிப்படியா யிருந்துக்கொண்டிருக்கிறார்கள் எப்படிப்பட்ட விவகாரமானாலும் இந்த அதிகாரத்தோரணையில் எந்த இடத்திலாவது முடிவுபெறுகிறது. ஆகவே, கல்விப்பெருக்கத்தாலும் நாகரீகத்தாலும் விவகாரவிருத்தியாலும் நாளுக்குநாள் வளர்பிறைச்சந்திரனைப்போல விருத்தியுற்றுவரும் நமது ஆங்கிலேய அரசாக்ஷியிலே ஆதிகாலத்து வழக்கமாகிய கிராமப்பஞ்சாயத்துவேண்டுமென்பது ஹிந்துக்களிலும் ஆங்கிலேயர்களிலும் அனேகருடைய அபிப்பிராயமென்று கொண்டாலும் தற்காலத்திய விவகார நடவடிக்கைகளை யனுசரித்துப்பார்த்தால் கிராமமுனுசிப்புகளே எல்லாக்காரியங்களையும் சரிவர நடத்திக்கொண்டு போவார்களென்ற அபிபபிராயுந்தான் விசேஷித்துக் காணப்படும்போலிருக்கிறது.

---

## கிராமத்திற்கு வேண்டிய தபால் விஷயமாக நடத்தப்படும் ஏற்பாடுகள்.

---

முற்காலத்திலே தூரதேசத்துச் சமாசாரங்களை யொருவர் தெரிந்து கொள்ள வேண்டுமானால் வாரக்கணக்காகவும் மாதக்கணக்காகவும் எதிர்பார்த்திருகக வேண்டும். அப்படி எதிர்பார்க்கப்பட்ட விஷயங்களும் ஓலைகளிலே எழுதப்பட்டு வெகுசூசனையாகத்தான் விஷயங்களை யறிந்துக் கொள்ளக்கூடியதாயிருந்தது. இப்படி மநுஷியாள் மூலமாக அனுப்பப்பட்டுவரும்



சமாசாரங்கள் மாரிகாலமாயிருந்து மழை மிகுதியால் ஆறுகளிலும் வாய்க்கால்களிலும் வெள்ளம் புரண்டு விட்டாலோ சொல்லவே வேண்டியதில்லை. எவ்வளவு அவசரமானகாரியமாயிருந்தாலும் காலதாமசங் கொள்ளவேண்டியது தான். இவ்வளவு அத்தியாவஸ்தையிலிருந்த சமாசாரப் போக்கு வரவுகளை இங்கிலீஷுக்காரர் அரசாக்ஷியைக் கைக்கொண்டு ஆளத்தொடங்கியது முதல் அங்கங்கே ரஸ்தாக்களும ரோட்டுகளும் இராஜபாதைகளும் ஏற்பட்டதோடு றெயில்களும் ஏற்படவே அங்கங்கேயிருக்கும் பிரதானபட்டணங்களுக்கும் ஊர்களுக்கும போக்கு வரவு அதிக சுதகப்பட்டுச் ஜனங்களுக்கு அநேக விதத்திலும் சௌக்கியங்களுண்டாயிருக்கின்றன. ஆதியிலே துலைதூரத்திலிருக்கிற தன்னுடைய தகப்பனிருக்கும் ஸ்திதியை ஒருவன் அறியவேண்டுமானால் அதற்கென்றே ஒரு மனிதனை பிடித்தனுப்பியோ அல்லது அவ்வூருக்குப்போகப் பிரயத்தனங்கொண்டிருக்கிற சினேகிதர்கள் மூலமாகவோ கடிதங்கள் அனுப்புவது வழக்கமாயிருந்தது. இதனால் பணச்சிலவும் காலதாமதமும் அதிகமா யிருந்ததே யல்லாமல் குறித்த பேர்வழிக்கு தான் அனுப்பிய கடிதம் போய்ச் சேர்ந்திருக்கும் என்று துணிந்து சொல்வதற்கு இடமில்லாமலே யிருந்தது. இவ்வளவு கஷ்டங்களையும் நம்மிந்திய கவர்ன்மெண்டார் எத்தனையோ வருஷங்களுக்கு முன்னமே நமக்கு நிவர்த்தி செய்து வைத்திருக்கிறார்கள் என்பது யாவரும் அறிந்தவிஷயமே.

தபால் என்பதற்குச் சரியான நேர்பதமாக இங்கிலீஷில் போஸ்ட் என்று சொல்லுகிறார்கள் இந்த பதம் லத்தீன் பாஷையிலுள்ள போஸிட்டஸ் (வைக்கப்பட்டது) என்ற வார்த்தையிலிருந்து பிறந்தது. ரோமக ராஜ்யத்திலே பாதைகள் முழுதிலும் அங்கங்கே தங்குமிடங்கள் உண்டாக்கி அவைகளில் கவர்ன்மெண்டு சிப்பந்திகளை வைத்து அவர்களைக்கொண்டு கடிதங்களை அஞ்சலில் அனுப்புவது வழக்கமாயிருந்தது. பாரஸீக ராச்சியத்திலே மனிதர்களுக்குப் பதிலாக அதிவேகமாகச் செல்லக்கூடிய ஒட்டகங்களை உபயோகித்து வந்தார்கள். இவைகளெல்லாம் கவர்ன்மெண்டு கடிதப் போக்கு வரவுக்கு மாத்திரமே ஏற்பட்டிருந்தன. (இங்கிலாந்து) என்னும் சீமையிலே கூட அக்காலங்களிலே கடிதங்களை ஆள்கள் மூலமாகவும் சினேக

ர்கள் மூலமாகவே அனுப்பிவந்தார்கள். முதல் முதல் சுதேச தபால் போக்குவரவு ஏற்பாடானது. இங்கிலாந்திலே 1-வது சார்லஸ் அவர்கள் அரசாக்ஷியிலே 1635-ம் வருஷத்தில் ஆரம்பிக்கப்பட்டது

மூன்று ராச்சியங்கள் ஒன்றாக கூடிய கிரேட்பிரிட்டன் அண்டு ஐர்லாண்டு பெரிய அரசாக்ஷிக்குப்பொதுவாக ஒரு பெரிய தபாலாபீசு 1710-ம் வருஷத்திலே ஸ்தாபிக்கப்பட்டது. இப்படி ஸ்தாபிக்கப்பட்டது வருஷவாரியிலே விருத்திக்கு வரவும் உலகமெங்கும் பரவியதோடு இந்தியாவிலும் ஏற்படுத்தப்பட்டது. 1840 வருஷம் வரையில் அந்தந்த தூரத்துக்குத்தக்கபடி கடிதங்களுக்கு சார்ச்சுகள் அதிகமாகக் கொடுக்கும்படியாயிருந்தது. அதாவது ஒரு கடிதம் செல்லவேண்டிய தூரம் 50-மைலானால் இவ்வளவு கட்டணமென்றும் 100-மைலானால் இவ்வளவென்றும் அதற்கு மேற்பட்டால் இவ்வளவென்றும் கட்டணங்கள் (சார்ச்சுகள்) ஏற்பட்டிருந்தது. இங்கிலாந்திலே ஒரு கடிதம் அக்காலத்திலே 15-மைல் போகவேண்டுமானால் 4 பென்சும் (4-அணா) 300 மைலுக்குட்பட்டதானால் 12 பென்சுமாகவிருந்தது. 1837-ம் வருஷத்திலே ரோலண்டு ஹில் என்பவர் இது விஷயமாய் அதிகப்பிரயாசை யெடுத்துக்கொண்டு 4 அவுன்சுக்குட்பட்ட கடிதங்களுக்கு எவ்வளவு தூரம் செல்வதானாலும் அதற்குக் கட்டணம் ஒரு பென்னியென்று எங்கும் ஒரேமாதிரியான சார்ச்சு ஏற்பாடு செய்து இதற்காக உண்டான அநேக வில்லங்கங்களுக்கெல்லாம் ஈடு கொடுத்து இந்த விஷயத்தை முன்னுக்குக்கொண்டுவந்து 1840 வருஷத்தில் ஸ்தாபித்தார்.

இந்தியாவிலே இந்த தபால் சார்ச்சு 1854-ம் வருஷம் வரையில் இங்கிலாந்து மீதியாக வெகு தூரத்தை யொட்டி வித்தியாசப்பட்டுக்கொண்டிருந்தது 1854-55-ல் கடிதம் ஒன்றுக்கு ½ ரூபாய் எடைக்குட்பட்டதற்கு எவ்வளவு தூரம் செல்வதானால் ½ அணா வென்ற ஒரேமாதிரியான சார்ச்சு ஏற்பட்டு உலகத்தில் இதுதான் குறைந்த சார்ச்சு என்று சொல்லும்படியாயேற்பட்டது. 1879-80 ம் வருஷத்திலே ஜனங்களின் க்ஷேமத்தைக் கருதிய கவர்ன்மெண்டார் ¼ அணா கார்டும் ஏற்படுத்தினார்கள் இதோடுகூட 1862-63-ம் வருஷத்திலேயே மணியார்டர் ஏற்பாடும் உண்டாக்கினார்கள். 1882-83-ல் போஸ்டாபீசு பாங்கும். உண்டாயின இதற்குப்பிறகு வால்யு பெயபில் (V. P.) சிஸ்டமும் ஏற்படுத்தினார்கள்.



# கிராமப் பெரியதனக்காரர்களின்

## ஸிவில் அதிகாரங்களைக் குறித்த

### சட்டங்களும் ரூல்ஸுகளும்.

ஸிவில் வியாச்சியங்களைப் பரிசீலனை செய்வதற்காகக் கிராம முனிசீப்புகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற அதிகாரங்கள் சரியாய் நடத்தப்படுமாகில், ஸிவில் கோர்ட்டுகளில் வியாச்சியங்களைத் தாக்கல்செய்வதால் உண்டாகும் அசந்தர்ப்பமும் செலவும் கிராமத்தாருக்கு நேரிடாதபடி கிராம முனிசீப்புகள் அவர்களுக்கு மிகுந்த உபயோகமாகவிருக்கக்கூடும். ஆகையால் இனி இதில் சொல்லப்போகும் சட்டதிட்டங்களின் நிபந்தனைகளை கிராம முனிசீப்புகள் பூர்த்தியாய்த் தெரிந்துகொள்வதுமல்லாமல் கக்ஷிக்காரர்கள் தாராளமாய்த் தங்களுடைய கோர்ட்டுகளுக்கு வியாச்சியங்கொண்டு வருவதற்கு ஏஷியமா யிருக்கும்விதமாக தங்களுக்குமுன் தாக்கல்செய்யப்படுகிற வியாச்சியங்களைப் பரிசீலனை பண்ணவும் வேண்டும் :—

1. 1889-ம் வருஷத்திய சென்னப்பட்டணம் 1-வது ஆக்டு.
2. 1816-ம் வருஷத்திய 5-வது ரெகுலேஷன்.
3. 1840-ம் வருஷத்திய சென்னப்பட்டணம் 8-வது ஆக்டு.
4. 1816-ம் வருஷத்திய 12-வது ரெகுலேஷன்.

ஆகிய இவைகளெல்லாம் கிராம உத்தியோகஸ்தர்களுக்கு வேண்டிய சட்டதிட்டங்கள் அடங்கியுள்ளவை.

1816-ம் வருஷத்திய 4-வது ரெகுலேஷனையும், 1883-ம் வருஷத்திய 4-வது ஆக்டையும் 1889-ம் வருஷத்திய சென்னப்பட்டணம் 1-வது ஆக்டு ரத்துசெய்து அவைகளுக்கு பதிலாக அமுலுக்கு வந்திருக்கிறது.

கணக்கின் நிகரத்தொகையாவது மற்றபடி யாகவாவது கடன் அல்லது தாவாவான தொகை அல்லது பெருமானத்தில் 20-ரூபாய்க்கு அதிகப்படாதபோது கண்ட்ராக்டின்பேரில் பாக்கியாயிருக்கிற பணத்தைக்குறித்தாகிலும் ஜங்கமசொத்தைக் குறித்தாகிலும் அப்படிப்பட்ட சொத்தின் பெருமானத்தைக் குறித்தாகிலும் கொண்டுவரப்படுகி

ற வியாஜ்யங்களை இந்த ஆக்ட்டின்படி கிராம முனிசீப்புகள் பரிசீலனை செய்ய அதிகாரமுடையவர்களா யிருக்கிறார்கள், ஆயினும், முனிஸீப்புகளுக்குமுன் கட்சிக்காரர்கள் சம்மதப்பத்திரம் எழுதிக்கொடுக்கும் பட்சத்தில் ஷை தொகை அல்லது பெறுமானம் 200-ரூபாய் வரையில் போகலாம்.

ஒவ்வொரு கிராமக் கோர்ட்டிலும் சாதாரணமாய் ஒரு கிராமமுனிசீப்பு இருக்கவேண்டும். அவர் அந்தக்கிராமத்தில் வசிப்பவராக இருக்கவேண்டும். ஆனால் ஜில்லாக்கெஜட்டில் பிரசுரம் செய்யப்படும் பிரத்தியேகமான உத்திரவுகளின்படி அந்தக்கோர்ட்டு மூன்று நியாயாதிபதிகள் சேர்ந்ததாக இருக்கலாம் அவர்களுக்குள் கிராமமுனிஸீப்பு அக்கிராசனாதிபதியாக விருப்பார் கலெக்ட்டர் சித்தம்செய்து வைத்திருக்கும் ஜாபிதாவிலிருந்து வியாஜ்ஜியத்திற்குக் கட்சிக்காரராயிருக்கிற ஒவ்வொருவரும் ஒவ்வொருவரைத் தெரிந்தெடுத்து மற்ற இருவரையும் நியமிக்கலாம். வியாச்சியங்களைப் பரிசீலனை செய்வதற்காக அப்படிப்பட்ட நியாயசபையைக சேர்க்கும் விதம் இப்படிப்பட்டதென்று பின்னால் விவரித்திருக்கிறது. வியாஜ்யங்களைப்பற்றிய ரிஜிஸ்டரை வைக்கவும் கோர்ட்டின் நடவடிக்கைகளை எழுதவும் முனிஸீப்புகள் கடமைப்பட்டவரா யிருக்கிறார்கள். இதைத் தாங்களே செய்யக்கூடும். ஆனால் அப்படி செய்யக்கூடாத பக்ஷமாயிருந்தால் கிராமக்கர்ணத்தின் உதவியைப் பெற்றுக்கொள்ளலாம். எல்லாக் கட்டளையையும் சேர்ப்பிப்பதும் டிக்ரிகளை நிறைவேற்றுகையில் கிராம முனிஸீப்பின் உத்திரவுகளின்படி பிரவர்த்திப்பதும், சமாசாரம கொண்டுபோகும்வேலையில் வழக்கமாய் அமர்ந்திருக்கிற கிராம உத்தியோகஸ்தனுடைய கடமையாயிருக்கிறது.

கிராமக்கோர்ட்டார் அவர்களால் பரிசீலனை செய்யத்தக்க வியாச்சியங்களில் அடியிற்கண்ட விஷயங்களைக்குறித்த யாதொரு வியாஜ்யத்தையும் பிடிக்கக்கூடாதென்பதைக் கவனிக்கவேண்டும் :—

1. கூட்டுப்பங்கு வியாபாரத்தில் நிலுவை இவ்வளவென்று அக்கூட்டுப்பங்குக்காரர்களாவது அவர்களுடைய ஏஜண்டுகளாவது முடிவேற்படுத்தி யிருந்தாலொழிய அப்படிப்பட்ட நிலுவையைக்குறித்தும்.

2. மரண சாசனம் எழுதாமல் இறந்து போயிருக்கும் விஷயத்தில் பங்கைக்குறித்தாவது பங்கின் ஒரு பாகத்தைக்குறித்தாவது மரண



சாசனப்படி ஏற்பாடான பொருளுக்காவது பொருளில் ஒரு பாகத்திற்காவது.

3. நிலத்தின் குத்தகைத்தொகையானது பிரதிவாதியால் கையெழுத்துச் செய்யப்பட்டிருக்கிற எழுத்து மூலமாக கண்ட்ராக்ட்டின் பேரில் பாக்கியாயிருந்தாலொழிய அப்படிப்பட்டக் குத்தகைத்தொகையைக் குறித்து

4. முந்திய வியாஜ்யத்தில் வேண்டுமென்று விடப்பட்டோ அல்லது கைவிடப்பட்டோ இருக்கிற தாவாவின் பாகத்தைக்குறித்து.

5. அதே கட்சிக்காரர்களுக்காவது அவர்களை ஆதாரமாகக்கொண்டு தாவா செய்கிற வர்களுக் காவது வியாஜ்ய மூலமுண்டாகி முன்னமே விசாரித்துப் பைசல் செய்யப்பட்டிருக்கு மாகில் அந்த விஷயத்தில்.

6. கவர்ன் மெண்டாராலாவது அவர்கள் மேலான உத்தியோக முறைமையில் சர்க்கார் உத்தியோகஸ்தராலாவது அவர்கள் மேலாவது வியாஜ்யங் கொண்டுவரப்படுகிற விஷயத்தில்.

7. வயது வராத மைனர்கள் அல்லது புத்திமாறுட்ட மூள்ளவர்களாவது அவர்கள் மேலாவது வியாஜ்யங் கொண்டுவரப்படுகிற விஷயத்தில் [ஆக்டின்படி கொண்டுவரப்படும் வியாஜ்யங்களானவை,] வியாஜ்யமாரம்பமாகும்போது பிரதி வாதிகளெல்லாரும் யாருடைய அதிகாரப் பிரதேச எல்லைக்குள் வாசம் செய்து கொண்டிருக்கிறார்களோ அல்லது தொழில் நடத்திக் கொண்டிருக்கிறார்களோ அல்லது லாபத்திற்காக வேலைசெய்து கொண்டிருக்கிறார்களோ, அந்தக்கிராம முனிஸீப்பினுடைய கோர்ட்டில் தாக்கலாகவேணடும் ஆயினும் யாதொருவியாஜ்யம் அல்லது நடவடிக்கையில் ஒரு கிராம முனிஸீப்பே கட்சிக் காரராகவாவது நேராய் பற்றுள்ள வராகவாவது விஷயத்திலே அடுத்துப் பக்கத்திலிருக்கிற யாதொரு கிராமத்தின் முனிஸீப்பினுடைய கோர்ட்டில் அந்த வியாஜ்யம் அல்லது நடவடிக்கையைக் கொண்டு போகவேண்டும் கால நிர்ணய விஷயத்தைப் பற்றிச்சொல்ல வேண்டியதென்னவென்றால் வியாஜ்யம் தொடரவாவது விண்ணப்பம் செய்து கொள்ளவாவது சுதந்தரம் முதலில் ஏற்பட்ட காலம் முதற்கொண்டு மூன்று வருஷமானபிறகு இந்த ஆக்ட்டின்படிக்கான யாதொரு வியாஜ்ய மாகிலும் விண்ணப்பமாகிலும் ஏற்றுக்கொள்ளத் தகாது. மேலெ கண்டவிலக்குக் குட்பட்டு

கால நிர்ணயத்தைக் குறித்த 1877-ம் வருஷத்திய இந்து தேசத்து
15-வது ஆக்ட்டின் நிபந்தனைகள் வியாஜ்யங்களுக்கும் விண்ணப்பங்க
ளுக்கும் பிரயோகப்படத்தக்கன. ஆகையால் கிராம முனுசிப்புகள்
வசிவில் வியாஜ்யங்களைப் பரிசீலனை செய்வதற்குக் காலநிர்ணய ஆக்டி
ன்படி நிபந்தனைகள் சம்பந்தப்படுகிறவரையிலே அவர்கள் அந்த நிபந்
தனைகளை நன்ருய்த் தெரிந்துக்கொண்டு இருக்கவேண்டிய தவசியம்
என்றறிய வேண்டியது.

## நிலங்களுக்குத் தண்ணீர் பாய்தல்.

———):(———

சமுத்திரம் சூழ்ந்த சப்ததீபங்களிலும் சிறந்து விளங்கிய ஜம்புத்தீ
பப்பாரத வருஷப் பரதக்கண்ட மேருமத்திய தக்ஷிணபாகமாகிய நம்மிந்
தியதேசத்திலே நிலங்களுக்கு நீர்ப்பாயும் காக்ஷியானது மூன்றுவகையாக்
ப்பிரிக்கப்பட்டிருக்கிறது. அவையாவன :—

முதலாவது, நூற்றுக்கணக்காகவும் ஆயிரக்கணக்காகவுமான மைல்
கள்வரையிலும் அகண்டு ஆழ்ந்து கங்கையைப்போல உன்னதங்கொண்டு
விளங்கும் வாய்க்கால்கள்.

2-வது நாற்சதுரமாக வெட்டப்பட்டு நல்லகருங்கற்களால் படிகள்
கட்டப்பட்டு அநேகமைல்தூரங் களுக்கப்பாலிருந்து வாய்க்கால்கள் வழியா
ய்க்கொண்டுவரப்படும் திவ்யமானகுடிநீரால் நிறைந்து உன்னதங்கொண்டு
ஊரார்ஸ்நானபானாதிகளுக்கும் உரித்தானதாய் ஊரைச்சுற்றிய வயல்களுக்
கெல்லாம் ஊட்டத்தையளித்து ஒப்பற்று விளக்கும் குளங்கள் அல்லது
ஏரிகள்.

3-வது மேட்டுப்பாங்காக ஏற்பட்டு மேல்நோக்கி மழையையே எதி
ர்பார்க்கக்கூடிய நிலங்களின் வசதிக்காக அநேக அடிகள் சுற்றளவுகொ
ண்டதாய் அசையாத செங்கற்கட்டடங்கள் சூழ்ந்ததாய் நீர்மட்டங்கண்ட
ஆழத்தையுடையதாய் அல்லும் பகலுமாக எத்தனையோ கவலைகளைப்
போட்டிறைத்தாலும் ஆருதஊற்றுகளையுடையதாய்த் தன்னைச்சுற்றிலும்
நிறைந்துள்ள அநேகவயல்களுக்கு ஜலபுஷ்டியை யுண்டாக்கி ச்சந்தோஷ
த்தையளிக்க வல்லகிணறுகளுமேயாம்.

இப்படி மூன்றுவகைகொண்ட இவைகளில் முதல்தரமாய் மிகவும்
சிறந்துள்ளவை வாய்க்கால்களே இவைகளுக்கு வேண்டியஜலமானது



ஹிமோத்கிரியின் பனிநிறைந்து உறைந்த விடங்களிலிருந்து புறப்படும்
ஜீவநதிகளாலே நிறப்பப்படுகிறது. இந்நதிகளோ மழைக்கென்றெதிர்பார்
ராது மதத்துவிளங்கக்கூடியவை ஆறுகளெல்லாம் அங்கங்கேவரண்டுபோக
கவும் அடியெடுத்துவைப்பதற்குக் கூடசாத்தியப்படாத அவ்வளவுஉஷ்ண
த்தைக்கொண்டு தாகத்திற்குக்கூடத்தண்ணீர் அகப்படாத கோடைக்கா
லத்திலும் சூரியோஷ்ணத்தால் அம்மகாமலையின் சிகரங்களில் கட்டிகட்டி
யாய் உறைந்து கிடக்கும் பிரமாண்டமான பனிக்கட்டிகளெல்லாம் கரை
ந்துபோவதால் அவைகளெல்லாம் ஒன்றுசேர்ந்து இந்தஜீவநதிகளை நிறப்பி
இருகரையும் பிரளச்செய்கின்றனவாம். இஞ்சினீர் இலாக்காவேலைப்பாடு
கள் பலவகையாகவும் கஷ்டமான பாகமாகவும் விளங்கினாலும் சாதாரண
மாய் இம்மாதிரியாக நீர்ப்பாய்ச்சுதல் சுலபமான ஏற்பாடாகவும் ஒரேதன்
மைப்பட்டதாகவுமிருக்கிறது. ஆற்றின் குறுக்கே ஒரு அணைபோட்டு அத
னால் தண்ணீர் மட்டத்தை உயர்த்தி அப்படி உயர்த்திய அணையிலிருந்து
வாய்க்கால்கள் ஏற்படவும் அவைகளின் வழியாக அப்படித்தடைப்படுத்
திய ஜலமானது கொண்டுபோகப்படுகிறது.

இந்தியாவின் வடபாகத்திலுள்ள நதிகள் ஹிமோத்கிரியிலிருந்து புற
ப்பட்டபிறகு அகண்டு பரந்தவெளியிடங்கள் மூலமாய்ப்பாய்கின்றன.
இவ்வெளிகள் படிப்படியாய்ச் சரிவுற்று சமுத்திரமுகமாக கொஞ்சம்சாய்
வுற்றிருப்பதாகக் காணப்படுகின்றன.

வாய்க்கால்களில் நிறம்பியுள்ள ஜலமானது நிலத்தின் சரிவுக்கு கொ
ஞ்சம் குறைவாகவே செய்யப்பட்டுப்பிறகு இதன்கிளைவாய்க்கால்களுக்குத்
திருப்பப்பட்டு அதன்பிறகே நிலங்களுக்குக் கொண்டுபோகப்படுகிறது.

உதாரணமாக ஆற்றிலே அணைக்கட்டிய இடத்திலே தண்ணீர்மட்ட
மானது தேசத்தின் மட்டத்திற்கு 20 அடிகீழாக இருப்பதாயிருந்து தேச
த்தின் சாதாரண ச்சரிவு மைலுக்கு 2 அடியாயிருந்தால், மைலுக்கு ஒரு
அடி சாய்வுக்குக் கட்டியவாய்க்காலானது தேசத்தின்மேல் ஒவ்வொருமை
லுக்கும் ஒவ்வொரு அடியாக மேற்கிளம்பி 20 மைல் பூமிமட்டத்திற்கு
வரும். உலகத்திலிதுவரைக்கு வேறெங்கும் ஏற்படாத பெரிய ஏற்பாடா
கிய நீண்டகங்கைக்கால்வாயில் இந்தவிவரங்களை ஏகதேசமாய்க் காண
லாம். இந்தபெரிய வாய்க்காலானது நதியைவிட்டுப் புறப்பட்டு 20 மைல்
தூரம்வரைக்கும் தேசத்தின் சமபரப்புக்குகீழாகவே பாய்கிறது, ஆகையி
னாலே நதியைவிட இந்தவாய்க்காலானது அதிகஉபயோகப் படக்கூடிய

தல்ல அதனுடைய ஆரம்பத்திலிருந்து இவ்வளவுதூரத்தில்தான் அது பூமட்டத்திற்குவந்து அது இதற்குமேல் செல்லவேண்டிய 800 மைலுக்கும் தன்னுடைய அநேககிளை பிரிவுகளுள்பட நாட்டின் மட்டத்திற்குமேல் பரவிப்பாய்ந்து பூமியின் ஆகர்ஷண சக்தியினாலேயே தன்னுடைய ஜலத்தை அநேகநிலங்களுக்குப் பாயவிடுகிறது. இப்படி நீர்ப்பாயும் ஒரு வாய்க்காலை நாமுண்மையிலே ஒருசெய் (மனுஷராலுண்டாகிய) நதியென்று சொல்லலாம்.

யமுனை நதியானது கங்கையைப்போலவே அதிக உபயோகமுள்ள வேறொரு நதியிதிலும் ஹிமயமலையிலிருந்து தான் ஜலம் சதா பெருகிக் கொண்டிருக்கிறது இதினுடைய ஜலத்தைக்கூடத்தடுத்து நீர்பாய்ச்சுவதற்காக திருப்பப்பட்டிருக்கிறது. யமுநாநதியின் இருபக்கங்களிலும் இரண்டு வாய்க்கால்கள் இதையடுத்த நாடுகளிற் பாய்கின்றன இவைகளில் ஒன்று அடர்ந்த காடுகளின் அத்துகளாக ஏற்பட்டுச் செழிப்புற்றதும் ஆனால் வறட்சியுற்றதுமான நிலப்பாங்குகளுக்கு பாய்கிறது இந்தவேலைகள் பழையமாதிரியானவை இவைகளிலொன்று பிரிட்டிஷ்காரர் காலத்திற்கு முன்னம் ஏற்பட்டதாய் இப்போது புதிப்பிக்கப்பட்டதானாலும் அதிசயிக்கத்தக்க மாதிரியிலே உபயோகப்படக்கூடியதாய் பலனையளிக்கிறது.

நாம் முன்னம்தெரிந்துகொண்டதுபோல கங்கா நதியானதுகூட இதே மாதிரியாகத் தடுக்கப்பட்டு பெரியகால்வாயின் வழியாக ஜலத்தைக்கொண்டுபோகப்படுகிறது. இப்படிக்கொண்டுபோகப்படும் ஜலமும் ஆற்றின் மேல் வெள்ளமாயிருக்கவும் அடியில் அதிவேகமாகச் செல்லும் நீரோட்ட (under current) மானது அப்படியே ஜாரிப்போய்க்கொண்டிருப்பதால் ஆற்றின்குறுக்கிலிடப்பட்ட அணைகட்டுக்கு அதிசொற்ப தூரத்திலேயே மறும் அகண்ட ஆற்றைபோலவே அகண்டு ஆழ்ந்து பரந்தகங்கையாகவே விளங்கும். ஆனால் கோடைகாலத்திலேகூட நமக்கு ஜலக்குறை நேரிட்டிருக்கும்போது முன்னமே சொல்லி யிருக்கிறதுபோல ஆறுகளிலே அண்டமளாவிய கொண்டல் கவியும் கொடிமுடிகளையுடைய எண்டிசாமுகமும் எத்தனையோகாத தூரத்துக் காக்ஷியாய்விளங்கும் ஹிமயமலையின் சிகரத்திலுள்ள பர்வதாகாரங்கொண்ட பனிக்கட்டிகளெல்லாம் சூரியோஷ்ணத்தால் கரைந்து' பெருக் கெடுப்பதால் மேல்வெள்ளங் கொண்டு அணைக்கட்டின்மேல் வழிந்து வீணில்செல்லும், இப்போது தான் கொஞ்சநாளைக்குமுன்னே கட்டிமுடிந்த பெரியவாய்க்காலானது



யமுநாநதியிற் செல்லும்ஜலத்தை டில்லிக்கு அருகாமையில் தடுத்து ஆக்கிராவுக்கும் அதையடுத்த பூப்பிரதேசங்களுக்கும் கொண்டுபோகிறது. கங்காநதியின்மேலோடிச்செல்லும் அதிக ஜலத்தை மடக்கும்படி அலிகர்என்ற இடத்திலே வேறொருகால்வாய்க் கட்டப்படுகிறது இதனால் பாயும் ஜலங்கள் கான்பூர் அலகபாத் முதலானவை மூலமாகச்செல்லும் இது முடிவுபெறவேதான் இந்தப்பிரதேசத்திற்கு வடமேற்கு மாகாணங்களென்ற பெயருண்டாகி ஒருபெரிய ராஜ்யத்தின் முதன்மைஸ்தானமாய் நம்முடையயுத்தவீரர்களின் சைந்யத்தின் பெருத்த காக்ஷியிலடங்கிய ஜெயவீரசாலிகளின் உற்பத்திக்குத் தாயகமாய், பஞ்சத்தின் வேகத்திற்குப் பயப்படாமற் பச்சென்று விளங்கி ஜலாதாரப் புஷ்டியால் உன்னதங்கொண்டு விளங்கும் வட இந்தியாவாகிய ஹிந்துஸ்தானத்திலே நிலங்களுக்கு நீர்ப்பாய்கிறது இப்படி ஜீவநதிகளினாதாரமாய் எங்கும் செழிப்புற்று பச்சென்று விளங்கும்படி அங்கங்கே பெரிய கால்கள் ஏற்பட்டு ஜலங்கள் தாராளமாய்ப் பாய்ந்து நிலங்களுக்கு வளப்பத்தைத் தருவதோடு நமது தென்னிந்தியாவிலும் காவேரி, கிருஷ்ணா, கோதாவரி, மகாநதிகளின் அணைக்கட்டுகளிலிருந்து நீர்ப்பாய்வதற்காக ஏற்பட்டிருக்கும் ஏராளமான வாய்க்கால்களின் ஏற்பாடுகளைப்பார்க்கலாம்,

## கவர்ன்மெண்டு (லோக்கல்) உத்திரவும்,

### டிஸ்டிரிக்ட்டு போர்டு எண்டார்சு மெண்டு உத்திரவும்

---

ரோட்டோரங்களும், ரோட்டு புறம் போக்குகளும், லோக்கல் போர்ட்டாரைச் சேர்ந்தவைகள். அவைகளிலுள்ள மரங்களும் போர்ட்டாருக்குச் சொந்தமானவை. அப்படிப்பட்ட மரங்களின் மாகுலை குத்தகைக்கு விட்டாலும் மரப் பட்டாவின் பேரில் விடப்பட்டிருந்தாலும் அவைகளின் வரும்படி லோக்கல் போர்ட்டாருக்கு சேரவேண்டும்.

ஆகையால் இனி அப்படிப்பட்ட வரவுகளை சம்பந்தப்பட்ட டிஸ்டிரிக்ட்டு அல்லது லோக்கல் போர்டுக்கு சேரும்படி லோக்கல் பண்டின் அடியில் வரவு வைக்கப்படுகிறதா என்பதை தாசில்தார்கள் கவனிக்கவேண்டியது.

## போர்டு செட்டில் மெண்டு உத்திரவு.

### கடன்கள் செலுத்தவேண்டிய காலத்தில் செலுத்தப்படாமல் பாக்கியிருக்கிற தவணைகளுக்கு தண்டவட்டி விதிப்பதைப்பற்றி.

———):o:(———

கடன்கள் விஷயமாக ஏற்பட்டிருக்கும் திருத்தப்பாடான விதிகளில் நிர்ணயிக்கப்பட்ட காலங்களில் செலுத்தப்படாமல் பாக்கியிருக்கிற தவணைகளுக்கு தண்டவட்டி விதிப்பதைபபற்றியுள்ள VIII-வது செ. விதியை அடியிற் கண்ட விதமாக திருத்திக்கொள்ளவேண்டுமென்று மேற்கண்ட புரோசிடிங்ஸ்களில் போர்ட்டாரவர்கள் உத்திரவு செய்திருக்கிறார்கள்.

VIII-வது விதியின் முதல் வாக்கியத்திற்கு பதிலாக அடியிற் கண்டதை அமைத்துக்கொள்ள வேண்டும்.

"கடன் எந்த ரிவினியூ வருஷத்தில் செலுத்தவேண்டியதோ அந்த ரிவினியூ வருஷத்தின் முடிவுக்குள் செலுத்தப்படாமல் பாக்கியாயிருக்கும் வட்டியைப்பற்றி அல்லது அசலையும் வட்டியையும் பற்றிய சகல தவணை தொகைகளுக்கும் அவைகள் பாக்கியான தேதி முதல் நூற்றுக்கு 6¼ விழுக்காடு வட்டிபோடப்படும்" அதாவது அந்தந்த ஜூன்மீ 30உ யோடு முடிவாகிற ரிவினியூ வருஷ முடிவிற்குள் எல்லா தவணைகளும் பூராவாக செலுத்திவிட்டால் தண்டவட்டி செலுத்தவேண்டிய அவசியமில்லை வருஷமுடிவிற்குள் செலுத்தப்படாமல் பாக்கியிருக்கிற தொகைகளுக்கு தவணைகள் எந்த தேதியில் பாக்கியில் விழுந்ததோ அந்த தேதி முதல் வட்டி விதிக்கப்படும்.

2. இந்த உத்திரவை எல்லா உத்தியோகஸ்தர்களும் கவனித்து அதின்படி அமுல் நடத்தவேண்டும். இந்த உத்திரவு கிடைத்த தேதி முதல் அமுலுக்கு கொண்டுவரவேண்டும். இதற்கு முந்தி வசூல் செய்யப்பட்ட தண்டவண்டிக்கு இந்த உத்திரவு பொருந்தமாட்டாது. கவர்ன்மெண்டார் செய்திருக்கிற நயத்தை தாசில்தார்கள் பகிரங்கமாய் பிரசித்தம் செய்யவேண்டும்.



# ஹைகோர்ட் விவகாரம்.

## (சந்தேக நிவர்த்தியைப் பற்றிய அப்பீல்).

செங்கற்பட்டு டிஸ்திரிக்ட் கோர்ட்டில் ஒருவர்தாம்பெற்ற தீர்ப்பை நிறைவேற்ற ஒருவழக்குகொண்டுபோனார் இந்தவழக்கு விசாரணைக்கு வருமுன்னமே வாதியானவர் பிரதிவாதிக்கு "நான்வியாஜ்ஜியம் செய்தாயிற்று, நீ அதற்காக எதிர்வழக்காடவேண்டாம். நான் வியாஜ்ஜியத்தை முழுவதுமே நிறைவேற்றப்போகிறதில்லை ஒருவேளை என்பக்கத்தில் தீர்ப்பானாலும் நான்தீர்ப்பை நிறைவேற்றப்போகிறதில்லை; அதனால் உனக்குள்ளபாத்தியதைக்கு யாதொரு ஹானியும் கொண்டுவந்து விடமாட்டேன்" என்று ஒருகடிதம் எழுதியிருந்தான். அந்தப்படி பிரதிவாதி எதிர்வழக்குப்போடவில்லை. ஆனால், வாதிதன் பக்ஷத்தில் தீர்ப்புபெற்றுக்கொண்டான் வாதிதான் பிரதிவாதிக்கு எழுதினபடி தீர்ப்பைநிறைவேற்றாமல் இருக்கிறதற்குப்பதிலாய், நிறைவேற்றப்பிரயத்தனம் செய்தான். அப்போது மேற்சொன்ன கடிதத்தின்படி வாதிசும்மாயிருக்கிறதற்குப் பதிலாய் நிறைவேற்றப்புறப்பட்டதற்குப் பிரதிவாதி வாதிமேல் வேறேவியாஜ்ஜியம் கொண்டுவரவேண்டியதா? அல்லது வாதி நிறைவேற்றுங்காலத்தில் மேற்படி கடிதத்தின்படி நிறைவேற்றாமல் தடைசெய்யவேண்டியதா? என்றொருசந்தேகமுண்டாகி, அந்தசந்தேகம் ஹைகோர்ட்டில் நிவாரணை நிமித்தம் அப்பீல்செய்யப்பட்டது. ஹைகோர்ட் ஜட்ஜிகள் I. L. R 22 B. 468. யின்படி அந்தக்கடிதம் தீர்ப்பு நிறைவேற்றும்போது பிரஸ்தாபிக்கப்படவேண்டுமேயன்றி தீர்ப்புநிறைவேறவிட்டு அந்தக்கடிதத்துக்காக வேறேவியாஜ்ஜியம் செய்யத்தேவையில்லை;—என்றார்கள்.

நெடுங்கனூடு டிஸ்டிரிக்ட்முனிஸீப்கோர்ட்டில் பிரதிவாதிக்குவியாபாரீதியினின்றும் கடன்கொடுத்தபணத்தைத் திருப்பி வாங்கிக்கொள்வதின்பொருட்டு வாதி ஒருவழக்குக்கொண்டுவந்தார். பிரதிவாதி அந்தநிதி என்னுடையது என்றார். வாதி அந்தவியாபாரம் தன்மருமகனால் தன்பொருட்டுச்செய்யப்பட்டு வந்ததால் அந்தப்பணம் தனது என்றார். மேற்படி கடனை ருஜுப்படுத்த ஸ்டாம்பு ஒட்டாத ப்ரோநோட் ஒன்று வாதியால் தாக்கல் செய்யப்பட்டது. முனிஸீப்தாரும், டிஸ்டிரிக்ட் ஜட்ஜும் அது

ப்ரோ கோட்டாயும் ஸ்டாம்பில்லாத தாயுமிருந்தால் ருஜூப்பத்திரமாகச் செல்லாது என்று தள்ளிவிட்டார்கள், ஆகையால் ஹைகோர்ட்டுக்கு அப்பீல்செய்யப்பட்டது. அப்போது ஹைகோர்ட் ஜட்ஜிகள், "அந்த ப்ரோ கோட்டென்ற பத்திரம் நிஜமாய் ப்ரோநோட் அன்று, கடன்வேண்டுமென்று பிரதிவாதி வாதிக்குக் கொடுத்த மனு; அதில்பணம் கொடுத்தால் அது திரும்பிகொடுப்பட்டுப் போமென்று சொல்லப்பட்டிருந்தது."—என்று வாதித்ததை ஒப்புக்கொண்டு, அது சென்னைஹைகோர்ட்டில் செய்யப்பட்ட தீர்ப்பொன்றுக்கு (Decision in 16 Madras) விரோதமாய் இருப்பதால் புல்பெஞ்சு கோர்ட்முன்பாக விசாரணை வேண்டுமென்று சொன்னார்கள்,

### ஏஜண்டுகளுக்குச் சுய அதிகாரமுண்டா ?

——)o(——

ஒருவன்செய்யும் வியாஜ்ஜியத்துக்காக ஒரு ஏஜண்டை அவன் ஏற்பாடு செய்தபோது அந்த ஏஜண்ட் பிரதிவாதியோடு இராஜீ செய்துகொண்டால், அந்த இராஜிக்கு அவன் கட்டுப்பட்டவனாயென்பது ஒருசந்தேகம் அந்த சந்தேக நிவாரணமாக ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்யப்பட்டது, இந்த அப்பீலில் தம்பியானவர் தமயனை தன் குடும்பத்தை நிர்வாகம் செய்யும்படி ஒரு ஏற்பாடு செய்திருந்தார், அந்தக்குடும்ப விஷயமாய் விவகாரங்கள் நடத்தவும். அதிகாரம் கொடுத்திருந்தார். அப்படியே தமயன் வியாஜ்ஜியம் ஒன்றுகொண்டுபோனார் அந்தவியாஜ்ஜியம் விசாரணைக்கு வருமுன்னர் தமயனும் பிரதிவாதியும் இராஜீசெய்து கொண்டார்கள் தம்பிதமயனுக்குக்கொடுத்த அதிகார பத்திரத்தில் வியாஜ்ஜியம் நடத்தமாத்திரம் தமயனுக்கு அதிகாரமிருக்கிறதேயன்றி விசாரணைக்கு முந்தியாய் அந்தவியாஜ்ஜியத்தை இராஜிசெது முடிக்க அல்ல. ஆகையால், தம்பியானவர் ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்தார். ஹைகோர்ட் ஜட்ஜிகள் :—வக்கீல்போல ஏஜண்டுகள் ஆகமாட்டார்கள். வக்கீல்கள் வேறே, ஏஜண்டுகள் வேறே, ஏஜண்டுகளுக்கு ராஜிசெய்யு மதிகாரமிருக்கிறாப்போலத்தான் நாம் எண்ணிக்கொள்ள வேண்டும் ;—என்று சொன்னார்கள்,



## I.

### 1903ஷு ஜூன்மீ 1உ யுள்ள 185-வது நெ.

### போர்டு செட்டில்மெண்டு உத்திரவு.

1903ஷு ஏப்பிரல்மீ 16உ யுள்ள R. C. 290-வது (B & G) நெ. ருள்ள சர்க்யுலருக்கு அனுபந்தமாக பிரசுரம் செய்யப் பட்டிருக்கிற லோன்ஸ் ஆக்ட்டின் 31-A. நி. பாரத்தின் 9, 10 இந்த கலங்களின் இடையில் " இன்னம் பாக்கியாகாத தொகைகளின் வசூல் " என்று புது கலத்தை சேர்த்துக்கொண்டு அதற்கு பிந்திவரும் கலங்களுக்கு 11,,12, 13 என்று இலக்கமிட்டு கொள்ளவேண்டும்.

## II.

கவர்ன்மெண்டாரால் கொடுக்கப்படும் கடன்களை வசூல் செய்து கஜானாவுக்கு அனுப்பும்போது கிராம உத்தியோகஸ்தர்கள் தண்டலை சாதாரணமாக தாமே சொற்ப காகயெழுத்தில் தயார்செய்து அனுப்புவதில் அற்ப தொகைகளை கஜானாவில் செலுத்துவதற்கு வேண்டிய தகவல் கிடைக்கிறதில்லை. தண்டலும் ஒரேவிதமாக தயார்செய்யப்படுகிறதில்லை. வேண்டிய தகவலை எல்லாம் கிராம உத்தியோகஸ்தர்கள் தாக்கல் செய்யும்படி 31-A. நி. பாரத்தை அடியிற்கண்ட விதமாக திருத்தப்பட்டிருக்கிறது. இதில் தமிழிலிருக்கிற கலங்களை கிராம உத்தியோகஸ்தர்களும் இங்கிலீஷிலிருக்கிறவைகளை தாலூக்காவிலும் தாக்கல்செய்யவேண்டும். ஒவ்வொரு இருசால் நாமாவுக்கு இரண்டு நகல்கள் தயார்செய்து அனுப்ப வேண்டும் அதில் ஒன்றை தாலூகாவில் வைத்துக்கொண்டு மற்றொன்றில் சப்டிரஷெரி ஆபீசர் வரவுவைத்து கிராம உத்தியோகஸ்தர்களுக்கு வாப்ஸ்செய்யவேண்டும். இதில் 10, 11 இந்த கலங்கள் புதிதாக சேர்க்கப்பட்டிருக்கின்றன. அசலையும் வட்டியையும் தனியாக பிரித்து தாக்கல் செய்ய கிராம உத்தியோகஸ்தர்களுக்கு முடியாததாதையால் இந்த வேலையை தாலூக்கா கச்சேரியில் செய்யவேண்டும். தண்டலின் அசலிலும், நகலிலுமுள்ள 10, 11 இந்த கலங்களில் லோன்கிளர்க்கும் தாலூகா வட் அக்கவுண்டாண்டும் கையெழுத்து போடவேண்டும். கிராம உத்தியோகஸ்தர்கள் பைல் ஒன்று தயார்செய்து வைத்துக்கொண்டு தாலூக்காவிலிருந்து திரும்பிவரும் தண்டல் நகல்களை ஒட்டிவைத்திருந்து பார்வை யிடுவதற்காக கேழ்க்கும் போது ஆஜர்படுத்த வேண்டும்,

2. அச்சிடப்பட்ட பாரங்கள் கவர்ன்மெண்டு பிரசிலிருந்து வந்தவுடன் அனுப்பப்படும், அதுவரையில் கையெழுத்தில் தயார் செய்து அனுப்பவேண்டும்.

## III.

### செஸ்ஸுகள்.

19-ரெ. போர்டு உத்திரவின்படி பயிர்செய்யப்பட்ட பொதுதோப்புகளின்பேரில் லாண்டுசெஸ்ஸும் வில்லேஜ் செஸ்ஸும் விதிக்கப்படும். அப்படிப்பட்ட தோப்புகளை 2-ரெ, வி. கிராம கணக்கில் தாக்கல் செய்யவேணடும்.

## IV.

### போர்டு லாண்டு ரிவின்யூ உத்திரவும்

---

#### போர்டு நிலையான உத்திரவும்.

மறுபடியும் கைகொள்ளப்பட்ட கைருத்தி இனும்களின் திர்வையை, அந்த இனும் எந்த தருமத்திற்காக விடப்பட்டதோ அதற்காக அல்லது அதற்குபதிலாக வேறு தருமத்திற்கு உபயோகப்படுத்தும்படி லோக்கல் போர்டாருக்கு கொடுக்கப்படும் பட்சத்தில் அந்த நிலங்களின் பூரா செட்டில்மெண்டு திர்வையும் வசூலாகாவிட்டால் வசூலானதைமட்டும் லோக்கல் போர்டாருக்கு செலுத்தவேண்டுமே யொழிய பூரா செட்டில்மெண்டு திர்வையும் கொடுக்கவேண்டிய அவசியமில்லை திர்வையில் ஜோடியாக ஏற்பட்டிருக்கிற பாகத்தை கவர்ன்மெண்டாருக்கு வரவுவைக்கவேண்டுமே யொழிய லோக்கல்பண்டுக்கு செலுத்தவேண்டியதில்லை. ரையத்துவாரி டிமாண்டில் பூரா திர்வையையும் தாக்கல் செய்து வாஸ்தவியத்தில் வசூலாகும் தொகையில் ஜோடி ஏதேனுமிருந்தால் அதுபோக பாக்கி லோக்கல் போர்டுக்காக பேரீஜ் வஜாவைப்போல் கிராம கணக்குகளிலும் தாலூகா கணக்குகளிலும் தாக்கல் செய்யவேண்டும். அவ்விதமாக லோக்கல் போர்டுக்கு சேரவேண்டிய தொகைகள் கிராம 15 வது ரெ. இருசால் நாமாவில் ஒரு தனி தலைப்பினடியில் தாக்கல் செய்து அனுப்பவேண்டும். தாலூகா கஜானா கணக்குகளில் லோக்கல் போர்டு வரவாக தாக்கல் செய்யவேண்டும்.



## புகையிலைச் செடிகளில் விழும் பூச்சிகளுக்கு மருந்து.

---

**பிள்ளை பூச்சிகள்.**—இந்த பூச்சியை அப்புறப்படுத்துவதற்கு பலவிதமான சிகிச்சைகள் ஏற்பட்டிருக்கின்றன. ஆனல் அந்தந்த நிலத்தின் பாங்கையும் பூச்சிகளின் சுபாவத்தையும் கவனித்து அதற்கு தகுந்த சிகிச்சை செய்யவேண்டும். இராக்காலங்களில் வயல்களில் விளக்குவைத்து அந்த பூச்சிகளைப்பிடிக்கலாம் புகையிலை அல்லது இதர தகரங்களில் பிடிக்கலாம். தகரங்கள் கிடைக்காதபட்சத்தில் நீண்ட மூங்கில் குழாய்களின் அடியில் கொஞ்சம் ஜலம் விட்டு அவைகளின் நுனி தரைமட்டத்திற்கு சமமாக இருக்கும்படி புதைத்துவைத்தும் பிடிக்கலாம் ஒரு காலன் ஜலத்தில் ஒரு அவுன்ஸ் சவுக்காரக்கட்டியை கரைத்து அந்த ஜலத்தை செடிகளின் வேறுகளுக்கு விடுவதினல் அங்கேயிருக்கும்படியான பூச்சிகள் வெளியில் வந்துவிடும். அவைகளின் கூண்டுகள் தரையில் கிடைக்கும்பட்சத்தில் முட்டைகளை எடுத்து எறிந்துவிடலாம். இந்த சிகிச்சைகள் உலகத்தில் சில பாகங்களில் செய்யப்பட்டு வருகின்றன அந்தந்த இடத்திற்கு சவுகரியத்திற்கு தகுந்தபடி ஏதாவது ஒரு சிகிச்சை செய்யலாம்.

**கம்பிளி பூச்சிகள்.**—லண்டன் பர்பிள் என்று சொல்லப்பட்ட சிமை ஊதாவையாவது அல்லது பாஷாணத்தையாவது ஜலத்தில் கலந்து தெளிப்பதினல் நீங்கிவிடும். அச்வனி என்ற இலைகளில் படர்ந்திருக்கும் சிறு பூச்சிகளுக்கு கிரோஸின் எண்ணையை ஜலத்துடன் கலந்து தெளிக்கவேண்டும்.

### நோட்டீஸ்.

---

கிராம சிப்பந்திகள் கர்ணங்களுக்கு வேண்டிய உதவியை செய்கிறதில்லை என்று அடிக்கடி பிராது செய்வதினலும் கர்ணங்களுடைய வேலையானது நாளுக்குநாள் அதிகப்பட்டு வருகிறபடியினலும் ஒரேவெட்டி இருக்கிற கிராமங்களிலுள்ள வெட்டிகள், கிஸ்தியில்லாத மாதங்களில் கர்ணங்களுடைய உத்திரவின்படிக்கே வேலைபார்க்க வேண்டுமென்றும் கிஸ்திமாதங்களில் கர்ணங்களிடும் வேலைக்கு யாதொரு குந்தகமன்னியில் கிராம முனிசிப்புக்கு உதவிசெய்ய வேண்டுமென்றும்—ஒரு வெட்டிக்கு அதிகமான வெட்டிகளிருந்தால் கர்ணனுடைய வேலையை பார்ப்பதற்கு ஒரு வெட்டியை தனியாக விட்டு விடவேண்டும்.

கிராமத்திய வாரக நபர்களிர் வசூல் தண்டல்.

தாலூகா கெ.

குறிப்பு.-இதில் 7-வது முதல் 12-வது கலம் வரையில் கிராம உத்தியோகஸ்தகள் ஒன்றும் எழுதக் கூடாது: அவைகள் தாலூகாவில்பதியப்படும். மற்றகலங்களை கிராமஸ்தர்கள் தெளிவாயும்பூர்த்தியாயும் பதியவேண்டும். இதற்குஇரண்டுபிரதிகள் அனுப்பவேண்டும்.ஒன்றுகஜாஞ்ஜூஆபீசரின் ரசீதுடன்கிராமத்துக்கு வாப்சுசெய்யவேண்டும்

| கிராமத்தில் வசூல் செய்த தேதி. | வாரகதாரன் பெயர். | பணம் செலுத்தினவன் பெயர். | வாரக கேசின் நெம்பரும் வருஷமும். 3விழுக்காடு வட்டி நிலவிருத்தி க்கேசா. 4 ஷை ஷை 6¼ ஷை ஷை 5 ஷை ஷை 6¼ விழுக்காடு வட்டி விவசாய க்கேசா. 5 ஷை ஷை | எந்த பசலிக்காக செலுத்தவேண்டிய தேதி. | வசூலான தொகையின் மொத்தம். | To be filled in the Taluk Office. Apprtionment of the amount collected (col. 6) In-terest. | Penal interest. | Prin cipal. | Initials of the apportioning clerk. | Initials of the clerk who checked the apportionment. | Remarks. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| | | | | | | | | | | | |



# பொதுக்கடிதங்கள்

## ஓர் நன்கொடை.

நீன்னுடைய தருமகுணமுள்ள அனேகசெய்கைகளினல் நீனதயாளன் என்ற ஓர் உயர்குலவேந்தன் யிருந்தான். அவன் அரண்மனையில் வாரமொருமுறை ஏழைஜனங்களுடைய கஷ்டகங்களை விசாரித்து அவர்களுடைய ஆவசியகத்துக்கு தக்கபடி சகாயம்செய்து வரும்வழக்கத்தை வைத்திருக்குங்காலத்தில், ஒருநாள் வொரு ஏழைவிதவை 15-வயதுள்ள சவுந்திரவதியான தன் யேகபுத்ரியுடன் அரசன்கொலுமண்டபத்துக்கு வந்தாள். அந்த அநேகர் கூட்டநடுவில் அவளுடைய முறைவந்தபோது அவளுடையவும் அவள் குமாரத்தியினுடையவும் மரியாதையையும், கற்புத்தன்மையையும் அரசன் கண்டுக்கொண்டு தாராளமாய் தங்களுடைய குறைகளைச் சொல்லிக்கொள்ளும்படி தேருதலான வார்த்தைகளைச் சொன்னன். அவள் அதிகநாணத்துடன் கண்ணீர்சோர அடியில்கண்டபடி அரசனிடம் சொல்ல ஆரம்பித்தாள். கிருபாசமுத்திரனுகிய வேந்தனே நான் என்வீட்டுவாடகைக்கு 5 பொன் பாக்கிக்கொடுக்கவேண்டி யிருக்கிறது. என்நிர்பாக்கியமானது அதைச்செலுத்த யெனக்கு வேறுவழி யில்லாதிருக்கிறது. யிதுபரியந்தம் என் யேகபுத்திரியாகிய யிந்தப்பெண்ணை, நீதிவொழுக்கமான மார்க்கத்தில் படிப்பிவித்து வந்திருக்க, நான் குடியிருக்கும் வீட்டுக்குடையவன் யென் குமாரத்தியை சோரமார்க்கத்துக்கு கட்டாயப்படுத்தவேணுமாய் பயமுறுத்துகிருன். அது யென் நெஞ்சைப்பிளக்கிறது அவனுடைய வாடகை பாக்கியை யெங்கள் நாணய உழைப்பினல் நாங்கள் சம்பாதித்து அவனுக்குச் செலுத்துகிறபரியந்தம் யிந்தக்கொடியமனிதனுடைய துராகிருத்தத்திலிருந்து யெங்களைக் காப்பாற்றும்படி உத்திரவளிக்க வேண்டுகிறேனென்ருள். அவர்களுடைய மாசற்றகற்பு நிலைமையை அரசன்கண்டு ஆச்சரியப்பட்டு அதைரியப்படவேண்டாமென்றுசொல்லி, உடனே ஒருசீட்டு எழுதி அவள்கையில் கொடுத்து தன்காரியஸ்தனிடம் கொடுத்தால் ஐந்து பொன்கொடுப்பான் அதைவாங்கி வீட்டுவாடகையை செலுத்திவிடென்ருன் அதேபிரகாரம் காரியஸ்தனிடம்போய் சீட்டைக்கொடுத்தாள் அவன் அதைப்பார்த்து 50-பவுன் கொடுத்தான் அவளாச்சரியப்பட்டு யிதுதான் நாணயத்தைப்பரிசோதிப்பதற்குச் செய்த ஒருதந்திரமென்று பயந்து 5-பொன்னுக்குமேல் ஒருகாசுகூட வாங்கமாட்டேனென்ருள். அரசன்உத்திரவுபடி 50-பொன் கொடுத்திருப்பதாய்ச் சொன்னன். அவள் அப்ப

டி 50-பொன் வாங்க சம்மதப்படாததைக்கண்டு கடைசியாக காரியஸ்தன் தன் அரசன் சமுகத்துக்கு அவளையழைத்துப்போய் சங்கதிகளை விஸ்தாரமாய்ச்சொல்ல, அந்த உதாரகுணமுள்ள அரசன் யிதுகளை கேட்டு உண்மைதான் 50-பொன் என்று கைபிசகாய் யெழுதிவிட்டேன். சீட்டைத்திருத்திக் கொடுப்பதாய் மறுபடியும் சீட்டைவாங்கி அந்த ஏழையின் மனச்சுத்தத்துக்கும, வொழுக்கத்துக்கும் தகுந்தபிரதிபிரயோஜனத்துக்கு பாத்திரமுள்ளவளாயிருப்பதினால், உனக்கு 500 பொன் கொடுக்கும்படி உத்திரவுசெய்திருக்கிறேன். அதில் உன்னால் எவ்வளவு மீத்திவைக்கக்கூடுமோ அதை உன்மகள் கலியாணகாலத்தில் அதை சீதனமாக அவளுக்கு கொடுஎன்று உத்திரவளித்தான்.

## ஓர் விண்ணப்பம்.

நமது இங்கிலீஷ் கவர்ன்மெண்டார் பாஸ் பண்ணவர்களுக்கே வேலை கொடுக்கப்படும் என்று உத்திரவுபண்ணி யிருப்பது நலமாயினும், என் போலியவும் கொஞ்சம் படித்துவிட்டு அதற்குமேல் படிக்க சக்தியற்றவர்களாயும் பெரியகுடும்பத்தைக் காப்பாற்றவேண்டியவர்களாய், இருக்கும் சொல்ப சொத்தை விற்றுவிட்டு பிறகு கதியில்லாமல் தன்னை நம்பியிருக்கும் குடும்பத்தை தெருவில் விட்டு பிறகு தாங்களும் பசியால்வருந்தி சாகிறார்கள். இதனால் நேரும் இகழ்ச்சி இவ்வளவென எழுதிமுடியாது. ஆகையால் நம்முடைய வைஸிராயாகிய கர்ஸான் பிரபு அவர்கள் தம்காலத்துக்குள்ளாகவே இதற்குத்தகுந்த ஏற்பாடுசெய்துவிட்டுப் போவார்களென்று எதிர்பார்க்கப்படுகிறது. இதனைக்கண்ணுற்றோர் ஆங்கிலேயபத்திரிகைகளிலும் பிரசுரிக்கக்கேட்டுக் கொள்ளப்படுகிறது.

ஈஜிப்டு தேசத்தரசனாகிய செசோஸ்ட்டிரிஸ் யென்பவர்தான் சிறையில்வைத்திருந்த 4 அரசர்களைத்தன் இரதத்தை யிழுக்கும்படி செய்தார். அந்த நாலுபேரில் ஒருவரசர் சதா அந்த இரதத்தின் சகாயத்தைப்பார்த்த வண்ணமாயிருந்ததை ஈஜிப்ட்டு அரசர் கருத்தாய்ப் பார்த்து அப்படிப்பார்ப்பதற்கு காரணமென்ன வென்று கேழ்க்க அவ்வரசன் அய்யா சக்கரம்சுற்றுவதை நான் அடிக்கடி பார்க்குமிடத்து யிப்போது கீழாயிருக்கும் பாகம் தக்ஷணம் மேலாவதையும், மேலாயிருக்கும் பாகம் உடனே கீழாவதையும் நம்முடைய செல்வம் நிலையாமையென்பதற்கு அரிகுறியாயிருக்கிறதென்றான். ஈஜிப்ட்டு அரசர் அதிககருத்துள்ளவனானபடியால் அந்தச்சொல்லை தீர்மாக்கமாய் யோசித்து உடனே அந்த 4 அரசர்களையும் விடுதலைசெய்து விட்டார்.



# விவசாயவிளக்கம்.

“உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாந்
தொழுதுண்டு பின்செல்பவர்.”

விவசாயவிளக்கமென்பது விவசாய நடவடிக்கைகளையும் அவைகளின் காரணங்களையும் விவரித்துத்தெரிவிக்கும் நூல். விவசாயத்தின் பெருமையைப்பற்றி நமது நாடறிந்த நீதிபோதகராகிய ஔவை என்னும் அபிளையும்,

“தொழுதூண் சுவையின் உழுதூணினிது” என்றும் “சீரைத்தேடின் ஏரைத்தேடு” என்றும் “மேழிச்செல்வம் கோழைப்படாது” என்றும் சிறப்பித்துப்பாடி யிருக்கின்றாள். வேளாண்மை மனிதனுடைய கேவல அபிவிர்த்திக்கும் நாகரீகத்துக்கும் மாத்திரமே யல்ல, அவன் உலகில் உயிருடன் இருப்பதற்கும், அவனுயிருக்கு இன்றியமையா மனைவி மக்களாதி குடும்பத்தார் கூடிவாழ்வதற்கும் இன்றியமையாததாக இருப்பதால், இந்தச்சிறந்தத் தொழில் மானிடன் விசேஷ அறிவின்றி மிருகத்தன்மையாய் இருந்தகாலத்தில் கண்டுபிடித்து அப்பியசித்ததாகவும் மற்றெல்லாத்தொழில்களுக்கும் முதன்மையானதாகவும் இருப்பதனால்தான் இதைச்சிருஷ்டிகாலத்திலேயே கடவுளால் மனுஷனுக்குக் காட்டப்பட்டதென்று அநேகபுராணாதிகளில் சொல்லப்பட்டிருக்கின்றது.

## தண்ணீர்-ஜலம்.

“எருவும் தண்ணீரு உண்டானால், எந்தநிலமும் விளையும்” என்று சொன்னபழமொழியின்படி இரண்டாவதாகிய தண்ணீர் அல்லது ஜலத்தைப்பற்றிச் சொல்வோம். “நீரேபிராணாதாரம்” என்றபடி தண்ணீரானது சகலப்பிராணிகளுக்கும் பிராணாதாரமானதாக இருப்பதைப்போலவே, பயிர்களுடைய விளைவுக்கும் இன்றியமையாத பேறாக இருக்கின்றது. முக்கியமாக தண்ணீர் பயிருக்கு மூன்று (வெவ்வேறு) விதங்களில் உபயோகப்படுகிறது. எப்படியெனில் :—(1) தண்ணீர் தானாகவே பயிர்விளைவிக்கிறது (2) பயிருக்குவேண்டிய உணவுகளில் சிலமுற்றும் கரையாமல் வண்டல்போலத் தண்ணீரில் கலந்திருக்கும்; சிலதண்ணீரோடு தண்ணீராய்க் கரைந்துபோம்; இப்படிப்பட்ட உணவுகளைத் தண்ணீரா

னது கரைத்துப்பயிர்களுக்கு ஊட்டும். (3) முன் மண்ணில் கரையாதிருக்கும் பயிருக்குவேண்டிய உணவு (சத்து) களை கரைத்துவிடும். ஆக இந்த மூன்றுவகையாக பயிருக்கு உபயோகப்பட்டாலும், 2-வது வகை உபயோகமே சிரேஷ்டமானதென இரசாயன சாஸ்திரிகள் எண்ணுகிறார்கள். தண்ணீரில் பயிருக்குவேண்டிய உணவுகள் உண்டு. அவ்வுணவுகளுள்ள நீர்பாயும் நிலத்துக்கு எருவில்லாமலே பலனைத்தரும் பயிருணவிற்குவேண்டிய சத்துகள் அணு ரூபங்களாய் ஜலத்தில் கலந்திருப்பதைக்காணலாம். அதில் கலந்துநிற்கும் அணுக்கள் எல்லாம். அடியிற்படிந்தால் ஜலம் பளிங்குபோல துலங்கும், தண்ணீரில் ஆற்றுநீர் சிரேஷ்டமானது, ஏனெனில் பர்வதபிரதேசங்களிலும், மேட்டாந்தரைகளிலும் பெய்யும் மழையானது ஆங்காங்குள்ள தாதுமூல இந்திரவஸ்துக்களுடன் பயிர் வுணவுக்கேற்ற பொருள்களோடு கரைந்துக்கொண்டுவந்து பாய்வதினால், அவ்வஸ்துக்கள் வண்டலாகப்படிந்து, பூமியைச்செழிப்பிக்கும்.

## கிணற்று நீர்.

ஜலத்தில் (பொட்டாஷ்) முதலான சத்துக்கள் கலந்திருப்பதனால் சிலவிடங்களின் ஜலம் உப்பாக விருக்கும். பயிர்களுக்கு விடும்ஜலம் கடும் வெய்யிலான மத்தியானகாலத்தைவிட காலைப்பொழுதும், மாலைப்பொழுதும் பாய்ச்சுவதில் பயிருக்கு மெத்தநன்மை செய்யும். வாயுப்பொருள் தவிர வேறுபொருள் சேர்ந்திராத ஜலத்தைப்பயிருக்குப் பாய்ச்சினால் அந்நிலத்தில் முன்னிருந்த பயிருணவையும் கரைத்து நிலத்தைக்கெடுத்துவிடும்; ஆகவே மழைநீரை விசேஷமானதாக நம்நாட்டுக் குடிகள் கொண்டாடுவதில்லை. காலமழைகள் மோசம்செய்யும்காலத்தில், பெரும்பாகமான நதிகளிலும், ஏரி அல்லது குளங்களிலும் போதுமான ஜலம் அகப்படாமையாலும்; சிலகுடியானவர்கள் ஜலத்தைத்தக்கபடி சிக்கனமாக உபயோகப்படுத்தும் விதமறியாமல் வீணாக்கிவருவதாலும்; அநேகர் அதிக தண்ணீரைக்கேட்கும் நெற்பயிரை விளைவிப்பதைவிட்டு, தந்தம் நிலங்களில் கிணறுகளைவெட்டி அந்தத்தண்ணிரைக்கொண்டு தோட்டப்பயிர்களை விளைவித்துவருகிறார்கள். இத்தேசத்தில் கிணறுவெட்டுவதற்கு ஜோதிஷம் பாப்பதுவழக்கம். இது குருடன் குருடனைவழிகேட்பதுபோல் இருக்கிறது ஏனெனில் தற்காலத்தில் உண்மை அறிந்து சத்தியமாய் ஜனங்களுக்குப் புத்தியூட்டும் ஜோதிஷரும் பிராமணரும் கிடையாது. பொய்ஜோதிஷம் சொல்லி வயறுவளர்க்கும்பொருட்டு பணம்பிடுங்கும் மோசக்காரரை இதுவிஷயமாய் நம்பிக்கெட்ட குடிகள் அநேகம்பெயர். ஆனால் ஜோராப்பாகண்டத்தார் ஓர் இடத்தில் ஜலம் உண்டாகுமா இல்லையா என்

கிணறு எடுத்தல்.



பதை அறிவதற்கு ஆகர் (auger) என்னும் ஓர்கட்டப்பாரை திருகுக்குழாயை வைத்திருக்கிறார்கள். இந்தக்குழாயினடியில் நேர்த்தியான எஃகினால் செய்ததிருகு அமைக்கப்பட்டிருக்கிறது. இவ்வாயுதத்தை யாதாமொரு இடத்தில் ஆழமாய்ப்போகவிட்டுப் பார்த்தால் மண்ணுக்குள்ளிருக்கும் அங்கங்கள் "உள்ளங்கை நெல்லிக்கனி" போல் தெரிகின்றன. ஜலம் எவ்வளவு ஆழத்தில் இருக்கிறது. என்பதையும் நல்லஜலம் உப்புஜலம் என்பதையும் இவ்வளவு ஆழத்தில் பாராங்கல் முதலியவை இருக்கின்றன என்பதையும் தெரிவிக்கிறது. சாதாரணமாய் சுக்கான் பிராச்சிக்கல் வெங்கச்சங்கல் அபிரகக்கல் இவைகளிருந்தால் ஜலம் ஆழத்திலிருக்கும். கருப்புக்களிமண் இருக்கும் இடங்களில் உப்புஜலம் கிடைக்கும்' பாராங்கல் சிட்டக்கல் இருந்தால் பீரங்கிமருந்து, டைனமைட் (Dynamiet) என்னு மருந்தையும் உபயோகித்தால் ஜலம் சமுர்த்தியாய் ஊறுவதில்லை. சில கிணறுகளில் இக்குழிவழியில் ஜலம்பொங்கி கிணற்றில்வற்றாமலிருக்கும், மழைகாலத்தில் இக்குழிகள் மண்ணால் தூந்துபோகின்றன. ஒருமூங்கிலால் அக்குழியில்குத்த மண்ணை அலசிக்கொண்டு ஜலம் பொங்கிவரும். செம்பூரான் கல்லில் உள்ளஜலம் தேகத்துக்கு சௌக்கியம். சுக்கான்ஜலம் குடித்தால் நீர்சுருக்கு உண்டாகும். அதில் தோல் சாமான் நெடுநாள் இராது, அபிரக ஜலம்வெகுசூடு, அதில் குளித்தாலும் தேகம்கறுத்துப்போகும். இதுவரையில் தண்ணீரினால் பயிருக்குண்டாகும் நன்மையையும் கிணறெடுக்கும் விதத்தையும்பற்றி ச்சொன்னோம். இனி அதை இறைக்கும் சாதனங்களைப்பற்றி சங்கிரகமாகச்சொல்லுவோம்.

## தோல்பறி-கபிலை.

கிணற்றிலிருக்கும் தண்ணீரை மேலுக்கு இழுத்து இறைக்க நானாதேசங்களில் நாலாவகை சாதனங்கள் ஏற்பட்டிருக்கினும், இத்தென்தேசத்தில் தொன்றுதொட்டு சாதாரணமாக வழங்கிவரும் தோல்பறி என்னும் கபிலையே, இச்சுலப சாதனத்தை எந்த மஹானுபாவன் எந்தக்காலத்தில் ஏற்படுத்தினானோ தெரியவில்லை. இதைவிட ஏழைக்குடிகளுக்கு சுலபமான சாதனம் இதுவரையில் வேறு கண்டுபிடிக்கக்காணோம். இந்தப்பறியில் 4-5-6 அடிகள் உயரம் வரையிலுண்டு. இந்தப்பறிக்கு உபயோகம்படுத்தும் தோலை, சக்கிலியர்களிடம் வாங்குவதைப் பார்க்கிலும் தக்கபடி பதமிடும் தோல் கிடங்குகளில் வாங்கினால் தாராளமாக இருவருஷம் கிழியாமலிருக்கும். ஆறடிபறியில் சுமார் 40 காலன் ஜலம் வரும்,

கிணற்றின் ஆழம் 15 அடிகளுக்குமேற்பட்டால் அத்தோல்பறி சிறந்தசாதனம். 20 அடி ஆழமுள்ள கிணற்றில் ஒரு விநாடிக்கு 30 காலன் ஜலத்தை எழுப்பலாம். ஆகவே ஒன்பதுமணி காலம் வேலை செய்யும் ஒரு திணற்றில் 20-அடி ஆழமுள்ள கிணற்றில் சுமார் 16,200 காலன் ஜலத்தை எழுப்பலாம். இப்படி எழுப்பும் பக்ஷத்தில் ½ தினத்தில் ஒரு ஏகர் நிலத்துக்கு தண்ணீர் பாயும்.

## இரட்டைப்பறி.

இதில் ஒருஜதை மாடு அல்லது ஒற்றை மாட்டில் இரண்டு பறிகள் ஜலம் வரும்படி செய்த சாதனம் நல்லதாகவிருந்தும் இதைத்தக்கப்படி அமைக்கும் சக்தி இந்நாட்டாருக்கு இல்லாமையால் பெரும்பாலும் எடுபட்டுப்போய்விட்டது.

## ஆள்ஏற்றம் முதலியன.

நீர் இறைப்பதே வெகு கஷ்டமானவேலை. அதைக் குடித்தனக்காரர் இன்னம் கஷ்டமாக்கிக் கொள்ளுகிறார்கள். அதெப்படியெனில் துலாவின் கதிரும், கூத்துக்காலும், மரமாய் இருப்பதினால் இறைக்கும்பொழுது இவ்விரண்டும் உராய்ந்து கஷ்டம் கொடுக்கிறது. ஒருவண்டியில் மரயிருசு பூட்டிக் குடத்துஉள்வாயில் இரும்பு தைக்காமல் மாடுகட்டி இழுத்தால் அதிக கஷ்டமல்லவா. ஆகையால் இதற்கு இருசு முதலானதுகளை இரும்பினால் செய்து பின்பக்கத்தில் கணக்காசாரப்படி கனத்தைச் சரிப்படுத்தினால் இரண்டு மூன்று ஆள்கள் மேலும் கீழும் போய்வராமல் ஒரே ஆளினால் தண்ணீரை 10 அல்லது 12 அடி ஆழமுள்ள கிணறுகளிலிருந்து எழுப்பலாம். 12 அடி ஆழமுள்ள கிணற்றில் விநாடி ஒன்றுக்கு 6 காலன் நிறையுள்ள தண்ணீரை மூன்றுமனிதரால் எழுப்பலாம். இந்தக்கணக்கின்படி ஒரு ஏகர் நிலத்துக்கு ஒரு அங்குல அளவு தண்ணீர் பாய இரண்டு நாளாகும். ஆற்றுநீர் நிலத்தில் அமோகமாய் பாய்வதினால் நெல், வாழை, தென்னை, பாக்கு முதலான ஜலத்தின் உதவினாலேயே வளரும் பயிர்களுக்கு அதிக உபயோகமானது. மேலும் ஆற்று நீரில் வண்டல் அதிகமாக வருவதால் அதன் பாய்ச்சல் நிலங்களுக்கு எரு அதிகமாக வேண்டுவதில்லை. குளத்து நீரானது குளத்தில் சிலகாலம் தங்கி மதகின் வழியாக வருவதால் விசேஷமான வண்டல்பாகம் குளத்திலேயே தங்கிவிடுகிறது. கிணற்று நீரில் வண்டலும் வராது; களையுண்டாகும் விதைகளும் வராமல் அந்தந்தமண் கண்டத்தின் சாரத்தையொட்டிய தா



துப்பொருள்களை மாத்திரம் ஊட்டி பயிர்களைத் தூண்டுவதினால், அந்த நிலத்தின் ஒரு சத்தை நஷ்டப்படுத்தாது. ஆகவே, ஆற்றுப்பாய்ச்சல் நிலத்துக்குக் கொஞ்சமாயும், குளத்துப் பாய்ச்சல் நடுத்தரமாயும், கிணற்றுப்பாய்ச்சல் நிலத்துக்கு அதிகமாயும் எருவிடவேண்டும். தென்னிந்தியாவாகிய நமது சென்னை இராஜதானியிலுள்ள தோட்டநிலங்களுக்கு ஏக்ரா ஒன்றுக்கு அதாவது 70 கஜஅகலம் 70 கஜநீளமுமுடைய அதாவது 4840 சதுரகஜமுள்ள நிலத்துக்கு, வாரம் ஒன்றுக்கு உஷ்ணகாலத்தில் 50 டன் ஜலம். அதாவது பூமிக்குமேல் அரைஅங்குல ஜலமிருந்தால் போதுமென்று கிருஷி சாஸ்திரிகள் சொல்லுகிறார்கள். ஒருடன் ஜலம் 369 கனகஜம். அதாவது ஒருடன் ஜலம் 224 காலனானால், 50 டன்னுக்கு 11,200 காலன் ஜலம் போதுமானதாம். கடைசியாக எந்தெந்த பயிர்களுக்கு எவ்வெவ்வளவு ஜலம் வேண்டுமென்ற சங்கதி நமது குடியானவர்கள் சிலருக்கு செம்மையாகத் தெரிந்த விஷயமாகையால் தண்ணீரை அதிகமாக நஷ்டப்படுத்தாமல் பாதுகாப்பது நலம். இதுவரையில் தண்ணீரின் நன்மையையும்; அளவையும், இறைக்கும் சாதனங்களைப்பற்றிச் சொன்னோம்.

(இன்னும் வரும்.)

# NEWS and NOTES.

## தப்புநாயணம் செய்தல்.

ஒருஸ்பானியார்டும் (Spaniard) ஒரு ஸ்விஸ்-ம் (Swiss) சேர்ந்து தப்புநாயணங்கள் செய்ததாய்ப் போலீசுக் கோர்ட்டில் குற்றஞ்சாட்டப்பட்டார்கள். இவ்விருவர்களும் கொழும்புவிலிருந்து கொஞ்சநாள் முன்னால்தான் பம்பாயிக்கு வந்தார்கள். இப்படி இவ்விருவர்களையும் போலீசார் குற்றஞ்சாட்டுமுன் இவர்களைப்பற்றிக் கொஞ்சம் சங்கதிகள் வெளிவந்தன. அப்பொழுது முதல்போலீசார் அவர்கள்மேல் ஒருகண்ணாகவேயிருந்தார்கள். இவர்களைக் குற்றஞ்சாட்டினது போனசனிக்கிழமை அதற்கு முதல்நாள் போலீசு இன்ஸ்பெக்டர் அவர்கள் இருந்த அறைக்குப் பக்கத்தில் ஒரு அறைவாடகைக்கு வாங்கிக்கொண்டு அந்த அறைக்கும் தன் அறைக்கும் இருந்த சுவரில் ஒரு ஓட்டைவழியாய் இவர்கள் செய்வதையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்தார். அப்பொழுது அவர்கள் ரூபாய் நாணயங்கள் அச்சடித்துக்கொண்டிருந்தார்கள். உடனே போலீசார்ப் பலபேர்கள் சேர்ந்து அவர்களைக் கைப்பிடியாய்ப் பிடித்தார்கள். இவர்கள் கேஸ்விசாரணையாய்க்கொண்டிருக்கிறது.

## வட இந்தியாவில் கயா ஜில்லாவில் ஒரு குழந்தை வாலுடன் பிறந்தது.

இந்தக் குழந்தைக்குப் பின்னால் வால்போல் ஒன்று இருந்தது; சுமார் 3½ அங்குலம் நீளமிருக்கும். முதுகு எலும்பு மனுஷர்களுக்குச் சாதாரணமாய் இருப்பதுபோலத்தான் இருந்தது. முதுகெலும்பின் நுனிக்கு அடியில் முண்டுபோல ஒன்று இருந்தது. முண்டிலிருந்து வால்போல் ஒன்று வெளியில் நீண்டிருந்தது. அந்த வாலில் தேகத்தில் மற்ற இடங்கள் போல தோல்மூடியிருந்தது. இந்தவால் கொஞ்சம் கொஞ்சம் அசைந்துக் கொண்டிருந்தது; குழந்தை பால்குடிக்கும்போது அது ஆடுவதுண்டு இந்த வாலில் எலும்புகிடையாது; வெறுஞ்சதையாய் இருந்தது. இழுத்தால் நீண்டது; மறுபடியும் சுருங்கிப்போயிற்று. இந்த வாலுக்கு இடப்புறமாயும் வலதுகால் பின்புறமாயும் புண்ணிருப்பதுபோலக் காணப்பட்டது. ஆனால் மற்றப்பாகத்தில் அந்தக்குழந்தைக்கு யாதொரு புண்ணுங் கிடையாது. இந்தக்குழந்தை பிறந்தவுடன் அதை அறுத்துவிடுவதாக இந்தகுழந்தையின் தாய்தகப்பனாருக்கு பலபேர்சொன்னார்கள்; அவர்கள் அதற்கு ஒப்புக்கொள்ளவில்லை. வெகுவாய் அந்தக்குழந்தைக்கு வால் இருப்பதால் அவர் ஏதாவது கொஞ்சம் துட்டு சம்பாதிக்கலாமென்று கருதியிருக்கலாம்.

## ரெயில்வண்டி தீப்பிடித்துக்கொண்டது.

லண்டன்:—பாரிஸ் நகரத்திலே அநேகம் ஜனங்களை ஏற்றிக்கொண்டு தரைக்கீழேசென்ற ரெயில்வண்டி நேற்றுச்சாயந்திரம் தீப்பற்றிக் கொண்டது. நாற்பத்தெட்டுபேர்கள் மாத்திரம் உயிருடன் ஸ்டேஷன் போய்ச்சேர்ந்தார்கள். நிலவறையெங்கும் புகைபலமாய் மண்டியிருந்தபடியால் சுமார் நான்குமணிநேரம் வண்டித்தொடருக்குச் சமீபமாய்ப் போக முடியவில்லை. இன்றுகாலை பதினொரு பிரேதங்கள் வெளியே யெடுக்கப்பட்டன. வண்டிகள் முழுவதும் பிரேதங்கள் நிறைந்திருப்பதாக ரெயிலில் கரிபோடுகிறவர்கள் (Firemen) கூறுகிறார்கள்.

---

கல்யாணமின்றி காலங்கழித்த சுமார் 62-வயதுள்ள ஓர் துரைசானி 91-வயதுள்ள வாலிபகிழத்தை விவாகம்செய்துக் கொண்டனளாம். இஃது விந்தையினும் விந்தையே!



**வியாபாரிக்கு ராஜா வேண்டுமா:**—கல்கட்டா வியாபாரிகளுள் பாரி வர்த்தகர்கள் ஞாயிற்றுக்கிழமை தினம் கடைகளை சாத்திப்போட்டு வியாபாரமே செய்யக் கூடாதென்கிறார்களாம். சொற்ப காலக்ஷேபஞ் செய்யும் சில்லறை வியாபாரிகள், ஞாயிற்றுக்கிழமை தான் நல்ல வியாபாரம் நடக்கும், அன்று கடைகளைச் சாத்தக்கூடாதென்கிறார்களாம். உத்தியோகஸ்தர்களுக்கு ஞாயிற்றுக்கிழமை தோறும் ஒழிவுதினமாதலால் அன்று தான் அதிக வியாபாரங்கள் நடக்கக்கூடுமென சில்லரை வியாபாரிகள் ஆட்சேபனை கூறுவது சரியென்றே எண்ணுகிறோம்.

---

அல்ஜீரியவிலுள்ள பூஜி என்கிற பட்டணத்தில் ஒரு சூறைகாற்று அடித்து சிறிது நேரத்திற்குள் மிகப்பருமனுள்ள அநேகமாயிரம் எலிகள் பெருமழையைப்போல ஆகாயத்தினின்றும் விழுந்தனவாம். இஃதும் ஓர் கலிகாலவிந்தையே!

**ஒரு ரெயில்வே ஸ்டேஷன் மாஸ்டர் தண்டனை அடைந்தது:**—மதராஸ் ரெயில்வே வடகிழக்கு லயனில் தென்னலி என்ற ஸ்டேஷனிருக்கிறது. அந்த ஸ்டேஷனிலிருந்து நெல்தானியம் விசேஷமாய் செகந்தராப்பாக்கம் முதலிய ஊர்களுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு அவ்விடமிருந்து மணமூட்டைகள் பார்சல் மூலமாய் இந்த ஸ்டேஷனுக்கு அனுப்பப்படுகிறது சுபாவமாயிருக்கிறது. சென்ற மே௴ 21௳ மூவாயிரம் ரூபாய் கொண்ட ஒருபார்சல் இந்த ஸ்டேஷனிலுள்ள ஒருவர்த்தகனுக்கு வந்து அதன் ரசீதை அம்மனிதன் ஸ்டேஷன் மாஸ்டரிடம் கொண்டுவந்து கொடுத்து தன்னுடைய பார்சலைக் கேழ்க்கவே கிருஷ்ண ஐயங்கார் என்னும் ஸ்டேஷன் மாஸ்டர் இந்த வர்த்தகனை மோசஞ்செய்யவெண்ணங்கொண்டவனாய் இம்மனிதனுக்கு இங்கிலீஷ படிக்கதெரியாதபடியினால் தனக்கு அனுகூலமாய் அம்மனிதனுடைய கையெழுத்தை பார்சல் புத்தகத்தில் பதிவுசெய்வித்துக்கொண்டு பார்சலுக்காக மறுநாள் வரும்படி அனுப்பிவிட்டார். அப்படியே அந்த வர்த்தகன் மறுநாள்வந்து தன் பார்சலைக் கேழ்க்கும்பொழுது பார்சலை முந்தியே கொடுத்தாய்விட்டதென்றும் அப்படி பெற்றுக்கொண்டதாக கையெழுத்துப் போட்டுவிட்டானென்றும் சொல்லிவிட்டார். இதைப்பற்றி புகார் கிளம்பவே ரெயில்வே போலீஸ் இன்ஸ்பெக்டர் மிஸ்டர் பாபாராவ் நாயுடு இக்கேசை கண்டுபிடித்து 1,700 ரூ. ஸ்டேஷனுக்கருகில் ஒருபாழுங்கிணற்றிலும், 400 ரூ. கம்பனி ரொக்கத்தில் அதிகமாயிருக்கவும் கண்டுபிடித்து ஐயங்காரை அம்பலத்

துக்கு கொண்டுவந்து குண்டூர் ஜாயிண்டு மாஜிஸ்டிரேட்டு முன்னிலையில் விசாரணை நடந்தேறியது. குற்றவாளிக்கு ஒருவருஷ கடினகாவலும், 3,000 ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது.

**உத்திரவாயிருக்கிறது:**—உதக மண்டத்திலிருக்கும் கவர்ன்மெண்டு ஹவுஸுக்கு மின்சாரவிளக்குகள் போட ரூ. 36,000 உத்தரவாயிருக்கிறதாகத் தெரியவருகிறது. அவ்வூரில் கவர்னர் 6-மாதகாலந்தான் தங்குகிறாராதலால், கவர்ன்மெண்டு ஹவுஸுக்கு மின்சார விளக்குகள் போடுவதை வீண் செலவு என்று கருதவேண்டும்.

**ஏழலட்சம் எலிகள் கொல்லப்பட்டன:**—எலிகளுக்கும் விஷசுரத்திக்கும் ஏதோ ஒருவித நெருங்கிய சம்பந்த மிருப்பதாகவும், அந்நோய் அவைகளால் பரவுவதாகவும் நினைக்கப்படுகிறதன்றோ? இதுவரை பம்பாய் முனிசிபாலிடியார் விஷசுரம் பரவாதிருக்க வேண்டுமென்ற நோக்கங்கொண்டு 7லட்சம் எலிகளைக் கொன்றிருக்கிறார்களாம்.

**யானைவழக்கு:**—சிலோனிலுள்ள திருங்கோமலி ஜில்லா கோர்ட்டில் இரண்டு யானை வியாபாரிகளுடைய வழக்கு விசாரணைக்கு வந்தது வாதி தக்க ஆட்களைக்கொண்டு பிடித்த யானையை பிரதிவாதி பிடித்துக்கட்டிக் கொண்டு வம்புசெய்வதாக சொன்னானாம். வாதி உடனே கோர்ட்டில் வழக்கிட, பிரதிவாதி யானையினுடைய கிரயம் ரூபா 850-ம், நஷ்ட ஈடு ரூபா 150-ம் கொடுக்கவேண்டுமென்று தீர்ப்பு சொல்லப்பட்டது.

**ஜெயிலிலிருந்து தப்பித்துக் கொண்டார்கள்:**—சிலோனில் சிலநாட்களுக்குமுன்னே 75-கைதிகள் ஒரு ஜெயிலைவிட்டுத் தப்பித்துக்கொண்டு ஓடிப்போய்விட்டார்கள். இன்னும் அகப்படாதிரியும் 4-பேரையும் பிடித்துக் கொடுப்போருக்கு ரூபா 30-இனும் கொடுக்கப்படுமென்று விளம்பரம் போட்டிருக்கிறது, ஏககாலத்தில் 75-கைதிகள் தப்பித்து ஓடுகிறவரையில் ஜெயிலில் காவலாளிகள் என்ன செய்தார்களோ அறிகிறோம் இதைப்பற்றி மேல் அதிகாரிகள் தீரவிசாரிக்கவேண்டும்.

**காணியாசை கோடிகேடு:**—கொழும்பில் அப்துல் காபூர் என்ற நகை வியாபாரி ஒருவர் தமக்கு பம்பாயிலிருந்துவந்த வெள்ளிச் சாமான்களடங்கிய மூட்டையின் விலையைக் குறைத்து சொன்னதற்காகக்கடற்சுங்க அதிகாரியால் ரூபா 100 அபராதம் விதிக்கப்பட்டார். அன்றியும் அச்சாமான்களின் உண்மையான விலைமதிப்பின்மேல் எவ்வளவு கடற்சுங்கம் கொடுக்கவேண்டுமோ அவ்வளவையும் கட்டும்படியும் ஆயிற்று.

உ

கணபதேநம:


# THE VILLAGE OFFICERS' GAZETTE.

## கிராம உத்தியோகஸ்தர் கெஜட்டு.

மதராஸ் கவர்னமெண்டு தமிழ் ஜில்லாக்களிலுள்ள
ஜமீன் மிட்டா சுரோத்திரியம் தாரர்களின் நன்மைக்காகவும்,
கிராமாதிகாரிகளின் சீர்திருத்தத்திற்காகவும்
மாதாந்தரம் வெளியிடப்படும்

புக். I.] மதராஸ், 1903 வரு செப்டம்பர் 15வ. [நெ. 4.


## இந்தியாவின் பூர்வநிலைமை ஜமீன், மிட்டா, சுரோத்திரியங்களின் வரலாறு.

ஹிமசேது பரியந்தமாக விசாலித்த நம்முடைய இந்தியா தேசமானது பூர்வத்திலே மநுமாந்தாதாதிகளாலும், மகத்தான ஷட்சக்கிரவர்த்திகளாலும் மகாராஜாக்களாலும், ஆளப்பட்டுவந்து கடைசியாகச் சந்திரவம்சத்தரசர்களில் சாரங்கதரனால் ஆளப்பட்டு பிறகு விக்கிரமாதித்தனும் சாலிவாகனனும் ராஜ்யபாரம்செய்து முடியவும் அதன்பிறகு மொகலாயர்கள் வசமாய் வெகுநாள் அந்தவம்சத்துச் சக்கிரவர்த்திகளாண்டுவந்ததாகச் சரித்திர பூர்வமாய்த் தெரியவருகிறது. இப்படியாண்டுவந்த மொகலாயச்சக்கிரவர்த்திகளிலே இளஞ்சிங்கம்போல விளங்கி எட்டுத்திக்கும் பதினாறுகோணமு மெங்கும் தன்னாணையைச் செலுத்தி பிரக்கியாதிகொண்ட மகா பராக்கிரமசாலியாகிய அக்பர் பாதுஷா

காலத்திலே தான் தம்முடை அரசிறை நிர்வாக மந்திரியாகிய டோடர் மாலி என்னு மகாபுருஷனால் நிலங்களை நன்றாய்ப்பரிசோதித்து அவைகளின் திறம்கண்டு மூன்றுவகுப்பாக்கி முதல்தர நிலங்களுக்கு இன்னதீர்வையென்றும் இரண்டாந்தர நிலங்களுக்கு இன்ன தீர்வையென்றும் அளவேர்படுத்தினர் இப்படிச் சக்கிரவர்த்தியின் சுவாதீனமான இவ்வேராளமான நிலங்களின் தீர்வைகளை வசூல்செய்யும்படி தம்முடைய பிரதிநிதிபாகத்தக்கவர்களை அங்கங்கே பிரிவுபட்ட பலபாகங்களுக்கும் தலைமையாக ஏற்படுத்தி அவர்கள்மூலமாய்சக்கிரவர்த்திக்குச்சேரவேண்டிய தீர்வைகளெல்லாம் வசூலாய்வந்தது, இப்படி அங்கங்கே தலைமையரகஏற்பட்டு சக்கிரவர்த்தியின் கார்பாரிகளாக வேலைபார்த்து வந்தவர்கள் தங்கள் தங்கள் வளப்பங்களிலே யுள்ள தங்களுக் கடங்கியிருந்த குடிகளால் மதிப்புண்டாகவும் சக்கிரவர்த்தியால் சன்மானிக்கப்படவும் சகல சம்பத்து மடைந்தவர்களாய் தங்களில் ஒவ்வொருவரும் ஒரு சிற்றரசாக விளங்கினர். நாளேறிவாவும் இவர்களில் சிலர் சக்கிரவர்த்தியின் அதிகாரத்தின்கீழ் முன்னிருந்தபடித்தரத்தைவிட கொஞ்சமதிகமாகத் தங்களந்தஸ்தை யுயர்த்திகாட்டி கடைசியாக மேலுக்குமாத்திரம் சக்கிரவர்த்தியின் பிரதிநிதியாகவிருந்தாலும் உண்மையிலே தாங்கள் சுய அரசாக்ஷியை வகித்தவர்கள்போல விளங்கினார்கள். இவர்களில் கொஞ்சமான பிரதேசங்களை யுடையவர்களா யிருந்தவர்களெல்லாம் அவர்களுக்குத்தக்கபடி ஜமீன்தார் முதலானபட்டங்களை வகித்து விளங்கினார்கள், இப்படி அந்த மொகலாய ராஜ்யம் அக்பர் பாஷாகாலத்திலே அதியுன்னத திசையிலிருந்து அவருக்குப்பின்வந்தவர்களால் கொஞ்சங் கொஞ்சமாய்க் குறுகுதலுடற்றுக் கடைசியாக இந்த ராச்சியமானது அவர்களதிகாரத்தினின்றுநீங்கி அகண்ட சாம்பிராச்சிய பூஜிதையையுடைய ஆங்கிலேயர் அரசாக்ஷியிலமர்ந்து ஆனந்தமுற்றிருக்கிறது. இப்படி இந்திய ராச்சியமானது இங்கிலீஷ் அரசாக்ஷியில் விருத்தியடைந்து வரும்போது கவர்னர் ஜனரல் லாாடு ஹேஸ்டிங்சுகாலத்திலே நிலங்களையெல்லாம் பிரிவுபடுத்தி ஒவ்வொரு பிரிவின் தீர்வைகளை வசூல்செய்து கவர்ன்மெண்டுக்குக் கட்டுவோருக்கு ஜமீன்தாரர் என்றபெயர்கொடுத்து அப்படி வருஷவாரியில் ஒவ்வொரு பிரிவுக்கும் கட்டவேண்



டியதொகையை யார் அதிகமாகச் செலுத்துவதாக முன்வருகிறார்களோ அவர்களுக்குத்தான் அந்த வருஷத்திற்கு அந்த ஜமீனைக் குறித்தானவர்களாய் ஜமீன்தாரராய்த் தீர்வையைக் கவர்ன்மெண்டுக்குச் செலுத்தவேணுமென்பதாய் ஏற்பாடுசெய்து அப்படியே ஒவ்வொரு பிரிவு நிலத்தையும ஏலத்திற்குவிட்டு அதில் யார்அதிகதுகைக்கு எடுக்கிறார்களோ அவர்களுக்குக் கொடுத்துவந்தார். இதனால் அப்படி அதிக துகைக்கு ஏலமெடுத்தவர் குடிகளின் சௌகரியத்தையும் தேசச்செழிப்பையும் நாடாமல் அடுத்த வருஷம் இந்த நிலத்துத் தீர்வையைத் தாங்கள் தான் வசூல்செய்ய வேண்டுமென்ற உறுதியில்லாமையால் தங்களால் ஆனவளாக்கும் ஒருகை பார்த்துவிடுவோமென்ற எண்ணத்தோடே வசூல் செய்துவந்தனர் இந்த ஏற்பாட்டினால் பலவித அசௌகரியங்களுண்டாகவே அவைகள்யெல்லாம் தவிர்க்கும்படி இந்தகவர்னர்ஜனரலுக்குப்பின்வந்த லார்டு காரன்வாலீஸ் என்பவர் அப்படி நிலங்களை ஏலத்தில் விடுகிற வழக்கம் நிறுத்தப்பட வேண்டுமென்றும் ஒவ்வொரு பிரிவு நிலத்திற்கும் ஒவ்வொருவர் பொறுப்பாக ஏற்பட்டு அப்படி ஏற்பட்டவரே எப்போதும் வருஷவாரியில் இவ்வளவென்று ஒரு அளவுகண்டு அந்த அளவாக தீர்வைபணத்தை செலுத்திவரவேண்டுமென்றும அவருக்குப்பிறகு அந்தச் சந்ததியாரே அவரைப்போல இந்த உத்திரவாதத்தை மேற்கொண்டு கட்டி வரவேண்டுமென்றும், அப்படிக் கட்டிக்கொண்டு வருபவரே அவரளவுக்குள்பட்ட குடிகளின் க்ஷேமத்திற்கும் தேசத்தின் சுபிக்ஷத்திற்கும் ஜவாப்புதாரி யென்றும் ஏற்படுத்தி அவர்களுக்கு வேண்டிய மரியாதைகளையும் கொடுத்து அவர்களுக்காகவேண்டிய ரூல்ஸ்களையு மேற்படுத்திச் சிறப்பித்தனர். இவரால் இப்படி யேற்படுத்திய இந்த ஜமீன்தார் ஸிஸ்டமானது (ஏற்பாடானது) இன்னும் ஹிந்துஸ்தான் என்னும் வடஇந்தியாவிலே அமுலிலிருந்து கொண்டிருக்கிறது. நாம் வசிக்கும் தென்னிந்தியாவிலும் ஏறக்குறைய ஜமீன்தார்களெல்லாம் அதேஏற்பாட்டில்தான் நடந்துக்கொண்டு வருகிறார்கள். ஜமீன்தார் என்பது இதனால் உமக்குத்தெரிவிக்கிற தென்னவென்றால் 1802-ஆம் 25வது சட்டத்தின்படி கவர்ன்மெண்டுக்குச் சாசுவதமான வருஷவாரியில் நிஷ்கரிஷையான ஒரு துகையைச் செலுத்திக்கொண்

டும் அந்தப் பிரிவு நிலத்தை (எஸ்டேட்டை)ச் சேர்ந்த நிலங்களைக்குத் தனக்கு விட்டுத் தீர்வை வாங்கிக் கொண்டு சர்க்காருக்கும் ரயத்துகளுக்கும் பொதுவில் நின்று இஸ்திமிரார் (Perpetively) (நிரந்தரபாத்தியமாக) என்று சன்னதைப் பெற்றவராகி அதற்கு எதிரிடையாக கபுலியத்து (Counter agreement) கொடுத்து நடந்துக்கொள்பவர் என்பதையே தெரிவிக்கிறது. இப்படிச் சாசுவதமாய்ப் பைசலான பூஸ்திதியானது ஜெமீன்தாரி என்று சொல்லப்படும். இப்படிச் சாசுவதமாய்ப் பைசலான பூஸ்திதியானது யுத்தம் நடந்தகாலத்தில் கவர்ன்மெண்டாருக்குச் சகாயம் செய்ததற்காக அந்த ராச்சியம் பிடிபட்டவுடனே தணிந்த தீர்வையாகிய பேஷ்கஷ் என்னும் வரி யேற்படவும் ஆதியில் பெற்றுக் கொண்டது பூர்விக ஜமீன்தாரி யென்னும் சில காலத்திற்கு முன்னே புதிதாக சிலகிராமங்களின் மொத்தத்தைப் பைசலாதி செய்து அந்த ஷரத்தை யனுசரித்து நடக்கிறதென்ற ஏற்பாட்டின்பேரில் சாசுவதமாய்ச்சிலருக்குக் கொடுத்திருப்பது தான் மிட்டா என்று பெயர்,

இப்படி ஏற்பட்ட இந்த இரண்டுவகையான எஸ்டேட்டுகளும் ஒரேவிதமானது தானென்னும் சட்டப்படி செல்லும்படியானதென்றும் அறியலாம். ஜெமீன்தாரிகளும், மிட்டாதாரிகளும் பைசலாதிகாலத்தில் அந்தந்த நிலங்களின் வருமபடியைக் கவனித்து ஸர்வேசெய்துமுன்னேயிருக்கும் அனுகூலமானவும் பிரதிகூலமானவுமான சில வருஷங்களின் கூட்டுதலையும் வாய்க்குள்ள நிலங்களுடையவும் வாய்க்கில்லாதத் தரிசு நிலங்களின் விஸ்தீரணங்களையும், அவைகளில் பின்னிட்டுண்டாகும் விருத்தியைப்பற்றிய ஏஷியத்தையும் கணக்கிட்டு அவர்கள் பெற்றுக்கொண்டயோக்கியதையும் பாத்தியதையும், சுதந்திரங்களையும் ஆலோசித்து ஒருநிஷ்கரிஷயான தீர்வையென்றுசொல்லப்பட்ட பேஷ்கஷ் என்ற வரிபுண்டானதென்று தெரிய வருகிறது.

(இன்னும் வரும்.)

## கிராம போலீஸ் விதிகளும் அவைகளை அனுசரிக்க வேண்டிய விதிகளும்.

பரதகண்டமென்னும் நாம் வசித்துவரும் இந்தியாவிலே இங்கிலீஷ் இராச்சியம் நிலைபெற்றது முதல் பிரஜைகளின்



க்ஷேமத்திற்கும் அவர்கள் சொத்து சுதந்தரங்களின் காவலுக்கும் விசேஷ பந்தோபஸ்துண்டாகி குடிகள் அநேகவிதநன்மைகளை யடைந்து வருகின்றார்களென்பதை ஒவ்வொருவரும் தம்தம் மநுபவ அளவிலறிந்திருக்கலாம்.

இப்படிப்பட்ட க்ஷேமத்தை இன்னும் அதிகமாய் விருத்தி செய்யும் பொருட்டு இராஜாங்கத்தார் என்னென்னவோ ஏற்பாடுகளை யெல்லாம் செய்து வருகின்றனர். அவர்கள் முக்கிய கவனிப்பு குடிகள்மேலும்மேலும் விருத்தியாகி க்ஷேமத்தையடையவேண்டு மென்பதே. அப்படி அவர்கள் செய்துவரும் ஏற்பாடுகளில் நாம் முக்கியமாய் கவனிக்கக் கூடியது போலீசு. இதையொழுங்கு படுத்தும் பொருட்டு பிரதி தாலுக்காக்களிலும் பிரதி ஜில்லாக்களிலும் கான்ஸ்டேபில்கள், ஹெட்கான்ஸ்டேபில்கள், ஸ்டேஷன் ஆபீசர்கள், இன்ஸ்பெக்டர்கள் முதலான படிப்படியான அந்தஸ்துக்களிலடங்கியபோலீசார்களையும் போலீசு சூப்பிரண்டெண்டுகளையும் நியமித்து இவர்களெல்லாம் இந்த ஜில்லாக்களடங்கிய நமது மதராஸ் கோரின் போலீசுஇன்ஸ்பெக்டர்ஜனரல் அவர்களின் கட்டளைப்படிக்கும் அதிகாரப்படிக்கும உட்பட்டு நடந்து வருகிறார்கள். 1859 - ம் வருஷத்திய (XXIV) 24 - வது ஆக்டில் இவர்கள் அதிகாரதோரணையின் விவரங்களை தெளிவாய் எழுதியிருக்கிறதைக் காணலாம். மொபஸல் ஜில்லாக்களையெல்லாம் அங்கங்கே ரேஞ்சுகளாகப் பிரித்து ஒவ்வொரு ரேஞ்சுக்கும் ஒவ்வொரு டிப்டி இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஏற்படவும் அதை அவர் தன்னுடைய மேல்விசாரணையில் நடத்திவருகின்றார். ஆனால் பிரதி ஜில்லாவும் ஒவ்வொரு சூப்பிரண்டெண்டண்டு வசமும் அந்த ஜில்லாவி லடங்கிய ஒவ்வொரு இன்ஸ்பெக்டர் வசமும் அந்த டிவிஷனிலடங்கிய ஒவ்வொரு ஸ்டேஷனும் ஒவ்வொரு ஸ்டேஷன் ஆபீசர் வசமும ஒப்பிவிக்கப்பட்டு அவருக்குக்கீழ் கான்ஸ்டேபில்களும் நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள். இப்படி ஏற்படுத்தப்பட்ட ஒவ்வொரு ஸ்டேஷனும பலகிராமங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு கிராமமும் ஒவ்வொரு மாஜிஸ்ட்ரேட்டினிடம் போலீசு வேலைகளைப் பரிசீலனை செய்யும்படி யொப்புவித்து அவருக்குக் கீழ் ஜனத்தொகைக்குத் தக்கபடி கிராமபோலீசு நியமிக்கப்பட்டு போலீசு அதிகாரம் செலுத்தப்

பட்டு வருகிறது. அந்த கிராமத்தின் போலீசு வேலைப்பார்ப்பதற்காக அந்தந்த கிராம மாஜிஸ்ட்ரேட்டே தான் போலீஸ் தலைவராகிய இன்சார்ஜ் ஆபீசராகவிருக்கின்றனர். அந்தந்த கிராமத்தில் கிராமபோலீசார் போலீஸ்சம்பந்தமான வேலைகளை சரிவர நடத்துவதற்கும் கிராமத்தில் சண்டை சச்சரவுஇல்லாமல்அரிக்கையையுண்டாக்கி பாதுகார்ப்பதற்கும் குற்றங்கள் நடவாதபடித்தடுப்பதற்கும அப்படி மீறி நடக்கும் குற்றங்களைப்பற்றி உடனே ரிபோர்ட்டு செய்வதற்கும் குற்றங்களை கண்டு பிடிப்பதற்கும் கிராம மாஜிஸட்ரேட்டே முக்கியமான உத்திரவாதி. ஆனால் நடந்துக்கொள்வதற்கு ஆதியிலுண்டான ரூல்சுகளும் ஏற்பாடுகளும் அதன் பிறகு கிராமபோலீஸ் ஆர்டர்களும் அபாரமாக ஏற்பட்டிருக்கின்றனவே யல்லாமல் அவைகளைத் தெரிந்து கொள்ள முகாந்திரம் காணோம.

ஆதியிலிருந்தே கிராம பரிபாலனம் செய்வதற்காக அநேகம் பெயர்களொன்று கூடிய கிராமாதிகாரிகள் ஏற்பட்டிருந்தாலும் பிரஜைகளின் பாதுகாப்பின் பொருட்டு குடிகளிடமிருந்து பணமாகவும், தானியமாகவும் சிலர் மேரைகள் பெற்றுக்கொண்டு ஒவ்வொரு கிராமத்திலும கிராமகாவற்காரர்கள் ஏற்பட்டு குடிகாவல் கார்த்துக்கொண்டு வந்தார்கள். அதன் பிறகு சென்னை ராஜதானி முழுதிலும் பொதுவான போலீஸ் ஏற்பாட்டை ஸ்தாபனம் செய்வதற்காக பிரதி கிராமங்களிலும் கிராமத்தலைவர்களும் அவர்களுடைய போலீசு அலுவல்களும, கிராமபோலீசாருடைய நியமகமும் அவர்களுடைய போலீசு அலுவல்களும், கொத்வால் அலுவல்களுடைய சேவகர்கள் இவர்கள் நியமகமும் போலீசு அலுவல்களும் ஆகிய இவைகளையெல்லாம் சொல்லி 1816-ம் வருஷத்திய 11 - வது சட்டமானது 56 பிரிவுகளுடன் ஏற்படுத்தப்பட்டு முன்னமேஏற்படுத்தியிருந்த கிராமக்காவற்காரர்களையே கிராம போலீசாராக ஏற்படுத்திக் கொண்டு 1859 - ம் வருஷம்வரையில்போலீஸ்அதிகாரம்கிரமப்படி நடந்துக்கொண்டு வந்தது. பிறகு போலீஸ் பந்தோபஸ்தைச் சீர்படுத்தி போலீஸ் சிப்பந்திகளை ஏற்படுத்துவதற்காக 1859 - ம் வருஷத்திய 24-வது ஆக்டு 56 பிரிவுகளுடன் ஏற்பட்டது

(இன்னும்வரும்.)

---



# கிராமமுனிசிப்புகள் கிரிமினல் விவகாரவிஷயமாய் நடந்துக்கொள்ளவேண்டிய விஷயங்கள்.

---

(2 - வது சஞ்சிகையின் 16 - வது பக்கத்தொடர்ச்சி.)

சம்மன் பிரதிகளில் ஒன்றை குற்றம் சாட்டபட்டவனுக்கு நேரில் ஒப்புவித்தாவது வாங்கிக் கொள்ளச் சொல்லிக் காட்டியாவது நேரில் சேர்ப்பிக்கவேண்டும். அப்படிச்சேர்ப்பிக்கப்பட்ட சம்மனுக்கு அவன் பெற்றுக்கொண்டானென்பதற்கு அத்தாக்ஷியாக மற்றொரு பிரதியின் பின்பக்கத்தில் எண்டார்சு எழுதிதேதி போட்டு அவனிடம் கையெழுத்து வாங்கவேண்டியது. அவன் கையெழுத்திட்டதற்கு ருசுவாக அதில் இரண்டு சாக்ஷிகள் வாங்கலாம். அவன் கையெழுத்துச் செய்யத்தெரியாதவனாகி வெறும் கைநாட்டுமாத்திரம் போடக்கூடியவனாயிருந்தால் கட்டாயம் இரண்டுசாக்ஷிகள் வாங்கவேண்டியது.

யாருக்குச்சம்மன் அனுப்பப்படுகிறதோ அவனை ஜாக்கிரதையோடு தேடிப்பார்த்தும் அகப்படாத பக்ஷத்தில் அவனுடைய வீட்டிலுள்ள குடும்பத்தாரில் வயது வந்த ஒருவனிடத்திலாவது அவனோடு கூடவிருக்கும் அவனுடைய வேலைக்காரனிடத்திலாவது அவனுக்காக சம்மன் பிரதிகளிலொன்றைச் சேர்ப்பிக்கலாம். அப்படிச் சம்மன் பிரதியாரிடத்தில் சேர்ப்பிக்கப்படுகிறதோ அதை அவன் பெற்றுக் கொண்டதற்கு அடையாளமாக மற்றொரு பிரதியில் தேதிபோட்டு அவன் கையெழுத்து செய்யவேண்டியது. அப்படிக் கிரமமாய் ஜாக்கிரதைப்பட்டும் மேலே சொல்லியிருக்கிறபடி சேர்ப்பிக்க முடியாவிட்டால் சம்மனைக்கொண்டு போகிற உத்தியோகஸ்தன் எவன்பேரில் சம்மன் செய்யப்படுகிறதோ அவன் வழக்கமாய்க் குடியிருக்கிற வீட்டிலாவது குடிநிலத்திலாவது நன்றாய்த் தெரியும்படியான இடத்தில் சம்மன் பிரதிகளிலொன்றை ஒட்டி அதில் சொல்லப்பட்டிருப்பவைகளை விபரமாய் மற்றொரு பிரதியின் பின்பக்கத்தில் எழுதி அதற்குச் சாக்ஷிவாங்கவேண்டியது. சம்மனை தசேர்ப்பிக்கப்பட்ட விபரத்தை எண்டார்சு செய்திருப்பதாக அர்த்தங் கொள்ளுகிற ஒவ்வொரு [illegible] பிரதியும் அவைகளில் கண்டிருக்கிற சங்கதிகள் விரோதமாக [illegible] விட்டால் அல்லது ருஜுவாகிற வரையில் அதுசரியாக இருப்பதாகவே [illegible]ப்பட்டு சாக்ஷியத்தில் ஏற்றுக் கொள்ளப்படத் தக்கதாகும். அப்படிச் சேர்ப்பிக்கப்பட்ட சம்மனுடைய நகலை(பிரதியை)சேர்ப்பித்த உத்தியோகஸ்தன் கோர்ட்டுக்கு வாபசு செய்துவிடவேண்டியது. அப்படித் திருப்பிக் கொடுக்கபட்ட சம்மனையத்தாரம் செய்து

கோர்ட்டார் வாபீசுபெற்றுக்கொண்ட தேதிபோட்டு பெயர் தலைகுறிப்பில் (இனிஷியல்) செய்து ரிக்கார்ட்டில் சேர்த்துக் கொள்ள வேண்டியது.

கேசுகளை விசாரணைசெய்வதில் கிராம மாஜிஸ்ட்ரேட்டானவர் அடியில்வருகிறவைகளை அநுசரித்து நடக்கவேண்டியது.—

1. யாதொரு குற்றம் சாட்டப்பட்ட நபர் கிராமமாஜிஸ்ட்ரேட்டு கோர்ட்டுக்கு முன் கொண்டு வரப்பட்டாலும், தானே ஆஜரானாலும் அவன்பேரில் கொண்டு வரப்பட்டிருக்கும் பிராதின் அம்சங்களை அவனுக்கு விவரமாய் எடுத்துத் தெரிவித்து அவனை குற்றவாளி அல்லவென்று ரூபிப்பதற்குப் போதுமான நியாயங்கள் அவனுக்கிருக்கிறதாவென்று அவனைக்கோர்ட்டார் கேழ்க்கவேண்டும். அப்படிக் கோர்ட்டார் கேட்டகேழ்விகளையும் அதற்கு அவனவன் சொல்லும் ஜவாப்புகளையும் அவன் எப்படிச் சொல்லுகிறானோ அப்படியே கோர்ட்டார் எழுதிக்கொள்ளவேண்டியது. ஆனால் ஷை குற்றம் சாட்டப்பட்டவனைப் பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யக்கூடாது.

2. குற்றவாளியாகக் கொண்டு வரப்பட்டவன் தன்பேரில் கொண்டுவரப்பட்ட குற்றத்தைத்தான் செய்ததாக ஒப்புக் கொண்டால் அவன் ஒப்புக் கொள்வதைக் கூடியவரையில் அவன் எப்படி சொல்லுகிறானோ அப்படியே எழுதிக்கொள்ளவேண்டும் குற்றவாளியென்று அவனைத்தீர்மானிக்காதிருப்பதற்குப் போதுமான காரணத்தை அவன் தெரிவிக்காவிட்டால் கோர்ட்டார் அவனை அப்படியே குற்றவாளி என்று தீர்மானிக்க வேண்டும்,

3. குற்றம் சாட்டப்பட்டவன் குற்றம் செய்ததாக ஒப்புக்கொள்ளாவிட்டால் கோர்ட்டார் பிராதுக்காரன் எவனாவது அங்கே இருந்தால் அவனவன் சொல்லுகிறதைக் கேழ்க்கவும், பிராதுக்கு ஆதாரமாய்க் கொண்டுவரப்படுகிற எல்லாச் சாக்ஷியத்தையும் வாங்கத் தொடங்க வேண்டியதுமல்லாமல் குற்றம் சாட்டப்பட்டவன் சொல்லுகிறதைக் கேழ்க்கவும், அவன் பக்ஷத்தில் அவன் கொண்டுவருகிற எல்லாச்சாக்ஷியத்தையும் வாங்கத்தொடங்கவும்வேண்டும். பிரியாதியாவது குற்றம் சாட்டப்பட்டவனாவது விண்ணப்பம் பண்ணிக்கொள்ளவானால் அதின்மேல் தமக்கு யுக்தமாகக்தோற்றுகிறபடி கிராம மாஜிஸ்ட்ரேட்டானவர் யாதொருசாக்ஷி ஆஜராகும்படி நிர்ப்பந்திப்பதற்கு சம்மன் பிறப்பிக்கலாம். கோர்ட்டார் மேற்சொல்லியபடிக்குள்ள சாக்ஷியத்தை யல்லாமல் வேறுயாரைவிசாரித்தால் உண்மை வெளிப்படு மென்பதைக் கவனிக்கிறார்களோ அந்த பேர்வழியையும் சம்மன் அனுப்பி வரவழைக்கலாம்.

4. கோர்ட்டார் சாக்ஷிகளைப் பிரமாணத்தின் பேரிலோ அல்லது பிரமாணபூர்வமான உறுதி மொழியின் பேரிலோ விசாரிக்க செய்யவேண்



டியது. சாக்ஷியினுடைய வக்கு மூலியத்தைக் கோர்ட்டார் எழுதிவைக்கவேண்டு மென்ற அவசியமில்லை. ஆனால் எழுத்துமூலமாய் ரிகார்டு இருக்கும் பக்ஷத்தில் பின்னிட்ட தகவல்களுக்கு வெகுநலமாகவிருக்கும்.

5. சாக்ஷியங்களை விசாரணை செய்வதில் கக்ஷிக்காரர்கள் இஷ்டப்பட்ட அம்சத்துக்கு விரோதமில்லாத குறுக்கு கேழ்விகளை (cross questions) ச்சாக்ஷிகளுக்குப் போடும்படிச் செய்து அதற்குவேண்டும் ஜவாப்புகளை சாக்ஷிகள் கொடுக்கும்படிச் செய்யவேண்டியது. உட்பட்ட கக்ஷிக்காரர்கள் சொல்லிக்கொள்வதையும் அவர்களின் சாக்ஷியங்களையும் தீர்க்க ஆலோசித்து நியாயமாகவும் நடுவு நிலைமையாகவும் மனச்சாக்ஷிக்கு விரோதமில்லாததாகவும் தோற்றிய பக்ஷத்தில் குற்றம் சாட்டப்பட்டவனை குற்றவாளியல்லவென்று தீர்மானித்து விடுதலைசெய்கிற பக்ஷத்தில் அப்படிச்செய்கிற உத்திரவை எழுதிவைக்கவேண்டும், குற்றம் சாட்டப்பட்டவனைக் குற்றவாளி என்று தீர்மானிக்கும்பக்ஷத்தில் அவனுக்கு வேண்டிய தண்டனையை சட்டப்படி விதிக்கவேண்டும்.

(இன்னும்வரும்.)

---

## கிராம முனுசீப்புகள் சிவில்.

### விவகாரவிஷயமாய் நடந்துக்கொள்ளவேண்டிய விஷயங்கள.

---

(2 - சஞ்சிகையின் 20 - வது பக்கத் தொடர்ச்சி.)

யாதொரு பிராது அல்லது விண்ணப்பத்தைப் பெற்றுக்கொண்டு கிராமமுனிசீப்பு கோர்ட்டார் அதைவாபசு செய்யக்கூடிய குறைகளில்லையென்று தெரிந்துக்கொண்டால் ஷை பிராது அல்லது விண்ணப்பத்தை ஏற்றுக்கொண்டு அதற்கு நம்பர்கொடுத்து அதை தாக்கல் செய்துக் கொள்ள வேண்டியது அப்படி தாக்கல் செய்துக் கொண்டதற்கு அத்தாக்ஷியாக அந்தப்பிராது. அல்லது விண்ணப்பத்தின்பேரில் "தாக்கல் செய்துக் கொள்ளப்பட்டது" என்று எழுதி அதின் கீழ் தன் கையெழுத்தையும் தேதியையும் போடவேண்டியது.

உதாரணமாக.

---

உத்தரவு.—தாக்கல் செய்துக்கொள்ளவேண்டியது.

கி. மு. கோர்ட் }
தேதி ... ... 190 .} கிராமமுனுசீப்பு.

கிராமமுனுசீப்பு கோர்ட்டில் சாதாரணமாக கிராம கோர்ட்டுகளைப் பத்திய சென்னைப்பட்டணம் 1889 - ம் - வருஷத்திய 1 - வது ஆக்டு 13 - வது பிரிவின்படி தாக்கலாகும்வழக்கை அடியிற்கண்டபடி எழுதிப்பிராது கொடுத்து ஆரம்பிக்கவேண்டியது.

## பிராது நமூனா.

மதுராந்தகம் தாலுக்கா வட்ட கிராமம் முனுசீப்பு கோர்ட்டார் அவர்கள் சமூகத்துக்கு.

ஷை கோர்ட்டு 190 ம். வருஷத்திய ஸிவில் நெம்பர்.

| | | |
|---|---|---|
| கிராமம் மிராசு. 30 வயதுள்ள | ருடைய குமாரன் முதலியார். | வாதி |
| ஷை கிராமம் மிராசு. 35 வயதுள்ள | ருடைய குமாரன் முதலியார். | பிரதி வாதி |

## வாதியின் தாவாவின் விவரம்:—

1900 - ம் வருஷம் ஜூலைமீ 5உ மாதம்1 - க்கு 100 - க்கு வட்டி ரூபாய் 1, ஆகச்சேர்த்து வாதிக்காவது அல்லது வாதியின் உத்திரவு பெற்றவர்க்காவது வேண்டும்போது கொடுப்பதாக பிரதிவாதியால் ரூ. 200-க்குப் பிராமிசரி நோட்டு வாதிக்கு எழுதிக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஷை பிராமிசரி நோட்டின் தொகையை வட்டியுள்பட கொடுக்கும்படி பல தடவைகளில் நேரிலும் மனுஷியாள மூலமாகவும் கேட்டதற்கு கொடாமலும் சரியான ஜவாபுசொல்லாமலும் கேட்கும்போதெல்லாம் ஏதோ சாக்குப் போக்குச் சொல்லிக்கொண்டும் வருகிறார்.

2. இதற்கு 1901 - ம் வருஷத்தில் ஜூன் மாதத்தில் கிராமத்தில் வியாச்சிய மூலம் உற்பத்தி.

## இதன்விபரம்.

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| 1900 - ம் ஜூலைமீ 5உ முதல் பிராமிசரி நோட்டின்படி சேரவேண்டிய ரூ. ... ... | 200 | 0 | 0 |
| இதற்கு நாளது வரையில் மீ 1 - க்கு 100-1 விழுக்காடு வட்டியில் சேரவேண்டிய ரூ. | 22 | 0 | 0 |
| ஆகமொத்தம் பிரதிவாதியால் எனக்கு கிடைக்கவேண்டிய வட்டி முதலு முள்பட ரூ. | 222 | 0 | 0 |

மேற்குறிப்பிட்ட தொகையையும் இது முதல் சேரப்போகும் பின் வட்டி கோர்ட்டுசெலவு உட்பட பிரதிவாதியால் எனக்குக்கிடைக்கும்படித் தீர்மானமாகக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

தேதி ..........190 . வாதி.



## Declaration.

மேற்கண்ட பிராதுக்கு வாதியாகிய நான் இதிற்கண்ட சங்கதிகள் யாவும் அறிக்கையின் பேரிலும் நம்பிக்கையின்பேரிலும் தெரிந்தவரையில் வாஸ்தவமென்று நம்பிக்கையோடு உறுதியாகச் சொல்லுகிறேன்.

தேதி ..........190 . வாதி.

N. B.—(கவனிப்பு) தாக்கல் செய்வதற்காக இப்படி எழுதிய பிராதை எத்தனைப் பிரதிவாதிகளுண்டோ அத்தனைப் பிரதிவாதிகளுக்கும் வேண்டிய நகல் தயார் செய்து அதிலும் வாதி அல்லது வாதியின் அதிகாரம் பெற்ற ஏஜெண்டு கையெழுத்து செய்து அவைகளைக் கிராம முனுசீப்பு கோர்ட்டில் தாக்கல் செய்யவேண்டியது.

(இன்னும்வரும்.)

## கிராமங்களின் ரெவினியு.

### விவகார நடவடிக்கைகள்.

(2 - வது சஞ்சிகையின் 14 - வது பக்கத் தொடர்ச்சி)

### தாசீல்தார்.

தாசீல்தார் என்பவர் ரெவினியு இலாக்காவில் ஒருமுக்கியமான அதிகாரியாகவிருக்கின்றார். இவரைச் சாதாரணமாகக் குடிகள் "தாலுக்கா கவர்னர்" என்று சொல்லுகிற வழக்கமுண்டு. ஒருகாலத்திலே இந்த அதிகாரிக்கு இருந்த அவ்வளவு செல்வாக்குத் தற்காலத்திலேயில்லையானாலும் "ஒருபட்டணத்திலே தன் பெயர்கூட இன்னதென்று இதராளுக்குத் தெரியாமம்படி வசிப்பதைவிட ஒருகிராமத்திலே தலைமையாகஇருப்பதே பெருமை" என்ற ஒரு பழமொழியுண்டு இந்த அளவிலே தாசில்தாரைப் பற்றிக் கவனிப்போமேயானால் அவருடைய அந்தஸ்தின் சிறப்பு இன்னதென்று நமக்கு நன்றாக விளங்கும் கீழ்தர உத்தியோகஸ்தர்களுக்கெல்லாம் இவர்தான் தலைமையானவர் ஆனால் இவருக்குமேற்பட்ட அதிகாரிகளுக்கெல்லாம் அடுத்தபடித் தரத்திலுள்ளவர். தன்னுடைய தாலுக்காவிலே தனக்கு அளவு கடந்த சாய்காலுண்டு, அநேக உத்தியோகஸ்தர்களடங்கிய ஒரு பெரிய ஆபீசுக்குத் தலைவராக விருக்கின்றார். இவர் வாயைத் திறந்து கட்டளை இடத்தான் தாமதம் உடனே அவைகளை அதிகவணக்கத்துடன் நிறைவேற்றவல்ல எத்தனையோ சிப்பந்திகளும் சேவகர்களும் இவருக்குள் அடக்கமாக விருக்கிறார்கள். கிராமாதிகாரிகள் எல்லாம் இவருடைய நேரான உத்திரவுக்குக் கீழ்ப்படிந்தவர்கள். கலெக்டராவது டிப்டிகலெக்டராவது நேராக கிராமாதிகாரிகளுக்குக்கட்டளைப்பிறப்பிக்கிறதில்லை ஆனால் எல்லாம் தாசீல்தார் மூலமாகத்தான்போக வேண்டியது ரெவினியு கிஸ்திவசூல்விஷயத்திலே இவர்தான் ஜவாப்தாரி. ஒவ்வொரு

கிராமத்திலிருந்தும் இரிஸால் நாமா சரியாக செலுத்தப்படுகிறதா என்ற விஷயத்தில் சரியாய்க்கவனிப்பது அவர் கடமையாயிருக்கிறது, ஒவ்வொரு கிராமமும் தனக்கு நன்றாக தெரிந்திருக்கவேண்டும் அவனுடைய அநேக பாகங்களை அடிக்கடிபோய் பார்க்கவேண்டும். அப்படி அவர்போகிற விடமெல்லாம் நல்லவராயிருக்கும்பக்ஷத்தில் எப்போதும் இவருக்கு அங்கங்கே குடிகள் மரியாதை செய்வார்கள். அவருக்கு மாஜஸ்ட்ரேட்டு யதிகாரம் உண்டு அதனால் தன்னுடைய தாலுக்காவில் அமரிக்கையையுண்டுபண்ணுவதில் ஜவாப்புதாரியாயிருக்கின்றார்.

இதற்கென்றே போலீசு இவர் கையின் கீழிருக்கிறதுந்தவிர குற்றங்களைக் கண்டுபிடிக்கவும் அவைகளைத் தவிர்க்கவும் ஏற்பட்டிருக்கிறது. நன்மையையோ தீமையையோ செய்யவேண்டுமானால அவருக்கு அதிக சாய்காலுண்டு, இந்த அந்தஸ்திலிருப்பவருக்கு அநேகவிதத்திலும் ஏதோ மனம் நெகிழவிடக்கூடுமாதலால் இந்த அதிகாரியானவர் கெட்டிக்காரத்தனத்தோடு பெருந்தன்மையும் சரியான நடவடிக்கையோடுங்கூடியிருக்க வேண்டும். அதிகாரத்தினாலும் செல்வாக்கினாலும் இவ்வதிகாரம் நல்லதானாலும் அதற்கேற்ற கெடுதல்களுமிருக்கின்றன. அவருடைய அதிகாரத்தின் கீழ் எத்தனையோ பேர்களிருக்கிறதினாலும் இவருக்கு மேலதிகாரிகளாக அநேகம்பேர்களிருக்கிறார்களென்பதும் அவர் நினைக்கக்கூடியதே அவருடைய அதிகாரம் எவ்வளவுக்கெவ்வளவு முக்கியமானதோ அவ்வளவுக்கவ்வளவு பெருமானதாகவு மிருக்கிறது, ஒரு தப்பு ஏதாவது நேரிட்டாலோ, தாசில்தார் ஆனவர் தன்னுடைய வேலையானது பாக்கியில் நின்றுபோகும்படி அஜாக்கிரதையாயிருந்து விட்டாலோ, இரிசால்நாமா சரியானகாலத்தில் கட்டாமல்போனாலோ, கிராமாதிகாரிகள் மோசடி செய்தாலோ, மாஜிஸ்டிரியல கேசுகளை நடத்துவதில் ஆடங்கம் உண்டானாலோ, ரிபோர்ட்டுகளை ஒழுங்காகவும் சரியானமாதிரியாகவும் அனுப்பாவிட்டாலோ, இவைகளுக்கெல்லாம் ஜவாப்புதாரியார்? தாசில்தார்தான் இவருடைய கீழுத்தியோகஸ்தர்களுககு அதைப்பற்றிக் கவலையேயில்லை யாதொருகுற்றமும் தன்பேரில் ஏற்படாதபடிக்கு அநேக வருஷங்களாக வேலைப்பார்த்து வந்த ஒரு ஆபீசுக்கு ஏதோ அஜாக்கிறதையாலோ அசட்டையினாலோ உண்டாகும் ஒரு சிறுகுற்றமானது அவருடைய கெடுதலைக்கும் அவமானத்திற்கும் கொண்டுவந்து விடுகிறது, அடிக்கடி சம்பவிக்கிறது ஏதோ சிறு உத்தியோகத்திலிருக்கப்பட்டவர்களுக்கு தப்பு ஒப்புகள் மன்னிக்கப்படும். ஆனால் பெருத்த உத்தியோகஸ்தர்களுக்கோ இவைகளே பிரமாதமாய் விடுகின்றன எவ்வளவுக் கெவ்வளவு சம்பளமதிகமோ அவ்வளவுக்கவ்வளவும் பொறுப்பு மதிகம்தான் அதிலும் வாலீபர்களாயிருக்கிறவர்கள் பொறுப்பு என்பது இன்னதென்பதை நன்றாகத் தெரிந்துக் கொளளவேண்டுமென்பது அத்தியாவசியகமே.

(இன்னும்வரும்.)



## கிஸ்திவசூலாகிற விஷயமாயுண்டாயிருக்கும் ஏற்பாடு.

(2-வது சஞ்சிகையின் 14-வது பக்கத்தொடர்ச்சி.)

பாக்கிதாரர்களில் அநேகர் பிரதி மாதமும் நாள் கெடுவும் வாரக் கெடுவும் வைத்து நாள்தோறும் சால் ஜாப்புச் சொல்லிக்கொண்டே வருவார்கள். அற்காகக் கண்டித்துக் கேட்டாலோ கட்டாயம் இருசால்தினத்தில் கட்டிவிட்டு மறுவேலைபார்ப்பதாகச் சொல்லுவார்கள். அந்தப்படியே இருசால் தினத்தில் கேழ்க்கும் பக்ஷத்தில் ஏதோ காரணங்களைச் சொல்லி அதனால் தவறிவிட்டதாகவும் அவசியம் அடுத்த இரண்டாவது இருசாலுக்குப் பணம் செலுத்தி விடுவதாகவும் சொல்லுவார்கள். அதையும் நம்பி அடுத்த இரண்டாவது இருசால் தினம் கேட்டாலோ தானியங்களை வர்த்தகர்களுக்கு அளந்திருப்பதாகவோ அல்லது தனக்குவரவேண்டிய பாக்கிக்கு எதிர்பார்த்திருந்து அதுவந்தொத்துக்கொள்ளாததாகவோ சிலகாரணங்களைச் சொல்லிப்போன மாதத்தில் ஏதோ கடைசி தேதியில் இருசால் செய்தீர்களே அதுபோல தயவு செய்யவேண்டியது அவசியம் கட்டிவிடுகிறேன் அதுவரையில் பெரியமனசு பண்ணவேண்டும் பொறுத்துக் கொள்ளுங்கள் என்று சமாதானமாய் அதிக நயத்துடன் சொல்லியனுப்பிவிடுவார்கள்.

எல்லாருக்கும் நல்லவன் என்று பேரெடுக்கக் கருதிய அந்தக் கிராமாதிகாரி (முனிசீப்பு) மிகவும் மனவருத்தத்துடன் அதற்கும் ஒத்துக்கொண்டு அப்படியே அந்தக் கெடுவு வரைக்கும் காத்துக்கொண்டிருந்து அந்த மாதம் 29வ-யோ அல்லது 30வ-யோ மறுபடியும் கிஸ்தி பணத்தைக் கேழ்க்க ஆரம்பித்தால் ஆள் அகப்படுவதே கஷ்டமாய் விடும், நாளையதினம் கெடுவு என்று முன்னாடியே எதிர் பார்த்திருந்து அன்றைய தினத்திற்கு முந்தின இரவிலே ஆள்மறைய ஆரம்பித்து விடுவான். ஐயோ பாவம்! எல்லாருக்கும் இதம் செய்யக் கருதிய இந்தயாள குணசீலர் (கிராமமுனுசீப்பு) என்ன செய்வார் அய்யா; அதிக ஆயாசத்துடன் மேற்படி பாக்கிதாரனுடைய வீட்டிற்குச் சமீபத்தில் சேர்க்ககட்டியிருக்கும் பாக்கிதாரனுடைய தானியக்கு வியல் ஜப்தி செய்வதைவிட வேறே வழியொன்றுந் தோன்றாதவராகி விடுகின்றார்.

மேற்படித் தானியச் சேரை ஜப்தி செய்வதென்றால்லேசாயிருக்கிறதா? அதை அளந்துப் பார்க்க மரக்காலென்ன, சேரைப் பிரித்து தானியங்களை வெளிப்படுத்த ஆள்மாகாணங்களும், அளவுகாரனும், வண்டியும் வேண்டியதோடு அதைப் பந்தோபஸ்து பண்ண ஆசாமிகளென்ன இவைகளெல்லாம் வேண்டியதோடு இவர்களுக்குத் தக்கபடி போதுமான

சம்பளம் முதலியவைகளை கிராமமுனுசிப்பே கையிலிருந்து முன்பணம் போட்டு காரியம் நடத்தவேண்டும் என்ன கஷ்டம்! இவ்வளவு சிரமத்துடன் ஜப்தி செய்து தானியங்களைத் தன்வசப்படுத்தி பந்தோபஸ்தான ஓரிடத்திற் சேர்த்தானவுடனே அதுவரையில் தினைக்கெடுவும் நாழிக்கெடுவும் வைத்து கிராமமுனுசீப்புக்குப் போதுமான கஷ்டத்தைக் கொடுத்த பரமயோக்கியனான பாக்கிதாரன் மகாபரபரப்புடனே வெகு ஆத்திரத்தோடே தாசில்தாரிடம் சென்று தனக்கும் கிராம முனுசீப்புக்கும் வெகு காலமாய் விரோதம் உண்டென்றும் அதைக் கிராமமுனுசீப்புதார் காரணமாக வைத்துக்கொண்டு சமயம் பார்த்திருந்து தன்னை அந்யாயமாய் நஷ்டப்படுத்தி விட்டதாயும் சொல்லி முறையிட்டுப் பிராதுகொடுக்க ஆரம்பித்து விடுவான்.

அதோடு விட்டுவிடுகிறானா? அப்படி ஜப்தி செய்து கிராமமுனிசீப்பு வசத்திலிருக்கும் தானியத்திற்கு நஷ்டமுண்டாவதற்கு வேண்டிய யுக்திகளையெல்லாம் செய்து பார்ப்பான். அப்படி அவன் செய்து ஒருவேளை அவனுக்குக் கூடி வந்து விட்டாலோ கிராம முனுசீப்புப்பாடு திண்டாட்டந்தான் பெருத்த கஷ்டமும் நஷ்டமும் நேர்ந்துவிடும். ஆகையினாலே இப்படிப்பட்ட ஆசாமிகள் விஷயத்திலே கிராமமுனுசீப்புகள் ஜங்கம சொத்தை ஜப்திசெய்தும் ஒவ்வொரு கேசிலும் வெகு ஜாக்கிறதையாயும் எச்சரிக்கையாயும் நடந்துகொண்டாலொழிய காரியம் சரிவரக்கூடிவருவது கஷ்டமாய்விடும்.

தான் ஜப்திசெய்யும் சொத்துக்களில் ஒவ்வொன்றையும் சரியாய் அளவிட்டு விலைகட்டித் தன் வசங் கொண்டு ஜப்திக் கணக்கில் எழுதி அதின் பிரதி யொன்றைப் பாக்கித்தாரனுக்குக் கொடுக்கவேண்டியதுமல்லாமல் ஜப்திகணக்கில் நக்கலைப்பெற்றுக் கொண்டதற்கு அத்தாக்ஷியாக பாக்கித்தாரனுடைய கையெழுத்து வாங்கவேண்டும். பாக்கிதாரன் ஆஜரில்லாவிட்டால் ஜப்திகணக்கின் நகலொன்றை ஜப்தி தேதிமுதல் மூன்று நாளைக்குள்ளாகப் பாக்கிதாரன் வழக்கமாய் வாசம் செய்யும் இடத்திலாவது அல்லது சொத்து ஜப்தி செய்யப்பட்ட இடத்திலாவது ஒட்டிவைத்து கொடுத்துவிடவாவது வேண்டியது. ஜப்திசெய்யப்பட்ட சொத்தானது நாற்கால் ஜீவன்களில் ஆடுமாடு முதலிய எவ்வித பிராணிகளாயிருந்தாலும் அவைகளை ஜாக்கிரதையாய்க் கட்டிவைத்து அதற்குவேண்டிய தீனியைப்போடவும், தண்ணீர்காட்டவும் போதுமான மனிதர்களை ஏற்படுத்தி நியாயமாய் அதற்குப்பிடிக்கும் செலவுகளையும் அவர்களுக்குச்சம்பளமும் கொடுக்க ஏற்பாடுசெய்து போஷிக்கவும் பந்தோபஸ்து செய்யவும் வேண்டியது. அவைகளை வெளியில் கொண்டுபோய் மேய்ப்பது கெட்ட வழக்கம், ஏனெனில் காணாமற்போகலாவது வேறே யாதானுமாவது அபாயகரமான தொற்றுவியாதி தொடரவாவது நேரிடக்கூடும்.



தானியமுதலிய சொத்துக்களாயிருந்தால் சொத்தின் மதிப்பிற்குஏற்றபடி ஒருவனையோ அல்லது பலபேர்களையோ நியாயமான அளவுக்குத் தக்கமனிதர்களை நியமித்து அவர்களுக்கு நியாயமான சம்பளம் பேசிச் சொத்தைக்களவு முதலிய சேதப்படாமல் காவல்வைத்துக் காப்பாற்றவேண்டும்

(இன்னும் வரும்.)

---

## நம்மிந்து தேசத்தில் விவசாயத்தொழிலே விருத்திக்குக்கொண்டுவரும் விதாயங்கள்.

---

நிலத்தை உழுது பயிர்செய்து அதன்பலனையடைவது கண்ணியமானதும் மிகவும் உபயோகமானதுமானதொழிலாகத்தானிருக்கிறதென்பதை அங்கீகரியாதவர்களில்லை. நம்மிந்தியாவின் வடஎல்லையாகிய இராஜமலையின் (ஹிமோத்கிரியின்) உத்திரபாகத்திலே எல்லாவிதத்திலும் செழிப்புற்று எங்கேபார்த்தாலும் மகாஉன்னதங்கொண்ட மலையரண்சூழவும், விலையுயர்ந்த ரத்னராசிகளையெல்லாம் வாரிக்கொண்டு மதத்தெழுந்து கட்டுத்தறியை முறித்துக்கொண்டு, மட்டுக்கடங்காது கதங்கொண்டு சிறிபாகனையுமுறுக்கி அதஞ்செய்து ஆரவாரித்துச் செல்லும் அடங்காத மதயானைப்போல அதிகெம்பீரமாக அநேகவித அலங்காரத்தோடே விநோதகவிகளின் வர்ணனைகளுக்கெல்லா மமைந்ததாய் மனோரதங்கொண்ட மனப்பூருஷனை யொத்து கண்கொள்ளாக் காக்ஷியாயமைந்த கங்கை, சிந்து, ஜம்புநதம், யமுனைமுதலிய ஜீவந்திகளின் சிறப்பையும் அவைகள் பாயும் நிலங்கள் வளப்பத்தையும் அவைகளில் விளையும் விளைவு பொருள்களின் வனப்பையும், வர்ணனைக்கு மடங்காதவை யென்றால் அவைகளின் மகத்வத்தை யாவராலெடுத் துரைக்கக் கூடும்? இவ்வளவு வைபவங்களைக் கொண்ட இந்த வட இந்தியாவிலேகூட விவசாய விஷயத்தைப்பற்றி விவரங்கண்டு விதரணையாக செய்துமுடித்தவரில்லை, எல்லாம் நீர்வளப்பத்தாலேயே சரிவரக்கொண்டு நடத்திவருகிறார்களேயல்லது வேறில்லை, வட இந்தியாவிலே வளமைகொண்ட நாடுகளாகிய பாஞ்சாலம், நேபாளம், மகதம், கோசலம், மாளவம், அங்கம், வங்கம், களிங்கம், காம்போஜம், காந்தாரம் முதலியதேசங்களிலே அதற்கென்றே அவதரித்த அபாரகவிகள் அநேகமாக அந்தந்த நாட்டின் ஆஸ்தான வித்வபூஷணமாக விளங்கி விதம்விதமான சாஸ்திரங்களையும், வேதாந்த விஷயங்களை யமைத்தவைகளையும், இயற்கைப்பொருள் வர்ணனைகளையும் இன்னும் அநேக விஷயங்களை எழுதிவைத்தார்களே தவிர இந்த விவசாய விஷயமாய் வேண்டிய சிரத்தை யெடுத்துக்கொண்டு விவரமாக ஒரு சாஸ்திரமும் எழுதிவைத்த

வர்கள் அதிசொற்பமே. இது விஷயமாய்க்கவனித்து ஏதோ சிலபாகங்களை வெளியிட்டவர் வராஹமிஹிரர் என்னும் மகாரிஷி என்று சிலர் சொல்லுகிறார்கள். அவரும் விவசாய விஷயமாய் தானியாதிகளைப்பற்றி அப்படியாக ஒன்றும் விவரித்தெழுதிய தொன்றுமில்லை. அவர் எழுதியதெல்லாம் புஷ்பச்செடிகளையும், கனிகொடுக்கும் விருக்ஷவகைகளையும், பற்றியே எழுதியிருந்தனர், அதையும் அவர்பூராவும் எழுதிமுடித்தவரல்லர். தென்னாட்டிலேயாவது இதற்கு ஏதாவது விதாயமுண்டா என்றாலோ, அதுவும் அவங்களப்பன் தான், வித்வரத்னங்களாகிய நக்கீரர் முதலிய சங்கப் புலவர்களும் சோழபூபதியின் சமஸ்தான பண்டிதராகிய கம்பர், முதலிய பேர்களும், உலகம் உய்யும்படி வெளிவந்த திருவள்ளுவர் முதலிய அவதார புருஷர்களும் விவசாயவிஷயமாய் எவ்வளவோ புகழ்ச்சியாகப் பாடியிருக்கிறார்களே யல்லது சாஸ்திரசம்மதமாக அதைக்கண்டுபிடித்து விருத்திசெய்த விதிகள் ஏற்படுத்தி ஒழுங்குப்பாடாய்க் கொண்டுபோவதற்கு வேண்டியவிவரங்களை ஏதாவது எழுதிவைத்தார்களா? இல்லவே இல்லை. படித்தவர்களெல்லாம் பயிர்த்தொழில் பண்ணையாட்கள் தொழிலென்று அது தங்களுக்கு அகௌரவமென்றும் அது விஷயமாய் யோசனை செலுத்துவது அநாவசியமென்றும் ஓர் எண்ணம் நெடுநாட்களாக அந்த நாட்களிலே இந்நாட்டில் குடிகொண்டிருந்ததாகத் தெரியவருகிறது. இதனாலேதான் இத்தேசத்திலே எத்தனையோ யுகங்களுக்கு முன்னே நடந்துவந்தவிதமாகவே இப்போதும் விவசாயவகை நடந்தேறிவருகிறதே தவிர இதனிடத்தில் சிரத்தைகொண்டு விருத்திக்குகொண்டுவந்ததாக ஒன்றும் காணோம். விவசாயவிஷயமாய் இத்தேசம் விருத்தியடையவில்லை யென்றால் எப்படியடையும்? கற்றறிந்தவர்களாயிருப்பவர்கள் இதின் விஷயமாய்க் கவலைகொண்டு சிந்திப்பார்களே யானால் ஏன்சீர்படக்காலம் நேராது? பாருங்கள் ஒரு குடித்தனக்காரனை யடுத்து என்னப்பா இந்த கலப்பை இவ்வளவு பழுதாயிருக்கிறதே! இதைச்சீர்படுத்தக்கூடாதா, இன்னும் இதை வேறுவிதமாய் திருத்தி விருத்தியடையக்கூடாதா என்றால், என்ன சொல்வான் எழுத்துவாசனையில்லாதவன் பாவம்? "ஏனய்யா இதைப்பழுது பார்க்கச்சொல்லுகிறீர். இது என்ன கலப்பைத்தெரியுமா? எங்கப்பன், எங்கபாட்டன், முப்பாட்டன், நாலாம்பாட்டன் தலைமுறைகண்டதாச்சுதே! இதையா பழுதுபார்க்க அய்யா! அதைத்தொடலாமா, ஆவிவந்தாச்சுதே! அது அப்படித்தான் இருக்கவேண்டும் நான் இப்படித்தான் எங்கப்பன்விழுதாப்போல விழவேண்டும். நிலமும் இதுவரையிலும் எப்படியோ அப்படித்தான் பலன் கொடுக்கவேண்டும், அதனால் நாங்கள் எல்லாம் இப்போது இருக்கிறது போலவே எப்போதும் இருக்கவேண்டும், எல்லாரும் இப்படி இருக்கவேண்டுமென்பதுதான் எங்கள் கோரிக்கை, என்று இப்படிச்சொல்லி இதனால் இருமாந்து



வனாய் இருப்பானே யல்லாமல் என்னடா, எதிரி ஏதோ சொல்லுகிறானே என்னவென்று கவனிப்போம் ஏதோ அதில் நமக்கு நன்மையிருக்கலாமே விருத்திக்குவரலாமே, ஏதோ அவன் சொல்லுகிறபடி கேட்போம், அதுபோல் நடப்போம் அதனால் வருகிறபலனையடைவோம், என்ற விஷயத்திலே கிஞ்சித்தும் கவனிப்பதேயில்லை. என்றால் இவன் எந்தகாலத்தில்தான் கடேறுகிறது? ஆகையால் கல்வியும் நாகரீகமும் செழித்த இக்காலத்தில் விற்பத்தியுற்ற இளைஞர்களாயிருப்பவர்கள் இவ்விஷயத்தில் கவலைகொண்டு இதற்கு வேண்டியவைகளை யெல்லாம் அநுசரித்து இதற்கென்றே இப்போது அங்கங்கே வெளிவந்திருக்கும் அநேக நூல்களையெல்லாம் வாங்கி வாசித்து, அவைகளின் விஷயங்களைக் கண்டறிந்து அவைகளையெல்லாம் உபயோகித்து விருத்திக்குக்கொண்டு வருவதால் க்ஷாமம், என்பது தெரியாமல் எத்தனையோ கோடி ஜனங்கள் க்ஷேமத்தையடையும்படியாகும்?

(இன்னும் வரும்.)

## ஸிவில் க்ரிமினல்களைப்பற்றிய சட்டம்.

ஒரு பகிரங்கமான இடத்திற்காவது அல்லது பாட்டைக்காவது 8 அல்லது 10 கஜத்தூரத்துக்குள்பட்ட ஒருவர் சொந்த நிலத்தில் திறந்தடியாயிருக்கும் ஒரு கிணற்றைச்சுற்றி வேலிபோடாமல் விட்டதானது பொதுஜனங்களுக்கு இடைஞ்சலுண்டு பண்ணதாக தெண்டனைக்குட்பட மாட்டாது:—

டெப்டிதாசில்தாராயிருந்த குற்றவாளி ஒருவர் 1890ஹு நவம்பர்மீ 22உ தன்னுடைய அனுபவத்திலிருந்த நிலங்களைப்பற்றி, தனக்கு மேலான அதிகாரிக்கு தனக்கு யாதொரு நிலமுமில்லை என்பதாய் ஒரு பொய்யான "வெறும்" கணக்கனுப்பினதுமல்லாமல், பிரின்ஸபல் அஸிஸ்டாண்டு கலெக்டர் முன்பாக 1890-ஹு டிஸம்பர்மீ 5உ நடந்த ரெவினியூ விசாரணையிலும் அதேமாதிரியான பொய்வாக்கு மூலமுங்கொடுத்தார். பினல்கோட் 177-வது பிரிவின் கீழ்வரும் சட்டபிரகாரம் குற்றத்திற்காக அவர்பேரில் குற்றஸ்தாபனை செய்யப்பட்டது. இந்தக் குற்றஸ்தாபனை பிசகென்று தீர்மானிக்கப்பட்டது.

பல செய்கைகளினாலே ஒரு குற்றம் செய்யப்பட்டால், அந்தச் செய்கைகளிலெதையாவதொன்றை எவனாகிலும் வேணுமென்று தனித்தாவது வேறொருவனோடு சேர்ந்தாவது செய்து அந்தக்குற்றத்தைக் கூட்டாய் முடிப்பானாகில் அவன் அந்தக்குற்றத்தை செய்தவனாகிறான்:—

ஏ. என்பவனும் பீ. என்பவனும் தனித்தனியே கே. என்பவனுக்கு கொஞ்சம் கொஞ்சமாய் நஞ்சுகொடுத்துக் கொல்லுகிறதாக ஒருமைப்

பட்டு, அந்த ஒருமைப்பாடு படிக்கு கே. என்பனைக் கொல்லவே ணுமென்று ஏ. என்பவனும் பீ. என்பவனும் நஞ்சு கொடுக்கிறார்கள். அப்படி நஞ்சு கொடுப்பதினால் கே. என்பவன் சாகுறான். இந்தக் கொலை செய்வதில ஏ. என்பவனும் பீ. என்பவனும் வேணுமென்று சேர்ந்து அவர்களில் அவனவன் கே. என்பவன் சாகிறதற்குக் காரணமாகிய செய்கையைச் செய்கிறபடியால், அவ்விருவர்களுடைய செய்கை வெவ்வேறாயிருந்த போதிலும் அவ்விருவரும் அந்தக் குற்றத்தைச் செய்தவர்களாகிறார்கள்.

டி. என்னும் அதிகாரியிடத்தில் ஸா. என்னும் கைதியை ஒப்பிவித்திருக்கிறது. டி- என்பவர் ஸா. என்பவனுக்கு மரணமுண்டு பண்ண எண்ணங்கொண்டு ஸா. என்பவனுக்கு ஆகாரங்கொடாமல் அக்கிரமமாய்விட்டுவிடுகிறார். அப்படி பட்டினி போட்டுவைத்தவரையிலே ஸா. என்பவன் சாகாமல் துர்பலமாத்திரம் அடைகிறான். அப்படியிருக்கையில் டி. என்பவர் உத்தியோகத்திலிருந்து தள்ளிவிடப்பட்டு அவருக்குப் பதிலாக ஜி. என்பவர் வைத்துக்கொள்ளப்படுகிறார், இந்த ஜி. என்பவர் பட்டினி போட்டு வைப்பதினாலே ஸா. என்பவனுக்கு மரணமுண்டு பண்ணலாமென்று தெரிந்து டி. என்பவரோடு எவ்வளவேனும் சேராமலே ஸா. என்பவனுக்கு ஆகாரங்கொடாமல் அக்கிரமமாய் விட்டுவிடுகிறார். அதன் பேரில் ஸா. என்பவன் பசியினால்சாகிறான், அவன் சாகவே ஜி. என்பவர் கொலை செய்தவனாகிறார். டி. என்பவரோ ஜி. என்பவரோடு சேராமையினாலே கொலைசெய்ய எத்தனத்தை மாத்திரம் செய்தவனாகிறான்.

ஒரு குற்றமுள்ள காரியத்தைச் செய்வதில் பலபேர் பிரவேசித்திருந்தாலும், சம்பந்தப்பட்டிருந்தாலும், அந்தக் காரியத்தினாலே, அவர்கள் வெவ்வேறு குற்றம் செய்தவர்களாகலாம்:—

எல். என்பவன் சில ஏதுக்களினாலே அதிக கோபங்கொண்டு ஆர். என்பவனை அடித்ததாகக்கொள்வோம். அதினாலே ஆர். என்பவன் இறந்து போனால், அதுகொலையாகாமல் அநியாய மரணமாகும், வி. என்கிற வேறொருவன் தனக்குக்கோபம் வருவதற்கு ஏதுவில்லாதிருக்கச்சே, ஆர். என்பவன்பேரில் தனக்குயிருக்கிற பகையினாலே அவனுக்குமரணமுண்டு பண்ண எண்ணங்கொண்டு, அப்படி மரமுண்டுபண்ண எல். என்பவனுக்கு சகாயம் செய்குறான், எல். என்கிற வி. என்கிற இருவரும் ஆர். என்கிறவனுக்கு மரணமுண்டு பண்ணுவதில் பிரவேசித் திருந்தபோதிலும் ஆர். என்கிறவன் கொலை செய்தவனாகிறான்; எல். என்பவன் அநியாய மரணமுண்டுபண்ணுவதென்னுங் குற்றத்தைச் செய்தவனாகிறான்.

பலரால் ஒரு குற்றமான செய்கை செய்யப்பட்டால் அவர்களில் அவனவன் தனித்தனி அந்தச் செய்கையைச் செய்தாற்போலவே; அவன



வன் அதற்கு உத்தரிக்கக்கடவன். எந்தக்காரணங்களினால் யாதொரு லிகிதத்தை பார்வையிடவும், யாதொரு சாட்சி தன் ஞாபகசுத்தி செய்து கொள்ளவும் எதிற்கட்சிக்காரருக்கு அனுமதி கொடுக்கப்போகிறதோ அந்த காரணங்கள் மூன்றுவகையாகும். 1. சங்கதிகள் முழுவதையும்சாட்சி ஞாபகத்திற்குக் கொண்டுவரும்படியான அனுகூலத்தைப் பெறுவது. 2. சரியல்லாத தஸ்தாவேஜுகளை உபயோகிப்பதைத தடுப்பது. 3. அவன்வாய்மொழி சாட்சியத்தை அவன் லிகித மூலமானவாக்குமூலத்தோடு ஒத்திட்டுப்பார்ப்பது என்பது அபிப்பிராயம். யாதாமொருமுக்கியமான சவாலுக்கு ஜவாபு சொல்லும்பொருட்டு யாதொரு லிகிதத்தையாவது, தன்ஞாபகசுத்தி செய்து கொள்வதற்காக, உபயோகிக்கும் போதாவது அல்லது அதற்குமுந்தியாவது அதைப்பார்ப்பதற்கு எதிர்க்கட்சிக் காரனுக்குச் சுதந்தரமுண்டு, ஆனால் இந்த சுதந்திரத்தை அப்போதே உபயோகப்படுத்திக் கொள்ளத்தவறுவானானால் பின்னிட்டு அந்தசாட்சியின் விமரிசை முழுதும் முடியுமளவும் அந்த சுதந்திரத்தைக் கொண்டாடுவதற்குத் தொடரப்படாது. கிரிமினல் புரோஸீஜர்கோடின்பிரகாரம் யாதொருவைத்திய சம்பந்தமான சாட்சியினிடத்தில் கிரமமாய் வாங்கி கையெழுத்திடப்பட்டவாக்கு மூலத்தையாதொரு கேஸின் பரிசீலனையிலாவது சாட்சியமாகக் கொடுக்கப்படலாம். ஒவ்வொரு குற்றவாளிக்கும் தனித்தனி விரோதமாக அந்தச்சாட்சியம் ஒப்புக்கொள்ளத்தக்கதாக வேண்டுமானால் அப்படிப்பட்ட குற்றவாளியின் முன்பாக அந்தவாக்குமூலம் வாங்கப்பட்டிருக்க வேண்டும். ஏற்பட்ட சங்கதிகளுக்குச் சம்பந்தப்பட்ட சட்டமெதுவோ அதை ஜூரிகள் தெரிந்துகொள்ளும்படியான அளவில் அவர்களெடுத்துப்பார்க்கும்படி கற்பிக்க வேண்டியது. அப்போது முக்கியமாயிருக்கும் அம்சத்தைப்பற்றித் தீர்மானிக்கும்படி அவ்வளவு போதுமான விவரமாய் சட்டத்தை எடுத்து அவர்களுக்கு விளங்கும்படி விவரிக்காவிட்டால் அது தப்புகற்பனையாகும். பினல் கோட் 34 - வது பிரிவின்படி யாதொருவன் கொலைசெய்ததாக சொற்றொடர் சம்பந்தமாய் குற்றவாளியாக்கப்படுகிற விஷயத்தில் மற்றசங்கதிகளை இரண்டுவித தாற்பரியத்தாலும் அவன்கொலைநடத்தினனென்று சொல்வது சந்தேகமாயிருக்கிறது என்பது ஜஸ்டிஸ் பீல்டின் அபிப்பிராயம்.

நிலவிருத்தி சம்பந்தமான கடன்களைக்குறித்து கவர்ன்மெண்டா பீஸர்களுக்கு விண்ணப்பம் செய்து கொள்ளுவதைக்குறித்து, ரெவினியூ இன்ஸ்பெக்ட்டருடைய அந்தஸ்துக்கு குறைவுபடாத அந்தஸ்துள்ள யாதொரு ரெவினியூ உத்தியோகஸ்தருக்கு வாய்மொழியாகவாவது எழுத்து மூலமாகவாவது கடன்வேண்டுமென்று விண்ணப்பம் செய்து கொள்ளலாம். ஷை. கடன்களைகுறித்த 1883 - ம் வருஷத்து ஆக்டின்படி கிணறுகள் அல்லது குளங்களை ஏற்படுத்துவதற்காவது மராமத்து செய்வதற்

காவது; தரிசு நிலத்தைச் சீர்ப்படுத்துவதற்காவது; விவசாயகாரியங்களுக்காக் நிலத்தைவாடகைக்கு விடுவதற்கேற்ற மதிப்பு எந்தவேலையினால் நிலையாய் அதிகப்படுமோ அப்படிப்பட்ட வேறேயாதொருவேலைக்காவது கடன் வாங்கிகொள்ளலாகும். 1884 - ம், வருஷத்து ஆக்ட்டின்படி விதைத்தானியம், உழவுக்குரிய கால்நடை, விதையடியாசகுதிரை, இவைகளைக்கிறயத்திற்கு வாங்குவதற்காவது: நெருப்பு அல்லது வெள்ளத்தினால் அழிந்துபோன வீடுகளைமறுபடியும் கட்டுவதற்காகவும், கிருகக்கிருத்தியங்களுக்காகவும், உபயோகமாகத் தக்ககால் நடைக்குத் தீனிவாங்குவது; துன்பம் நேரிட்டிருக்கிற தென்று பிரதேசகவர்ன் மெண்டார் ஒப்புக்கொள்ளும் போது, நிலத்தின் சொந்தக்காரர்களும் அநுபோகதாரர்களும் அவர்களை அடுத்தவர்களும் அந்தமாசூல் விதமாகிறவரையில் ஜீவிக்கக்கூடியவர்களாயிருக்கும் பொருட்டுத் துன்பத்தின் பரிகாரத்திற்காகவும் கடன் வாங்கிக்கொள்ளலாம்.

---

## கிராமாதிகாரி கெஜட் மானேஜர்,

### அவர்களுக்கு.

---

### அய்யா? அநேகவந்தனம்.

நீங்கள் இப்போது நடத்திவரும் பத்திரிகையொன்று எனது நண்பரொருவரால் கிடைக்கப் பெற்று வாசித்துப்பார்க்க அதிக நலமாகத் தோன்றியது. அநேக பொது நலமான விஷயங்களை யெல்லாம் நன்றாக வெளிப்படையாக எடுத்துக்காட்டி நல்ல நடையில் எழுதி வருவதோடு அதில் அடங்கியுள்ள விஷயங்களெல்லாம் கிராமதிகாரிகளுக்கேயல்லாமல் மற்ற இதரமான ஜனங்களின் அநேக நன்மைகளுக்கும் பயன் படக்கூடியதாய் அநேக ஜமீன்களும் மீட்டாக்களும் சுரோத்தியம் முதலான வாசகரும் கவனிக்கக்கூடியதாய் ஜனங்களுக்கும் கவர்ன்மெண்டுக்கும் அநேகவிதத்திலே நன்மையைச் செய்யக்கூடியதாய் இருக்கும் என்று அபிப்பிராயமுற்றவனாயிருக்கிறேன்.

கிராமாந்திர நடவடிக்கைகளுக்கு ஒழுங்குண்டாக வேண்டுமானால் இத்தகைய கெஜட்டோன்று மாதாந்தரம் வெளிப்பட்டு, கிரிமினல், ஸிவில் முதலான விஷயமாயும் ஹைகோர்ட்டு விஷயமாயும் போர்டு ப்ரொஸீடிங்சுமுதலான டிபார்ட்மெண்டுகள் விஷயமாயும் இன்னும் இதரமான ஆர்டர்கள் விஷயமாயும் அப்போதைக் கப்போதுண்டாகும் மாறுதல்கள் விஷயமாயும், சங்கதிகளை ஜனங்களுக்கு நன்றாக எடுத்துக்காட்டித் தெளிவடையச் செய்வதினால் நமக்கு பத்திரிகையில்லா ஒரு பெருங்குறை நீங்கியதென்பதற்குச் சந்தேகமென்ன?



இத்தகைய பத்திரிகையொன்றை மாதாந்தரம் வெளிப்படுத்தி ஜனங்களின் நன்மையைவிருத்தி செய்யத்தாங்கள் எடுத்துக்கொண்ட சிரமத்திற்காக ஜனங்கள் தங்கள் மனப்பூர்வ நன்றியறிதலைச் செலுத்துவதோடுசரித்திர புஸ்தகங்களிலும் குறிப்பிடக்கூடிய தாயிருக்கிறது.

இந்த கெஜட்டானது அங்கங்கேபரவி ஜனங்களால் ஆதரிக்கப்பட்டு அபிவிருத்திக்கு வருவதால் கிராம உத்தியோகஸ்தர்களின் துரைத்தனங்கள் சிலவருஷங்களுக்குள் அநேகமாய்ச் சீர்படலாமென்று சொல்வதற்கு என்ன ஆக்ஷேபனையிருக்கிறது? கிராமத்து அதிகாரிகளும் குடிகளும் சீர்பட்டால் தேசத்துரைத்தனம் தானே சீர்படும். கிராமத்துரைத்தனத்தைச் சீர்படுத்த முடியாதவர்கள் தேசத்துரைத்தனத்தைச் சீர்படுத்தஎண்ணுவது எப்படியிருக்கிறதென்றால் முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்பட்டதுபோலும். ஆகையால் முதலில் கிராமத்துரைத்தனம் சீர்படுவதற்கு வேண்டியவைகளை நாம்கவனிக்கவேண்டும்.

1. சில வியாஜ்யங்கள் சொற்பதுகைக் குட்பட்டதாயிருக்கும் பக்ஷத்தில் அவைகளை முன்சீப்பு கோர்ட்டுக்குப் போகாவண்ணம் நடத்துகொள்ளவேண்டும். அப்படி ஏதாவது கேசுகள் போனாலும் அவைகளை விசாரித்துத் தீர்மானித் தனுப்பும்படி டிஸ்ட்ரிக்ட் முன்சீப்பு கோர்ட்டார் கிராமக் கோர்ட்டாருக்கு அனுப்பிவைக்க வேண்டும்.

2. வியவகார விற்பத்தி யுள்ளவர்களான கிராமமுனிசீப்புகள் சில கிராமவியவகாரங்களில் தங்களில் வாதி இருவரையும் பிரதிவாதி இருவரையும் பஞ்சாயத்தாக விருக்கும்படித் தெரிந்தெடுத்துத் தாமொருவராகத் தலைமையாகவிருந்து சில நம்பர்களைப் பிடித்துப் பைசல்செய்து வரவேண்டும்.

இன்னும் இவைபோல்வன அநேக மிருக்கின்றன, அவைகளையெல்லாம் என்னைப்போன்ற இன்னும் அநேகர் தங்களுக்கு அப்போதைக்கப்போ எழுதிக்கொண்டு வரக்கூடும். ஆகையால் அவைகளையெல்லாம் தாங்கள் அடிக்கடிவெளியிட்டுவருவதால் அவைகளில் அநேகம், ஜனங்களுக்கு அனுகூலமாகக் கூடுமென்பதற்குச் சந்தேகமில்லை. இதைப்பற்றி இன்னும் விரிக்கிற் பெருகுமென்று இதோடு நிறுத்துகின்றேன். இனியொரு முறை எனக்குத் தோன்றிய வரையிலும் விவரமாய் எழுதியனுப்புகிறேன்.

இங்ஙனம்,

தங்கள்விதேயன்.

3 - 9 - 0 - 3.
கருப்பூர்.

சி - சொக்கலிங்கமுதலியார்.
மிராசுதார்.

## சர்வஜனநேசன்.

### வாரந்தோறும் வெளிவந்துலாவி அநேகருக்கு மகிழ்ச்சியை விளைக்கும் ஓர் தமிழ்பத்திரிகை.

இப்பத்திரிகையொன்று நம்பார்வைக்கனுப்பப்பட்டு முழுதிலும் வாசித்துப்பார்த்ததில் நமக்கும் நமது நண்பர்களுக்கும் அதிசதிருப்திகர மாயிருந்தது, கல்விப்பெருக்கத்தாலும் நாகரீகத்தாலும் தினேதினே சுக்கிலபக்ஷசந்திரகலைபோல விருத்திக்கு வந்து கொண்டிருக்கும் நம்முடைய தமிழ்நாட்டிலே லௌகிக, வைதீக, இராஜாங்க முதலிய அநேக அருமையான விஷயங்களையும் அப்போதைக்கப்போ அதிஜாக்கிரதையாக வெளிப்படுத்தப்படும் பொது ஜனப்பிரியமான சங்கதிகளையும் தன்னுடைய இன்றியமையா வாபரணமாகக்கொண்டு ஜனங்களின் அறியாமையென்னும் அந்தகாரத்தைப் போக்கி அவர்கள் இருதயத்தில் அறிவென்னும் உதயபானுவை ஒளிவிட்டு கதிர்பரப்பி ஒப்பற்று விளங்கசெய்யுமோர் பத்திரிகாபூஷணமும் வெளிவந்துலாவி அநேகருடைய பத்திரிகையை வாங்கி வாசிக்கவேண்டுமென்ற அபாவை நீக்கிவைதிருப்பதற்காக நம்முடைய நன்பார்ந்தநீடித்த நன்றியறிதலைச் செலுத்துவதில் பிரியப்படுகின்றோம்.

இப்படிப்பட்டப் பத்திரிகையொன்று நம்தேசத்தில் வெளிவந்துலாவும் வண்ணம் வெகுநாளக நாம் எதிர்பார்த்ததற்கு இப்போது கடவுள் கிருபையால் கிடைக்கப் பெற்றதால் இதன் விருத்தியை நாடினவர்களாக நம்மில் ஒவ்வொருவரும் இதனிடத்தில் அன்பு கொண்டவர்களாய் இதற்குச் சந்தாதாரர்களாகி இதைவரவழைத்து வாசித்து ஆதரித்து வருவதால்இது விருத்தியுற்று நம்தமிழ்நாட்டுக்கோர் இன்றியமையாச்சந்திரனைபோல விளங்கி வருமென்பதற்குச் சந்தேகமில்லை இதன் வருஷசந்தா. ரூபாய், 2-8-0.

## நீதியென்ற விஷயத்திலே நாம் நடந்துகொள்ள வேண்டிய கடமை.

நீதியென்பது, ஜனங்களாலே நெடுநாளாக அநுபவசித்தமாக ஒவ்வொருவிஷயத்திலுமுள்ள கஷ்டநஷ்டங்களையும் நன்மைகளையும கண்டறிந்து இன்னின்னவிதமான கெடுதல்களைச் செய்தால் இன்னின்ன மாதிரியான தண்டனையைச் செய்தவன் அடையவெண்டும, என்பதாக ஏற்பாடுசெய்து அவைகளை விசாரணையுற்ற விவேகசாலிகளாய் விவகாரபுருஷாளாகவும் கல்விக் களஞ்சியமாக



வும் இராஜசபை அங்கங்களாகவும் விளங்கும் அறிவாளிகளுக்குக் கொண்டு வரப்படவும் அவைகளை அரசன் ஆக்கினையால் அவர்கள் ஆண்டு ஆலோசித்து எடுக்க வேண்டியவைகளை எடுத்துவிட்டும் சேர்க்கவேண்டிய வைகளைச் சேர்த்தும் ஒழுங்குபடுத்தி சகலபிரஜைகளையும் வரவழைத்து அவர்களுக்கு அவைகளின் அபிப்பிராயங்களை யெடுத்துக்காட்டி வெகுஜன சம்மதத்தின் பேரில் அரசனுடைய அறிவிப்புக்குக் கொண்டுவரப்பட்டு அரசன் அதைஅங்கீகரிக்கவும் அதுமுதல் அவைகள் அமுலுக்குவரவும் ஒவ்வொருவரும் அவ்வொழுங்குக்கு மாறுபடாமல் நடந்துவரவேண்டுமென்பதே.

இபபடிப்பட்ட அரசநீதிகளைத்தவறி நடக்கிற நிலையிலும் நடப்பதாலேயும் தண்டனைவருகிறதென்றும் வருமென்றும் சொல்லக் கூடியநிலையிலும், அப்படிப்பட்டத் தண்டனையினாலே அவமான முண்டாமென்பதிலேயும், நீதி இன்னதென்றவிஷயமாய் நாம் சிறிதுதெறிந்துகொள்ளவேண்டுமென்பது அவசியமே. நமக்கெல்லாம்சிறைச்சாலை ஏன் ஏற்பட்டிருக்கிறதென்பது தெரிந்திருக்கிறதுமுக்கோணம் ஏன் என்றும் தெரிந்திருக்கிறது ஆகையால் இவைகளுக்கு இலகாமல் தப்பித்துக் கொள்ளுகிற விஷயத்திலே அதி ஜாக்கிரதையா யிருக்கவேண்டியது நமது கடமை. சாதாரணமாக ஒருமனிதன் தனக்குத் தெரிந்தவரையில் சரியாய்நடக்கும்பக்ஷத்திலே நீதி அவனுக்கு நேசனாயிருக்கிறது அவனையும், அவனுடையசொத்துக்களையும் சொந்தக்காரனைப்போலே இரவும்பகலும் இமையில்வைத்துக் காப்பாற்றுகிறது அவனுடைய சௌகியத்திற்காகவும் அவனுடைய குழந்தைகளின் வித்தியாபிவிருத்திக்காகவும் அவனைச்சேர்ந்த எல்லா விஷயங்களிலும் ஒரு அமரிக்கையையுண்டாக்கி க்ஷேமமாயிருக்கச் செய்யவும் தன்னால் கூடியவரையில் செய்து முடிக்கும். இது இப்படியிருந்தும் சிலஜனங்கள் தப்பாகநினைக்கிறதை மற்றவர்கள் அதிகசரியானதென்று நினைக்கின்றார்கள் ஒருவனிடத்தில் தண்டிக்கக்கூடியதாகத்தோன்றும் ஒருநடவடிக்கையானது இன்னொருவனிடத்திலே ஒன்றுமில்லாததாகப் பாவிக்கப்படுகிறது சாதாரண கேவலமான மனிதர்களால் கெட்டவார்த்தைகள் உபயோகப்படும்பொழுது அவைகளை யாருங்கவனிப்பதேயில்லை அப்படி அவர்கள் உபயோகிக்கிறதைக்கேழ்க்கிறவர்கள் ஏதோமிருகப் பிராணிகள் கூச்சலிடுவதாகக் கொள்வார்கள்,

ஆனால் அந்தவார்த்தைகளையே மனுஷத்தனமுள்ளவர்கள் ஒருவருக்கொருவர் உபயோகித்து விட்டாலோ வேறே ஒன்றும் வேண்டியதில்லை உடனே எல்லாலாவும் ஒன்றுகூடி உடனே

அவர்களை மாஜிஸ்ட்ரேட்டுக்கு முன்கொண்டு போய்த்தக்க தண்டனைக்கு ஆளாக்கிவிடும். இன்னொன்றுபாருங்கள்! சிலர் இரண்டாவது மணம் முதல்தாரம் இருக்கையில் செய்துக் கொள்வார்களானால் தண்டனையடைகின்றார்கள் ஆனால் சிலர் எத்தனைக்கலியாணம் பண்ணிக் கொண்டாலும் கேழ்வையே கிடையாது அவர்களுக்கும் வழியக் கிடைக்கிறது. வட நாட்டிலிருந்து தக்ஸ் (Thugs) என்ற ஜாதியாரை யொத்த சிலஜனங்களுக்கு கொலைசெய்கிறதினாலே பாதகமில்லை யென்பதாக அபிப்பிராயமுண்டு, அநேகஜனங்களுக்கு இப்போது கூட உடன் கட்டையேறுவது ஒருபெருத்த விசேஷித்த காரியமென்பதே கொள்கை, சிசுஹத்தியானது இந்தியாவின் சிலபாகங்களிலே இதுவரையிலும் மற்ற இதர தேசங்களிலே அதிகமாக அதிபாவமென்று வெறுக்கிறது போல வெறுக்கப்படாமலே சாதாரணமாயிருக்கிறது. அப்படியிருந்தாலும் நம்முடைய பூர்வபுண்ணியமே ஒருருவாய்த்திரண்டு வந்ததை யொத்த நமது ஆங்கிலேய அரசாக்ஷியிலே இப்படிப்பட்டதுர் விஷயங்களிலே தலையிட்டிருப்பவர்களை கண்டுபிடிக்கப்பட்டாலோ தண்டனையடைவதற்குச்சந்தேகமேயில்லை. தாங்கள் ஒருபோதும் தப்பு என்று நினைக்காததும் தண்டிக்கக் கூடியதென்று நினைக்காததும் ஆன சிலகாரியங்களைச் செய்ததற்காகச் சிலரைக்கோர்ட்டு முன்பாகக் கொணடுவரப்பட்டு அபராதமோ அல்லது தண்டனைவிதிக்குப்படி நேரிடுகிறது. ஆனால் நீதி என்றநிலையிலே தான் நாம் அமரிக்கையாய் சமாதானத்தோடே வாழ்கின்றோம், ஆகையினாலே நம்மிலொவ்வொருவரும் அந்நீதிகளை மீறிநடக்காதபடித் தடுக்க அவைகளைக்குறித்துச் சிலவற்றைத் தெரிந்து கொள்வது நமது கடமை, நீதி என்றாலோ எப்போதும் நமக்கு வெறுப்பாகத் தானிருக்கிறது. அவைகளாலே ரொம்பவும் தாழ்மையாய்ப் போகிறவனுங் கூட எத்தனையோவித இடைஞ்சலகளுண்டாகின்றன. அவைகளை அமுலுக்குக் கொண்டுவரவோ அல்லது அவைகளாலுண்டாகும் அநியாயமான சம்பவங்களை நிவர்த்தித்துக் கொள்ளவோ வேண்டுமானால் கோர்ட்டுக்குப் போகவேண்டியது அவசியமாகிறது, அந்தகோர்ட்டோ அநேகமைல்களுக்கப்பாலிருக்கலாம் அங்கேபோனாலோ எத்தனையோ மணிநேரம் காக்கும் படியாயிருக்கும் சேகவன் பிடரியில் கைப்போட்டுதள்ளும்படிநேரிடும் இதுமாத்திரமா கூலிக்குச்சாக்ஷி சொல்லவந்தவர்களால் எத்தனை விதசங்கடங்கள் தான், தாங்கள் அநியாயமென்று நினைக்கிறதினாலே கஷ்டப்படும் போது தாங்கள் அடைந்த நன்மைகளை யடிக்கடி மறந்துபோன நீதிகளைப்பற்றி கொஞ்சமேனும் தெரிந்து கொள்ளாதவர்கள் ஆனவர்களே மேலேசொ



ல்லிய அசந்தர்ப்பங்களினாலே அவதிப்படுகிறவர்கள் நாம்நிம்மதியாய் வசிப்பதற்கு ஆதாரமாயுள்ள நீதிகளைப்பற்றி ஏதோ இப்போது கொஞ்சம் தெரிந்துகொண்டதினாலே நாம் தண்டனைக்கு இலக்காகாமல் தப்பித்துக்கொள்வதேயல்லாமல் அந்நீதிகளைமற்றவர்களும் அநுசரித்து அவைகளைமதிக்கும்படிச் செய்விப்பது நமதுபொருப்பாயிருக்கிறது. இந்நீதிகளைச்சரிவர நடத்தும்படி யாரிடத்திலொப்புக் கொடுக்கப்பட்டதோ அவர்கள் நம்முடைய அந்தஸ்தைவிமரிசைப்படுத்தி ஜட்ஜிகள், மாஜிஸ்ட்ரேட்டுகள்போலீஸ் முதலானவர்களைத் தாங்குவார்கள் போலீஸ்நம்மை அசல்நாட்டு மன்னர் படையெடுத்துவந்தால் எப்படி ஏராளமான சைன்னியம எதிர்சென்றுதாக்கி அவர்களைப்பின்னுக்குப்போக்கிநம்மை அவர்கள்பயத்தினின்றும் காப்பாற்றுமோ அப்படியே, அயலாரால்நமக்குண்டாகும் அபாயத்தினின்றுமகாப்பாற்றுகிறது. சிலசமயங்களிலே போலீசுக்காரர்கள் கெட்டவர்களாகத்தோற்றலாம். சாதாரண மாஜிஸ்ட்ரேட்டுகள் லஞ்சம் வாங்கலாம். ஜனங்களும் தப்பு சாக்ஷியம் சொல்லலாம். ஆகையினாலே இப்படிப்பட்ட விஷயங்களிலே சிலவேளை லாவினாலே நமக்கு பந்தோபஸ்தை யடைவதைவிட இடையூறுகளை யடைவதற்குக் காரணமாகலாம் ஆனால் இந்தக்கெடுதலையானது லாவினுடைய இயற்கைப்போக்கும நோக்கமும் இன்னதென்று தெரிந்துகொள்ளாமையினாலேயே யுண்டாகிறது. முழுது மூடத்தனமாய் ஒன்றையுங் கவனிக்காமையே ஒரு வேளை ஜனங்களுக்கு சர்க்கார் மனுஷன் என்றால் ஏதோ அசாதாரணமான ஒரு திகில் யுண்டாகி விடுகிறது. லாவானது தன்னுடைய வேலையை அசட்டைசெய்கிற அல்லது துர்விநியோகப்படுத்துகிற யாதொரு மாஜிட்ரேட்டோ அல்லதுசேவகனோ இவர்கள் விஷயத்திலும் தப்புச்சாக்ஷியம்சொன்னதாகக் கண்டு பிடிக்கப்பட்டவன் விஷயத்திலும அதிகக்கண்டிப்பாகவே யிருக்கிறது. லாவையநுசரித்து நடக்கிறது எவ்வளவோ சிறப்பான பதவியாயிருக்கிறது, அப்படி பதவியா இருக்கிறதை தங்களுடைய சுயநன்மையின்பொருட்டு அதைத் தாறுமாறுக்கு கிறவர்களு மிருக்கிறார்கள். எப்படியென்றால் ஏதோ நமக்கும் நம்மயலாருக்கும நடக்கக்கூடிய சில்லறைச் சச்சரவுகள்யெல்லாம் கோர்ட்டுக்குக்கொண்டுபோகிறது கூடாது ஏதோபெருத்த கெடுதலைக்கு எதுசுரமான கேசுகளிலேயும கொஞ்சம் வலுத்த கேசுகளிலேயும், மாஜிஸ்ட்ரேட்டுக்கோ அல்லது போலீசுக்கோ அவர்களால் நமக்குண்டாம் ஆதரவு அவசியமென்று கருதினால் அப்பீல் செய்து கொள்ளவேண்டும். தங்களுடைய * அயலார்கள் ஒருவருக்கொருவர் விரோதமாயிருக்கிறதைத் தெரிந்துகொண்டு தங்களுக்குத் தெரிந்திருக்கும தந்திர உபாயங்களாலே சண்டையைமூட்டிவிட்

டு வேடிக்கைப் பார்ப்பவர்களு மிருக்கிறார்கள் இப்படிப்பட்டவர்கள் சண்டையைமுத்தவைத்து அதின் முக்கியபாகத்தை அவர்களுக்கு அதிகமாக அளந்துகாட்டிக் கடைசியாகலாயர்களை வைக்கும்படியானஸ்திதிக்குக் கொண்டுவிடுகிறார்கள். சிலசமயங்களில் இப்படி இவர்கள் வசப்பட்டவர்கள் தங்களைத் தூண்டிவிட்டபடியே செய்யவும் அப்படிக் கலகமூட்டியவர்கள் அவர்களிடமிருந்து பணத்தைப்பறித்து லாயர்களும் தாங்களுமாகப் பங்குபோட்டுக் கொள்வார்கள். இப்படியாக பணமிழந்தக் கக்ஷிக்காரர்கள் வீடுபோய்ச்சேர்ந்து இந்தக்கலகத்தினாலே அதிக ஜெயமடைந்தது யாரென்பதைப்பற்றி யொருவரை யொருவர் விசாரிக்கும்போது இந்தக்கலகத்திற்குக் காரணமாயிருந்து தூண்டிவிட்டார்களென தெளிவாய்த் தெரியவரும். ஜனங்கள் ஒருவனுக்கொருவர் சண்டைபோட்டுக்கொள்ளுவது வெகுசுலபம என்றும், உப்புக்கு உதவாத விஷயத்திற்காக ஜனங்கள் அடிக்கடி சண்டையிட்டு மண்டையுடைத்துக்கொள்வதைப்பற்றியும்தெரிவிக்கிற அநேகக்கதைகளை அங்கங்கேவாசித்தும் கேட்டும் கண்டுமிருக்கின்றோம் யாதொருகாரணமில்லாமலே ஜனங்கள் ஒருவருக்கொருவர் மனம் வேறுபட்டு(மனஸ்தாபத்தால்)முகாரவிந்தங்கூடப்பாராமல் வெகுகாலமாக அப்படியே யிருக்கப்பார்க்கிறோம். இப்படிப்பட்ட சில்லரைச்சச்சரவுகளைத்தீர்மானிப்பதற்குநீதிஸ்தலய நுசரிப்பதுநியாயத்தைத் தேடுவதற்கல்ல ஆனால் இதற்குக்காரணமா யிருந்ததைக்கண்டுபிடிப்பதற்கே, ஆனால் சிலசண்டைகள் அதிக கெடுதல்களுக்கும் இடைபறாத மனஸ்தாபங்களுக்கும் காரணமாகி அவைகளை மலைபோலாக்குகின்றன.

---

## மதராஸ் ஹைகோர்ட்டார்.

---

### 3-வது க்ரிமினல் செஷன்கேசு.

### கனம்பொருந்திய மிஸ்டர் பென்ஸன் நீதியதிபர் முன்வந்து விசாரிக்கப்பட்டதின் விவரம்.

புரசைபாக்கம் பண்டு கேசு.

இந்த கேசில் குற்றஞ் சாற்றப்பட்டவர்களாகிய A. P. சீனிவாசய்யா, P. C. கிருஷ்ணய்யா, C. கோபாலசாமி நாயுடு, K. நாதமுனி நாயுடு, T. ரகுநாத பிள்ளை, A. சுப்புராய செட்டி, S. கிருஷ்ணய்யா இவர்களைப் பற்றி விசாரிக்கப்பட்டது.



குற்றவிசாரணை தரப்பில் க்ரௌன் ப்ராசிகியூட்டரும் அவருக்கு உதவியாக மிஸ்டர். A. S. கௌட்வெல்லும் ஆஜரானார்கள்.

முதல் குற்றஞ் சாற்றப்பட்டவருக்காக மிஸ்டர். T. ரிச்மண்டும். 2-வது குற்றவாளிக்கு மிஸ். V. விசுவநாத சாஸ்திரியும், 3-வது பேர்வழிக்கு மிஸ்டர். ஜோஸேப் சத்திய நாடாரும் 4-வது பேர்வழிக்கு மிஸ்டர். பார்ட்டனும் 6-வது பேர்வழிக்கு ஹானரபில் மிஸ்டர். P. அனந்தாசார்லுவும் 5-வதும் 7-வது பேர்வழிகளுக்கு மிஸ்டர். M J. விஜயராகவ அய்யரும் வாதித்தவர்கள்.

இந்த கேசை வசாரிப்பதற்கு அடியிற்கண்ட ஸ்பெஷல் ஜூரிகளை ஏற்படுத்தப்பட்டது.

மிஸ்டர். J. A. பாயிஸன் தலைமை ஜூரார் ( Foreman ) மிஸ்டர். R. M. தர்வி, மிஸ்டர். V. S. லின், மிஸ்டர். H. M. ஹாபிஸ், மிஸ்டர். D. A. பியர்ட் வெல், மிஸ்டர். C. ஆளவந்தார் செட்டி, மிஸ்டர் G. D. மிட்ச்செல், மிஸ்டர். P. அய்யாசாமிமுதலியார், மிஸ்டர். P. S. அண்ணாசாரியார்.

நாளது மீ 11௳ 11-மணிக்கு கோர்ட்டு கூடியபோது கிரௌன் பிராசிக்கியூட்டராகிய மிஸ்டர். ஜான்ஆடம் ஆனவர் கௌன்ஸில்பிரதிவாதிகளுக்காகக் கவனித்தவைகளுக்கு சுருக்கமாக மறுமொழி கூறியதில் பொதுஜன நன்மைக்காக சவர்ன்மெண்டாரால் ஸ்தாபிக்கப்பட்ட ஒரு முக்கியமான கேசு என்றும் சொன்னார். குற்றஞ் சாட்டப்பட்டவர்கள் மூன்றுவித பிரத்தியேகமான காரணங்களினால் சார்ஜு செய்யப்பட்டவர்கள் மோசபாபத்தென்ற முதல் காரணத்தை ஸ்தாபித்தால், கிரிமினல் பிறர்சொத்தை லாவுக்கு விரோதமாகக் கையாளுதல் ஆகிய மற்ற காரணங்களும் ஏற்பட்டுவிடும் என்றும் குற்றம் சாட்டப்பட்டவர்கள தங்களுடைய பணத்தை பண்டில் வைத்திருந்தார்களேயென்றும் அந்த பணத்தை வாங்காதிருந்தார்களே என்றும் அதனாலே பண்டு கெட்டுப்போய்விடுமென்ற எண்ணம் அவர்களுக்கு இல்லை என்றும் சொல்லுவது சரியான காரணங்களோடுகூடிய வாதமல்லவென்றும் டைரெக்டர்கள் பண்டு கெட்டுப்போகவேண்டுமென்று விரும்பினவர்களல்ல, ஆனால் பண்டானது ஈனஸ்திதியிலிருந்த உண்மையை பொதுஜனங்கள் தெரிந்துகொள்ளும் அந்தக் காலம் வரைக்கும் வெகு ஜனங்களுக்குத் தெரியாதபடித் தள்ளிக்கொண்டுவர முயன்றார்கள் என்றும் சொல்லி முடித்தனர்.

பிறகு கௌன்ஸில் ஆடிட்டர் செய்யவேண்டிய வேலைகளைக் குறித்து மிஸ்டர். ரிச்மண்ட் அவர்கள்கவனித்தவைகளுக்கு மறுமொழிகூற ஆரம்பித்து மற்ற விவகாரங்களும் நடத்தியதில் கேசின் முடிவில் கனம் பொ

ருந்தியஜட்ஜி அவர்கள்ஜூரிகளின் அபிப்பிராயத்தையொத்துக்கொண்டு 3-வது குற்றவாளியாகிய கோபால்சுவாமி நாயுடுவையும், 4-வது குற்றவாளியாகிய நாதமுனி நாயுடுவையும், 5-வது குற்றவாளியாகிய ரகுநாத பிள்ளையையும், 7 வது குற்றவாளியாகிய S. கிருஷ்ணய்யாவையும் குற்றம் செய்தவர்களல்லவென்று விடுதலைசெய்து விட்டனர். முதல் குற்றவாளியாகிய A. P. சீனிவாசய்யாவையும், 2-வது குற்றவாளியாகிய P. C. கிருஷ்ணய்யாவையும்' 6-வது குற்றவாளியாகிய A. சுப்புராயசெட்டியையும் [குற்றம் செய்தவர்களாக] இந்தியன் பினல்கோட்டு 418 செக்ஷன்பிரகாரம் மோசடிபத்தென்ற முதல் காரணத்தினால் [ ] தீர்மானித்ததாகவும் லாவுக்கு விரோதமாக பிறர்சொத்தைக் கையாளுதல் என்ற பெரிய குற்றங்களினின்று அவர்களை விடுதலை செய்தார்களென்றும் அறிந்துகொண்டார். இந்த மாதிரியான கேசில் ஜட்ஜி அவர்கள் ஜூரியின் மெஜாரிடியை அநுசரித்து அவர் தீர்மானத்தை ஒப்புக்கொண்டதில் நியாயத்தையொத்ததென்று சொல்லக்கூடும். குற்றவாளிகள் ஏறக்குறைய வயது சென்றவர்கள் என்றும் கடினகாவல் அவர்கள் தேகசௌக்கியத்திற்கு கெடுதலை செய்யும் என்றும் இதோடுகூட அவர்கள் வயதையும் அவர்கள் வாழ்நாள் ஸ்திதியையும் யோசித்து இந்த கேசு நீடித்து நடந்துவந்ததையும் கவனித்து ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வருஷம் சாதாரண காவல் விதித்தனர். இரண்டுவருஷ காவலுக்காக இந்தக் கேசை நடத்திய ஸ்பெஷல் ஜூரார்களை ஜட்ஜி அவர்கள் நீக்கிவிட்டனர்.

அநேக வருடங்களாக இச்சென்னையின்கண் புரசைபாக்கம் கிருஷ்ணய்யர் பண்டு ஒன்று அநேகரால் நன்குமதிக்கப்பட்டு எத்தனையோ லக்ஷக்கணக்காக திரவியம் நடமாடிவந்த இப்படிப்பட்ட பண்டிற்கே இவ்விதமாகக் கெடுதல்வந்து ஜனங்களுக்கு நஷ்டமுண்டாகிறதென்றால் இதனால் இதரபண்டுகளுக்கு எவ்வளவு மதிப்புக் குறைந்துவிடும் பாருங்கள் ஜனங்களுக்கு இதனால் நல்ல பண்டாக இருந்து ஜாக்கிரதையாக நடத்திவருவதில் கூட பணம் கட்டவென்றால் இனி கொஞ்சம் எச்சரிக்கையாய்த்தான் நடந்துகொள்ள வேண்டியதாயிருக்கிறது. ஏதோ ஒரு பண்டு இப்படிக்கெடுவதால் இதையொத்த இதர பண்டுகளுக்குக் குறைவு உண்டாகுறது சகஜமே ஆகிலும் புத்திசாலிகளாயிருப்பவர்கள் ஜாக்கிரதையாய் நடக்துகொள்வதால் அநேகமாய் மோசம்போவதற்கிடமிராது.



# TELEGRAMS.

## ராய்டர் சீமை தந்திசமாசாரங்கள்.

### எட்வர்ட்மகாராஜா அவர்கள் வியன்னாவைவிட்டுப் புறப்பட்டது.

லண்டன் செப்டம்பர்மீ 3௳-யாகிய வியாழக்கிழமை தினம் எட்வர்ட் மகாராஜாஅவர்கள் வியன்னாவிட்டுப் புறப்பட்டார்கள். இப்படி மகாராஜா அவர்கள் ஆஸ்ட்ரியா சக்கிரவர்த்தியுடன் கலந்து சம்பாஷணை செய்துகொண்டிருந்ததானது மாஸிடோனியாவிஷயத்தில் பலமும்சமாதான நோக்கமும்கொண்ட ஏற்பாடுகள் உண்டாவதற்குச் சாதகமாகுமென்ற நம்பிக்கைக் கிடமாகிறது.

### சுல்தானுடைய அறிக்கை.

லண்டன் செப்டம்பர் 3௳ சுல்தான் தாம் பட்டத்துக்குவந்த வருஷ தினத்தில் பலமதத்தலைவர்களுக்கும் பேட்டியளித்து மாஸிடோனியாவில் செய்யப்பட்ட இழிவான செயல்களுக்காக தாம் வருத்தப்படுவதாகவும் அங்கே யிருப்பவர்கள் கலகம்செய்யும்படி வெளிநாட்டார் தூண்டிவிட்டதாகத்தாம் உறுதியாக நம்புவதாகவும் கூறினர். இதோடுகூட தம்முடைய குடிகளெல்லோருடையக்ஷேமத்தையும் தாம்ஒரேமாதிரியாகக்கோருவது கடவுளுக்குத்தான் தெரியுமென்றும் சுல்தான் சொல்லிக்கொண்டனர்.

### இட்டலி அரசர்.

லண்டன் செப்டம்பர் 9௳ இட்டலி அரசர் அடுத்த நவம்பர் 16௳ இங்கிலாந்துக்குப் போவாரென எதிர்பார்க்கப்படுகிறது.

### தென்ஆப்ரிக்கா கேப்விஷயம்.

லண்டன் செப்டம்பர் 9௳ கேப் சட்டநிரூபணசபையும் பிரதிநிதிச்சபையும் கலைந்துபோய்விட்டன. இதனால் அநேககாலம் வேலைநடவாமல் தடைபடும். ஆனால் குடியேற்ற நாட்டார் புதிதாக சபைகள் ஏற்படுத்தவும் இதனால் அநுகூலமுண்டாம்.

### வர்த்தகச்சங்கம்.

லண்டன் செப்டம்பர் 9௳ ஆங்கிலேய பாஷை தெரியாத அன்னியர்களைக் கப்பலில் அதிகமாக வேலைக்கு வைக்கக்கூடாதென்று வர்த்தகச்சங்கத்தார் சுற்றுக்கடிதம் வெளிப்படுத்தி யிருக்கிறார்கள்.

# NEWS and NOTES.

## விசேஷவர்த்தமானங்கள்.

கனம்வகித்த மிஸ்டர் ஜஸ்டிஸ் பாஷியம் ஐயங்கார் அவர்கள் அடுத்தமாதம் ஹைகோர்ட்டு வேலையினின்றும் நீங்கமாட்டார் என்றும் ஆனால் ஹைகோர்ட்டு ஜட்ஜியாக இன்னும் கொஞ்சகாலம் அதிகமாக வேலைபார்ப்பார் என்றும் அப்படிவேலைபார்ப்பது இவ்வளவுகாலம்தான் என்று ஏற்படுத்தப்பட்டுத் தீர்மானிக்கப்படவில்லையென்றும் மெயில் பத்திரிகை சொல்லுகிறது.

### சென்னை அக்கவுண்டண்டு ஜெனரல்வேலை ஒரு பர்மியருக்கு கொடுக்கப்பட்டது.

சென்னை அக்கவுண்டண்டு வேலைபார்க்க மாங் ஹ்லா அவுங் என்னும் ஒருபர்மியர் நியமிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகின்றது இதுவரைக்கும் சென்னைக்கு அக்கவுண்டண்டு ஜெனரலாக பர்மியர்ஏற்பட்டதில்லை. இப்போது கொடுக்கப்பட்டதைப்பற்றி பர்மாவாசிகள் வெகுதிருப்தியடைந்தவர்களாயிருக்கிறார்களாம்.

### தென்னிந்தியா இருப்புப்பாதை.

இந்த கம்பெனியார் இப்போது சென்னையிலிருந்து தூத்துக்குடிக்கு ஒருநாளைக்கு இரண்டுமெயில்வண்டிகள் விடுகிறார்கள். ஒன்று காலமே புறப்பட்டுப்போகிறது; மற்றொன்று சாயரட்சை புறப்பட்டுப்போகிறது ஆனால் சென்னைமுதல் திருச்சிவரையில் பிரயாணிகள் கூட்டமதிகமாகயிருக்கிறபடியால் அக்கம்பெனியார் புதிதாய் தங்களுக்கு வரப்போகிற வண்டிகள் வந்தபிறகு சென்னையிலிருந்து திருச்சிவரையில் மற்றுமோர் மெயில்வண்டி விட உத்தேசித்திருக்கிறார்களென்று மெயில்பத்திரிகையிலெழுதப்பட்டிருக்கிறது.

### ஹைகோர்ட்டும் கிராமமாஜிஸ்ட்ரேட்டுகளும்.

சென்ற திங்கட்கிழமை மத்தியானத்திற்குமேலே மதராஸ் ஹைகோர்ட்டிலே மிஸ்டர் P. S. சிவசாமிஐயர், துர்வார்த்தைகளை உபயோகப்படுத்தினதாக பெட்டிஷன்தாரரை ஒருமணிநேரம் தொழுக்கட்டையிலடைக்கும்படியாய் தீர்மானித்த ஒரு கிராமமாஜிஸ்ட்ரேட்டின் தீர்மானத்தின்பேரில் க்ரிமினல் ரிவிஷன்பெட்டிஷன் அட்மிஷனுக்காகக்கொண்டுவந்தார், கனம் நீதியதிபர் அவர்கள் டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டுக்கு



முதலிலே இதைப்பற்றி விண்ணப்பம் பண்ணிக்கொண்டாரா என்றதற்கு செய்யவில்லையென்று தெரிவித்ததின்பேரில் கனம்பொருந்திய மிஸ்டர் ஜஸ்டிஸ் பென்ஸன் அவர்கள் இராஜதானியில் மொத்தத்திலே ஏறக்குறைய 50,000 கிராம மாஜிஸ்ட்ரேட்டுகள் இருக்கிறார்களென்றும் இந்த எல்லாமாஜிஸ்ட்ரேட்டுகளின் விவகார நடவடிக்கைகளையும் ஹைகோர்ட்டு பரிசீலனை செய்வதாக நினைப்பதினால் ஹைகோர்ட்டுவேலை என்னஸ்திதிக்கு வருமென்று தெரிந்துகொள்வது அசாத்தியமென்று சொல்லியதோடு பெட்டிஷன் தள்ளுபடியாய்விட்டது.

### இந்தியா கவர்ன்மெண்டு ஸிம்லாவிலிருந்து கல்கத்தாவுக்குத் திரும்பிவருதல்.

ஸிம்லா செப்டம்பர் 14௳ இன்றைக்குத்தான் நவம்பர்௴ 7௳ இந்தியா கவர்ன்மெண்டு ஆபீசுமூடப்பட்டு ஷை௴ 9௳ கல்கத்தாவில் மறுபடியும் திறக்கப்படுமென்று தீர்மானமாயிற்று

### மார்செயில்ஸ் என்றஇடத்தில் 2-புதியப்ளேக் கேசுகள்.

லண்டன் செப்டம்பர்௴ 14௳ மார்செயில்ஸில் புதியசந்தேகிக்கக்கூடிய ப்ளேக்கேசுகள் சம்பவித்திருக்கின்றன முன்கேசுகளைப் பார்த்துக்கொண்டுவந்த இரண்டு ஆஸ்பத்திரி நர்சுகளுக்கு முக்கியமா யுண்டாயிருக்கிறது.

## ஓர் கற்பகவிருக்ஷம்.

ஈரோடுகஸ்பா சந்தப்பேட்டை சத்திரத்திற்கு எதிரிலிருக்கும் வேப்பமரத்தின் ஓர்கிளையினின்று சிலதினங்களாகத் தினந்தோறும் ஒருகுடம் பால் பெருகி வழிந்துகொண்டிருப்பதாகவும், எவ்வித வியாதியுள்ளவர்களும் அந்தப்பாலைச்சாப்பிட்டு பூரணசுகமடைந்ததாகவும் தெரியவருகிறது இப்படி நடந்துவருவதால் கருணாகரக்கடலாகிய ஜகதீசனுடைய கிருபை உண்டென்று சொல்வதற்கும் சந்தேகமுண்டோ.

பாலுநீருங்கலந்ததில் நீரைப்பிரித்து பாலைமட்டும் உண்டுகளிக்கும் அன்னபக்ஷியைப்போன்ற உண்மையுணர்ந்த ஞானிகள் வாசனாத்திரயங்களாகிய லோகவாசனை, தேகவாசனை, சாஸ்திரவாசனைகளில் மாத்திரம் மனதைச்செலுத்தித் தங்கள் சுவானுபவ பூதியிலுதித்த தத்துவார்த்தத்தை நம்முன்னோர்களும் அறிந்துய்யும்படியாய் வெளியிட்டுக் களித்திருப்பர்.

காவேரியில் அதிகமழையினால் வெள்ளமுண்டாகி ஜனங்களுக்கு அதிகநஷ்டம் நேரிட்டதென்றும், வெள்ளத்தினால் நஷ்டப்பட்ட குடிக

யாவரும் அறிந்தவிஷயம். நம்நாட்டில் பற்பல பாகங்களிலிருந்து ஆயிரக்கணக்கான பிரதிநிதிகள் திரண்டுவந்து ராஜாங்கவிஷயமான சமாசாரங்களையறிந்து தங்கள் இனத்தார்க்கும் தங்களையடுத்தார்க்கும் அவைகளைப்போதித்து நம்நாடுமுழுவதிலும் அறிவைப்பரப்புகின்றார்கள். எந்த நாட்டில் அஞ்ஞானமும், அறிவின்மையும், குடிகொண்டிருக்கின்றதோ அந்நாட்டார் தங்களுடைய கடமைகளையும், பாத்தியங்களையும் உணராமல் குடிகளுக்கும், அரசருக்கும் விவாதங்கள் நேரிட்டு அடியோடு அழிந்துபோகின்றார்கள். எந்த நாட்டில் குடிகள் அறிவுமேலிட்டுத் தங்களுடைய சுதந்திரங்களையறிந்திருக்கின்றார்களோ அந்நாட்டார் அரசனுடன் ஒத்து நடந்து ராஜாங்கத்தார்க்கும் தங்களால் கூடுமானவரையில் உதவிசெய்து நாட்டை க்ஷேமத்திலும் பொருள் விருத்தியிலும் முற்படுத்துகின்றார்கள்.

இதை யனுசரித்தே நம்மில் கற்றுணர்ந்த பெரியோர்கள் வருஷந்தோறும் காங்கரெஸ் மகாசபை கூடி ஜனங்களுடைய குறைகளைக் கவர்ன்மெண்டாருக்குக் காட்டிவருகிறார்கள். கவர்ன்மெண்டாரும் காங்கரெஸ்ஸிடத்தில் விரோதம் பாராட்டியபோதிலும் அந்தச்சபை நன்மையையே செய்கிறதென்பதை ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். பஞ்சாபிகளும், ஸீக்கியர்களும், ரஜபுத்திரர்களும், வங்காளத்தாரும், பம்பாயாரும், சென்னையாரும், மற்றுள்ள கணக்கற்ற ஜாதியாருமாகத் திரண்டுவந்து கூடும்போது இந்தியா முழுவதையும் பற்றிய பெருத்த விஷயங்களைக் கவனிக்கவேண்டியிருக்கின்றதே ஒழியச் சிறு விஷயங்களைக் கவனிக்கச் சாத்தியப்படுவதில்லை. கவர்ன்மெண்டார் நிலத்தீர்வை விஷயமாகச் செய்யும் நிர்ப்பந்தங்கள் ராணுவச்செலவு, ஆங்கிலேய உத்தியோகஸ்தர்களுக்குப் பென்ஷன் கொடுத்தல், நாணய மாற்றுமுதலிய முக்கியவிஷயங்கள் இம்மகாசபையில் கவனிக்கப்பட்டு அவைகளால் நமக்கு அளவற்ற நன்மைகள் உண்டாயிருக்கின்றன. இருந்தபோதிலும் இந்தியாவை மாகாணங்களாகப் பிரித்து எடுத்துக்கொண்டால் ஒவ்வொரு மாகாணத்தைப்பொறுத்த குறைகளையும், குற்றங்களையும் விஸ்தாரமாக யெடுத்துப்பேச காங்கரெஸ் சபையில்முடியாது. இதற்காகவே சென்னையில் வருஷந்தோறும்

மாகாணச் சபையென ஒன்று கூட்டப்பட்டு வருகின்றது. சென்ற வருஷத்திலும் காகிநாடாவில் மாகாணச்சபைகூடிற்று, மாகாணச் சபைகள் நம் ராஜதானியில் கூடுவதைப்பார்த்து வங்காள ராஜதானியாரும், பம்பாய் ராஜதானியாரும் மாகாணச்சபை கூட்டிவருகின்றார்கள். ஆனால் மாகாணச்சபைகளிலும் மாகாணத்தைப்பற்றிய விஷயங்களே கவனிக்கப்பட வேண்டியதாயிருப்பதாலும் சில்லறையான சொற்ப விஷயங்களைக் கவனிக்கமுடியாமற்போகிறது ஆகையால் ஜில்லாக்கள்தோறும் சபைகள் கூட்டப்படவேண்டுமென ஜனங்களுக்குள் ஒருவித உணர்ச்சியுண்டாகி அப்படியே நம்முடைய ராஜதானியில் இப்போது ஜில்லாச்சபைகள் கூட்டப்பட்டு நடந்துவருகின்றன. நடக்கும் வருஷத்தில் கோதாவரியிலும், திருப்பதியிலும் பெஜவாடாவிலும், காஞ்சீபுரத்திலும் பூந்தமல்லியிலும் செங்கற்பட்டிலும், ஜில்லாச்சபைகள்கூடி எவ்வளவோ விஷயங்களைப்பற்றித் தீர்மானங்கள் செய்யப்பட்டன.

இப்படிச்செய்வதால் ஜனங்களுக்குள் ராஜாங்கவிஷயங்களில் அறிவுபரவுகின்றது. காங்கரெஸ்கூட்டம தாய்கூட்டமாகவும் அதற்குப் பிள்ளைகளாக மாகாணக்கூட்டங்களும் ஜில்லாக்கூட்டங்களும் தோன்றி நாடுமுழுவதிலும் அறிவைப்பரப்பி அஞ்ஞானத்தையொழித்து ஜனங்களுக்கு அவர்களுடைய சுதந்திரங்களையும் எடுத்தோதி கவர்ன்மெண்டார் செய்யும் நியாயாநியாயங்களை அவர்களுக்குப் புலப்படுத்தி நாட்டை உறுதியும் பலமும் செய்கின்றன. இங்கிலாண்டு தேசத்தையும் நமது இந்தியாதேசத்தையும் ஒப்பிட்டுப்பார்த்தால் அப்போது இரண்டுக்குமுள்ள வித்தியாசம் தெரியவரும். இங்கிலாண்டு கல்வியில் உயர்ந்த தேசம். இங்கிலாண்டிலுள்ள ஒவ்வொருவருக்கும் ராஜாங்கவிஷயங்கள் தலைகீழாகத் தெரியும். வண்ணான், அம்பட்டன், குயவன், கொல்லன், வண்டியோட்டுவோன் ஒவ்வொருவனும் பத்திரிகைகள் வாசித்து அன்றன்று விஷயங்களையுணர்ந்து ராஜாங்கத்தார் ஏதேனும் தப்புத்தவறுதல்கள் செய்தால் உடனே கண்டித்து நன்மையையும் பெருமையையும் பெறுகிறார்கள். இந்தியாவிலோ அப்படி கிடையாது. பணமுடையவர்கள் பத்திரிகைகளை கையிலும் தொடவேமாட்டார்கள். பத்திரிகைகள் வரவழைப்பவரும் படிப்பதில்லை

## நிலவிருத்தி சம்பந்தமான கடன்களைக்குறித்த செய்யப்பட்ட விதிகள்.

(4-வது சஞ்சிகையின் 20-வது பக்கத்தொடர்ச்சி.)

அடியிற்கண்ட தொகைகளுக்கு மேற்படாமல் கடன்[illegible]டுமானல் அதற்காக அனுமதிகொடுக்க சுயேச்சையான விசாரணையிலிருக்கும் டெப்புடி தாசில்தாரர்களுக்கும், டிவிஷனல் ஆபீஸர்களுக்கும, கலெக்டர்களுக்கும் அதிகாரமுண்டு.

| | ரூபாய். |
|---|---|
| தாசில்தாரர்கள் ... ... ... | 250. |
| டிவிஷனல் ஆபீஸர்கள் ... ... | 500. |
| கலெக்டர்கள் ... ... ... | 1,000. |

1,000 ரூபாய்க்கு மேற்பட்ட கடன் தொகைகள் ரெவினியூ போர்டாராலும், 5,000 ரூபாய்க்கு மேற்பட்ட கடன் தொகைகள் பிரதேச கவர்ன்மெண்டாராலும் ஜாரிசெய்யப்படும் பற்பலகடன் தொகைகளின் மொத்தத் தொகையானது நிர்ணயிக்கப்பட்ட உச்ச அளவுக்குமேற்பட்ட போதிலும், ஒரேபேருக்குப் பற்பல கடன் தொகைகளைக் கொடுக்க இந்தவிதியினல் யாதொரு உத்தியோகஸ்தருக்குத் தடையுண்டாக மாட்டாது. ஆயினும், அப்படிப்பட்டகடன் தொகைகள் இன்ன இன்ன காரியங்களுக்கென்று ஸ்பஷ்டமாகக் கண்டிருக்க வேண்டியது மல்லாமல், அவைகளில் ஒவ்வொன்றுக்கும் தனித்தனியே வெவ்வேறு ஈடுகாட்டப்பட்டுமிருக்கவேண்டும். பூமிக்குரியவனவது அவனுக்காக அவ்விடத்திலிருக்கிற ஏஜெண்டாவது, காரிய நிர்வாகியாவது தன்னுடைய ஆட்சேபனைகளை அந்தப்படி தெரிவிக்காவிட்டாலும், அதைக்குறித்து கலெக்டரவர்கள் விண்ணப்பதாரனுக்கு அவனுடைய விண்ணப்பத்தில் கண்ட நிலத்திலே டிரான்ஸபர் பண்ணத்தக்க பாத்தியமிருக்கிறதாவென்றும், அப்படிப்பட்ட பாத்தியத்தின் பெறுமானத்தைத் தனியே யோசிக்கையிலாவது வேறே ஜாமீனுடன் சேர்த்து யோசிக்கையிலாவது, அது கடன் தொகைக்குப் போதுமானதென்றும் அபிப்பிராயப்பட்டாலும் அவர் அக்கடனை[illegible]



அனுமதிகொடுக்கலாம். இல்லாவிட்டால் போர்டார் அல்லது பிரதேசகவர்ன்மெண்டாருடைய அனுமதிக்காக அந்த விஷயத்தைக்குறித்தரிகார்டுகளை அனுப்பலாம்.

100-க்கு 5-ரூபாய் வீதம் வட்டிபோடப்படும்; ஆனல், விவசாயக்காரர்களுக்குக் கடன் கொடுப்பதைக் குறித்த 1884-ம் வருஷத்து ஆக்டின்படி துன்பத்தின் பரிகாரத்திற்காகக் கொடுக்கப்படும்கடன்களுக்கு 100-க்கு 3-வீதம் வட்டிபோடப்படும், கடன்வாங்கிக் கொண்டவர்கள் ஏழைகளென்று தெரியவருகிறவிஷயத்தில் கலெக்டருக்கு யுக்தமாகத் தோற்றினல் வட்டிவாங்காமல் தள்ளிவிடலாம். பிரதேச கவர்ன்மெண்டார் தங்களுக்கு யுக்தமாகத் தோற்றினல் விசேஷசந்தர்ப்பங்களிலே குறைந்தவட்டிக்காவது வட்டியில்லாமலாவது கடன்கொடுக்கலாம். கடனைக்கொடுக்கும் தேதிமுதல் வட்டிகணக்காகும். கடன் சிலதவணைகளாகக்கொடுக்கப்படுமாகில், ஒவ்வொரு தவணைக்குரிய வட்டியானது அத்தவணைத்தொகை கொடுக்கப்படும் தேதிமுதல் கணக்காகும்.

சமமான வருஷாந்திர தவணைத்தொகைகளாக அசலையும்வட்டியையும் செலுத்திக்கடன் தீர்த்து விடத்தக்கதாகும் கடன்களை தீர்த்து விடுவதற்காகக் கொடுக்கப்படும் காலவரையறையையும், தவணைத்தொகையையும் நிர்ணயிக்கும் போது கலெக்டரவர் (அல்லது கடன் கொடுக்கும் வேறே உத்தியோகஸ்தர்) கடன் வாங்குகிறவருடைய அனுகூலத்தையும், அந்தந்த விஷயத்தைப்பற்றிய சந்தர்ப்பங்களையும், செய்யப்போகிற தாகப்பிரேரேபிக்கப்படும் விருத்தியானது உத்தேசம் எவ்வளவு காலம் வரையில் நிலைக்குமென்பதையும், கொடுப்பதாகச்சொல்லப்படுகிற ஈட்டின் மதிப்பையும் அல்லது அதுபோதுமானதா அல்லவா வென்பதையும் யோசித்து நிர்ணயிப்பார்கள்; ஆனல் அப்படி நிர்ணயிப்பது அடியிற்குறிப்பிட்ட காலங்களாகும்.

(a) நிலவிருத்தி சம்பந்தப்பட்ட வைகளின் விஷயத்திலே:—

(i) கிணறுகளை ஏற்படுத்துவதற்காகவோ அல்லது மராமத்து செய்வதற்காகவோ.—30 வருஷம்.

(ii) வேறேகாரியங்களுக்காக,—

கடன் 500-க்கு ரூபாய்க்குமேற்படாவிட்டால்,— 10 வருஷம்.

கடன் 500 - க்கு மேற்பட்டு 1,000 ரூபாய்க்கு மேற்படாவிட்டால், — 15-வருஷம்.

கடன் 1,000 ரூபாய்க்கு மேற்பட்டால், 20 - வருஷம்.

(b) விவசாயக்காரர்களுக்கு கடன் கொடுக்கப்படும் விஷயத்திலே:

(i) விதைவாங்குவதற்காகவானால்,—1 வருஷம்.

(ii) துன்ப நிவர்த்திக்காக வானால்,—3 வருஷம்.

(iii) வேறே எந்த காரியத்திற்காக வானால்,—10 வருஷம்.

கடனைத் தீர்த்து விடுவதற்காக மேலே குறிக்கப்பட்ட காலமானது - கடன் கொடுக்கப்படும் தேதி முதல் கணக்காகும்; அல்லது கடன் தவணைத் தொகைகளாகக் கொடுக்கப்படுமாகில், கடைசிதவணைத் தொகைகொடுக்கப்பட்ட தேதிமுதல் கணக்காகும்.

கடன்வாங்கிக் கொண்ட எந்தநபராவது அவனுக்கு என்ன திட்டங்களின் பேரில் அந்தகடன் கொடுக்கப்பட்டதோ அதுகளில் எதின்படிக்காகிலும் நடந்து கொள்ளத் தவறினானென்று டிஸ்டிரிக்டு கலெக்டருக்கு தெரியவருமானால் அவர் தா[illegible]ன தீர்மானத்துக்கு ஏற்படுத்தினாரோ அதற்குள்ள ஏதுக்க[illegible]ழுத்து மூலமாய் ரிகார்டு பண்ணி ரிவினியூ விசாரணைக்குட் படுத்தி பாக்கியாதொரு வட்டியையும் செலவுகளையும் லாண்டு ரெவினியூபாக்கியைப் போல அந்தநபரிடத்திலிருந்தாவது அவனுடைய எந்தஜாமீன் தாரிடத்திலிருந்தாவது உடனே வசூல் செய்யத் தொடங்குவார்.

---

## கிராமமுனுசிப்பு கோர்ட்டுகளிலுள்ள சில குறைபாடுகளும், அவைகளை நிவர்த்திக்கக் கூடிய விதாயங்களும்.

---

நாம் வசிக்கும் தென்னிந்தியாவில் இருபத்தோரு ஜில்லா[illegible]களிலுமுள்ள 50,000 க்கு மேற்பட்ட கிராமாதிகாரிகள் (மு[illegible]ப்புகள்) கிராமபரிபாலனம் பொருட்டு ஏற்பட்டிருக்[illegible]



தாங்கள் செய்யவேண்டியகடமைகளாகிய ரெவினியுவிஷயமாய் நடத்தவேண்டியவைகளை கவனிக்கிறதேதவிர சிவில், கிரிமினல் விவகாரவிஷயமாய் ஏன்சற்றேனு கவனிக்கிறதில்லையென்ற ஒரு சிறு கேள்விபோடப்படுமானால் அதற்கு அவர்கள் அநேக முகாந்தரங்களையெடுத்துச் சொல்லக்கூடும். அவைகளில் சிலகாரணங்களை இங்கு நாம் எடுத்துக்காட்டுவோம்:— •

எப்போது விவேகிகளாய் விவகாரம் நடத்தக்கூடிய பிரதி மனுஷனும் தான் எடுத்த காரியம் யாதொரு தடங்கலுமின்றி சரிவர நிறைவேறக் கூடியதுதானா? அப்படியாதாவது இடையூறுண்டானால் இலேசாக ஒழிக்கக் கூடியதாயிருக்குமா? என்பதை ஆழ்ந்தகருத்தோடு யோசித்து சரிவரமுடிக்கலாமென்று மனதிற்பட்டால் அந்தகாரியத்தில் தலையிடவும் அப்படியில்லையேல் அதில் தலையிட்டுக்கொள்ளாமல் நீங்கிவிடவும் பிரயத்தினப்படுவது சாதாரணம்.

இப்படிப்பட்ட இடைஞ்சல்கள் நமது இராஜதானியின் அநேக ஜில்லாக்களிலுள்ள கிராமமுனுசிப்புகள் தாங்கள் செய்யவேண்டிய சிவில், கிரிமினல் விவகார விஷயங்களிலே உண்டாகின்றனவா? அப்படியுண்டானாலும் அவைகளை யெளிதில் நிவர்த்திப்பதற்குத்தக்க ஏதுக்களுண்டா. என்பதையும் அப்படிப்பட்டவைகளின் விவரத்தையும் இங்குவிசிதமாய் எடுத்துக்காட்டுகிறோம்.

ஒருவிஷயத்தைக் கவனித்து அதை நடத்த ஆரம்பிக்கும்போது அதுவிஷயமாய்த் தனக்கொத்தாசையாக ஏற்பட்ட மற்றவர்களும் ஒருமித்து தனக்கடங்கினவர்களாய்த் தன்னிஷ்டம்போலே நடந்து கொள்ளாவிட்டால் அப்படியெடுத்த காரியமும் முன்னுக்கு வாராமற்போய் விடும்.

ஆகையால் ஒருகிராமத்திலே தலைமையாயிருக்கும் அதிகாரிக்குகீழ் அமைந்துள்ள உத்தியோகஸ்தர்கள் அமைந்து நடந்து கொள்வார்களானால் ஷை தலைவரால் நடத்தப்படும் நியாயக் கோர்ட்டிலே விவகாரம் சரியாய் நடத்தப்பட்டு, நியாயத்தீர்ப்பு செய்வதற்கு அதுசரிவர நிறைவேறுவதற்கும் இடையில் எத்தனையோ முக்கியமாய் கவனிக்கவேண்டிய அம்சங்களிருக்கின்றன அவைகளிலெவ்வொன்றும் விவகாரவழியிலே கவனிக்கக் கூடியவைக

ளை யல்லாமல் மற்றபடி சாதாரண வழியிலே நடத்திக்கொண்டு போக சாத்தியப்பட்டவை யல்ல. அவைகளின் விவரம்.—

முதலாவது—ஒருகேசை ஆரம்பித்து அதற்காக இருதரக் கக்ஷிகளுக்கும் சம்மனை அனுப்பினால் வாதிதரப்பாராவது அல்லது பிரதிவாதிதரப்பாராவது அதைப் பெற்றுக்கொள்ளாமற் போவதுண்டு.

இரண்டாவது—அப்படியொருவேளைப்பெற்றுக்கொண்டாலும் அதில்கண்டுள்ள அம்சங்களைக் கவனித்து அதில் கண்டகால அளவில் ஆஜராகாமற் போவதுண்டு, அப்படி ஆஜரானாலுமோ சரியானகால அளவில் வாராமல் தாமதித்து அக்காலந்தள்ளி வந்து ஆஜராவதுண்டு. சரியானகாலத்திலேயே ஆஜராகி சற்று நேரத்திற்கெல்லாம் கோர்ட்டார் அனுமதியில்லாமலே அவ்விடத்தை விட்டுப்போய் விடுவதுமுண்டு.

மூன்றாவது—கோர்ட்டில் ஆஜராகி விசாரணை நடக்கும்போது கோர்ட்டின் சட்டதிட்டத்திற்கு ஒத்தபடியாவது நடந்து கொள்ளாமல் லக்ஷியமில்லாமல் அங்குமிங்கும் திரிந்துகொண்டும் கேட்ட கேழ்விக்குச்சரியான ஜவாப்பு சொல்லாமலும் அசட்டைசெய்வதுண்டு, சில முரட்டுத்தனமான இயற்கைச் சுபாவமுடையவர்கள் கோர்ட்டு முன்பாகவே தங்கள் எதிர்கக்ஷிகாரர்களை யாவது அவர்களுக்காக வந்த சாக்ஷிகளையாவது வீணவம்புக்கிழுத்து வார்த்தைகளை வளர்த்திக்கடைசியாக அடித்தும் வைதும் தூஷித்தும நியாயஸ்தலத்திலேயே இவ்வளவு அமக்களமும் செய்வதுண்டு.

இவ்விதமான செய்கைகள் நன்றாக வாசித்து சட்டத்தில் வல்லவர்களான வக்கீல்களாயிருப்பவர்களும்சப்மாஜிஸ்ட்ரேட்டு கோர்ட்டு, முனுசிப்பு கோர்ட்டு முதலான பெரிய இடங்களிலும் நடத்திருவகிறார்கள். ஹைகோர்ட்டு அதிகாரிகளுக்கு இப்படிப்பட்ட விஷயங்களில் போதுமான அதிகாரங்களை அவர்கள் சுயமாய் வகித்திருந்தும் ஹைவக்கீல்கள் லாத்தெரிந்தவர் களாயிருந்தும் ஹை கோர்ட்டுகளிலே இப்படிப் பலசமயங்களில் ஒழுங்கீனமாய் நடந்து கொள்ளுகிறதானால் சுயமான அதிகாரம் வகிக்காத கிராமக் கோர்ட்டுகளில் சட்டமேயின்னதென்று தெரியாத நாட்டுப்புறத்து முரட்டுத்தனமுள்ள ஆசாமிகள் நடந்துகொள்வதை



கேழ்க்க வேண்டுமா? இதுவுமல்லாமல் பிரதிகிராமத்தில் சிலர் வழக்குக் கென்றே ஏற்பட்டிருப்பதுண்டு அவர்களுக்கு முக்கியமான வேலை கக்ஷிக்காரர்களை இவ்வித ஒழுங்கீனமான காரியங்களை செய்யும்படி ஏவிவிடுவதே, இப்படிக்கு கலகங்களுண்டாவதால் கிராமக்கோர்ட்டில் செய்யப்படும் அமுலுக்கு அடிக்கடி இடைஞ்சலுண்டாகின்றன. ஆனால் சீர்திருத்தமுற்றிருக்கும் தற்காலத்தில் அப்படி எதாவது நடக்கிறதானால் அதைப்பற்றி உடனே தாலுக்கா மாஜிஸ்ட்ரேட்டுக்குத் தெரிவிப்பதுதான் தாமசம் அதின்பேரில் தாலூகா மாஜிஸ்ட்ரேட்டானவர், இதைப்பற்றி மாஜிஸ்ட்ரேட்டினிடம் நடவடிக்கை நடத்திக் கொள்ள வேண்டியதென்று உத்திரவுசெய்துவிடுகிறார், அதின்பிறகு அதைப்பற்றிச் சமந்தப்பட்ட சப்மாஜிஸ்ட்ரேட்டுக்குத் தெரிவிக்கவேண்டிய தாயிருக்கிறது. அப்படிரிபோர்ட்டு செய்வதின் பேரில் கிராமமுனுசிப்பு சாக்ஷிகள் தேடவும அவர்களுக்குப் படிச்சிலவு செய்யவும் பிரயாணச்சிலவு முதலிய ஏராளமான சிலவு செய்யவும் சப்மாஜிஸ்ட்ரேட்டுகள் ஏற்படுத்தும் பல ஈரங்கிக்காலங்களில் எத்தனையோ மைல் அலைந்து கஷ்டப்பட்டு ருஜூகொடுத்தாலும சப்மாஜிஸ்ட்ரேட்டுகளுக் குண்டாகும் அபிப்பிராயங்களின் வேறுபாட்டினால் சில சமயங்களில் கேஸ் கெட்டுப் போகிறதுண்டு, ஒருவேளை சரிபாய் விசாரிக்கப்பட்டு குற்றவாளிக்குத் தண்டனையானாலோ அவனுக்கு விதிக்கப்படும் அபராதம் 1 அல்லது 2ரூபாய்தான். அதற்காக ரிபோர்ட்டு செய்த கிராமமுனுசிப்பின் கெதி என்னவாகிறது படிச்சிலவுகையாவில்பத்தோ இருபதோ? நஷ்டமும் பலநாள் அலைந்து திரிந்ததில் காலவிரயம் சரீரப்பிரயாசை, அகாலபோஜனம் இவைகளெல்லாமுண்டாவதோடு இவ்விதவியாச்சியங்கள் விசாரணையாகும் ஹை கோர்ட்டுகளில் கிராமமுனுசிப்புகளையும் அவர்களை அவமதித்த கக்ஷிக்காரர்களையும் ஒரே அந்தஸ்தில் நிற்கவைக்கிறார்கள். எவ்விதமான குற்றமும்தான் செய்யாதிருக்கும் நிலைமையில் கேவலம் தன்னை அலக்ஷியம் பண்ணியவனும் ஒருகிராமக்கோர்ட்டில் ஜட்ஜியாக நீதி செலுத்தும் தானும் இதரகோர்ட்டில் சமானமாக நடத்தப்படுவதானால் அந்த முனுசிப்புக்கு இதைவிட வெட்கமும் துக்கமுமான காரியம் வேறேயும் வேண்டுமோ? போலீஸ் டேஷன் ஆபீசர்கள்

ஹேட்கான்ஸ்டேபில்கள் இவர்களுக்கு மாஜிஸ்ட்ரேட்டுகள் தங்கள்கோர்ட்டுகளில் ஆசனம் ( Seat ) கொடுக்க வேண்டுமென்று கவர்ன்மெண்டு ஆர்டர் புதிதாக உண்டாகி அதின் பிரகாரம் நடந்து வருகிறது தெரிந்தவிஷயமே அந்த ஆர்டர்ப்படியே கிராமமாஜிஸ்ட்ரேட்டுகளுக்கும் ஏன் அப்படி நடத்தப்படாது? கிராமமாஜிஸ்ட்ரேட்டுகள் எல்லவிஷயத்தையுமநுசரித்துப் பார்த்தால்போலீசார்களைப்பார்க்கிலும் அந்தஸ்துள்ளவர்களென்பதற்கு யாதொரு தடையுமில்லை ஆகையால் அவர்கள் விஷயத்தில் இப்படி நடந்துகொள்வது அவர்களுக்குண்டாகிய அந்தஸ்துக்குக் குறைவாகத்தான்காணப்படுகிறது.

கிராமமுனுசிப்புகள் சம்மனை, 1816 வது ௵த்திய 4 வது ரெகுலேஷனையநுசரித்து கோர்ட்டுக்கு ஆஜராகும்படி அனுப்பியும் அதற்கு ஆஜராகாமலும் கோர்ட்டையோ அலக்ஷியம் செய்தும் வருபவர்களுக்கு 8 அணுவுக்கு மேற்படாமல் அபராதம் விதிக்கவும். அதைச்செலுத்தாத பக்ஷத்தில் 12 மணிநேரம் காவலில் வைக்கவும் கிராமமுனுசிப்புகளுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருந்ததுமல்லாமல் அதன்பிறகு 1887ம் வருஷம் உண்டான பில்லில் (Bill) அதிகமாக சில அதிகாரங்களும் வேண்டுமென்ற பிரேரேபணை செய்யப்பட்டிருந்தது. அப்படியிருக்கக்கடைசியாக ஏற்பட்டிருக்கும் 1889 ௵ 1 வது கிராமக் கோர்ட்டுகள் ஆக்ட்டில் அவ்வித அதிகாரங்கள் ஒன்றுமில்லாது எடுத்துவிட்டார்கள். சுமார் 80 வருஷங்களுக்கு முன்னமே கொடுக்கப்பட்டிருந்த இந்த அதிகாரத்தை அக்காலத்தைவிட எத்தனையோமடங்கு நல்ல அந்தஸ்திற்கு வந்திருக்கிறவர்களும் படித்திருக்கிறவர்களுமாகிய இப்போதைய கிராமமுனுசிப்புகளுக்கு எடுத்துவிடுவதென்றால் என்னமாயிருக்கிறது இதுவுமல்லாமல் இப்போது சொற்பசச்சரவு, சண்டை, ஒரு ரூபாய்க்கு உள்பட்ட சொற்பகளவு முதலிய விஷயங்களிலே 6 மணிநேரம் தொழுவில் போடுவது,12 மணிநேரம் காவலில் வைப்பதென்றும் அதிகாரங்கள் அநேகவருஷங்களுக்கு முன்னே கொடுக்கப்பட்டிருந்ததும் தவிற 1816 - ம் ௵ 5 வது கிராமப்பஞ்சாயத்துச் சட்டப்படி, பஞ்சாயத்தில் சேர்மாட்டேனென்று சொல்லும் குற்றத்திற்காக சம்பந்தப்பட்டவர்களுக்கு ரூபா 5 வரையில் அபராதம் போடும் அதிகாரமும் உண்டா[illegible]



றது. கல்வியறிவால்சிறப்புற்றுநாகரீகம்செழித்தஇக்காலத்திலே விவகாரவிஷயத்திலே எவ்வளவோ முன்னுக்குவந்திருக்குங்கிராம முனுசிப்புகளில் பெரும்பாலாரும் மற்ற கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களை (தீர்மானம் கொடுப்பவர்களை) ப்பார்க்கிலும் குறைந்தவர்களாகச் சொல்வதற்கில்லை ஆகையால், இக்கிராமமுனுசிப்புகளுக்கு மேற்சொல்லப்பட்ட அதிகாரங்களை எவ்வளவுக்கு அதிகப்படுத்திக் கொடுத்தாலும் அதனால் ஜனங்களுக்கும் கவர்ன்மெண்டுக்கும் நன்மையேயல்லாமல் கெடுதலேயே கிடையாது. மேலே சொல்லியிருக்கும் அசௌகரியங்களோடு இன்னும் அடியில் எடுத்துச் சொல்லப்போகிற பலவித இடையூறுகளை முன்னிட்டே கிராமமுனுசிப்புகளை தாராளமாகத் தங்கள் சிவில், கிரிமினல் அதிகாரத்தை நடத்துவதற்கு முன்வருவதில்லை. இது இப்படியிருக்கவும் கிராமமுனுசிப்புகள் ஆக்ட்ப்பிரகாரம் தங்களிடம் கிராமத்தார்களால் கொண்டுவரப்படும் வியாச்சியங்களை அவசியம் அங்கீகாரம் செய்து தீர்மானத்துக்குக் கொண்டுவரக் கடமைப்பட்டவர் களாய் இருக்கின்றார்கள் என்பதும் தவிர அப்படிக்கொண்டு வந்த வியாச்சியத்தை அசட்டை செய்தவர்களாய் அங்கீகரியாத கிராமமுனுசிப்புகளைப் பற்றி டிவிஷன் ஆபீசர்களிடம் மனுப்பண்ணிக் கொள்ளலாம் என்றுகொஞ்சம் காலத்திற்கு முன்னேதான் ரெவினியுபோர்டார் அவர்கள் உத்திரவுசெய்திருக்கிறார்கள். இவைகளெல்லாமொருபக்கமாகவும் தங்களுக்கு வேண்டிய அதிகாரங்கள் சரியாய அமுலுக்கு வந்து அவைகளுக்கான சௌகரியங்களெல்லாம் கிடைத்தாலொழிய மற்றபடி எந்தவிதமாகட்டாயப்படுத்தினாலும் என்னலாபம், காரியமும்சரிவரநிறைவேறாது. அறிவாளிகள் தொந்திரவான விஷயங்களில் அதிகமாகப்பிரவேசிப் பதினின்றும் தடுத்துக்கொள்ளவே பிரயாசைப்படுவார்கள்.

இதுவிஷயமாய் இங்கிலீஷ் வாசித்து முன்சீப்பு வேலைக்கு வந்திருப்பவர்களும் மற்றுமுள்ள விவகாரத்தில் தேர்ச்சியுள்ள முனுசிப்புகளும் விவரமாய் எழுதி கவர்ன்மெண்டார் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவந்து தங்களுக்குண்டாயிருக்கும் குறைகளை நிவர்த்தித்து தங்களுக்கு வேண்டியவைகளை நடப்பிக்கும்

பரிகாரம்தேடிக் கொள்ளலாமென்றால் அதற்கு வேண்டியசாக்ஷியங்களுக்கு யார் இவருக்காக முன்வருகிறவர்கள்? அப்படியாராவது ஒருத்தர் இரண்டுபேர் சாக்ஷியம் சொல்வதாய் வந்தாலும் அவர்கள் இவருக்கு அநுகூலமாகச் சொல்வார்கள் என்பது எப்படி எதிர்பார்க்கப்படும்? இவைகளையெல்லாம் தீர்க்கலோசனை செய்து பார்த்தால் கடைசி முடிவாகத் துஷ்டர்களுடையக் கொள்ளைக்கோ, கொடுந்துன்பத்திற்கோ ஆளாகி வருந்தவேண்டியதாய் முடிந்துவிடும். இதை நிவர்த்திக்கும்படி கவர்ன்மெண்டுக்குத்தெரிவித்துக் கொள்வதில் கவனிக்கவேண்டிய அம்சங்கள் சிலவற்றை இங்கு உதகரிப்பாம். தாசில்தார் முதலிய பெரிய அதிகாரிகளாக இருப்பவர்கள் முன்னமிருந்த ஏற்பாட்டில் கிராமக் கர்ணங்களை தங்களுக்குண்டாகும் கோபத்தின் வேகத்தால் சொற்பத்தவறுதலுக்குக் கூட உன்னுடைய சம்பளத்தைக்குறைத்துப் போடுவோம் காடாரம்பமான (பட்டிக்காடான) கிராமங்களுக்கு மாற்றிவிடுவோம், சஸ்பெண்டு செய்வோம் என்று பலதடவைகளிலும் பயமுறுத்துவது மல்லாமல் அப்படியே செய்து வருவது சகஜம் இதனாலேயே கர்ணங்கள் கூரைக்கட்டு வீட்டில்தான் குடியிருக்கிறது. தங்களைத் திடீரென்று வேறுகிராமத்திற்கு மாற்றிவிடும்படி நேரிடுமானால் பிரயாணப்படுவதற்குத் தடங்கலிருக்காதென்பதே அவர்கள் கொண்ட அபிப்பிராயமாம். இப்படிப் போக நேரிடுவதால் இவர்களுக்குண்டாகும் கஷ்டநஷ்டங்களுக்கோ சொல்லமுடியாது சம்பளமோ கொஞ்சம், மாற்றப்படும் கிராமங்களோ தொலை தூரத்திலிருப்பவை; அங்கேபோய்ச் சேர்ந்ததும் எல்லாம் புதிதாய் வாங்கித்தான் ஆகவேண்டும், அதனாலுண்டாகும் வருத்தமோ அதிகம் இவைகளெல்லாம் தமது குடிகளின் குறைகளுக்குச் செவிகொடுத்துக் கேட்டு அவைகளை நிவர்த்திப் பதில் அதி ஊக்கங்கொண்ட நமது ரெவினியு போர்டார் அவர்களுக்கு காருண்யம் பொருந்திய கவர்ன்மெண்டாரும் கவனித்தவர்களாய் தற்காலத்திலே கிராமக்கணக்கர்களை எந்த சந்தர்ப்பத்தை யொட்டியும் ஒருகிராமத்திலிருந்து மற்றொரு கிராமத்திற்கு மாற்றக்கூடாதென்று கண்டிப்பான உத்திரவைப் பிறப்பித்திருக்கிறார்கள். இதனால் இப்போது கர்ணங்களுக்குண்டாயிருக்கும் சுகத்தி

ற்காக கவர்மெண்டாருக்கும் போர்டாருக்கும் நன்றியறிதலைச் செலுத்தக் கூடியவர்களாயிருக்கிறார்கள்.

ஆனால் ஒன்று, கிராமத்தார் முன்னமே குறிப்பிட்டிருக்கிறது போல, கர்ணங்களோடு விரோதம் செய்துகொண்டு ஷை கர்ணங்களைவருத்த ஆரம்பிக்கும் போது அதைப் பொறுக்கமாட்டாத கர்ணங்கள் தங்களை வேறு வட்டத்திற்கு மாற்றும்படி கேட்டுக் கொள்ளும் கேசுகளில் மேலதிகாரிகள் அந்தப்படியேசெய்துவிட வேண்டும் விதிகள் ஏற்பாடாக வேண்டியது அவசியமானதாயும் நியாயமானதாயும் இருப்பதை நமது காருண்யம் பொருந்திய கவர்ன்மெண்டார் அவர்களும் ரெவினியுபோர்டார் அவர்களும் மேற்சொன்ன விதமாக விதிகளேற்படுத்தி கிராமக் கர்ணங்களை சமரக்ஷணை செய்து வருவதோடு கிராமபரிபாலன விஷயத்திலும் வேண்டிய சீர்திருத்தங்களையுண்டாக்கிக் கிராமக்குடிகளுக்கு வேண்டிய க்ஷேமத்தையநுசரித்து வேண்டியவைகளைச் செய்துவரும்படி ஷை குடிகளால் விரும்பப்படுகிறது.

---

## தர்பார் கொண்டாட்டம்.

---

2-வது ஸஞ்சிகையின் 17-வது பக்கத்தொடர்ச்சி,

ஆகையால் நம்முடைய ஒற்றுமையை நமக்கும்நம்முடைய பலத்தை உலகத்திற்கும் எடுத்துக்காட்டுகிற ஒரு சிறந்த வெகு ஜனமகுத்துவங்கொண்ட செயலாக இந்த டில்லிதர்பார் சடங்கை நாம் மதிப்பது முண்மையே மணிக்கணக்காகவும் நாள் கணக்காகவும் மனதைப் பிரமிக்கச் செய்வித்துப் பிறகு அடியோடே மறந்து போவதற்காகச் செய்த ஆடம்பரலோக மோக்கத் தெளவதற்கல்லவே அல்ல, என்பது முக்காலும் உண்மையே.

நாம் எடுத்துச் சொல்லுகிறபடி இந்த ராஜதர்பாரை பிரிடிஷ் காலத்திலே ஏற்படுத்திய லார்ட்லிட்டன் அவர்கள், இவ்வளவாடம்பரமில்லாமலும் ஏதோ சில உத்தேசங்களினாலே செய்ததானாலும் இராஜ சர்தார்களாலேயும் புத்தி பூர்வமாகவும் மெச்சக்கூடிய ஒரு தாரணமாக்கினார்.

1877ம் வருஷம் ஜனவரிமாதம் முதல்தேதியில் கூடிய ராஜ தர்பாரினாலே அதிக நன்மை யுண்டானதென்பதற்கு யாதொரு சந்தேகமுமில்லை. கடவுளினுடைய ஆசீர்வாதத்தாலே அதேமாதிரியானதும் அதைவிட அதிகமானதாகவுமான பலன் இந்த 1903ம் வருஷம் ஜனவரி மாதத்தில்நடந்த இராஜ தர்ப்பாரினாலுண்டாம் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

லார்டு கர்ஸான் அவர்கள் தம்முடைய உபந்நியாஸத்திலே இந்தியாவின் சிற்றரசு நாடுகளினாலும் சாதாரண இடங்களினாலும் அந்தந்த இடத்திற்குரிய நிர்ப்பந்தமான பூர்வீக வழக்கத்தையொட்டிய யேற்பாடுகளு

ண்டு ஒவ்வொரு சமஸ்தானமும் தன்னையடுத்த பிரதேசங்களுக்குச் சம்மந்தப் போக்கு வரவு இல்லாக்குறையுமலாம் ஆனால் ரெயில்வண்டிகளினாலும் முன்னிருந்த மௌடீகம் வரவர குறைவு பட்டதாலும் பழைய வழக்கங்களெல்லாம் குறைந்து விட்டன. எல்லா வைப்புகளுமடங்கிய டில்லியின் மகா சபையினாலே பிரதி பேர்வழிக்கும் தான் அடங்கியிருக்கும் இராஜாங்கத்திற்கும் அநேக விதமான சுகங்கள் உண்டாகின்றன.

டர்பாரின் சிலவைப்பற்றிக் குறிப்பிட்டு ஒரு பொறுப்புள்ள அதிகாரி தான் பிரயோஜனமற்ற ஆடம்பரத்திலே உப லக்ஷம் சவரன்கள் கொட்டி விடப்போகிறதாகச் சொன்னாரென்றும் ஆனால் பொது ஜனங்கள் அதைப்பற்றி செட்டுத்தனமான வழியிலே எது எதை எப்படிச் செய்யவேண்டுமோ அப்படியாக இப்போது நடத்துகிற ஏற்பாடுகள் நடக்கின்றதென்பதை அறியவேண்டுமென்று சொன்னார்.

கட்டடங்கள் முழுவதும் கூடாரங்களும் குதிரைகளும் வண்டிகளும் டில்லியிலே தர்பாருக்குப் பிறகு பகிரங்க ஏலத்தில் விடப்பட்டு அதினுடைய வசூலானது 100க்கு 60வது அல்லது 100க்கு 100வது ஆகுமென்று நம்பப்படுகிறது. இராஜதர்பாருக்கு ஏற்படுத்திய காத விளக்குகளெல்லாம் இராணுவவிடுதிகளை (Militarybarracks) ப்பிரகாசிக்கச் செய்வதிலும் காற்றுகள் தாராளமாக நடமாடச்செய்வதிலும் உபயோகப் படுத்தப்படும். அநேகவிதமான கைத்தொழிற்சாலைகளிலும் சுதேச சமஸ்தானங்களிலும் தர்பாருக்கென்றே செய்யும்படியாக நியமிக்கப்பட்ட அநேகமாயிரம் சிப்பிகளையுங் குறிப்பிட்டு பொதுவாய் ஜனங்கள் அடுக்குவரிசைகளிலும் அநேகவிதங்களிலும் அழகிலும் ஏற்பட்ட கைத்தொழில் விநோதசாக்ஷிகளைக் கண்டு பிரமித்துப்போவார்கள் என்றும் மனதார உறுதியாய்ச்சொல்லுகிறார். அநேகர் நினைத்திருந்தபடி இந்தியாவின் கைத்திறவேலை அவ்வளவுக்கு குன்றிப் போகவில்லை என்பது இதனால் நன்றாய்த்தெரிகிறது.

பிரசங்கத்தின் முடிவில் அவர்சொன்னதாவது ரோமாபுரி எரிந்து போகவில்லை, ஆனால் பெரும் வாழ்வின் பலனை யநுபவிப்பதில் பிரவேசித்திருக்கிறதேயல்லாமல் என்றும் அதியுண்மையாகவே நீளவானது நிர்த்தனங் கொண்டானந்திகவில்லையென்று காட்டுவதற்காகப்போதுமான வரையிலும் சொல்லியிருக்கிறதாக நினைக்கிறேன் " என்பதே.

இந்தியாவில் எதிர்காலத்தை முன்னிட்டு அதிக எண்ணங்கொண்டவனல்ல. நாம் எதிர்பார்க்காத என்னென்ன மாறுதல்கள் உள்ளும்புறமுமாக நமக்கென்றிருக்கின்றனவோ நாம் சொல்லமுடியாது ஆனால் மாறுவீசமாகச் சொல்லுமிடத்து தெளிவான மனதோரும் சந்தோஷமான விநியத்தோடு டில்லியில் கூடப்போகிறதில் நாம் கூடுகிறதைத் தடுக்கும்படியாக ஏற்கெனவே இதற்கும் ஜனவரிக்கு நடுவிலிருக்கும் சில மாதங்களிலே படக்கூடியதாக ஒன்றையும் நாம் எதிர்பார்க்க வேண்டுவதில்லை. இப்போது தான் இங்கிலாந்தில் நடந்திருக்கிறதைவிட குறைந்த விதமாய் இல்லாமற்படி நடத்தப்பிரயாசைப் படுவதொன்றேயிருக்கிறது.



உலகத்தின் அநேக பாகங்கள் அடுத்த ஜனவரியிலே டில்லியை பற்றிக்கவனிக்கும் தம்முடைய சகோதரரின் முனைபான இராஜசக்கிரவர்த்தியினிடத்திலுண்டாம் இந்தியாவின் இராஜபக்தியை எடுத்துக்காட்ட மாத்திரமல்ல ஆனால் உலகத்துக்கு இந்தியாவானது மழுங்கி மற்றிசொண்டு ஊழிநாற்றங்கொண்டு போகவில்லை ஆனால் எப்போதும் பூர்வகாலம் போல வளர்ந்து கொண்டிருக்கும் ஊக்கத்தாலும் உற்சாகத்தாலும் உயிர் பெற்றிருக்கிறது.

இந்தியா முழுவதும் ஏகமனதாய் கருத்தும் வாக்கும் ஒன்றுபடவேண்டுமென்பது என்னுடைய அன்பார்ந்த கோரிக்கை. டில்லியில் இவைகளைக்கண்டு களிக்கக் கூடாதவர்கள் இப்படிப்பட்டவை பலங்களை இவ்விதமாகவே தங்கள் தங்களிருப்பிடங்களுக்கருகே ஏற்படுத்திக்கொண்டாடுவார்கள் என்பதும் நமது அன்பார்ந்த கோரிக்கை. இதற்காக ஏற்பாடு செய்வது நமது கோறிக்கையாக விருக்கிறது

## நம்மிந்தியாவில் வறுமையும் வியாதியும் கருப்பும் தலை காட்டுவானேன்.

அந்நிய தேசத்தரசராலும் முடிமன்னராலும் பூர்வதிக்கிலே பொன்னாய் விளையும் புண்ணிய பூமியொன்றிருக்கிறதாமே அதற்குப்பெயர் ஆரியதேசமாமே அதில் மனிதர் சஞ்சரிக்கும் பாதைகளெல்லாம் பசும்பொன்னாற்றளவரிசை யிட்டதாமே அதன் ஒழுங்கு பெற்ற இராஜ வீதிகளெல்லாம் அதியுன்னதக் காக்ஷியாய் அநேக அடுக்குகளையுடைய அழகிய கட்டடங்களாய் நிறையவும் அவைகளின் மேன் மாடிகளெல்லாம் அண்டமளாவிய சிகரங்களையுடையனவாய் கொண்டல் கவியும கொடுமுடிகளையும் புண்டரீகாக்ஷன் பொன்முடிபோலும் பொலிவுற்று கண்டவர் மனமும் கண்ணுங் கொள்ளை கொண்டுண்ணும் காக்ஷியனவாமே அதில் வசிக்கும் ஜனங்களோ அஷ்ட லக்ஷ்மீகளும சமதிஷ்டங்கொஞ்சி விளையாடும் கோரை தாரிகளாமே இப்படிப்பட்ட தேசத்தை நாமெப்போதாவது நமது ஜன்மாந்தரத்திற்கண்டு களிக்கப்போகிறோமோ என்று ஏங்கச்செய்விக்கும் திறத்தினதாகிய பரதக்கண்டம் என்னும் நம்மிந்துதேசத்தின் அபாரச்செல்வமே அயல்நாட்டு மன்னரெல்லாம்படையெடுத்து வந்ததற்குக் காரணமென்று சரித்திரக்காரர்கள் சொல்லியிருக்கிறார்கள் கர்ண பரம்பரையாக அப்படியே சொல்வதையும் கேட்டுள்ளோம். ஆதிகாலத்துப் புராணங்களாலும் இதிகாசங்களாலும் இன்னுமுள்ள இதர காவியங்களாலும் இந்ததேசமானது மட்டற்ற செல்வச் செறுக்கால் மாக்ஷிமைகொண்டு குபேரசம்பத்துக்கும் மேலிட்டதாய் யதத்து விளங்கியதைப்பற்றி அநேகர்தடவைகளில் படித்திருக்கிறோம். கல்வித்திறத்திலும் விஷயங்களையறியும் நுட்பத்திலும் சத்துருக்களை[illegible] சாமர்த்தியத்திலும், அரிய நூல்களாகிய அங்கம், கணிதம், சிற்பம் முதலியவைகளிலும், வேத வேதாங்க இதிகாசம்

முதலிய விவேக நூல்களிலும், பிரம வித்தையாகிய வேத வைத்திய சோதிஷ மாந்த்ரீகாதி மர்மவித்தைகளிலும், கல்லாலும் கரையச்செய்யும் கானவித்தை, நாடகாலங்காதிகளின் வித்தையும், ஆதர்ஷணாதி அஷ்டமாசித்தியிலும் அஷ்டலக்ஷ்மி விலாசத்திலும் சித்திர வேலையிலும் சிறந்த கைத்தொழில் தேர்ச்சியிலும் நம்மிந்தியாவானது ஒரு காலத்திலே உன்னத நிலையிலே ஒப்பற்றிருந்தது என்பதை சுதாரூபமாகவும் கர்ண பரம்பரையாகவும் படித்தும் கேட்டுமுள்ளோம். கவிவர்ணனைக்கு இலக்காகுமப்படி பல நகரங்களிலே இராஜ வீதிகளில் மேல் மாடிகளின் பூரண மதியம் போது புளகாகிதங்கொண்ட மகளிர்தம் நாயகரோடும் ஊடல் கொண்டு பழற்றி எறிந்த மகரகண்டிகைகளையும் தாளமாலைகளையும், மாணிக்கசடகங்கள் முதலிய விலையுயர்ந்த ஆபரணங்களையெல்லாம் வழியோர் அங்கங்கே சிதறிக் கிடக்கக்கண்டு பொறுக்கிக் கொண்டு ஜீவித்தனர் என்று எழுதியிருப்பதை வாசித்துமிருக்கிறோம். அப்படியே நடந்ததாக நாம் கொள்ளாவிட்டாலும் அப்படிப்பட்ட கதைகளை எழுதினவர்கள் இவ்வளவு விஷயங்கள் அவர்கள் மனதிற்படுவதற்குப் பிறவிச்செல்வர்களா அல்லது அஷ்டதரித்திரர்கள் என்பதை மட்டும் நம் கவனிப்போம். இவ்வளவு அபாரமாகவர்ணிக்கவேண்டுமானாலும் கேவலம் நித்தியதரித்திரனாயிருப்பவன் முத்துமாலைகளையும் மோகனமாலைகளையும் கடக கங்கணங்களையும் வயிரவொட்டியாணங்களையும் நினைக்கத்தானுண்டோ. அப்படி என்றால் அந்நாளில் நம்மிந்தியாவிலே செல்வச்செழிப்பின் மிகுதியைக்காட்டுவதற்கிதுவோ ரத்தாக்ஷியென்றே சொல்லவேண்டும்.

தற்காலத்திலோ நம தேசத்தை வறுமை முதலிய கொடிய நோய்களும் க்ஷாமமும் பரவிவாட்டுவதால் நம்தேசம் படும்பாடு சொல்லவும் வேண்டுமோ! இங்கிலீஷ் ராச்சியத்திலே நமக்கென்னகுறை? நிர்ப்பயமாக வாழும் ஸதுர்யில் நம்முயிரும் சொத்தும் நம்முடையது தானே. அக்காலங்களிலே ஆண்ட அரசர்கள் ஆஞ்ஞாசக்கரங்கொண்டு ஆடாத காரியம் செய்பவர்களை அங்கங்கே தண்டித்து அரசு செலுத்தினார்களென்று அலங்காரமாகச் சொல்வார்கள். அது சொல்லளவிலே தானிருக்கலாமே யொழிய வேறில்லை. ஆனால் நம் பரதக்கண்டத்து அநேக அரசர்கள் அறநெறி தவறாது செங்கோல் நடத்தினார் என்பதிற் சந்தேகமேயில்லை. அக்காலத்திலும் அநீதி செலுத்திய அரசர்கள் சிலர் இருந்திருக்கலாம் என்பதிற் சந்தேகமில்லை. இப்போது நமது ஆங்கிலேய அரசாக்ஷியானது அகண்ட சாம்பிராச்சியத்தோடே சூரியன் அஸ்தமிக்காத அவ்வளவு பெரிய பூமண்டலமெல்லாம் பரந்திருந்து எந்தப்பக்கத்திலாவது ஏதாவது குறைகூறுவாருண்டா? பேசக்கூடாது நாட்டிலே திருடர், கொலைஞர் துஷ்டர் பயமென்பதே கிடையாது. இப்படிப்பட்டவர்கள் என்று யாராவது தலை நீட்டினால் துரைத்தனத்தார் அவர்களை அப்போதே அடக்கிவருவதற்கு வேண்டிய சாதனங்களைச் செய்திருக்கின்றனர். வெளிநாட்டார் நம்தேசத்து செல்வச்செழிப்புக்குமுன்னே அடிக்கடிப் படையெடுத்து வருவார்களே இப்போது அப்படிப்பட்டவையேதாவதுண்டா? இடையிலே கிடையாது.

---



## இவ்வருஷம் சென்னையில் நடக்கப்போகிற காங்கரெஸில், யோசிக்கப்படவேண்டிய விஷயங்கள்.

I. இந்தியா மந்திரியவர்கள் கவுன்ஸில், இந்தியா கவர்ன்மெண்டு கவுன்ஸில், லோகல் கவர்னர்களின் கவுன்ஸில், இவைகளில் இந்தியமெம்பர்கள் இருக்கவேண்டுமென்பது.

II. நிலசுவான்தாரர்களும், மிராசுதாரர்களும் சர்க்கார்த் தீர்வையாலும் காலமழைக் குறைவாலும் துன்பங்களை அநுபவித்துவருகிறார்களென்றும், அதை எந்தவிதத்தில் குறைக்கலாமென்று கவர்ன்மெண்டார் ஆலோசித்து ஒரு ஏற்பாடு செய்யவேண்டுமென்றும் தீர்மானித்தல்.

III. கைத்தொழில்வித்தியாசாலைகள், கைத்தொழிற்சாலைகள், இவைகளை ஸ்தாபிக்கவேண்டிய விஷயத்தில் அதன் கர்த்தாக்களுக்கு தாராளமான கிராண்டு கொடுக்கும்படியான சட்டம் செய்தல்.

IV. கவர்ன்மெண்டாருக்கு வேண்டிய சாமான்களை இந்தியத்தொழிற்சாலைகளிலேயே வாங்கும்படி செய்தல்.

V. தற்கால இராஜப்பிரதிநிதியாகிய லார்ட்கர்ஸன்பிரபு அவர்களை இன்னம் 2-வருஷகாலம் இந்தியாவை ஆளுகை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுதல்.

VI. ஒவ்வொரு இராஜதானிப் பிரிவுகளிலும் 10 - பேர்களுக்குக் குறைவில்லாமல் அதாவது மொத்தத்தில் பிரதிவருஷத்திலும் 50 - பேர்களை இங்கிலாண்டுக்கு கவர்ன்மெண்ட் செலவில் அனுப்பி பலதொழில்களையும் கற்றுவரும்படி செய்வித்தலும் வேண்டுமென்று கவர்ன்மெண்டாரைக் கேட்டுக்கொள்ளுதல்.

VII. லோகல்போர்ட் ஆபீசுகளில் உத்தியோகமில்லாத மெம்பர்களை வைஸ் பிரஸிடெண்டாகவும், பிரஸிடெண்டாகவும் நியமிக்கவும் ஜனங்களுக்கு எங்கும் எலெக்ஷன் சுதந்திரத்தைக் கொடுக்கவும் கோருதல்.

VIII. எந்த நாகரீகம்பெற்ற தேசங்களிலும், எந்த பார்லிமெண்டு சபைகளிலும், கட்சிப் பிரதிகட்சிகளும், மனஸ்தாபங்களுமிருக்கும் ஆகையால், அம்மாதிரி விஷயங்கள் முன்னிட்டு முனிஸிபாலிடிகளின் சுதந்திரங்களை குறைக்கக்கூடாதென்றும், இப்போதிருக்கும் சுதந்திரங்களைவிட இன்னும் அதிக சுதந்திரங்களைக் கொடுக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளுதல்.

IX. சுதேச அரசர்களும், ஜமீன்தாரர்களும், பிரபுக்களும், கைத்தொழிற்சாலைகளை அங்கங்கு ஸ்தாபித்து வரவேண்டுமென்றும், ஒவ்வொருவிஷயத்திலும் முழு அம்சத்திலும் கவர்ன்மெண்டாருதவியை நாடுவது உசிதமல்லவென்றும், தேசத்தின் தரித்திரத்தையும், ஜனாபிவிருத்தியையும் உத்தேசித்து நமது ஜனத்தலைவர்களைக்கொண்டு வேண்டிய காரியங்களையும் தேடவேண்டுமென்றும் தீர்மானித்தல்.

## கிராமமுனுசிப்புகள் சிவில் விவகார விஷயமாய் நடந்துகொள்ளவேண்டிய விஷயங்கள்.

(4-வது சஞ்சிகையின் 9-வது பக்கத்தொடர்ச்சி.)

இதற்குமுற்பட்ட சஞ்சிகைகளிலே இவ்விஷயத்தைப்பற்றி விவரமாக எழுதப்பட்டிருக்கிறது. அதாவது ஒரு பிராதைக் கோர்ட்டுக்குக் கொண்டுவந்தால் அதைப் பெற்றுக்கொள்ளும் விவரத்தையும், அதில் எழுதியிருக்கப்பட்ட அம்சங்களைப் பரிசோதிக்கும் விதத்தையும் அப்படிப்பரிசோதிக்கும்போது பிழைகள் ஏற்பட்டால் உடனே வாப்சு செய்வதற்குவேண்டிய விஷயங்களையும் தெளிவாய் எடுத்துக்காட்டியிருக்கின்றது, எல்லோர்க்கும் தெரிந்தவிஷயமே.

இந்த சஞ்சிகையில் அதற்குமேல் என்ன நடக்கவேண்டுமோ அதைப் பற்றி விவகரிக்கின்றோம்.

ஒரு பிராதைக்கொண்டுவர வாங்கிக்கொண்டு பிறகு அதைப்பரிசோதிக்கும்போது தப்பிதங்கள் ஏதாவதிருககுமானால்உடனே திருப்பிக்கொடுத்து அதைப் பிராதுக்காரன் சரிப்படுத்திக்கொடுக்கவும்வாங்கிக்கொண்டு அதிலிருக்கும் விஷயங்களைச் சுருக்கமாக அடியிற்கண்டிருக்கும் விதமாக ஒரு பதிவு புஸ்தகத்தில பதிந்துகொண்டு அந்தப்பிராதின்மேலேயுள்ள எண்டார்சுமெண்டிலும பிராதின் தலைப்பிலும் ஷை கோர்ட்டின் 1903ஹூ த்திய சிவில்நம்பர் என்பதின்தொடர்ச்சியாக நம்பர்கொடுக்கவேண்டியது.

திருஷ்டாந்தமாக:—அரியலூர் கோர்ட்டு 1903ஹூத்திய சிவில் கெ. 1, இந்தப்பிறகாரம் எத்தனைபிராதுகள் பிடிக்கப்படுகிறதோ அத்தனைக்கும் நெம்பர் போட்டு "அங்கீகரிக்கப்பட்டது." அல்லது "பைல்செய்துக்கொள்ளப்பட்டது" என்பதாக எழுதித் தேதியுங் குறிப்பிட்டு அதில் கிராமமுனிசிப்பாகிய தான் கையெழுத்துச் செய்யவேண்டியது,

இவ்விதமாக அங்கீகாரம் செய்யப்பட்டப்பிராதை விசாரிப்பதற்காக ஒரு நாளை யேற்படுத்திக் கிராமக் கோர்ட்டார் அச்சுப்பாரம் பிரகாரம் பிரதிவாதி கோர்ட்டுக்கு ஆஜராகி பிராதிற்கண்ட அம்சங்களுக்குச் சரி சொல்லவேண்டுமென்றெழுதிய சம்மனையனுப்பிப்பிரதிவாதிக்குஉத்திரவு பிறப்பிக்கவேண்டும். அப்படிச்சம்மன் அனுப்பும்போதுபிராதுக்காப்பியும் பிரதிவாதிக்குச் சேரும்படி யனுப்பவேண்டும். பிரதிவாதிகள் ஒருவருக்குமேற்படும்பக்ஷத்திலே ஒவ்வொரு பிரதிவாதிக்கும்தனித்தனி காப்பி கொடுப்பதற்காக அத்தனை சம்மன் காபிகளும் பிராதின் காப்பிகளும் கொடுபடவேண்டும். ஆனால் அசல் சம்மன் விஷயத்திலே ஒரு பிரதி போதும்,

உதாரணமாக:—ஒரு பிராதில் பிரதிவாதியாக ஒரே பேர்வழியாயிருக்கும் பக்ஷத்தில் அசல் சம்மன் 1, சம்மன் நக்கல் 1, பிராது காப்பி 1, போதுமானது.

அப்படிக்கில்லாமல் பிரதிவாதிகளாக 4 பேர்களிருப்பார்களானால் அவர்களுக்காக அசல் சம்மன் 1 சம்மன நகல்கள் 5, பிராதுக்காப்பிகள் 5 கொடுக்கவேண்டியது. சம்மன் நக்கல்களைத்தான் கிராமமுனிசிப்பு எழுதவேண்டியது, பிராது நக்கல்களெல்லாம் முன்னமே செப்பனிட

தத்திய சஞ்சிகையில் கண்டிருப்பதுபோல பிராதுக்காரனே பிராதுடன் அதற்குப் போதுமான நக்கல்களும் தாக்கல் செய்திருப்பதால் கிராமமுனுசிப்புகள் வேறுநக்கல்கள் எழுதவேண்டுவதில்லை வாதிதாக்கல் செய்த பிராது காப்பிலயச்சம்மனுடன் அனுப்பவேண்டுவது அவசியம். அப்படிக் கிராமச் சேவகன் சம்மனைப்பிரதி வாதிகளுக்குச்சேர்ப்பிப்பதற்காகப் பெற்றுக்கொள்ளும் போது அசல் சமமன்பேரில் வெண்டார்ஸ்மெண்டு உத்திரவு இனிவிவரிக்கப்படும் விதமாக எழுதிதம்முடைய (கிராமமுனிசிப்பு) கையெழுத்தும் போடவேண்டும். (இன்னும்வரும்.)

# மதராஸ் ஹைகோர்ட்டார்.

## செஷன்ஸ் கோர்ட்.

திருச்சினாப்பள்ளிக் காட்டுக் காவலாளியைச் சுட்டகேஸ் :—இந்தக் கேஸ் நவம்பர்மாதம் 9-ந்தேதி விசாரிக்கப்பட்டது அப்போது ஜூரிகளுக்கு செஷன்ஸ் ஜட்ஜ் பின்காட்டியபடிச் சொன்னார், "ஜூரிகள் இந்தக்கேஸைப்பற்றி முன்கேட்டது வாசித்தது யாவும் மறந்துவிட்டு உங்கள் முன்னால் சொல்லப்பட்ட சாட்சி ஒன்றையே யோசிக்கவேண்டியது. இந்தக் குற்றவாளியை ஹைகோர்ட்டுக்குக் கமிட் செய்யவேண்டுமென்று சொன்ன பொறுப்பு ஹைகோர்ட்டாரைச் சேர்ந்தது.

"இனி இந்தக்குற்றவாளி குற்றம்செய்தானா என்றும்; குற்றவாளிதான் காமருடனைச் சுட்டானென்றும் ஜூரிகள் இப்போது யோசிக்கவேண்டும். 1902-ம் வருஷம் ஆகஸ்டுமாதம் 5-ந்தேதி லிங்கால்ன் ரெஜிமெண்டிலிருந்து 3-வேட்டைக் கும்புகள் காட்டுக்குள் போயின. இந்தக் கும்பு ஒவ்வொன்றிலும் மூன்று சோல்ஜர்கள் இருந்தார்கள். இந்த மூன்று கும்புகளில் ப்ரோட்டன்கும்பு 5-ந்தேதி வெளியில் வேட்டைக்கு போக [illegible]. கிங் கும்பு அந்தத்தேதி காட்டுக்குப்போயிற்று. இந்தஇரண்டு [illegible] (ப்ரோட்டன், கிங்,நம்பினால் அன்றைக்கு அந்த இடத்துக்கு [illegible] கும்பு வேட்டைக்குப்போகவில்லையென்று ஸ்பஷ்டமாகிறது. [illegible] கும்பு [illegible] லேனும் அந்தக் காட்டுக்குப்போனார்களா என்று யோசிக்க வேண்டும். [illegible] லேனும் காட்டுக்குள்போகவில்லை. காட்டுக்குப் பக்கத்தில் போனோமென்றார்கள். இன்னும் காமருடன் சொன்னதை யோசித்தால் அவர் ஆசுபத்திரியில் புண்ணோடு இருந்தபோது ஒன்று சொன்னார்; கமிட்டிங் மாஜிஸ்ட்ரேட் முன்பாகப் பிறகு அடுத்த அக்டோபர் [illegible] மற்றொருவிதமாய்ச் சொன்னார்.

"பிறகு தெக்குவேலன், ஆறுமுகம் இவர்கள் சொன்ன சாட்சியைப் பார்த்தால் அன்றும் காமருடன் முன்பின் வித்தியாசமாய்ச் சொல்லியிருக்கிறான். இந்த இருவரும் ஸோல்ஜர்கள் என்னை அடித்தபோது நேரப் பார்த்துக்கொண்டிருந்தார்கள் என்றது பொய்யாயிற்று. பிறகு அந்தக் குற்றவாளிதானா காமருடனைச்சுட்டு அடித்தவன் என்று யோசிக்கவேண்டும். ஆகஸ்ட் மாதம் 7-ந்தேதி காமருடனை அடித்தவன் இன்னானென்று காமருடனால் கண்டுபிடிக்கமுடியவில்லை பிறகு அந்தமாதம் 25-ந்தேதி நான்கு [illegible] லேனும் பாஸ்டும் இல்லாமல் காமருடன் முன்

கிறுத்தப்பட்டார்கள். அப்போது டெஞ்சும் எமர்ஸனுந்தான் காமருடினுல் கண்டுபிடிக்கப்பட்டார்கள். இந்த மாதிரிக்கண்டுபிடிக்கப்பட்டது முக்கியமான காரியம். அதை நீங்கள் யோசிக்கவேண்டியது.";—என்று ஜூரிகளுக்குச் சொன்னார். அப்போது ஜூரிகள் ஒருமிக்க எல்லாரும் குற்றவாளி தப்புசெய்யவில்லையென்று கருத்துசொன்னார்கள். அதன்பிறகு ஜட்ஜ் நீ குற்றம் செய்யவில்லை. கோர்ட்டைவிட்டு வெளியில் போகலாம் என்று குற்றவாளிக்குச் சொன்னார். அவன் அப்படியேவெளியில்போகவே அவனுக்கும் பல தோழர்கள் உபசாரவார்த்தைகள் சொன்னார்கள்.

# TELEGRAMS.

## தந்தி சமாசாரங்கள்,

---

லார்டு மில்னர் தமக்கு கலோனியல் செக்ரடரிவேலை வேண்டாமென்று நிராகரித்தார். ஆதலின் Mr. சேம்பர்லேனுக்குப் பதிலாய் லார்டு ஸெல்போர்னை நியமிப்பார்கள்போலும். காலியான மந்திரி ஸ்தானங்களில் புதிய மந்திரிகளை யேற்படுத்திவிட்டதாயறிகிறோம்.

துருக்கியும் பல்கேரியாவும் சண்டை போட்டுக்கொள்ளுகின்றன. இரண்டுகக்ஷிகளிலும் அநேகர் கொலையுண்டார்கள். கலகக்காரர்களைத் துருக்கிசைன்யங்கள் துரத்துகின்றன. தினந்தோறும் ஐரோப்பாவிலும் மஸிடோனியாவிலும் துருக்கர்கள் செய்யும் அக்கிரமங்கள் பிரஸ்தாபமாகின்றன. இங்கிலாண்டிலுள்ள காண்டர்பரி ஆர்ச் பிஷப் மிஸ்டர் பால்பருக்கு எழுதிய நிருபத்தில் மஸிடோனியாகிறிஸ்துவர்கள் பிரிட்டிஷ்க் கவர்ன்மெண்டார் ஸம்ரக்ஷிக்கவேண்டுமென்று கூறியிருக்கிறார். ஸோபியாவில் துருக்கிசைன்யங்கள் பல்கேரியரின் வாஸஸ்தலங்களில் நெருப்பை வைத்துக் கொளுத்தித் தெருக்களிற்சென்றவர்களை யெல்லாம்கொன்று பிரளயகாலருத்திரர்களைத்போல் விளங்கினார்களாம். இரண்டுதினங்கள் வரை ராஸலாக்பட்டண வாஸிகளான கிறிஸ்துவர்கள் சுல்தானுடைய போர்வீரர்களை யெதிர்த்துக் கடைசியில்தோற்று ஓடிப்போயினர்.

லண்டன், அக்டோபர் 6உ யுனைடட் ஸ்டேஸட் பிரெஸிடெண்டாகிய மிஸ்டர் ரூஸ்வெல் துரையைகொல்லவெண்ணிய ஒருவனை வொயிட் அவுஸ என்னுமிடத்தில் கைதி செய்தார்கள். இதுவுமன்றி ஷை துரையை யாரும் கொல்லாதபடி அதிஜாக்கிரதையாய் பாதுகாத்துவருகி[illegible]

லண்டன் அக்டோபர்மீ 6உ:—தற்போது இந்தியாவில் [illegible] போவர்க்கைதிகளை இங்கிலீஷ்க்காரர்களுக்குக் கீழ்ப்படியச்செய்[illegible]ருட்டு ஷை போவர்களின் தளகர்த்தர்களாகிய மெஸ்ஸர்ஸ் டிவெட், [illegible]ரே, போதா ஆகியமூவரும் இந்தியாவுக்கு வருவார்களாம். அவர்கள் இம் மாதம் 9உ புறப்படுகின்றனர்.

கல்கத்தா அக்டோபர் 7உ:— சென்ற செவ்வாய்க்கிழமை தினம் மிஸ்டர் R. நீம் என்பவர் துப்பாக்கியால் தனது குமாரனாகிய 16 வயதுள்ள குஸ்தால் என்பவனை தற்செயலாய் சுட்டுவிட்டார். அது பின்வருமாறு. ஷை R. நீம் தாழ்வாரத்தில் நின்றுகொண்டு எதிர்த்தாழ்வாரத்திலுள்ள மண்சுவற்றின்மேல் துப்பாக்கியை வய்கையில் மத்தியிலுள்ள

ஹாலின் மேஜையினருகில் உட்கார்ந்து வாசித்துக்கொண்டிருந்த அவரது குமாரன்மேல் குண்டுபட்டு கொல்லப்பட்டான். குமாரன் ஹாலில் இருப்பதை இவர் அறியார். மிஸ்டர் தீம் சப்தங்கேட்டு ஓடிவந்து பார்க்கையில் தன்குமாரன் உயிர்நீங்கி யிருப்பதைப்பார்த்தார்.

## அரைசிறை ஏற்பாடுகள்.

லண்டன், அக்டோபர் 9—லீட்ஸ என்றநகரத்தில் மிஸடர் G. பால்பர் பேசினபோது துரைத்தனத்தார்க்குப் பாதுகாப்புவரியைப்பற்றி யாதொரு சம்பந்தமுமில்லை. நாட்டார்க்கு இந்த அரசிறை விஷயமாய் நாம் சொல்லிக்கொண்டு அவர்கள் அபிப்பிராயம் தெரிந்துகொள்கிறவரையில் நாட்டில்அரசிறைச்சீர்திருத்தமொன்றும் ஏற்படாது;-என்று சொன்னார்.

# NEWS and NOTES.

# விசேஷவர்த்தமானங்கள்.

## ஸர் ராபர்ட் கிப்பனும் இந்தியாவின் வருமையும்.

இவ்விந்திய நாடு பண்டை நாளைச்செல்வமாறி, இப்போது வருமை மேலிட்ட நாடாய்க்கொண்டுவருகிறதென்பதை ஒப்புக்கொள்ளுகிற ஆங்கிலேயர்கள் அதிகமாயில்லையானாலும், 1000 ஆங்கிலேயர்களுள் 10-பேராவது இந்தியாவின்நிலை, வறுமை நிலைதான் என்று ஒப்புக்கொள்ளுகிறார்களென்பதை நாம் மறுக்கவில்லை. சென்றமாதத்தில் லண்டனிலுள்ள பிரிடிஷ் அஸோஸியேஷனில் ஸர் ராபர்ட்கிப்பன் ஒரு பிரசங்கஞ்செய்தார். அந்த பிரசங்கத்தில் அவர் பிரிடிஷ் ஏகாதிபத்தியத்துக் சேறப்பட்டுள்ள பெரிய கஷ்டம் இந்தியர்களின் வறுமை நிலையேயாகுமென்று சொல்லி இந்தியாவிலுள்ள 30 கோடி ஜனங்களும் சம்பாதிக்குஞ்சம்பாத்தியத்தின் மொத்தத்தொகை எவ்வளவோ அவ்வளவு தொகையை இங்கிலண்டு, ஸகாட்லண்டு நாடுகளிலுள்ள ஜனங்களிற் சிலர் உண்பதிலும் குடிப்பதிலும்மட்டும் செலவு செய்துவிடுகிறார்கள் என்று எடுத்துக்காட்டினார். ஸர் ராபர்ட் கிப்பனைப்போலவே இன்னும் ஆயிரக்கணக்கான ஆங்கிலேயர்கள் இந்தியாவில் வறுமை யதிகரித்துக்கொண்டே போகிறதென்று சொன்னாலும் அதனைச் செவிகொடுத்துக்கேட்பாரைக் காணவில்லை. இந்தியா கவர்ன்மெண்டாரும் இந்தியா மந்திரியும் இந்தியா செல்வச்செழிப்படைந்துவருகிறதென்றே சொல்லுகிறார்கள். பார்லிமெண்டு சபையங்கத்தினர்களுள்ளும் சொற்ப அங்கத்தினர்கள்தான் இந்தியாவிஷயங்களைக் காதில் போட்டுக்கொள்ளுகிறார்கள்.

டென்மார்க்கு இராஜகன்னிகை ஒருநாள்சமுத்திரத்தில் தவறி விழுந்து விட்டனள். அங்கு போய்க்கொண்டிருந்த ஒருவன் அரசகுமாரி விழுந்ததைக்கண்டு பரிதாபத்துடன் அவளை மேலே எடுத்துவிட்டான், இராஜகன்னிகையும் பிழைத்தாள். இளவரசர் அம்மனிதனை தர்பாருக்கு வரவழைத்து வெகுவாய் உபசாரம் செய்து தங்கநாணயங்கள் நிறைந்த ஒருபையை வெகுமதியாகக்கொடுத்ததும் தவிர,இராஜகுமாரத்தியும் அவனைப் புகழ்ந்ததுடன் தானும் தன்னிடமிருந்த பொருளில் வேண்டியவை கொடுத்தனளாம்.

திருவள்ளூர் கோயில்.—சென்னை ஹைகோர்டில் ஆனரெபில் மிஸ்டர் C. சங்கரன்நாயர் மிஸ்டர் M. நரசிம்மாசாரியார் B. A. என்பவரை திருவள்ளூர் கோயிலுக்கு ரிஸீவராய் நேமிக்கப்படவேண்டுமென்று கேட்டுக்கொண்டார். அக்கோயில் மடத்து ஜீயர் காலம் சென்றவுடன் ஸ்ரீவீரராகவ சடகோப யதீந்திரமகாதேசிகர் தர்மகர்த்தாவாய் இருந்தார். பிறகு ஜீயர் ஒருவரைப்பொறுக்கி எடுக்கும் விஷயமாய்ச் சிலவழக்குகள் ஏற்பட்டன. அதைப்பற்றிச் செங்கல்பட்டு ஜில்லா கோர்ட்டில் இரண்டு வியாச்சியங்கள் கொண்டுபோகப்பட்டன. இவற்றில் ஒன்று ஸிவில் ப்ரொஸீஜர்கோர்ட் 539 செக்ஷன்படி செய்யப்பட்டது. அந்த வியாச்சியத்தில் இந்தக் கோயிலுக்கு ஜீயர் ஒருவரைப் பொறுக்கும்படியான ஏற்பாடு ஒன்று செய்யும்படி கோறப்பட்டது. இந்த வியாச்சியம் தீருகிறவரையில் மேற்படி M. நரசிம்மாசாரியார் B. A. ரிஸீவராய் நேமிக்கப்பட்டார். ஏனென்றால் அவர்வசத்தில் மடத்தின் முக்கிய விக்கிரகமிருந்தபடியாலும் அவர் காலஞ்சென்ற ஜீயரின் முக்கிய காரியஸ்தராய் இருந்தபடியாலும் அவர் ரிஸீவராய் நேமிக்கப்பட்டார். பிறகு மேற்படி வியாச்சியம் செல்லாது என்று தள்ளுண்டது. அதன்பேரில் ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்யப்பட்டது; அந்த அப்பீல் இன்னும் தீர்மானமாகவில்லை. இந்த அப்பீல் தாக்கல் ஆனவுடனே, மேற்படி நரசிம்மாசாரியார் ரிஸீவராய் நேமிக்கப்படவேண்டுமென்று ஹைகோர்ட்டுக்கு ஒருமனுகொடுத்தார். அந்த மனுவின்படி ஹைகோர்ட்டாரும் உத்தரவுசெய்தார்கள். மேற்படிக்கோயிலில் பூஜைநடப்பதும் அதற்குவரவேண்டிய வரும்படிகள் சரியாய் வசூல்செய்யப்பட்டுக் காப்பாற்றப்படுவதும் வெகு அவசியமானதால் மேற்படி நரசிம்மாசாரியார் ரிஸீவராய் நேமிக்கப்படுவதும் அவசியமாயிருந்தது. ஹைகோர்ட்டார் மேற்படி நரசிம்மாசாரியாரை ரிஸீவராய் ஏற்பாடு செய்தபிறகு மேற்சொன்ன வியாச்சியத்திற்குச் சம்பந்தப்பட்டவர்கள் யாவருக்கும் அதைப்பற்றி ஒரு அறிக்கையும் அனுப்பப்பட்டது.

காளிதாஸ் லக்ஷ்மிசண்டு, பாச்கு லக்ஷ்மிசண்டு, ஆகிய இருவர்களின் கார்டியனும், தாயாருமாகிய மீனுபாய் என்னும்மாது மதராஸ் ரெயில்வே கம்பெனியார்மேல் லக்ஷம் ரூபாய்க்கு நஷ்டவியாஜ்யம் செய்திருக்கிறாள். அது அடியில்வருமாறு:—சென்ற வருஷம் செப்டம்பர் மாதம் 11உ சாயந்திரம் வண்டியில் சென்னையினின்று புறப்பட்டு பம்பாய்க்குபோனவர்களுள் ஷை மைனர்களின் தகப்பனாகிய லக்ஷ்மி சண்டு அஹரிச்சண்டுமொருவரம். அந்தவண்டிக்கு மங்கபட்டணத்துக்கும், கொண்டாபுரத்திற்கும் மத்தியிலுள்ள நதியின் பெருக்கால் நேர்ந்தவிபத்து எல்லாருக்கும் தெரியும். அப்படி இறந்துபோனவர்களுள் இவரும் ஒருவர். ஷையார் இறந்துபோனதினால் தங்களுக்குநேர்ந்த நஷ்டத்திற்காக ஷை வியாஜ்யம். இம்மாதிரியான வியாஜ்யங்களுள் இதுஇரண்டாவது, இந்தக்கேஸானது சென்னை ஐக்கோர்ட்டில் ஆனரபில் மிஸடர் ஜஸ்டிஸ் மூர் துரைமுன் விசாரணைக்கு வந்திருக்கிறது.

சென்னையிலுள்ள தனவான்கள் தங்களது வண்டிகளுக்கு சக்கரங்களிலுள்ள இரும்பு வளையங்களை நீக்கி அதற்குப்பதிலாக ரப்பர்வளையங்களை மாட்டிக்கொள்வதில் ரோட்டுகள்அழிவில்லாமல் காக்கப்படுவதினால் ரோட்டுவரி யன்னியில், சக்கடைவரி, சந்துபொந்து வரிகளுக்குச் [illegible] போலும்;



இவ்வருஷம் டிசம்பர் மாதம் சென்னையில்கூடப் போகிற காங்கிரஸுக்கு மிஸ்டர் லால்மோகன் கோஸ் என்பவரை அக்கிராஸனாதிபதியாய் இருக்கும்படி சென்னை உபசரணைக்கமிட்டியார் வேண்டிக்கொண்டதின்பேரில் அவரும் ஒப்புக்கொண்டார்.

இறந்துபோன போப்மடாதிபதியின் அறையில் 280,000 பவுன்கள் கிடைத்தன. அவருக்கு வெகுமதி கிடைத்த ஒருவிலையுயர்ந்த ஆபரணமும் அகப்பட்டிருக்கிறது. இவைகளை என்ன செய்வார்களோ, தெரியவில்லை.

எப்போதும் விளக்கின் அடியில் நிழலிருப்பது வழக்கம். ஆதலின், அதன்கீழ் இருட்டாகத் தானிருக்கும். விளக்கின் வெளிச்சம் தூரத்திலுள்ள பொருள்களுக்குத்தான் அடிக்கும். அதுபோல் மகாபுத்திமான்களுடைய அருமை அவர்களுக்கருகிலிருப்பவர்க்குத் தெரியாது. தூரத்திலுள்ளவர்களுக்கே தெரியும்.

கரும்பைவிட இருபது மடங்கு சர்க்கரை கொடுக்கக்கூடிய செடியொன்று தென்னமெரிக்காவில் கண்டு பிடித்திருக்கிறார்களாம்.

நமது உலகத்தில் பிரகாசிக்கும் சூரியன் உண்டாகி பத்துகோடி வருஷங்களாகின்றன வென்று வானசாஸ்திரியாகிய ராபர்ட்பால்கணித்திருக்கிறார்.

## G. I. P. இருப்புப்பாதையில் வெள்ளம்.

G. I. P. இருப்புப்பாதையைச் சேர்ந்த பம்பாய் சென்னை மார்க்கத்தில் வெள்ளத்தால் உடைப்புகள் விழுந்தனவென்றும், விழுந்த உடைப்புகளை வெகு சுறுசுறுப்பாய் அடைத்து விட்டார்களென்றும் தெரியவந்தது. இப்போது அப்பாதையில் பகல்நேரத்தில்மட்டும் வண்டித்தொடர்கள் விடப்படுகின்றன. இராத்திரி வேளையில் வண்டித்தொடர்கள் விடப்படவில்லை. விழுந்த உடைப்புகளாலுண்டான சேதம் பலமென்றே சொல்லிக்கொள்ளப்படுகிறது.

ஒன்று என்னும் எண்ணுடன் பூஜ்யங்களைச் சேர்க்கச்சேர்க்க அதன் மதிப்பு அதிகப்பட்டுக்கொண்டே வரும், ஒன்றை நீக்கினால் அத்தனைபூஜ்யங்களுக்கும் மதிப்பின்றி போய்விடுகின்றது. அதுபோல் ஆசாரியன் சொற்படி நடந்து அவருடனிணைந்திருக்கும்வரையில் சிஷியர்கள் சகமெய்துகின்றனர். அவரைப்பிரிந்தால் அத்தனைபேர்களும் அவதிப்படுகின்றனர்.

## கிருஷ்ணாநதியில் பெருவெள்ளம்.

கிருஷ்ணாநதியில் பெருவெள்ளம் போகிறதென்று மசுலிபட்டணத்திலிருந்து சமாசார மெட்டினது. 2. 3. தினங்களாக ஆற்றில் 1-அடி ஜலம் போயிற்றாம் நேற்று ஆற்றில் ஜலப் பெருக்கு அதிகமாய்க் கொண்டிருந்ததே ஒழிய குறையவில்லையாம். ஆற்றோடு எவ்வளவோ பிரேதங்கள் மிதந்துகொண்டே போயினவாம். அவ்வாற்றின் கரையோரத்திலிருந்த கிராமங்களில் உயிர்ச்சேதமும் பொருட்சேதமும் நேர்ந்திருக்கவேண்டுமென்று ஊகிக்கப்படுகிறது.

## நிஜாமிராச்சியத்தில் வெள்ளச்சேதம்.

நிஜாமிராச்சியத்திலுள்ள ஸிகிந்தராபாத்தில்சென்ற சிலதினங்களாக விடாது மழைபெய்து வெள்ளம் புறப்பட்டுவிட்டதென்றுதெரியவந்தது இவ்வெள்ளம் ஊரைப் பாழாக்கிவிட்டதென்று தெரியவருகிறது. ஆயிரக்கணக்கான ஏழைகள், தங்கள் வீடுகள் வெள்ளத்தில் மிதிக்க, ஒதுங்கவிடமின்றித் தவிக்கிறார்கள். எவ்வளவோ ஜனங்களைவெள்ளம் அடித்துக்கொண்டுபோய்விட்டதாகவும் தெரிகிறது. ஸிகந்தராபாத் ஜனங்கள் கிலிபிடித்துப் போயிருக்கிறார்கள். ஹைதராபாத்நிஜாம் ஸிகந்தராபாத் குடிகள் அவஸ்தைப்படுகிறார்கள் என்று தெரியவந்தவுடனே காப்டன் உஸமான் உட்டௌலாவை அனுப்பி ஜனங்கள் படும் கஷ்டங்களை விசாரித்து அறிந்துகொண்டு வரும்படி செய்தாராம் - ஆகவே அவர்வீடுகளையும் பொருள்களையும் இழந்துவிட்டுத் தவிக்கும் ஏழை ஜனங்களுக்கு வேண்டிய உதவியைச்செய்வாரென்று நம்பியிருக்கலாம்.

இந்துசாஸ்திரபுஸ்தகங்களில் முப்பத்து முக்கோடி தேவர்கள், 68-ஆயிரம் ரிஷிகள் என்று சொல்லப்படுவதில், அவைகளில் சில தேவர்களுடையவும் சில ரிஷிகளுடையவும் பெயர்களை சில புஸ்தகங்களில் பார்த்திருக்கிறோமேயல்லாது ஷை தொகையான ரிஷிகள் தேவர்களுடைய பெயர்களை எந்த புஸ்தகத்திலும் கண்டறிந்தேனில்லை. ஆகையால் கற்றறிந்த பெரியோர்கள் ஷை தொகையான தேவர்கள், ரிஷிகள் பெயரையாவது அல்லது அவர்கள் பெயரிருக்கும் புஸ்தகம் இன்னதென்றாவது இப்பத்திரிகை வாயிலாகதெரியப்படுத்தக் கோருகிறேன்.

விருத்தாஜலத்தில் இருந்து ஒரு வெள்ளாழப்பெண்ணை திருப்பாப்புலியூரில் ஒரு பிள்ளைக்கு விவாகம் செய்துகொடுத்திருந்தார்கள். அந்த பெண் ருதுவான நாள் கிரகம் போதாதென ருது சாந்திமுகூர்த்தம் செய்யாமலிருந்தார்கள். அதுவரையில் மனந்தாளாத அப்பெண் ஒரு ஜட்கா வண்டிக்காரப் பையனைக் கூட்டிக்கொண்டுபோனதைக் கண்ட ஒல்டுமென்களான சாஸ்திரிகளெல்லாம்கூடி உன்பெண்ணுக்கு ஆகாதகிரகமெல்லாம் ஜட்கா வண்டிக்காரனோடு போய்விட்டது. அன்றியும், டிரெயினிங் பாஸாகி சர்டிபிகேட்டு பெற்றபின் நிர்சிந்தைதானெனக்கூறி மாமியையும்,பிதாவையும் விட்டு பெண்ணைகூட்டிக்கொண்டுபோய் சாந்தி முகூர்த்தம் செய்யப்போதித்தார்களாம்.

ஆசாரிய னென்றொருவனை யேற்படுத்திக்கொள்வானேன். [illegible] அநேகரை ஆசாரியராக வைத்துக்கொள்ளக்கூடாது. என்றால் — ஒரு இடத்துக்குப் போகிறவன் வழிகாட்டுவதற்காக ஒருவனை வைத்துக்கொள்ளவேண்டுமேயன்றி பலபேர்களை நேமிக்கலாகாது. அவ்வாறு நேமிப்பதால்கலக்கமுண்டாகி உத்தேசித்த விடத்தை சீக்கிரமாக அடையமாட்டான். அதுபோலவே, நாம் ஒருவரை ஆசாரியராகக் கொண்டு அவர் போதிக்கிறபடி நடக்கவேண்டும்.

உ

கணபதேநம:

THE

# VILLAGE OFFICERS' GAZETTE.

# கிராம உத்தியோகஸ்தர் கெஜட்டு.

மதராஸ் கவர்ன்மெண்டு தமிழ் ஜில்லாக்களிலுள்ள

ஜமீன்மிட்டா சுரோத்திரியம் தாரர்களின் நன்மைக்காகவும்

கிராமாதிகாரிகளின் சீர்திருத்தத்திற்காகவும்

மாதாந்தரம் வெளியிடப் படும்.

புத். I.] மதராஸ, 1903௵ நவம்பர் 15௳ [நெ. 6.

## குணம் தொழிலினால் உண்டாகும்.

ஒரு மனுஷனுக்குக் குணம் அமைதற்குப் பல காரணங்களுண்டு. முதலாவது அவனது தாய்தந்தையர்களுக்கும், மொத்தமாய் அவன் குலத்தாருக்குமுள்ள குணகுணங்கள் அவனுக்குண்டாகும். எப்படி ஒருவனுடைய உருவம் தாய்தகப்பனைதப்போலே இருக்கின்றதோ அப்படியே குணமும் உண்டாகின்றது. எப்போதும் அப்படியுண்டாகின்றதில்லை. சாதுக்களாகிய மாதாபிதாக்களுக்கு துஷ்டனாகிய பிள்ளை பிறத்தலும், துஷ்டர்களுக்கு சாதுவான பிள்ளை பிறத்தலும் எவ்வளவோ உதாரணங்களில் கண்டிருக்கிறோம். ஆனால் மொத்தத்துக்குத் தாய்தகப்பன்மாரது குணவிசேஷங்களைப் பிள்ளைகளிடத்தில் காணலாமென்பதே அனுபோகம்.

இரண்டாவது காரணம் சகவாசம். நல்ல சகவாசத்தால் நல்ல குணங்களும், கெட்ட சகவாசத்தால் கெட்ட குணங்களும் படிவதை யனுபோகத்தில் காணாத அன்னையாவது பிதாவாவது யாரிருக்கிறார்கள்? கேவலம் புஸ்தகப் படிப்பாலேமட்டும் குணங்கள் படிவது கஷ்டம். புஸ்தகத்தைப் படிப்பதால் மனதில் அழுந்தும் கருத்துகளை அனுபோகத்தில் செய்கையிற் காட்டினால் மட்டும் குணம் படியும். அப்படிச் செய்து காட்டுவது சகவாசத்தையும் தருணத்தையும் பற்றினதாகும். இவ்வாறு இரண்டு காரணங்களன்றி, மூன்றாவது காரணமொன்று முக்கியமானதுண்டு. அது தொழில். மற்ற இரண்டுகாரணங்கள் எப்படியிருந்தாலும், தொழில் நல்ல தொழிலாயிருந்தாலன்றி, நல்ல குணம் ஸ்திரப்படுதல் கஷ்டம். பெருங்குணங்களாவது சிறு குணங்களாவது உண்டாவது ஒருவன் செய்யும் தொழிலைப்பற்றினதாகும். தட்டான் முதலான இந்திய வேலைக்காரர்கள் இயல்பாக எவ்வளவு யோக்கியர்களாயிருந்தாலும், பொய் சொல்லாமலிருக்க மாட்டார்கள். வியாபாரிகள் தம் சாமான்களைப் புகழ்ந்து பேசி அறியாதவர் வாங்கவந்தால் ஏமாற்றாமலிருக்கமாட்டார்கள். யாசகம்செய்யும்பிராமணன் யாசகம் கேட்கப்போன இடத்தில் எஜமானைத்தோத்திரம் செய்யாமல் கேட்கமாட்டான். இவைபோன்ற மற்ற அற்பதொழில்கள் செய்வோர் அற்பபுத்தியைக் காட்டுவார்களேயன்றிப் பெரும் புத்தி அவர்களுக்கு உண்டாகாது. இதற்கு இன்னொரு திருஷ்டாந்தமும் சொல்லலாம். இந்தியரையும் ஆங்கிலேயரையும் அவர்கள் நாட்டுத் தொழில்களிலும் குணகுணங்களிலும் ஒத்துப்பார்க்கும்போது, நம்வர்களுக்கும் ஆங்கிலேயருக்கும் எவ்வளவு வித்தியாசமிருக்கின்றது. இந்தியாவில் பிரபுக்கள் அல்லது இராஜகுலத்தில் தோன்றின 30-வயதுவாலிபனுக்கு சென்னைக்கு இப்போது கவர்னராயிருக்கும் லார்ட் ஆம்ப்த்ஹிலது சாமர்த்தியம் வருமா? ஒருக்காலும் வராது. ஏனென்றால், பிரிடிஷ்நாட்டில் லார்ட் ஆம்ப்த்ஹில்லைப்போன்ற சிறுவர்கள் எப்போதும் பெருங்கருமங்களைச்செய்வோருடன் சகவாசம்செய்து அவர்களைப்போலத் தாங்கள் ஒழுக்கம், எண்ணம், ஆசை முதலியவற்றை மனதிற்கொள்ளுகிறார்கள். உலகத்தின் பெரும்பாகத்தைத் தழுவிய ஏகாதிபத்தியத்தை சீரும் சிறப்புங் குன்றாமல் நடத்திவரும் ராஜதந்திரி எவ்வ



ளவு சாமர்த்தியவானா யிருக்கவேண்டும். அவருக்கு செக்ரிடேரியாக வேலைசெய்து அவரைப்பார்த்து அவர்போலச் செய்வோர் சாமர்த்தியத்தையே யடைவாரல்லவா? மேலும், கோடி பத்துக் கோடிமுதல்வைத்து பத்தாயிரக்கணக்காய் வேலைக்காரர்களிடத்தில்வேலைவாங்கி, கப்பல்கொள்ளாமல் சாமான்கள்செய்துவிற்பனைக்கனுப்பி, வியாபாரத்தில் யாதொரு கெடுதல் வராமல் பார்த்துக்கொண்டு, தமக்குக் குவிந்துகிடக்கும் பொருள் இவ்வளவென்று சொல்லக்கூடாமல் கணக்கில்லாத தருமங்கள் செய்வதில் செலவு செய்துவரும் கார்நீகி (Carnegie) போன்ற குபேர செல்வவானுக்குப் பெரும் புத்தியும் சாமர்த்தியமும் உண்டாகுமா, அல்லது இந்தியாவில் மிராசுதார்கள் சௌகார்கள் இவர்களுக்குஉண்டாகுமா? மொத்தத்துக்கு வியாபாரம் செய்வோருக்கே, அதிலும் விசேஷமாய் அன்னியநாட்டு வியாபாரம் செய்வோருக்கே விசால புத்தியும், அனுபோகமும், தைரியமும், சூழ்ச்சியும, மனித இயல்பினறிவும், ஆகியகுணங்களுண்டாகும். அன்றி, சாமானியமாய் பூமியை உழுது பயிர்செய்து சீவிப்போருக்கு அப்பேர்ப்பட்ட குணங்கள் உண்டாவதற்கு என்னகாரணங்களிருக்கின்றன? விவசாயிக்குத் தன் கிராமத்தைத்தவிர வேறு ஊரை யறியவேண்டிய அவசியமில்லை. பெரும் முதலாவது. பெரும் ஆள்கட்டாவது அன்னியருடைய போட்டியை யெதிர் பார்த்தலாவது, நேரிடக்கூடிய பல சம்பவங்களின் தாரதம்மியங்களைப் பார்த்து தக்கபடி நடத்தலாவது, அவசியமில்லை. விவசாயியினுடைய சீவனம்உபாயமானது வர்த்தகர்களோ கோடீசுரராயிருந்து, அரசர்களுக்கும் சமயத்துக்கு உதவுகிறவர்களா யிருக்கிறார்கள். இந்தக் காரணத்தினாலேதான் இந்தியர் சாமர்த்திய மற்ற பசுப்போலிருக்க ஒரு வெள்ளைக்காரன் 1000-ம் இந்தியரை விரட்டியடிக்கிற புலிபோன்றவனாயிருக்கிறான்.

---

இம்மாகாணத்தில் எந்த ஜில்லாவிலுள்ள விவசாயிகளும் காட்டிலகா விதிகளால் ஏற்படும துன்பத்துக்கு ஆளாகிறார்கள் என்பதை மறுக்கமுடியாது. சமீபத்தில் லார்டு ஆம்ப்தில் கர்நூல், பல்லாரி, அனந்தபுரம், இம்மூன்று ஜில்லாக்களுக்கும் சுற்றுப் பிரயாணமாய்ப் போயிருந்தபோது கூட அந்த ஜில்லா வாசிகள் காட்டிலாகா விதிகளால் தங்களுக்கு நேரும் துன்பங்களைப்பற்றித்

தான் அதிகமாய்ச் சொல்லிக் கொண்டார்கள் கொஞ்சகாலமாக கவர்ன்மெண்டார் எவ்விடத்தையும் பந்தோபஸ்துக் காடுகள் (Reserve Forests) ஆக்கிக்கொண்டுவருகிறார்கள். முற்காலத்தில் விவசாயிகள் கால்நடைகளை மேய்க்கவும், களங்கள் வைத்துக்கொள்ளவும், தங்களுக்கு வேண்டிய மரச்சாமான்களை சேகரித்துக் கொள்ளவும், நிலங்களுக்கு உரமாய் உதவக்கூடிய குழைகள் (தழைகள்) சேகரித்துக்கொள்ளவும், கிராம சமுதாய நிலங்களாய் உபயோகப்பட்டு வந்த நிலங்களையெல்லாம்இப்போது கவர்ன்மெண்டார் சர்க்கார் பந்தோபஸ்துக் காடுகளாக்கிக்கொண்டு வருகிறார்கள். இப்படி கவர்ன்மெண்டார் செய்துவருவதால் விவசாயிகள் படும் அவஸ்தையிவ்வளவு அவ்வளவு என்று சொல்லமுடியாது, அவர்களுடைய கால்நடைகள் தப்பித்தவறி பந்தோபஸ்துக் காடுகளில் காலை வைத்தாலும் விவசாயிகள் காட்டிலாகா விதிகளை மீறி தங்கள் மாடுகளை பந்தோபஸ்துக் காடுகளில் மெயவிட்ட குற்றத்துக்கு உள்ளாகிறார்கள். காடுகளிலுள்ள மரங்களின் நுனித்தோகையைக் கூட விவசாயிகள் தொடக்கூடாது. விவசாயிகள் தாங்களே அரும்பாடுபட்டு வளர்த்த மரங்களை வெட்டிக் கொள்ளும் சுதந்திரத்தையும் இழந்துவிட்டார்கள். இம்மாதிரி தொந்தரவுகள்எந்தஜில்லா வாசிகளும் அனுபவிக்கிறார்கள். தஞ்சாவூர் ஜில்லாவில் காடுகள் அதிகமாயில்லாவிட்டாலும் அந்த ஜில்லா நன்செய் நிலங்களின் இடையே ஓடும் வாய்க்கால் கரைகளிலுள்ள கருவேலமரங்களைக்கூட விவசாயிகள் மண்வெட்டிகோடாரிகளுக்குப் பிடிபோடவும், கலப்பைசெய்யவும், உபயோகப்படும்படி வெட்டிக்கொள்ளக் கூடாதென்று காட்டிலாகா அதிகாரிகள் தடுக்கிறார்கள். அவ்வதிகாரிகள் தங்கள் அதிகாரத்தை மீறி நடப்போரை காட்டிலாகா விதிகளை மீறி நடந்ததற்காகத்தெண்டனைக்குள்ளாக்கி விடுகிறார்கள். அதனால் அந்த ஜில்லா விவசாயிகள் படுந் துன்பம் அதிகமேயாகும். காட்டிலாகா அதிகாரிகளுக்கு அனுசரணையாய் தஞ்சாவூர் கலெக்டரும் கிராமசமுதாய நிலங்களாயுள்ள தோப்புகள், கோயில்கள், களங்கள், கிராமநத்தங்கள், இவைகளை சர்க்கார் நிலங்கள் என்று சொல்லுகின்றார். இம்மாதிரி பலவித துன்பங்களுக்கும் தஞ்சைஜில்லா விவசாயிகள் உட்படுத்தப்படுகிறபடியால், தஞ்சாவூர் ஜில்லா சபையார்



ரெவினியூபோர்டாருக்கு நன்செய் நிலங்களின் இடையேயோடும் வாய்க்கால்கரைகளிலுள்ள கருவேலமரங்களை வெட்டிக்கொள்ளும் சுதந்திரம் விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட வேண்டுமென்றும், கிராம சமுதாய நிலங்களாய் பாவிக்கப்பட வேண்டியவற்றைக் கலெக்டர் கவர்ன்மெண்டு நிலங்களென்று சாதித்துப் பிறப்பித்திருக்கும் உத்தரவை ரத்துசெய்துவிட வேண்டுமென்றும் விண்ணப்பம் அனுப்பியிருக்கிறார்கள், போர்டார் தஞ்சாவூர்ஜில்லா சபையாரின் வேண்டுகோளுக்கு இணங்கி அனுகூலமான உத்திரவாகவே எல்லூர் தாலூகா முப்பேறு கிராமமந்தை வெளி புரம்போக்கு நிலவிஷயமாய் நாளது 1903௵ அக்டோபர்௴ 14௳ ல் சென்னப்பட்டணம் ஹைகோர்டார்செய்த தீர்ப்புபடி பத்திரமூலமாய் ஜாரி செய்யப்பட்டாலொழிய துரைத்தனத்தாருக்கு விரோதமாய் ஒருவருக்கும் நிலபாத்தியதை உண்டாகாதென்று சொல்லமாட்டார்களென்று எதிர்பார்க்கின்றோம்.

---

## கிராம கணக்கு தாலூக்கா கணக்கு.

---

I. முக்கியமாய் கிராமங்களில் வைத்திருக்கவேண்டிய கணக்குகளிரண்டு வகைப்படும். அக்கணக்குகளில் சிலதை ஸ்திரமானதாகவும், சிலதை மாசாந்திரம், வருஷாந்திரக் கணக்குகளாக வைத்திருக்கவேண்டும். அந்தஸ்திரமான கணக்குகள் ஐந்து, அவையாவன: —

(a) ரிஜிஸ்டர். நிலங்களின் விவரத்தையும் அவைகளிலுண்டாகிற மாறுதல்களையும் தெரிவிக்கிற கணக்குப்புஸ்தகம்.

ஷை உட்பிரிவு, சர்க்கார் இனாம் நிலங்களின் மொத்த விஸ்தீர்ணத்தையும், இனாம்வாரியையும், தரவாரியையும் காட்டுகிற கோஷ்வாரா.

(b) ரிஜிஸ்டர். இனாங்களையும் அவைகளிலேற்படும் வேறுபாடுகளையும் காட்டிய கணக்கு.

(c) ரிஜிஸ்டர்-சர்க்கார் பாயச் சலாதாரத்தினால் பாயக்கூடிய நஞ்சை நிலத்தின் ஆயக்கட்டு, அல்லது தண்ணீர் பாயக்கூடிய நிலத்தின் விஸ்தீரணத்தைக் காட்டும் கணக்கு.

(d) ரிஜிஸ்டர்-ஒவ்வொரு நீராதாரத்தின்கீழுள்ள கைப்பற்று நிலத்தையும், நீர்த்தீர்வை போடப்பட்டுள்ள விஸ்திரணத்தையும் வருஷத்தொடர்ச்சி யாகக்காட்டும் கணக்கு.

(e) ரிஜிஸ்டர் - வருஷத்தொடர்ச்சியாக லாண்டு ரெவினியூ செடில் மெண்டு விஷயத்தைத் தெரிவிக்கிறகணக்கு.

மேற்சொன்ன வைகளில் ஏ-பி-இ. ரிஜிஸ்டர்கள் பழைய பைமாஷ் கணக்காகிய ஏ - ரிஜிஸ்டருக்கும் அதன் உட்பிரிவு பி - ரிஜிஸ்டருக்கும் பதிலாக வருவது ஸி. டி. ரிஜிஸ்டர்கள் பாய்ச்சல், சாகுபடி இந்த விஷயங்களைத் தெரிவிக்குங் கணக்குகள்.

II. ஏ. ரிஜிஸ்டர் நிலங்களின் விவரத்தையும், அதிலேற்படுகிற வேறுபாடுகளையுந் தெரிவிக்கிற ஸ்திரமான கணக்கு-இதைஸர்வே முடிந்த எல்லா கிராமங்களுக்கும் அச்சிட்ட செடில்மெண்டுகணக்கு புஸ்தகங்களிலிருந்து எழுதவேண்டும். வயல்களை சர்வே நெம்பர்வாரியாய் எழுதவேண்டும். யாதொரு பிரிவு அல்லது பிளாக்ஸர்வே ஆகாமலிருந்தா லதற்குஸ்டேட்மெண்டில் கடைசி நெம்பரைக் கொடுக்க வேண்டியது.

அந்த பிளாக்கின் எந்தப்பிரிவாவது பின்னால் சர்வே செய்யப்பட்டால் அதற்கொரு உள் நெம்பரைக்கொடுக்க வேண்டும். ஷராவில் புறம் போக்கு நிலங்களின் விவரத்தையும். தரிசு நிலங்களிலிருக்கிற மரங்களின் கணக்கையும், கட்டடமுதலிய வைகளையுங் குறித்தெழுத வேண்டும், இனம் நிலங்களை சர்க்கார் நிலமாகவும், புன்செயை நஞ்செய்யாகவும், நன்செயை புன்செய்யாகவும் இப்படிப்பட்ட ஸ்திரமான மாறுதல்களை சர்வேக்குப்பிறகு செய்தால், அப்படிச் செய்த மாறுதல்களை ஷராகலத்தில் எழுதவேண்டும். கணக்குகள் தயார் செய்தபிறகு உண்டாகும் வேறுபாடுகளை அப்போதைக்கப்போது எழுதிவிடவேண்டும், இப்படிப்பட்ட மாறுதல்களைப் பதினைந்து வருஷம் வரையில்ஒரே புஸ்தககதில் குறிப்பதற்குச் சாதகமாக விருக்கும்படி வரிகளுக் கிடையில் அதிகமாக இடம் விட்டு ஷராகலத்தை விஸ்தாரமாக்கிக் கணக்கைத் தயார் செய்யவேண்டும், பத்துப் பதினைந்து வருஷம் சென்று விட்டால் வேறேகணக்குத் தயார் செய்யலாம் - ரிவினியூவார்த்தைகளைச் சுருக்கியெழுதி கணக்கிலிடத்தை மிகுதிப் படுத்தலாம்.



அதாவது:—நன்செய் என்பதை ந என்றும், புஞ்செய் என்பதை பு என்றும், தீர்வை ஏற்படாததை தரமில்லைஎன்றும், புறம்போக்கைப் புறவென்றும்,ஏகர் என்பதை ஏ என்றும், டிசமலென்பதை, டி. யென்று மிவ்விதமாகச் சுருக்கி யெழுதிக் கொள்ளலாம். திருநெல்வேலிஜில்லாவில் செடில் மெண்டு டிபார்டுமெண்டாரால் பிரத்தியேகமாகவேற்படுத்தி யிருக்கிற நமூனாப்படி கணக்குகளைத்தயார் செய்யவேண்டும். கணக்குப் புஸ்தகங்களின் கடைசியில் அடியில் கண்ட விவரங்களை யெழுதவேண்டும்.

(a) சர்வேக்கு முன்னிருந்த விஸ்திரணமும், அதற்குப்பிறகு சர்வேயில் கண்டு பிடித்த அதிகமும்.

(b) குடிமராமத்து விஷயத்தில் கிராமத்தார் செய்யவேண்டியதைப்பற்றி செடில் மெண்டு காலத்தில் தாக்கல் செய்தவிவரமும்.

(c) கிராம உத்தியோகஸ்தர்களுக்கும், மற்ற தொழிலாளிகளுக்கும், மேரைகள் கொடுப்பது வழக்க மிருந்தால் இன்ன விதப்படி கொடுக்கவேண்டிய தென்றும்.

III. ஏ. ரிஜிஸ்டரின் உட்பிரிவானது நில விஸ்தீரணத்தை இனம் வாரியாகவும், தரவாரியாகவுங் காட்டுகிற கோஷ்பாரா, இது செடில்மெண்டு டிபார்ட்மெண்டாரால் தயார் செய்யப்படுகிறபடியால், அநேகமாகக் கர்ணன் அதற்கு நகல் செய்யவேண்டியதாகவே இருக்கும். சர்வேமுடிந்த பிறகு ஏதாவது வேறுபாடுகள் ஏற்பட்டால் அவைகளைச் சேர்த்துக்கொண்டு வேறே கோஷ்பாராதயார் செய்யவேண்டும். அதற்குப் பிறகும் அதைபிரதிவருஷமும் திருத்திக் கொண்டு வரவேணடும்.

IV. சர்வே செடில் மெண்டு இவைகளாகாத ஜில்லாக்களில் ஏ. ரிஜிஸ்டரும் அதன் உட்பிரிவுரிஜிஸ்டரும்(பழையமானுயல் புஸ்தகத்தில் குறிக்கப்பட்டு) இதுவரையிலிருந்த நமூனாப்படியிருக்கவேண்டியது. அப்படிப்பட்ட ஜில்லாக்களில் சர்வேயும், செடில்மெண்டும் ஆகிறவரையில் அந்தநமூனாவே தகுதியுள்ள தாயிருக்கிறபடியால் மாறுதல்களொன்றும் செய்யக்கூடாது. மேலே சொன்ன கணக்குகளைப் பூர்த்தியாய் தயார்செய்யும்போது பழைய கணக்குப் புஸ்தகங்களை தாலூகா கச்சேரிக்கனுப்பவேண்டியது.

(இன்னும் வரும்.)

## ஜனனமரண ரிஜிஸ்டர் பதிவு.

1-மானிட ஜனன மரணகணக்குகளை வைக்க வேண்டுமென்று 1865ம் வருஷத்தில் ஏற்பாடு செய்து நாளது வரையில் அநுஷ்டானஞ்செய்து வருவதால், கணக்கர்கள் பூர்த்தியாயும், அபத்தமில்லாமலும, அந்தக்கணக்குகளைத்தயார் செய்து அனுப்பவேண்டும். ஜமாபந்திகாலத்தில் பட்டாவை மாற்றிக் கொள்ள வரும் குடிகளை கணக்கில் கண்டிருப்பவைகள் சரியாயிருக்கிறதாவென்று, கலெக்டரும, டிவிஷனல் ஆபீசரும் விசாரித்து அவர்களிடத்தில் வாக்குமூலம் வாங்கலாம். இவ்விதம் கிராமக்குடிகளிடம் நேரே சம்பாஷணை செய்தால், அதனால் ஷை கணக்கு சரிவரவைக்கப்பட்டு வருமென்பதற்கு யாதொரு சந்தேகமுமில்லை, வேலை அவசரத்தினால் தப்பான கணக்குகளைத்தயார் செய்து மோசநிலைக்குள்ளான விஷயங்களைப் பற்றி அசட்டையாய் விட்டு விடக்கூடாது. வரவர சரியான கணக்குகளை வைக்கும் படியான விருத்தியைச் செய்து வரவேண்டும்.

2. கலெக்டர் ஜமீன்தாரர்களுக்கு அறிவித்து, அவர்கள் தங்களிலாகா கர்ணன்களை ஜனனமரணக் கணக்குகளை சரிவரவைக்கும் படியான ஏற்பாட்டைச் செய்யவேண்டும்.

3. பிரதிதினமும் வாந்திபேதியாலுண்டாகும் மரணங்களைப் பற்றிவரும ரிப்போர்ட்டுகளை போலீசாருடைய ரிப்போர்ட்டோடு தணிக்கை செய்ய உதவுமானதால் அவர்களுடைய சகாயத்தினால் அடிக்கடி அனுகூலமுண்டாகக் கூடும்.

## அம்மைகுத்துதல்.

(ஜூலைமாஸத்தொடர்ச்சி.)

1 - அம்மைகுத்தும் அதிகாரிகள் ஜனங்களுக்குத் தர்மமாக அம்மைகுத்தும் ஏற்பாட்டைக் கலெக்டர் செய்யவேண்டியது. ஒரு ரெவினியூ இன்ஸ்பெக்டர் தான் சர்க்கூட் போகும்போது தன்னுடன் ஒரு அம்மைவைக்கும் உத்தியோகஸ்தனை கூட்டிப் போய் தான் போகிற ஊர்களிலுள்ள ஜனங்களுக்கு அம்மை குத்தும்படி செய்யவேண்டும்.

2 - அம்மை குத்துகிற உத்தியோகஸ்தன் கிராமங்களுக்கு வந்தால் அந்த ஊர்கிராம முனுஸீப் அவனுடன் கூடவிருந்து அவன் செய்த வேலையைப்பற்றி தாசில்தார் மூலியமாய் டிப்டி இன்ஸ்பெக்டர் ஆப் வாக்சினேஷனுக்கு ஒரு ஸ்டேட்மெண்ட் அனுப்பவேண்டும்.



## கிராம முனிசீபுகள் நடந்துகொள்ள வேண்டிய விதிகள்.

1 மாஜிஸ்திரேட்டுக்குறிய அதிகாரங்களில் யாதாமொரு அதிகாரத்தைச் செலுத்துகிற எல்லாமனிதர்களும் மாஜிஸ்திரேட்டுகளென்று கிரிமினல் புரோசீஜர் கோடிலும் போலீஸ் ஆக்ட்டிலும் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

2. கிராமமுனிஸீபுகள் தங்களுடைய கிராம எல்லைக்குள்ளே குற்றங்களைத் தடுக்கிற விஷயத்திலும் கண்டுபிடிக்கிற விஷயத்திலும் மாஜிஸ்திரேட்டுக்குள்ள அதிகாரங்களிலும் கடமைகளிலும் அனேகத்தை செலுத்துகிறவர்களாயிருக்கிறார்களாகையால் சட்டப்படிக்கு அவர்கள் மாஜிஸ்திரேட்டுகள் தான்; மேற்படி அதிகாரத்தை உறுதியாய்ச் செலுத்துவதற்கும் தங்களுடைய கடமைகளை நிறைவேற்றுவதற்கும் சட்டத்தில் அவர்களை நேராய் உத்தரவாதிகளாக்கப் பட்டிருக்கிறது.

3. போலீஸ் ஆக்ட்டின் பீடிகையில் எல்லா வகுப்பு போலீஸாரும் தங்களுடைய சாஹத்துக்குள் குற்றங்களைத் தடுக்கும் விஷயத்திலும் கண்டுபிடிக்கும் விஷயத்திலும் மாஜிஸ்திரேட்டாருடைய வசத்திலிருக்கிறார்களென்று சொல்லியிருக்கிறதுமன்றி போலீஸ் ஆக்ட்டின் 2-வது பிரிவுபடிக்கு மாஜிஸ்திரேட்டாரால் செய்யப்பட்ட எல்லா உத்திரவுகளுக்கும் உடனே கீழ்ப்படிந்து நடந்து கொள்ளவேண்டியது போலீஸாருடைய கடமையாயிருக்கிறது.

4. போலீசாரென்றால் ஜனரல் போலீசாரென்றும் கிராம போலீசாரென்றும் யாதொரு போலீஸ் தொழில் நடத்துகிற எல்லா உத்தியோகஸ்தாளென்றும அர்த்தமாகிறது.

5. ஆகையால் அவர்களெல்லாம் கிராமமுனிசீபுகளுடைய வசத்திலிருக்கிறார்கள்; மேற்படி போலீசாரை அழைப்பிக்க வேண்டியதும், அந்தந்த கிராமத்திய சாகத்துக்குள் குற்றங்களை தடுக்கிறதற்கும் அனுமானமுள்ள நம்பர்களின்பேரில் நிகாவைப்பதற்கும் தாங்களென்ன அபிப்பிராயப்படுகிறார்களோ அதை மேற்படி போலீசாருக்குத் தெரிவிக்கவேண்டியதும், கிராமத்

தாருடைய நன்மைக்காக தாங்கள் முன்சீபு வேலைக்கு ஏற்படுத்தப்பட்டபடியினாலே அவர்களுடைய பிரயோஜனார்த்தம் மேற்கண்டபடி போலீஸார் நடக்கவேணுமென்று பிடிவாதம் செய்யவேண்டியதும் முனிசீபுகளுடைய கடமையாயிருக்கிறது.

6. குற்றம் நடந்த உடனே அந்தஸ்தானத்தில் மாஜிஸ்திரேட்டாயிருக்கிற கிராம முனிசீப் தன் உத்தியோக முறைமையை அனுசரித்து மேற்படி குற்றத்தைக் கண்டுபிடிக்க வேண்டியதற்காக சமீபத்திலிருக்கிற போலீஸ் ஸ்டேஷனுக்கு உடனே ரிபோர்ட்டு அனுப்பி போலீசாரைத் தட்சணம் அழைப்பிக்க வேண்டியது. தன்னுடைய உத்திரவுப்படிக்கு போலீசாரை நடக்கும்படியாய் கிராம முனிசீப் பிடிவாதஞ் செய்யவேண்டியது.

7. அதேகாலத்தில் கிராமமுனிசீப் நடந்த குற்றத்தின் சங்கதிகளை நன்றாய் விசாரிக்கவேண்டியது; அப்படி விசாரணை செய்வதற்கு கிராமபோலீசாரை உபயோகப்படுத்திக்கொள்ளலாம். இந்த விசாரணையின் முடிவை ஆலசியப்படுத்தாமல் சப் மாஜிஸ்திரேட்டுக்கு ரிபோர்ட் செய்யவேண்டியது.

8. தான் அழைப்பித்தபடி போலீஸார் வந்த உடனே தன்னுடைய அதிகாரமுறைமையினாலும் தனக்கு சங்கதிகள் தெரிந்திருக்கிறதினாலும் போலீசாருக்குத் தன்னால் கூடிய கும்மக் செய்ய வேண்டியது முனிசீபினுடைய கடைமையாயிருக்கிறது. குற்றஞ்செய்தவர்களென்றுதான் அனுமானிக்கும் நபர்களை அவர்களுக்குக் காண்பிக்கவேண்டியது; சாட்சி சம்பாதிக்கும் விஷயத்தில் தனக்கு என்ன பொலம் தெரியுமோ அதை அவர்களுக்குத் தெரிவிக்கவேண்டியது. தன்னால் கூடியமட்டும் கும்மக் செய்ய வேண்டியது மல்லாமல் யோசனையும் சொல்லவேண்டியது, குற்றத்தைக் கண்டுபிடிக்கும் விஷயத்தில் கிராமமுனிசீபுதான்போலீசாருக்கு யோசனை சொல்லுகிறவரா யிருக்கிறார். மேலும் தன் வசத்திலிருக்கிற தலேருபஸ்து போலீசாருடைய கும்மக்குடனே அந்த இடத்தில் குற்றத்தைக் கண்டுபிடிக்கும் அதிகாரியாயுமிருக்கிறார்.

9. கிராம முனிசீபு சாட்சியாய் வரும்படி அவசியம் நேரிட்டாலொழிய யாதொரு முனிசீபையும் தன்னுடைய சாகத்தை



விட்டுவரும்படியாய் செய்ய போலீசாருக்குயாதொரு அதிகாரமுமில்லை. கிராமமுனிசீபுகள் வேண்டும்போது போலீஸ் உத்தியோகஸ்தர்கள் நேராய்ப்போய் ஆஜராகிறதற்கு அவாளுக்குவேண்டிய கருவிகள் கொடுக்கப்பட்டிருக்கிறபடியால் குற்றம் நடந்திருக்கிற இடத்திற்குப்போய் விசாரணை நடத்தவேண்டியது அவர்களுடைய கடமையாயிருக்கிறது. ஆகிலும் மாஜிஸ்திரேட்டு ஹோதாவை வகித்த கிராம முனிசீப்கள் தங்களுடைய சாகத்துக்குட்பட்ட குற்றங்களைக் கண்டுபிடிக்கும் விஷயத்திலும் மாத்திரமேயல்லாமல் சுற்றுப்பக்கத்திலிருக்கும் கிராமங்களில் நடக்கும் குற்றங்களைக் கண்டுபிடிக்கும் விஷயத்திலும் தங்களால் கூடிய கும்மக் செய்யவேணுமென்று ஞாபகத்தில் வைக்கவேண்டியது. ஆகையால் போலீசார் குற்றத்தைத் தடுக்கிறதற்காக என்ன ஏற்பாடுகள் செய்கிறார்களோ அதற்கு அவாள் உதவிசெய்ய வேண்டியது. ஒரு கிராமத்தில் பலமான குற்றம் நடந்தால் சுற்றுப்பக்கத்து கிராமமுனிசீபுகள் அவ்விடத்துக்குப் போய் அந்த கிராம முனிசீபுடனே கூட போலீசாருக்கு ஒத்தாசை செய்யவேண்டியதும் விசாரணை பூர்த்தி செய்யவேண்டியதற்கு தங்களாலானவு உதவிசெய்ய வேண்டியதும் அவாளுடைய கடமையா யிருக்கிறது.

10. சட்டப்படிக்கும் கவர்ன்மெண்டாருடைய அபிப்பிராயப்படிக்கும் கிராம மாஜிஸ்திரேட்டுகளாகிய கிராமமுனிசீபுகள் போலீசாரிடத்தில் பெற்றுக்கொள்ளவேண்டிய வேலை என்னவென்றால் பின்வருகிறமூன்று விஷயங்களிலும் போலீசாருடைய முயற்சிகளையும் சக்தியையும் நன்றாய் உபயோகப்படுத்திக்கொள்ளவேண்டியதேயாம்.

(இன்னும் வரும்.)

## கிராம பஞ்சாயத்து.

இதற்கு முற்பட்ட 3-வது சஞ்சிகையில் இவ்விஷயத்தை விவரமாக எழுதப்பட்டிருக்கிறது. இந்த சஞ்சிகையில் கிராம பஞ்சாயத்காரைக் கூட்டிவைக்கிறதற்கு கிராம முனிசீப்புகளுக்கு அதிகாரம் உண்டென்பதையும், அந்த பஞ்சாயத்தாருடைய அதிகாரம் இப்படிப்பட்டதென்பதையும் விவரிக்கின்றோம்.

மதிப்பிலேயாவது பணத்திலேயாவது இவ்வளவென்றுதொகை நிபந்தனையில்லாத பணம் முதலான அசைக்கப்படுஞ்சொத்தைக் குறித்த வியாச்சியங்களை தங்கள் எல்லைக்குள்ளே விசாரித்து தீர்க்கும்படி கிராமபஞ்சாயத்தாரைக் கூட்டி வைக்கிறதற்கு கிராம முனிசீப்புகளுக்கு அதிகாரம் உண்டு. பஞ்சாயத்து வியாச்சியங்களில் எவன் சாட்சி சொல்லவேண்டியதாக இருக்குமோ அப்பேர்கொற்றவனை பஞ்சாயத்தில் சேர்க்கக்கூடாது. கீழ்ப்பட்ட சர்க்கார் உத்தியோகஸ்தன் பஞ்சாயத்தாரில் ஒருவனாயிருக்கும்படி நேரிட்டால் பஞ்சாயத்துக்கு வருவதற்கு அவருக்கு எந்த நாள் அனுகூலப்படுமோ அதை தெரிவிக்கும்படி அவர் எஜமானனுக்கு எழுதி தெரிந்துகொண்டு அந்த தினத்தில் வரும்படி பஞ்சாயத்தார் எல்லோருக்கும் சம்மன் தயார் பண்ணவேண்டியது.

1. (உட்பிரிவு.) வியாச்சியத்துக்குப் பிடிக்கும் படியான செலவுகளை குறைப்பதற்காகவும், பெரிய குடித்தனக்காரர்களாயும் புத்திசாலிகளாயுமிருக்கிற குடிகளைக்கொண்டு அவர்களுடைய அக்கம்பக்கத்தாருக்கு நியாயபரிபாலனம் செய்வித்து அதின் முன்னிலைக்கு அவர்களை உபயோகமும் மேன்மையுமுள்ளவர்களாகச் செய்வதற்காகவும், சென்னப்பட்டணத்து ராஜதானிக் குட்பட்ட தேசங்களிலிருக்கும் குடிகளுக் குண்டாகும் சீவில் வியாச்சியங்கள் பைசலாகும் பொருட்டு, அதுகளை பஞ்சாயத்து சபையாரிடத்துக்கு அனுப்பவேண்டியதென்றும், அப்படி அனுப்புவதற்கு உபயவாதிகளுஞ் சம்மதித்து கிராமமுனிசீபுகளிடத்தில் மனுவுகொடுத்துக் கொண்டால் அப்போர்க்கொற்ற வியாச்சியங்களைக் கேட்டு விசாரணைசெய்து தீர்மானிக்கும் பொருட்டு பஞ்சாயத்தாரைக் கூட்டி வியாச்சியத்தை அவர்களிடத்துக்கு அனுப்புவதற்கு கிராம முனிசீபுகளுக்கு அதிகாரம் உண்டு. இந்த வேலைகளை நிறைவேற்றுவதில் லஞ்சம் வாங்கினார் என்று கொண்டுவரப்பட்ட பிரியாது சிவாய் மற்ற நடத்தையைக்குறித்து பஞ்சாயத்தார் ஜவாபுதாரிகளாக வேண்டியதில்லை

2. (உட்பிரிவு.) விவாதப்பட்ட விஷயத்தைக்குறித்து வாதி பிரதிவாதிகளிருவரும் அப்பீலுக்குப் போகாமல் பஞ்சாயத்தார்



முடிவானதாகச் செய்யும் தீர்ப்புக்கே சம்மதிக்கிறதாய் ஒப்புக்கொண்டு பஞ்சாயத்தாரைக் கூட்டிவைக்கவேணுமென்று கிராமமுனிசீபுக்கு எழுதிக்கொடுத்து கேட்டுக்கொள்ளும்போது, அந்த முனிசீப்பு அந்த உபயவாதிகளுங் குடியிருக்கிறகிராமத்து முனிசீபாயிருந்தாலும் மற்ற எந்த கிராமமுனிசீபாயிருந்தாலும் பஞ்சாயத்தாரைக் கூட்டிவைக்கலாம். ஒருவேளை கட்சிக்காரர்களில் ஒருவன் மாத்திரம் பஞ்சாயத்தாரைக் கூட்டவேண்டியதென்று எழுதிக்கொடுத்தால் மற்றொரு கட்சிக்காரன் அந்த கிராமத்து குடியாயிருக்கிற பட்சத்தில் அவனுக்கு சம்மன் அனுப்பினதின் பேரில் அவன் ஆஜராய், பஞ்சாயத்தாரைக் கூட்டுவது சம்மதிதானென்று எழுதிக்கொடுத்தால், அப்பொழுது கிராமமுனிசீபு பஞ்சாயத்தாரைக் கூட்டிவைத்து, அந்தவிவகாரத்தை தீர்மானிக்கும்படி செய்யவேண்டியது.

3. மேற்கண்ட உட்பிரிவுபடிக்கு வாதி பிரதிவாதிகளிருவரும் சம்மதித்து எழுதிக்கொடுத்து கேட்டுக்கொள்ளும் வியாச்சியமானது கால நிர்ணயப்படி 12-வருஷத்துக் குட்பட்ட வியாச்சியமாயிருக்கவேண்டும், அந்தகாலத்துக்கு மேற்பட்டிருந்தால், வாதியானவன் பிரதிவாதியை அடிக்கடி கேட்டு பிரதிவாதி ஒப்புக்கொண்டதற்காவது, எந்த நியாயஸ்தலத்திலாவது பிரியாது செய்யப்பட்டு அதை இன்னகாரணத்தினாலே நடத்தக்கூடாமற் போய்விட்டதென்பதற்காவது, அல்லது பால்யனாயிருந்தது முதலான ஹேதுக்களினாலே நியாயத்தைப் பெற்றுக்கொள்ளக் கூடாமலிருந்ததென்பதற்காவது, நல்ல தகுதியான காரணங்களை ருசுபடுத்தி வையாதபட்சத்தில் அந்தப்பிரியாதை அங்கீகரிக்கக் கூடாது.

4. கிராம பஞ்சாயத்தார் ஐந்துபேருக்குக் குறையாமலும், பதினொரு பேருக்கு உயராமலும் ஒற்றைப்படையாகவே எப்பொழுதும் இருக்கவேணும். அவர்களுக்குள்ளே ஜாஸ்திதொகைப்பட்டவர்களுடைய அபிப்பிராயப்படிக்கே தீர்ப்புசெய்ய வேண்டியது. (மேலும், 1840 வருஷத்திய 3-வது ஆக்ட்டின்படிக்கு பஞ்சாயத்தார் செய்யுந் தீர்ப்பிலே அவர்களில் குறைந்த தொகையுள்ளவர்கள் கையெழுத்து பண்ணமாட்டோமென்றால், ஜாஸ்தி தொகையுள்ளவர்கள் கையெழுத்து செய்வதே போதும்.

ஆனால், குறைந்த தொகையுள்ளவர்கள் கையெழுத்து செய்யாமல் போனதற்குள்ள நியாயத்தை அந்தத்தீர்ப்பின் மேரில் எழுதி, தங்களுடைய கையெழுத்தாவது கைநாட்டாவது செய்யவேணுமென்றால், அதை சாஸ்தி தொகையுள்ளவர்கள் அங்கீகரிக்க வேண்டியது.)

5. மேற்படி பஞ்சாயத்துக்கு நேமிக்கப்பட்ட மனுஷியாள் அந்த கிராமத்தில் குடியிருக்கிறவர்களிலே யோக்கியாளாயிருக்கவேணும். அப்படிப் பட்டவர்கள். 11-பேருக்கு அதிகமாயிருந்தால், அவர்களை பஞ்சாயத்துக் காரியத்துக்கு கிராம முனிசீபு முறைவட்டமாய் அழைப்பிக்க வேண்டியது.

(இன்னும் வரும்.)

---

ரிவினியூ செடில் மெண்டார், இரிகேஷன் ரிவினியூ கணக்குகளைத் தயார் செய்வதற்காக ஏற்படுத்தின விதிகள்.

## இந்தக்கணக்கின் பிரயோஜனமாவது:—

I. ஒவ்வொரு நிலத்துக்கும் பாய்ச்சப்பட்ட ஜலத்தின் தீர்வை, பூமிக்குள்ள தீர்வையில் இவ்வளவென்பதை காட்டுகிறது.

II. பாய்ச்சலாதாரங்களைப் புதிதாயுண்டாக்குவதினாலாவது பூர்வீக ஜலாதாரங்களை சீர்படுத்துவது அல்லது விருத்தி பண்ணுவதினாலாவது உண்டாகிற பாய்ச்சல் விருத்தியையும், அதிகசாகுபடியையும் தெரிவிக்கிறது.

III. அப்படிப்பட்ட பாய்ச்சலாதாரங்களினால் ஏற்பட்ட இலாப நஷ்டத்தைக் காட்டுகிறது. மேற்கண்டவைகளில் முதலாவது பாகத்தைப்பற்றி மாத்திரமே இதில் விதிகள் ஏற்படுத்தியிருக்கின்றன.

சென்னை ராஜதானியில் ஜலம் பாய்ச்சப்பட்ட நிலங்களுக்கு இரண்டுவிதமாய் தீர்வை யேற்பட்டிருக்கிறது.

(a) கிருஷ்ணா, கோதாவரி டெல்டாக்களில் பூமித்தீர்வை வேறாகவும், ஜலத்தீர்வை ஒரேவிதமாய் ஏற்பட்டிருக்கிறது.

(b) இந்தராஜதானியில் மற்றஜில்லாக்களில், தண்ணீர்பாய்ச்சப்பட்ட பூமிகளுக்குப் பிரத்தியேகமாக பூமிக்கும், ஜலத்துக்கும் தீர்வை யேற்படாமல் ஒரேமொத்தமாய் நன்செய்தீர்வை விதிக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கணக்கைத் தயார்செய்வதில் பூமித்தீர்வை இவைகளைப் பிரிக்கவேண்டிய தவசியமாதலால், இதனடியில்கண்டவிதப்படி அவைகளைப் பிரிக்க வேண்டும்.



மொத்தத் தீர்வை யேர்ப்பட்டு ஜலம் பாய்கிறவெல்லா நிலங்களையும் நன்செய் நிலமென்றாவது, இருபோகநஞ்செய் நிலமென்றாவது கண்டு தீர்வை விதிக்கப்பட்டிருக்கிறது. அவைகளின் தீர்வையை பூமிக்கும், ஜலத்துக்கும் அடியில்கண்டபடி பிரிக்க வேண்டியது.

## ஒரு போக நன்செய்.

1. புது செடில்மெண்டாகாத விடங்களில் பாய்ச்சலாதாரம் எப்போது உண்டாயிற்றோ அல்லது விருத்தி செய்யப்பட்டதோ, அல்லது எது முதல் கணக்குகள் வைக்கப்பட்டிருக்கிறதோ, அவ்வருஷத்துக்குமுன் 5-வருஷத்திய புஞ்சைத்தீர்வையை சராசரி செய்து கிடைத்த தீர்வை ரேட்டை ஜலம்பாய்ந்த மொத்த விஸ்தீரணத்துடன் பெருக்கி, வந்த தொகையை நிலத்துக்குள்ள பாகமாகவும், பாக்கி தொகையை நீருக்குள்ள பாகமாகவும் வைத்துக்கொள்ளவும், கிராமம் சராசரி நிர்ணயிக்கக் கூடாமையாயிருந்தால் தாலூகா சராசரியையாவது அதுவுமில்லாவிட்டால் ஜில்லா சராசரியையாவது எடுத்துக்கொள்ளவேண்டும்.

எப்படியெனில்:—மேற்சொன்னபிரகாரம் தீர்மானிக்கப்பட்ட சராசரி புஞ்செய் ரேட்டு ஏகர் 1-க்கு 3 ரூபா என்றும், மொத்தம் 1000-ஏகர் நஞ்செய்க்கு ரூபா 10000 தீர்வையென்று வைத்துக்கொள்வோம். இந்த 10000 ரூபாயில் நிலத்தின் தீர்வை ரூபா 3000 போக பாக்கி ரூபா 7000 நீருக்குள்ள தீர்வையென்று யேற்படுகிறது.

2. புது செடில்மெண்டான விடங்களில் நன்செய் வகுப்புக்கும் இனத்துக்கும் அந்த கிராமப் புன்செய் குறிப்பையனுசரித்து என்ன புன்செய்த்தீர்வை விழுமோ அதை நிலத்துக்கும், மொத்தத் தீர்வையின் மற்ற பாக்கியை நீருக்கும் வைக்கவேண்டியது.

எப்படியெனில்:—ஒரு கிராமத்தில் 10000 ரூபா மொத்தத் தீர்வையுள்ள நஞ்சை ஆயிரமேக்ராயிருப்பதாகவும், புஞ்சைக்கு ஏகர் 1-க்கு ரூபா 2-தீர்வை யேற்பட்டிருக்கிறதாக வைத்துக்கொள்வோம். மேற்படி மொத்தத் தீர்வையில் (2000) ரூபா நிலத்துக்கும், பாக்கி (8000) ரூபா நீருக்கு மேற்படுகிறது.

## இரு போக நன்செய்.

இரண்டுதரம் நஞ்சைப்பயிர் இருபோகநிலங்களில் பிரதி வருஷமும் சாகுபடி செய்யப்படுகிறதென்கிற உத்தேசத்தினால்,

இரண்டுபோகததுக்கும் சேர்த்து மொத்தத் தீர்வை யேற்பட்டிருக்கிறது.

(a) சென்னை ராஜதானியில் சர்க்கார் ஜலமில்லாமல் முதல்போகஞ்செய் நிலத்தில் எவ்விதமான இரண்டாம்போகம் சாகுபடி பண்ணினாலும் அதற்காகத் தீர்வை வசூல்செய்கிறதில்லையென்பதால், இரண்டாம்போகத் தீர்வைமுழுதும் தண்ணீர் தீர்வையென்றே எண்ணவேண்டும். சாசுவத இருபோக நிலத்தீர்வையைப் பிரிப்பதற்கு, நாம் முதலில் இரண்டாம போகத்துக்கு உள்ளபாகத்தை நிர்ணயஞ் செய்துகொள்ளவேண்டியதாயிருக்கிறது. அது விஷயத்தில் யாதொரு சிரமமுமில்லை.

(b) திருநெல்வேலி தவிர மற்ற எல்லா ஜில்லாக்களிலும் சாசுவத இருபோக நிலத்தின் தீர்வையானது, அதேவகுப்பும் இனமுமுள்ள ஒருபோக நிலத்தின் தீர்வைக்கு ஒன்றரை மடங்காயிருக்கிறது ஆகையால் இருபோக நிலத்தின் தீர்வையில் மூன்றில் ஒரு பங்கு சாதாரணமாய் இரண்டாம் போகத் தீர்வையாக இந்த ராஜதானி முழுமைக்கும் மாமூலாயிருக்கிறது.

திருநெல்வேலி ஜில்லாவில் இருபோக நிலத்தின் தீர்வையானது, ஒருபோக நிலத்தீர்வையைக்காட்டிலும் மூன்றில் இரண்டு பங்கு அதிகமாயிருக்கிறது. ஆகையால் இருபோக நிலத்தின் மொத்தத்தீர்வையில் 5-ல். 2-பங்கு மாமூல் இரண்டாம் போகத் தீர்வையாகிறது.

(c) புதுசெழில் மெண்டான விடங்களில் இருபோக நிலங்களுக்கு இரண்டாம் போகத்தீர்வை சாசுவதமாய் ஏற்பட்டிருக்கிறது. இரண்டாம் போகத்துக்குவேண்டிய தண்ணீர் எங்கெந்த விடங்களில் நிச்சயமாய் கிடைக்கமாட்டாதோ, அந்த விடங்களில் ஜலக்குறைவுக்குத் தக்கபடி மாமூலான தண்ணீர்த்தீர்வைக்குக் குறைந்த தீர்வையை சாசுவதமாய் ஒப்புக்கொள்ளும்படி அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்படி சாசுவதத் தீர்வைக்கு ஒப்புக்கொண்டவைகளில் உயர்ந்த ரேட்டு திருநெல்வேலியில் முதல்போகத் தீர்வையில் பாதியாகவும், மற்றஜில்லாக்களில் 3-ல் ஒரு பங்கும், அதற்குக் கம்மியாகவுமிருக்கிறது.

(d) முதல்போகத் தீர்வையில் பாதியாக விருக்கும்போது, இரண்டாம்போகத் தீர்வை, மொத்தத்தீர்வையில் 4-ல் ஒருபங்காகிறது.

(e) முதல் போகத் தீர்வையில் 3-ல் ஒருபங்காயிருக்கும்போது, இரண்டாம போகத்தீர்வை மொத்தத்தீர்வையில் 4-ல் ஒருபங்காகிறது.

(இன்னும் வரும்.)



## கிராமங்களின் ரெவினியூ விவகார நடவடிக்கைகள்

4-வது சஞ்சிகையின் 12-வது பக்கத்தின் தொடர்ச்சி.

தாலூக்கா அதிகாரியாகிய தாசில்தாருக்கு ரிவினியூ வசூல்செய்வது தவிர இன்கம்டாக்ஸ் வரிபோடுதல், அதை வசூல்செய்தல், மராமத்து இலாகாதாரர்கள் ரிபோர்செய்வது நீங்கலாக ஐம்பது ஏகர் ஆயக்கட்டுக்கு உள்பட்ட பாய்ச்சலுள்ள ஏரி, ஆத்துக்கால், ஊற்றுக்கால்களுக்கு ரிபேர் செய்வித்தல் (மைனர் இரிகேஷன்) கால்நடைகளை அடைக்க பவுண்டுகளை கட்டுவைத்தல். அவைகளின் அபராதம் வசூல்செய்வித்தல். ஜலாதார ஜனாதார சம்மந்தமாய் பானத்துக்கு ஜலம் அருமையான கிராமங்களில் கிணர், குளம் வெட்டுவைத்தல். மாஜிஸ்திரேட்டு ஹோதாவில் துஷ்டர்களை சிட்சைபரிபாலனம் செய்தல். தர்காஸ்தின் பேரில் சாகுபடிக்கு தரிசு நிலங்களை அடமானம் செய்தல் பட்டா மாறுதல் செய்ய உத்திரவளித்தல். ஏழை குடிகளுக்கு நிலம் விருத்திசெய்யவும் கிணர்வெட்டவும் வாரகம் கொடுத்து இன்னம் குடிகளுக்கு வேண்டிய பொது நன்மைகளை செய்வித்தல் முதலிய அதிகாரங்களுமிருக்கின்றன. இவைகளில் மாஜிஸ்திரேட்டு ஹோதாவில் பூருகாலம் செலவழிந்து விடுகிறதென்றும் ரிவினியூ வேலைகளுக்கு குந்தகமாகிறது என்றும் சி வருஷங்களுக்கு முன்னால் தாலூக்கா ஒன்றுக்கு ஸ்டேஷனரிமாஜிஸ்திரேட்டு என்று ஒருவரை நியமிக்கப்பட்டிருக்கிறது. சுவல்ப பேரீஜ் வசூலாகும் தாலூக்காகளுக்கு அவ்வளவாக வேலை ஜாஸ்தி இல்லை என்று தாத்பரியப்பட்டு இம்மாதிரி ஸ்டேஷனரி மாஜிஸ்திரேட்டுகள் ஏற்பட இல்லை. அவர் ரிவினியூ ஹோதாவில் தாசில்தாருக்கு ஐக்கியப்பட்டவர். தாசில்தார் ஏவும் ரிவினியூ வேலைகளை கிராமங்களுக்குப்போய் பார்த்து ரிபோர்ட்டு செய்யவேண்டியவர். தாசில்தார் கிராமங்களின்பேரில் சர்கியூட் போயிருக்கும் காலத்தில் தாசில்தார் ஆபீசை மானேஜ்மெண்டு செய்யவேண்டியவர். தாசில்தார் பாஸ்செய்த அர்ஜி-லெட்டர்-தாக்கீது-கணக்கு இவைகளில் தாசில்தாருக்காக இவர் கையெழுத்து செய்பவர். மாஜிஸ்திரேட்டு ஹோதாவில் மாத்திரம் தாசில்தாருக்கு சமதியானவர் இம்மாதிரி மாஜிஸ்திரேட்டு பிரத்தியேகமாய் ஏற்புட்டிருந்தாலும் தாசில்தாருக்கு மாஜிஸ்திரேட்டு என்னும் ஹோதாவும் அவனைவிட்டு பூரவும் நீங்கவில்லை- ஆனல் கட்சிக்காரர்கள் பிராது கொண்டுவந்தால் முன்போல் பிடித்துக்கொண்டு விசாரணை செய்யும் அதிகாரம் மாத்திரம் நீங்கியிருக்கிறது. டிஸ்திரிக்ட்-ஜாயின்ட்-டிப்டி-மாஜிஸ்திரேட்டு முதலிய மேலதிகாரிகளால் உத்திரவு செய்யப்படும் கேசுகளை தங்கள் பயலில் எடுத்துக்கொண்டு முன்போல் விசாரணை செய்து எதிரிகள்பேரில் குற்றம் ருசுவானதாக பாவிக்கப்பட்டால் சட்டத்

தை யனுசரித்து பழயபடி அபராதம் - காவல் - சிரதெண்டனை விதிக்கலாம். செஷன்கோர்ட்டுக்கு கமிட்செய்யப்படவேண்டிய கேசாயிருந்தால் கமிட்செய்யலாம். குற்றவாளி ஜாஸ்திதெண்டனைக்கு அருகனானவனாகயிருந்தால் டிவிஷனல் மாஜிஸ்திரேட்டாருக்கு அனுப்புதல் முதலிய தீர்ப்புகளை தன் யுக்தானுசாரம் அதிகாரம் செலுத்தலாம். இந்த மாஜிஸ்திரேட்டு அதிகாரம் நீங்கிவிட்டதாலேயே தாசில்தாரர்களிட பெருமை குறைந்து குடிகளுக்கு தாசில்தாரர்களிடத்தில் முன்னிருந்த பயம் எவ்வளவோ நீங்கி ரிவினியூ இனிஸ்பெக்டர்களைப்போல இவர் ஒரு பெரிய ரிவினியூ அதிகாரி என்று சொல்லிவருகிறார்கள். இன்கம்டாக்ஸ் வரிபோடுதல் என்னும் ஒரு அதிகாரம் தாசில்தாருக்கு இருப்பதால் அதற்கு கொஞ்சம் கௌறவம் இருக்கிறது. இந்த மாஜிஸ்திரேட்டு ஹோதாவையும் அடியோடே எடுத்துவிட்டு ரிவினியூ வேலையையே தாசில்தார்கள் பார்த்துவருதல் நலம் என்று நம் காங்கிரஸ் மகாசபையார் பலதடவைகளில் முறையிட்டுக்கொண்டதை அனுசரித்து கனம்பொருந்திய நம் கவர்னர் - ஜெனரல் அவர்களும் அபிப்பிராயப்பட்டு அதை தம்மிடமந்திராலோசனை சபையில் பிரசங்கத்துக்கு கொண்டுவரும்படி செய்திருக்கிறார். இதைப்பற்றி கூடிய சீக்கிரத்தில் முடிவான உத்திரவு பிறப்பிக்க முயனறு இருக்கிறார். இதுவும் நம்மிடவர்கள் செய்த பாக்கியம்தான். அனுகூலமான உத்திரவு அளிக்கும்படி கடவுளைப் பிரார்த்திக்க வேண்டியது தாசில்தாருக்கு உதவியாய் ஏற்பட்டிருப்பவர்களில் டிவிஷன் டிப்டி தாசில்தார் ஒருவர். தாலூக்கா கிராமங்களை பேரிஜாக்கும் ஜனத்தொகைக்கும் தக்கபடி 1, 2, 3, 4, 5 என பலவாறாக சேர்த்து கிராமமுனசிபு வட்டம் என்றும் இம்மாதிரி சில வட்டங்கள் அடங்கியதை தகில் என்றும் சில தகில்கள் அடங்கியதை ரிவினியூ இன்ஸ்பெக்டர் பிரக்கா வென்றும் சில பிரக்காக்கள் அடங்கியதை டிப்டி தாசில்தார் டிவிஷன் என்றும் சில டிவிஷன் அடங்கியதை தாலூக்கா என்றும் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஒரு தாசில்தாருக்கு கீழ் சில தாலூக்காக்களில் 2, 3 டிப்டி தாசில்தார்களும் இருக்கிறார்கள். இந்த டிப்டி தாசில்தாருக்கு மாத்திரம் முன் தாசில்தார்கள் எவ்விதமாக ரிவினியூ மாஜிஸ்திரேட்டு ஹோதாவகித்து வந்தார்களோ அதுபோலவே, இப்போதும் வகித்து அவரவர் டிவிஷன் எல்லை வரம்புக்கு உள்ளடங்கிய கிராமங்களில் அதிகாரம் செலுத்தி வருகின்றார்கள். இதனால் டிவிஷன் டிப்டி தாசில்தார் அதிகாரத்துக்கு உள்பட்ட கிராமக்குடிகளுக்கும் கிராம உத்தியோகஸ்தர்களுக்கும் தாசில்தாருக்கு சுய அதிகாரம் நீங்கியபோதிலும் கிராமத்தருக்கு பயம் நீங்கவில்லை. நமது கவர்னர் ஜெனரல் அவர்கள் செய்ய உத்தேசித்திருக்கும் ஏற்பாடு அனுகூலமாக முடிவுபெறுமாகில் ஒரு தாலூக்காவிலுள்ள எல்லாகுடிகளும் ஸ்டேஷனரி மாஜிஸ்திரேட்டு ஏற்படாத தாலூக்கா குடிகளும் கிராம உத்தியோகஸ்தர்களும் என்



றும் சமதியாய் ஒருவருக்கொருவர் வித்தியாசமின்றி சமமான சுதந்தரமடையலாம். இன்கம்டாக்ஸ் வரி விஷயமாய் நம் கவர்னர் ஜெனரல் அவர்கள் பிறப்பித்த புது உத்திரவால் சரியான கணக்கு வைக்க திறமையற்ற அநேக ஏழை ஜனங்கள் வரிசெலுத்துதலினின்றும் நீங்கி சுகப்பட்டதுபோல் இந்த ஏற்பாட்டாலும் சுகமடையலாம்.

(இன்னும்வரும்).

---

## ஜமாபந்தி.

இப்பூவுலகில் அடங்கிய நம் பரதகண்டத்தில் பெய்யும் மழையினாலாகிய தண்ணீரில் ஒரு பகுதி பூமிக்குட்சென்று ஊற்றுகளாகிவிடுகிறது. ஒரு பகுதி பள்ளங்களிருந்தால் அவைகளில் தங்கியும் நம் அரசர்களால் அப்பள்ளத்தாக்கில் கட்டப்பட்ட கரைகளால் தடைபட்டு ஏரிகள் குளங்கள் என பெயர் பெற்றும் அவைகள் நிரம்பியதுபோக மிகுதி ஆறுகளாகிறது. இவ்வாறுகளின் இடைகளில் கட்டப்பட்ட அணைகளால் ஓடும் ஜலம் தடைபட்டு அவ்வணைகளிலிருந்து வெட்டப்பட்டிருக்கும் கால்வாய் வழியாக ஓடி மழைவருத்து இல்லாத ஏரிகளை நிறப்புவதுடன் தாழ்ந்த பிரதேசத்திலுள்ள நிலங்களை நோக்கி ஓடிப்பாய்கிறது. இம்மாதிரி ஏரி அணை-ஊற்றுக்கால்-ஆற்றுக்கால் வழியாய் தண்ணீர்பாயும் நிலங்களுக்கு நஞ்சை நிலம் என்றும் பேர்வகித்து முதல்போகம் பயிருக்கு ஜலம் பாய்ந்தால் அயன் தீர்வையும் இரண்டாம்போக பயிருக்கு ஜலம்பாய்ந்தால் மடிப்புதீர்வை என்றும் நமது இராஜாங்கத்தார் தீர்வை வசூல்செய்கிறார்கள். தண்ணீர் பாய்ச்சல் இல்லாத நிலங்களுக்கு புஞ்சை என பேர்வகித்து எப்போதும் ஒரே தீர்வை வசூல்செய்கிறார்கள். முன்காலத்தில் அரசாட்சி செய்துவந்த மனு தசரதசக்கிறவர்த்தி - அரிச்சந்திரமகாராஜன் - அசோகன் - சேர - சோழ - பாண்டிய இராஜாக்கள் விளைந்ததானியத்தில் (1) ஒருபங்கு தேவாலயம். (2) ஒருபங்கு தர்மம். (3) ஒருபங்கு பிதுர்தேவதைகளுக்கு சிரார்த்தம் முதலியது செய்ய. (4) ஒருபங்கு உழவு விதை செலவு. (5) ஒருபங்கு பயிரிடுங்குடி. (6) ஒருபங்கு அரசன் இம்மாதிரி பகிர்ந்து ஆறில் ஒருகடமை வாங்கிவந்தார்கள். மொகலாய சக்கிரவர்த்திகளில் ஒருவராகிய அக்பர் என்பவர் தம்முடைய நாட்டிலுள்ள நிலங்களை செவ்வனே அளவிட்டு மூன்றில் ஒருகடமை வாங்கிவந்ததால் பயிரிடுங்குடிகள் சுபிக்ஷமாக வாழ்ந்து வந்தார்கள். அக்பர் இந்த வரும்படியைக்கொண்டு வர்ப்பழுது பார்த்தும் சேனை சேவகர்களுக்கு யுக்தபடி சம்பளமளித்தும் வந்தார். இப்போது ஆங்கிலேய அரசாட்சியில் நான் [illegible] பணமாக வசூல்செய்யப்படுகிறது. நீர் வளம் - நிலவளம் 10 வருஷங்களிட சராசரி விளைவின் தாமாஷா முதலியதை அனுசரித்து இப்போதிய தீர்வை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஆதிகாலத்தில் பெய்து

வந்த மாதமும்மாரிக்கு பதில் வருஷமும் மாரி பெய்வதே அநேகவருஷங்
களில் கஷ்டமாயிருப்பதால் முன்னிருந்த ஆறில் ஒருகடமையாவது ஆக்
பர்காலத்தில் ஏற்பட்ட மூனறில் ஒருகடமையாவது நமது ஆங்கிலேய
அரசர்கள் வாங்கிகொள்வார்களாகில் கிஸ்திபணம் செலுத்தவேண்டுமே
என்கிற பயம் சற்றேனுமில்லாமல் சுகமே இருப்பார்கள். இதைக்கென
வாக நினைக்கலாமே அன்றி அனுஷ்டானத்துக்கு வரத்தக்கினதல்ல. இம்
மாதிரி ஜலம்பாய்ந்தும் மழை ஜலத்தாலேயே பயிராயும் வரும் ஒவ்வொரு
சுபரிட கைப்பத்திலிருக்கும் நிலங்களுக்கு கிராமமுன்சீபு கர்ணம் ரிவினியு
இன்ஸ்பெக்டர் பிரேரேபிக்கும் தீர்வை சரிதானு என்று கிராமகுடிகளை
வைத்துக்கொண்டு விசாரித்து பைசல்செய்து பட்டாகொடுப்பதர்க்கு ஜ
மாபந்தி என்று பேர்வழங்குகிறது. ஜமாபந்தி என்னும் இந்துஸ்தானிமொ
ழியானது இரண்டு சொற்களால் அடங்கியிருக்கிறது. ஜமை என்ருல் தீர்
வைக்கு கொண்டுவருதல், பந்து எனருல் ஒன்ருக சேர்த்தல். ஒருபட்
டாதாரனுல் பலவாராக வசூலாகவேண்டிய தீர்வை எல்லாம் திரட்டி உரு
ட்டி கடைசியாக ஒருகணக்கில் கொண்டுவந்து சேர்த்து வசூலாகவேண்டி
யமொத்ததொகை இவ்வளவென்றுதெரிந்து பட்டாவில்தாக்கல்செய்தல்.
இந்தமொழி மகம்மதிய அரசர்கள் காலந்தொடங்கி தொன்றுதொட்டு வ
ழங்கிவருவதால் இந்த ஜமைபந்து என்னும் வார்த்தை மருவி ஜமாபந்து
ஜமாபந்தி என்று இப்போதும் இங்கிலிஷ், தமிழ், தெலுங்கு, கன்னடம்
மலையாளம் முதலிய பாஷைகளிலும் சுயபாஷை வார்த்தையைப்போல வ
ழங்கி வருகிறது. ஒவ்வொரு பட்டாதாரன் செலுத்தவேண்டியது இவ்
வளவு என்றும் தாலூக்காவுக்கு இவ்வளவு பேரீஜு என்றும் மொத்தம்
ஏற்படுத்தி பட்டாக்கள் அதற்குத்தக்கபடி தயார்செய்து இவைகளை தணி
க்கைசெய்து கையெழுத்து செய்யும் ஆபீசருக்கு ஜமாபந்தி ஆபீசர் என்
றுபேர். குடிகள் தங்கள் கஷ்டநிஷ்டூரத்துக்கு தக்கபடி பிரயாசைபட்டும்
கடன் வாங்கியும் உழவுமாடு விதைமுதலியது வாங்கி விதைப்பவர்கள் சில
ர், மாடு-விதை இருந்தும் ஆள் இல்லாமல் அவஸ்தை படுபவர்கள் சிலர்,
ஜலத்துக்காக ஏங்கிநிற்பவர்கள் சிலர், உள்ளநிலத்தை பூராவாகுபடி செ
ய்ய சக்தியில்லையே என்பவர் சிலர் சாகுபடிக்கு நிலம் இல்லையே என்பவர்
சிலர், கஷ்டப்பட்டு சாகுபடிசெய்த பயிருக்கு களை எடுக்கபணமில்லையே,
என்பவர் சிலர் இவ்வளவு கஷ்டப்பட்டு சாகுபடி செய்து அறக்க எத்தனி
த்திருக்கும்போது சொந்தக்காரனைப் போல திருடன் அறுத்துக்கொண்டு
போனதை பார்த்து ஏங்கிநிற்பவர் சிலர், இட்டபயிர் நீரில்லாமல் உலர்ந்து
சாவியாய் போகுதே என்பர் சிலர் இம்மாதிரி கிராமத்தில் உண்டாகும்
கூக்குரலுக்கு செவிகொடாமல் கிராமாதிகாரிகளாகிய மணியம்கர்ணம்சொ
ல்வதென்ன வென்றுலோ ரிவினியு இனிஸ்பெக்டர் அஜிமாவு செய்யவரு
வார் அவருடன் சொல்லிக் கொள்ளுங்கள். நாங்களும் சிபார்சுசெய்கிறோ



ம் உத்திரவுபடி நாங்கள் சாகுபடி அடங்கல் கணக்குகளை தயார்செய்கி
ரும், ஷராஎழுதும் அதிகாரம் ரிவினியு இனிஸ்பெக்டருடையது அவர்
அனுகூலம் செய்வார் என்று சொல்லிதங்கள் பழியை சிலகிராம உத்தி
யோகஸ்தர்கள் கழித்துக்கொள்ளுகிறது. இதுபிசகு. அடங்கலில் கணக்கனு
டைய ஷரா என்று இருக்கும் கலத்தில் ஒவ்வொரு நெம்பர் விஷயத்தி
லும் பட்டாதாரன் சொல்வதை யோசித்து மணியக்காருடன் கலந்து வா
ஸ்தவ்விய மானதை நிர்பயமாய் கர்ணம் எழுதவேண்டியது. இல்லாதஸதை
எழுதினுல் தான் மேலதிகாரிகள் கண்டு பிடித்துக் கொண்டால் என்ன
செய்வார்களோ என்று பயப்படவேண்டும். நியாயமான வழியில்சென்
ருல் ஒருபோதும் கெடுதிநேரிடாது.நெம்பர்வாரியில் எழுதும்ஷராவுடன்
அடங்கல்கணக்கில் கடைசியில் மொத்த ஷராவாக மணியகார் கர்ணம்
இவர்கள் தங்களுக்கு யுக்தமாக தோன்றுவதை எல்லாம் எழுதலாம். ரிவி
னியு இனிஸ்பெக்டர் அவருக்கு தோன்றியதை அவர் எழுதும் ஷராவில்
எழுதுவார். சிலரிவினியு இனிஸ்பெக்டர்கள் போதுமான அவகாசம் இரு
ந்தால் கிராமத்தில் முக்கியமான தென்று தோன்றுவதை மாத்திரம்நேரில்
போய்பார்க்கிருர்கள். அஜிமாஷ் சீக்கிரம் முடியவேணும்என்று தாசில்தார்
உத்திரவு செய்திருந்தாலும் அல்லது தனக்கு ஏதோசொந்த அவசரமான
வேலையிருந்தாலும் கணக்கப்பிள்ளை மணியக்காரர் வீட்டு தெருத்திண்ணை
மேல் இருந்தபடியே ரிவினியு இனிஸ்பெக்டர்கள் ஷரா எழுதி விடுகிறார்
கள் என்பது தாசில்தார்கள் கலெக்ட்டர்கள் ரிவினியு போர்ட்டார் கவுன்
சிலர்கள் முதலானவர்களுக்கும் தெரிந்த விஷயம். அந்த அவசரத்தில்ரிவி
னியு இனிஸ்பெக்டர் எந்த நிலத்தை பார்க்கப்போகிருர். எந்தபட்டாதாரனை
விசாரிக்கப்போகிருர். சில ரிவினியு இனிஸ்பெக்டர்கள் தாலூக்காவுக்கு
போய் அங்கே ஷரா எழுதுகிறார்கள் என்பது சர்வம் அறிந்தது தானே.
ஆதலால் கிராம உத்தியோகஸ்தர்களாகிய மணியம் முனிசீப்பு. கர்ணம்
இவர்கள் தங்களுக்குள்ள அதிகாரத்தை இழந்துபோகமல் நெம்பர் வாரி
யாய் ஷரா எழுதவேண்டியது. அந்த ஷராவைபார்த்த உடனே ரிவினியு
இனிஸ்பெக்ட்டர் விதியில்லாமல் திடுக்கிட்டு தெருத் திண்ணை அஜிமாஷ்
என்பதை அடுத்த கிராமத்தில் கூடுமானுல் செய்து கொள்வோம் என்று
நினைத்துக் கொண்டு இந்த கிராமத்திய புலங்களை மெறித்துபார்த்து ஷரா
எழுதுவார். வித்தியாசமான ஷராஎழுத நினைத்தால் பட்டாதாரர் முதலா
னவர்களை விசாரிப்பார். இதனுல் குடிகளுக்கு கிராம அதிகாரிகளிடத்தில்
மதிப்பும் கெளரவமும் உண்டாகும். கிராமஅதிகாரிகள்கீர்த்தியும் சுகமும்
அடையலாம் எப்படி வில்லேஜ் மாஜிஸ்திரேட்டு தீர்ப்புக்கு மேல் ரெகு
லர் அப்பீல் கிடையாதோ அது ஒப்பந்தம் கர்ணம் அடங்கலில் எழுதும்நியா
யமான ஷராவை ரிவினிய இனிஸ்பெக்டர் மாற்றி எழுதுவதும் கஷ்டம்
அதலா எழுதினுலும் அதைதாசில்தார், ஜமாபந்தி ஆபீசர் ஸ்பெஷலாய்

வித்தியாசத்துக்கு காரணமென்ன என்று பட்டாதார்களையும் வரவழைத்து கட்டாயம் விசாரித்தே தீருவார்கள். ஷரா ஒன்றுமே இல்லாதிருந்தால் மவுனம் கலகம் நாஸ்தி என்னும் பழமொழிபோல் பிறஸ்தாபமில்லாமலே பைசலாய் விடுகிறது.

(இன்னம்வரும்.)

## புராதனகட்டடங்கள்.

இந்தியா கவர்ன்மெண்டாரிட உத்திரவை யனுசரித்து சென்னை கவர்ன்மெண்டார் செப்டம்பர்மீ 3௳யில் பிறப்பித்த உத்திரவு.

புராதனக்கட்டடங்களை சர்க்கார் செலவில் ரிப்பேர்செய்ய சிபார்சு செய்யும்போது குடிகள் அதை மறுபடி பூஜிக்கவும் உபயோகப்படுத்திக் கொள்ளவும் கருதுகிறார்களா என்பதையும் சரித்திரபூர்வம் அல்லது பழய சிற்பிகளின் திறமையைக் காட்டத்தக்கினது அல்லது அஜாக்கிரதையால் அழிந்துபோகாமல் காப்பாற்றி வைக்கவேண்டியதில் சேர்ந்தது என்பதை ஜில்லா கலெக்டர்கள் கவனித்து கவர்ன்மெண்டுக்கு தங்கள் அபிப்பிராயத்தைக்கண்டு எழுதவேண்டியது இதனால் கிராமங்களில் உள்ள விசித்திர விநோதமான புராதன கட்டடங்களை சர்க்கார் செலவில் ரிப்பேர்செய்தாலும் குடிகள் பழயபடி அனுபவித்துக்கொள்ள கவர்ன்மெண்டார் அனுமதி கொடுப்பார்கள் என்பது ஏற்படுகிறது.

## ரிவினியு போர்டாரிட புரொஸீடிங்க்ஸ்கள் கலெக்டர்களிட ஸ்டாண்டிங் ஆர்டர்கள் சர்க்கியுலர்கள்.

### திருநெல்வேலி ஜில்லா.

ரிவினியுபோர்டார் (செடில் மெண்டு பிரிவு) 3-9-03 ன் 272 - நெ. புரொசீடிங்ஸ்.

வில்லேஜ் ஸ்டாட்டிஸ்டிக்கல் ரிஜிஸ்டர் செக்ஷன் 2 (ஏ) ன் 36-வது கலத்தில் தாக்கலாகிற தொகையிலிருந்து இரயைவஜாத்தொகையை கழிக்கவேண்டியதில்லை. அந்தக்கலத்தினுடைய ஹெட்டிங்கை அடியிற்கண்ட பிரகாரம் மாற்றவேண்டும். ''மீதம்'' அல்லது ''சாஸ்வதவஜாவும் கழிவுகளும் சேர்ந்தநிகரரெவினியூ''.

மாஜிஸ்திரேட்டு சர்க்கியுலர். 8-9-03.

பஞ்சாப் தேசத்து வேஷக்கைதியர்களில் சிலர் டெல்ஹிதேசத்துக்கு சமீபத்திலிருந்து பம்பாய் இராஜதானியிலுள்ள பீஜப்பூர் தாலூகாவுக்கு



200-வருஷங்களுக்குமுன் குடியேறிவந்தார்கள். அவர்கள் அநேகரானாக கள்ள நாணயம் செய்து அதைப்புழக்கத்துக்குக் கொண்டுவருகிறார்கள், அவர்கள் சப்பர்பந்துகள் என்று சாதாரணமாய் சொல்லப்படுவார்கள், எல்லா வில்லேஜ் மாஜிஸ்திரேட்டுகளும் அவர்களுடைய கிராமத்துக்கு ஷை ஜாதிக்காரர்களில்யாராவது வந்தால் உடனே லோகல்போலீசாருக்கும். போலீசு சூப்பிரன்டெண்டெண்டு அவர்களுக்கும், தாலூகா மாஜிஸ்திரேட்டுக்கும் ரிப்போர்ட்டு செய்யவேண்டும்.

### இனாம்டிப்டிகலெக்டருடைய நோட்டீசு. 28-10-03.

திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள ஜமீன்கள், மிட்டாக்கள், பூரா இனாம்கிராமங்கள் இவற்றிலுள்ள கிராம பெரிய தனக்காரர், கரணம். காவல்காரர், ஆகிய இம்மூன்று உத்தியோகஸ்தர்களுக்கும் ரொக்கசம்பளம் ஏற்படுத்துவதற்காக ஷை உத்தியோகஸ்தர்களுக்கு சர்க்காரால் விடப்பட்டிருக்கும் கிராம ஊழிய இனாம்களுக்கு ரொக்க தீர்வை விதிக்க உத்தேசித்திருக்கிறது. இது விஷயமாய் சம்பந்தப்பட்ட கிராம நவுக்கர்களும், ஷை எஸ்டேட்டுகளில் கிராம ஊழிய மானியங்களை அனுபவித்துக்கொண்டிருக்கிறவர்களும் ஷை இனாம்களுக்கு தங்களுக்குள்ள பாத்தியதையை காட்டக்கூடிய சன்னதுகள், மூலசாஸனங்கள் அல்லது இதரதஸ்தாவேஜூகளோடும், தங்கள் தங்கள் அனுபவத்திலிருக்கும் கிராம ஊழிய இனாம்களின் ஜாபிதாவுடனும் இனாம் டிப்டி கலெக்டர்கள் சம்மன் அனுப்பும்போது ஆஜராகவேண்டும்.

விசாரணைக்காக சம்மன் அனுப்பப்படும் எல்லாரும் சம்மனில் கண்ட பிரகாரம் ஆஜராகாவிட்டால் கிரிமினல் தரப்பில் பிராசிக்கியூஷனுக்குள்ளாவார்களென்று இதனால் எச்சரிக்கப்படுகிறார்கள்.

### கலெக்டர் விளம்பரம் - 30-10-03.

ஒருதரம் பிறப்பித்த இனாம் டைட்டில் பத்திரங்களை மோசடியாய் பிறப்பித்ததென்று ருசுகொடுத்தால் அல்லாமல் ரத்துச்செய்யப்படமாட்டாதாதலால், இனாம் செட்டில்மெண்டில் பாத்தியப்பட்டவர்கள் இனாம் டிப்டி கலெக்டர் செய்யும் சிபார்சுக்கு சாப்பி பெற்றுக்கொள்வதிலும் அந்த சிபார்சு உத்திரவில் அதிருப்தி அடைந்தவர்களாயிருந்தால் இனாம் கமிஷனருக்கு அப்பீல் செய்வதிலும் காலதாமதம் செய்யக்கூடாது.

### தஞ்சாவூர் ஜில்லா.

1903ஹூ செப்டெம்பர்மீ 1௳ யுள்ள 162-நம்பர் லா. ரி. போர்டார் புரொசீடிங்ஸ்

1903ளு டிசம்பர்மீ த்திய கிராம உத்தியோகஸ்தர்களுடைய ஸ்பெஷல் டெஸ்டு பரீக்ஷை.

பரீக்ஷையில் தேரும் காண்டிடேட்டுகளுக்கு டிவிஷனல் ஆபீசர்களால் கையெழுத்து செய்யப்பட்ட சர்டிபிகேட்டுகள் கொடுக்கப்படும். சர்டிபிகேட்டில் காண்டிடேட் இன்னாரென்று தெரியும்படியான விவரம் இருக்கவேண்டும்.

---

நாகப்பட்டணம் தாலூகாவில் அடியிற்கண்ட கிராமங்களில் தர்மம் நடவாததால் தரப்புதாக்கல் செய்யப்பட்ட இனாம் விவரம்.

| கிராமம். | தர்மம். | டைடில்டீட் நெ. | விஸ்தீர்ணம. |
|---|---|---|---|
| தேலூர் | திருவாவடுதுறைமடம் இனாம் | 362 | 5-6 |
| வடக்குபொய்யூர் | கோவில் இனாம் | 265-267 | |
| குன்னியூர் | தண்ணீர்பந்தல் சத்திரம் இனாம். | 598. | 1-26 |

---

## மதுரை ஜில்லா.

### 1. 1313-ம் பசலி ஜமபந்தி சர்க்கியுலர்.

2. கக்ஷிகாரர்களை நேரில் கேட்டு பைசல் செய்யவும், செய்த பைசல்களை மாற்றவும் உத்தேசித்து, எல்லா டிவிஷன்களிலும் பிரிலிமினரி (முன்னான) ஜமாபந்தி ஜனவரிமீ 15உ யில் துவக்கி ஒவ்வொரு பிர்காவிலும் ஒன்று அல்லது மேல்பட்ட முகாங்களில் நடத்தப்படவேண்டும். கிராமக்கணக்குகள் முடிக்கப்படுமுன்னமேயே குடிகள் தாங்கள் ஜமாபந்தி உத்தியோகஸ்தர்களிடம் தெரிவித்துக்கொள்ள வேண்டியதை பூரா தெரிவித்துக்கொள்ளவேண்டிய சாவகாசம் கொடுப்பதும், கணக்குகளை சரியாயும் பிழையன்னியிலும் தயார் செய்வதை நிச்சயப்படுத்தும்படியாய் தக்க காலத்தில் வேண்டிய கற்பனைகளை பிறப்பிப்பதும், மேற்சொன்ன பிரிலிமினரி ஜமாபந்தியின் கருத்தானதால், இந்த பிரிலிமினரி ஜமாபந்தியை பூர்ணமாயும் தீர்க்கமாயும் நடத்தும்படி ஜமாபந்தி உத்தியோகஸ்தர்களை கேட்டுக்கொள்ளப்படலாயிற்று. மேல்கண்டபடி நிறைவேற்றுவதற்காக தாலூகா உத்தியோகஸ்தர்கள் தங்கள் தங்கள் ஜமாபந்தி உத்தியோகஸ்தர்களைக் கலந்துகொண்டு) பிரிலிமினரி ஜமாபந்திக்காக குறித்த தேதியில் குறித்த முகாமில் குடிகளும் கிராம உத்தியோகஸ்தர்களும் ஆஜராயிருப்பதற்கு போதுமான சாவகாசமிருக்கும்படி முன்னதாகவே கிராமங்களுக்கு நோட்டீசுகள் பிரப்பிவித்து, நோட்டீசுகள் கிராமங்களில் சரியாய் பிரசுரம் செய்யப்பட்டதென்பதற்குறுதியாக குறைந்த பக்ஷம் 12-கல்வியுள்ள குடிகளிடம் ஷை நோட்டீசுகளில் கையொப்பம் வாங்கவேண்டும்.



3. அனாவசியமான கைபீத்துகளை அனுப்புவதால் நேரிடும் கணக்குகளின் சிக்கல்களை கூடுமான வரையில் விலக்கும் பொருட்டு பின்வரும் 3 பயிண்டுகளை முக்கியமாய் கவனிக்கவேண்டும்.

(எ) புறம்போக்கு நிலத்தை கைப்பற்றுதல் (அபகரித்தல்) ஷை கைப்பற்றுதல்கள் வாஸ்தவத்தில் ஆக்ஷேபனைக் கிடமுள்ளவைகளா அல்லவா என்று முதலில் அறிந்துகொள்ளவேண்டும். அவைகள் ஆக்ஷேபனைக் கிடமில்லாதவைகளாயிருந்தால் அந்த நிலங்களை ஜாரி செய்யவேண்டிய ஏற்பாடுகளை உடனே செய்யவேண்டும். அவைகள் ஆக்ஷேபனைக்கிடமாயிருந்தால், அவைகளை தாமதமன்னியில் குடிகளை காலிசெய்யும்படிக்கு அதைப்பற்றி அவர்களுக்கு நன்றாய் துலக்கவேண்டும். அப்படி துலக்கியும் குடிகள் அவைகளை காலிசெய்யாமலிருந்தால், அவர்களை காலிசெய்யும்படி செய்விக்க போதுமான ஜாஸ்தி தண்டம் தீர்வையை அவர்களுக்கு விதிக்கவேண்டும். இப்பேர்ப்பட்ட கேசுகளில் முக்கியமாய், அபகரிக்கப்பட்ட விஸ்தீர்ணமானது 2 செண்டு 3 செண்டு 5 செண்டு. இப்படிக்கு அல்பமாயிருக்கும் கேசுகளில் தரம் தீர்வைக்கு 2 மடங்கு, 5 மடங்கு, இப்படிக்குள்ள தண்டம் தீர்வையை விதிப்பதானது நிஷ்பலனாயிருப்பதாக அனுபவத்தினால் தெரியாமலிருக்கிறது. தற்காலத்தில் நடந்துவருவதுபோல் கைப்பற்றுதல்கள் சில வருஷங்களுக்கு தொடர்ந்து வரும்படி, எந்த காரணத்தைக்கொண்டும் இடம்கொடுக்கக்கூடாது. அப்படி தொடர்ந்துவருவதே ஷை கைப்பற்றுதல்கள் விஷயத்தில் சரியான அமுல் நடத்தப்படவில்லை என்பதற்கு தெளிவான ருசுவாகிறது.

(பி) சர்க்கார் தண்ணீரை அனுமதியன்னியில் உபயோகித்தல் சர்க்கார் தண்ணீரை அனுமதியன்னியில் பாய்ச்சிக்கொள்ளும் விஷயத்திலும், மேல்கண்ட விதமாகவே, தண்ணீர் தீர்வை விதிகளை குடிகளுக்கு நன்றாய் கற்பித்து அப்பால் அவர்கள் அந்தவிதிகளை நிராகரித்தால் மட்டும் அவர்களுக்கு தண்டம் தீர்வையைவிதிக்கவேண்டும். போதுமானமட்டில் நீண்ட காலத்திற்கு (உதாரணம் 5 வருஷத்திற்கு புஞ்சை நிலங்களுக்கு முறைதவறுமல் நீர் பாய்ச்சப்பட்டால், அந்த நிலங்களை தக்க ஆக்ஷேபனை இல்லாவிடில், நஞ்சைகளுக்கு மாற்றுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும்.

(சி) தீர்வை ஏற்பட்ட தரிசு நிலங்களை மனுவில்லாமல் கைப்பற்றுதல் அதாவது புதுவல் சாகுபடி புதுவல்கள் விஷயத்தில், தற்காஸ்து விதிகளின்படி நடத்தப்படும் அமூலை குடிகள் சந்திரமாய் விலக்க இடம் கொடுக்கக்கூடாதென்றும், அவ்விதமாக கைப்பற்றப்பட்ட தரிசு நிலங்களை காலிசெய்யப்பட வேண்டுமென்றும் அல்லது அவைகளுக்கு விதிப்படி காயம் பட்டா போடவேண்டுமென்றும் தெளிவாய் அறிந்துகொள்ளவேண்டும்.

டிவிஷனல் ஆபீசர்களும் ஜமாபந்தி ஆபீசர்களும் மேல்கண்ட 3 பயிண்டுகளையும் முக்கியமாய் கவனித்து கைபீத்துகளின் ஒவ்வொரு கேசையும் ஜாக்கிறதையாய் பரிசோதித்து அதின்பேரில் கைபீத்துகளை தாங்களே நேரில் பைசல் செய்தால் கணக்குகளில் தற்காலத்தில் நேரிடும் சிக்கல்களில் பாதியை தீர்க்க அவர்களால் முடியும், இந்தப்படி நிறைவேற்றி மேல்கண்ட ஏ. பி. சி. மூன்று பயிண்டுகள் சம்பந்தப்பட்ட கைபீத்துகள் வருஷ கடைசியில் ஒருமிக்க அவசரமாகஅனுப்பப்படாமல் தயாரானமட்டில் வாரந்தோறும் அனுப்பப்பட்டு வரவேண்டியதுஅவசியம். இதுவிஷயத்தில் நேரிடும் அசட்டைக்கு முதலில் ரிவினியூ இன்ஸ்பெக்டர்களையும் அப்பால் தாசில்தார்கள் அல்லது டிப்டி தாசில்தார்கள் இவர்களையும் ஜவாப்தாரியாக்கவேண்டும். கிராமக்கணக்குகள் (ஜமாபந்திஆபீசரால் பிரிலிமினரி ஜமாபந்தியில் பிறப்பிக்கப்படும் பைசல்களைச் சார்ந்த பதிவுகள் நீங்கலாக) தாலூகா உத்தியோகஸ்தர்களால் ஜனவரி மீ 1௳ பரிசோதிக்கப்படுவதற்கு தயாராயிருக்கவேண்டும்.

4. கலெக்டர் அவர்களால் ஜமாபந்தி நடத்தப்படும் தாலூக்காக்கள் விஷயத்தில், வஜாபட்டிகளைத்தவிர மற்ற எல்லா கைபீத்துகளும் வழக்கம்போல் அந்தந்த டிவிஷனலாபீசர்களால் பைசல் செய்யப்படும். ஆனால் அவைகள் முடிவாக முடிவாக பாட்சு பாட்சாக, (சிறுசிறுகட்டாக) கலெக்டர் அவர்கள் பார்வைக்கு அனுப்பப்படவேண்டும். வஜா பட்டிகளை கொஞ்சமேனும் தாமதமன்னியில் கலெக்டர் அவர்களுக்கு அனுப்பப்படவேண்டும்.

5. பிப்ரவரி மீ கடைசியில் டிமாண்டு நிஷ்கரிக்கப்பட்டுவிட்டால் (அதற்குள் முடிவான ஜமாபந்தி முடிக்கப்படவேண்டியதினால்) ஜாஸ்திவசூல்செய்வதற்கு யாதொருஇடமும் நிச்சயமாய் நேரிடாது ஜாஸ்திவசூல் செய்வதை முற்றிலும் நிறுத்திவிடவேண்டும்.

6. பிரிலிமினரி ஜமாபந்திக்கும், முடிவான ஜமாபந்திக்கும் ஏற்படுத்தப்பட்ட தேதி ஜமாபந்தி நடத்தப்படும் முகாம்களின்பெயர் இவைகள் கண்டு வழக்கம்போல் டிஸ்திரிக்டு டாஸ்டாபீசர் அவர்களுக்கு கோர்டுக அனுப்பப்படவேண்டியது மன்னியில் பற்பல தேதிகளிலும் பற்பல முகாம்களிலும், செட்டில் செய்யப்படும் கிராமங்களில் சரியான காலத்தில் டை ஜமாபந்தி விஷயத்தைப்பற்றி பயிரங்கமாய் பிரசுரம் செய்யப்படவேண்டும்.

---

மதுரை, மேலூர் தாலூகா கிராமங்களின் குடிகளுக்கு இதனால் தெரிவிக்கிற தென்னவென்றால்:—பெரியார் தண்ணீர் வருவதை யுத்தேசித்து புஞ்சையை நஞ்சையாக திருத்துவதற்காகவும் தரிசு வகையறா நிலங்க [illegible]



வெட்டி, பைங்காலாக்குவதற்காகவும் கடன் கொடுப்பதற்காக கவர்ன்மெண்டார் வேண்டிய தொகையை சாங்கிஷன் செய்திருக்கிறார்கள். லாண்டு இம்புருவ்மெண்டு ஆக்ட், 1883௵த்திய 19-வது ஆக்டின் 10-வது பிரிவின்படி பிரப்பிக்கப்பட்டிருக்கிற சாதாரண விதிகளின் பிரகாரம் கடன்கொடுக்கப்படும் அதில்முக்கியமாய் தெரியவேண்டியவிதிகளை கீழே கண்டிருக்கிறது.

2. இந்தியா கெவர்ன்மெண்டாரவர்களுக்கு யெழுதியிருக்கிற சாங்கிஷனை எதிர்பார்த்து அப்பேர்ப்பட்ட கடனானது, குறைந்தது 20 ரூபா முதல் தேவையானமட்டும் கேட்கலாம் ஆனால் ஈடுகாட்டும் சொத்தின் கிறயம் கேட்கும் கடனைவிட கால்வாசி ஜாஸ்தியாக யிருக்கவேண்டும்.

3 வட்டி ௵ 1-க்கு 100-க்கு 5 அல்லது ரூபா 100-க்கு மாதம் 1-க்கு அணா 6 பைசா-8.

4. 500 ரூபாய்க்கு குறைந்த கடன்தொகைகள், ரூல்களை அனுசரித்து 10௵த்துக்குள்ளாவது அல்லது இஷ்டமிருந்தால் அதற்கும் குறைந்த காலத்துக்குள்ளாவது செலுத்தப்படலாம்.

5 எல்லா விண்ணப்பங்களும் அச்சுப்பாரத்தில், பெரியார் ஸ்பெஷல் டிப்டிகலெக்டரவர்களிடம் கொடுக்கப்படவேண்டும்.

மேற்படி பாரங்களை தாலூகா ஆபீசுகளிலும் ரெவினியூ இனிஸ்பெக்டர்களிடத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

---

20 ரூபாய்க்கு மேற்பட்ட தொகைகளுக்கு ஸடாம்பு ரசீதுகள் கொடுக்கப்பட வேண்டியதென்று கண்டிருக்கிற ஸடாம்பு ஆக்டின் நிபந்தனையை எல்லாரும் கவனிக்கவும், அப்படி செய்யத்தவறுகிறவர்கள் பிராசிகியூஷன் செய்யப்பட்டு 1899 வருஷத்திய 2-வது ஆக்டின் 65-வது பிரிவில் கண்ட தண்டனைகளுக்குள்படுவார்களென்று கலெகடர் உத்திரவு பிரப்பித்திருக்கிறார்.

---

## செங்கல்பட்டு ஜில்லா.

### கலெக்டருடைய சர்க்கியுலர்.

[illegible] வயது வராத மைனர்களாயுள்ள வாரசு கணக்கப்பிள்ளைகளும் [illegible]ம் கணக்கப்பிள்ளைகளும் கட்டணமில்லாமல் சர்வே பாடசாலையில் சேர்ந்து வாசிக்கலாம் என்று ரிவினியு போர்டார் 1903௵ ஜூலை மீ 27௳ [illegible] 258 ௳. புரோசிடிங்ஸில் உத்திரவு செய்திருக்கிறார்கள்.

---

## Greeting to the Married lives of India.

## பரதகண்டமாகிய இந்துதேசத்தில் வசிக்கின்ற, இல்லறத்தோருக்கு மங்களமுண்டாவதாக.

இவ்வுலகின்கண் வசிக்கும் மானிடர்யாவரும் பாக்கியவந்தராயிருக்க விரும்பி, பலமுயற்சிகள் செய்துவருவது யதார்த்தம். எப்படிக்கொற்றவர்கள் (இகத்திலும், பரத்திலும், எக்காலத்திலும்) அழிவில்லாத பாக்கியத்தை வாழ்கின்றவர்களென்று இதனடியிற் சொல்லப்படும் நியாயங்களாலேயே விளங்கும்.

(1) ஸர்வஜீவ தயாபரராகிய கடவுளையும் தன்னைப்போலப்பிறரையும் யதார்த்தமாய் நேசிக்கிறவனே பாக்கியவான்.

(2) ஒருவனை நல்லவனென்று புகழாமலும், மற்றவனைக் கெட்டவனென்று இகழாமலும் கடவுள் ஒருவரே நல்லவரென்றும் மதித்து, அவரின்றி யோரணுவும் அசையாதென்று நம்பி நடக்கிறவனே பாக்கியவான்.

(3) பெற்றோர், கல்வி கற்பிப்போர், குருமுதலியோரை, நேசித்து, நடப்பவனே பாக்கியவான்.

4) துஷ்ட நிக்கிரகஞ்சிஷ்ட பரிபாலனஞ் செய்யும் அரசனுக்கும், அரசனால் மேலான அதிகாரத்தைப் பெற்றவர்களுக்கும் கீழ்ப்படிந்து நடக்கிறவனே பாக்கியவன்,

(5) சுத்தம், சுறுசுறுப்பு, உண்மை, கீழ்ப்படிதல், பொறுமை முதலியபஞ்ச இலட்சணங்களையும் "தேவதாபக்தி" என்னுஞ் சரட்டிற் கோர்த்து அணிந்திருக்கும் ஸ்திரீயை யெவனொருவன் தனக்குஇல்வாழ்க்கைத்துணைவியாகக் கொள்ளுகின்றானோ அவனே பாக்கியவான்.

(6) சகலபாவங்களுக்கும் (ஓர்கருவிபோல்) துணையாய் நிற்கும் "பொய்யைக்" கடவுளுக்கு காணிக்கையாகச் செலுத்துகிறவனே பாக்கியவான்.

---

## பொய் அறுவகைப்படும்.

(1) பழிவாங்கும் பொய்—ஒருவனைக் கெடுக்கும்படி சொல்லும் பொய்,

(2) பழிக்கு நீங்கும் பொய்—பழிக்குத் தப்பித்துக் கொள்ளும்படி சொல்லும் பொய்.

(3) உபகாரப் பொய்—ஒருவனுக்காகப் பிணைப்பட்டுச் சொல்லும் பொய்.

(4) உபசாரப் பொய்—மரியாதைக்காகச் சொல்லும் பொய்.

(5) மாய மாலப் பொய்—ஒருவனை மோசம் செய்யும்படி சொல்லும் பொய்.

(6) விளையாட்டுப் பொய்—ஒருவனைச் சந்தோஷப்படுத்தச் சொல்லும் பொய்.



கவனிப்பு,—"ஆயிரம் பொய் சொல்லி ஒறுவிளக்கேற்று" என்னும் பழமொழியை ஆதாரமாகக்கொண்டு, ஒருநன்மை செய்ய பலபொய்கள் சொல்லலாமென்றும் அவ்வாறு சொல்வது பாவமல்லவென்றும் நம்முடைய நாட்டாரில் அநேகர் நம்புகிறார்கள் அது நியாயமல்ல உள்ளதையுள்ளதென்றும் இல்லாததையில்லையென்றுஞ் சொல்வதே நீதி யென்று சொல்வர் இந்நீதியை அங்கீகரிப்போர் ஸ்ரீமந்நாராயணனின் திருவடியை சேருவர்.

இவ்வுலகின்கண் "அதமர்," "மத்திமர்" "உத்தமர்," என மூவகை மக்கள் வசிக்கின்றனர். இவர்கள் தங்கள் மனதில் சமாதானத்தைப் பெற்றுவாழவிரும்பி, பலமுயற்சிகள் செய்து வருவது யாவருக்குந் தெரிந்த விஷயம். அவற்றில் ஒன்றுவிவாக மென்று சொல்லத்தகும் "அழகு," "அந்தஸ்து" "ஐசுவரியம்" "கல்வி," "நன்னடக்கை," "தேவபக்தி," ஆகிய இவ்வாறும், விவாகஞ்செய்து கொள்ளுகிறவர்களுக் கெல்லாம், பொதுவாய் இன்றியமையாமலிருக்க வேண்டியவையாயிருந்தும், அவற்றில் அதமர் முக்கியமாய் "அழகையும்" "ஐசுவரியத்தையும்" மத்திமர், 'அந்தஸ்தையும்," கல்வியையும உத்தமர், "நன்னடக்கையையும்" "தேவபக்தியையும்" விரும்புகின்றனர். இம்மூவரில் உத்தமர் விருப்பமே சிறந்தது. அதுவேமனோபாக்கியமாகிய சமாதானத்தைக் கொடுக்கக்கூடியதென்று, அறிஞருங் கூறுகின்றனர். எவ்வாறெனில்:—

நன்னடக்கைகளாகிய மேற்சொன்ன "சுத்தம்" "சுறுசுறுப்பு" "உண்மை," "கீழ்ப்படிதல்," "பொறுமை," முதலிய பஞ்சலக்ஷணங்களையும் "தேவதாபக்தி" யென்னுஞ் சரட்டிற்கோர்த்து, அணிந்திருக்கும் ஸ்திரீயை யெவனொருவன் தனக்கு இல்வாழ்க்கைத் துணைவியாகக்கொள்ளுகின்றானோ, அவனேபாக்கியவான் 'இறைக்கருதியோ "எருபிடித்துழுகிறவன் என்னசெய்வான், படி பிடித்தளக்கிறவள் பாக்கியம்' என்னும் பழமொழி உலகத்தில் பிரசித்தமாய் வழங்கப்பட்டு வருகின்றது.

இல்லறந் தேவநியமகம்: ஸர்வஜீவ தயாபரராகிய சிருஷ்டிக்கடவுள், தம்மைவணங்கவும் ஸ்தோத்தரிக்கவும், சகல ஜீவாத்மாக்களுக்கும் பிரயோசனமாயிருக்கவுமே, ஆதியில் ஒருமனிதனைச் சிருஷ்டித்தார். ஒருவன் தனியேயிருந்தால், இந்தப்பரிசுத்தமும் உத்தரவாதமுமான கடமைகளைச் செய்ய, இயலாதவனாயிருப்பானென்பதை அவரறிந்து, அந்த ஆதிமனிதனுக்கு ஒருபெண்ணை இல்வாழ்க்கைத் துணைவியாக உண்டாக்கினார்.

---

## ஹைகோர்ட் தீர்மானங்கள்.

மந்தை வெளிபுரம் போக்கு விஷயமாய் சென்னை ஐகோர்ட்டு ஜஸ்டிஸ் பென்ஸன் துரை அவர்கள், ஜஸ்டிஸ் பாஷியம் ஐயங்கார் அவர்கள், 14-10-03-ல் செய்த தீர்மானம்.

எல்லூர் டிஸ்திரிக்ட்டு முன்சிபுகோர்ட்டில் முப்பேறு கிராமத்தார்பக்கமாய் ரங்கையர் என்பவர் கிராமத்தார் அநேக வருஷமாக அனுபவித்துவந்த மந்தை வெளிபுறம் போக்கில் 2-வது பிரதிவாதிக்கு வீடுகட்டிக்கொள்ள நிலம் 1-வது பிரதிவாதியாகிய இந்தியாமந்திரி ஜாரிசெய்ய நியா

யமில்லை என்றும் ஷை நிலத்தில் 2-வது பிரதிவாதி கட்டியிருக்கும் கட்டத்தை எடுத்துவிடவேணும் என்றும் தாவாசெய்தார்.

விசாரணையின்போது இந்தியாமந்திரி 2-வது பிரதிவாதிக்கு ஷை மந்தை வெளிபுறம்போக்கில் வீடுகட்டிக்கொள்ள கொஞ்சம் இடம் ஜாரி செய்ததாயும் அதினால் குடிகளுக்கு யாதொரு அசுகமும் நேரிடாதென்பதை தெரிந்துகொண்ட பிறகுதான ஜாரிசெய்ததாகவும் அன்றியும் இக[illegible]திக்கு ஒருவித அசுகமும் உண்டாகவில்லை என்பதும் கிராமத்தார் புறம்போக்கு நிலத்தை கையாண்டுவந்ததினாலேயே அவர்களுக்கு எவ்வித பாத்தியதையும் உண்டாகவில்லை என்றும் வாதித்தார். டிஸ்ட்ரிக்ட் முன்சீப் வாதிபக்கம் தீர்ப்புசெய்தார். ஜில்லாகோர்ட்டு ஜட்ஜியும் கீழ்கோர்ட்டு தீர்ப்பையே காயம்செய்தார். ஐகோர்ட்டு அப்பீலில் கிராமத்தில் வீடுமுதலானது கட்டிக்கொள்ள பத்திரமூலமாய் ஜாரி செய்யப்பட்டாலொழிய அனாதனத்தாருக்கு விரோதமாய் ஒருவனுக்கும் நிலபாத்தியதை உண்டாகாது என்று பிரதிவாதிகள் வாதித்தார்கள். ஐகோர்ட்டு ஜட்ஜிகள் இந்த வாதத்தை ஒப்புக்கொண்டு அப்பீல் வாதிகள்பக்கம் கீழ்கோர்ட்டு செலவுடன் தீர்ப்பு செய்தார்கள்.

## கர்ணம்தொந்திரவு.

பல்லாரிஜில்லா ரூயதுர்க்கம் தாலூக்கா ஒன்னூர் கிராமகர்ணம் தன்பேரில் ஷை தாலூக்கா தாசில்தார் மாஜிஸ்திரேட்டு கோர்ட்டில் இ-பி-கோ 379-வது பிரிவுபடி உள்ள களவுகேசை இதரமாஜிஸ்திரேட்டு கோர்ட்டுக்கு மாத்தவேணுமென்று கேட்டுக்கொண்டார். கேசின் சுபாவம். தரிசு நிலத்தில் உள்ள 4 ரூபா பொறுமான மரத்தை வெட்டின குற்றத்திற்காக 4 பேர் ஷை தாசில்தார் மாஜிஸ்திரேட்டால் 5 ரூபா வீதம் அபராததெண்டனையை யடைந்திருக்கிறார்கள். அந்த கேசில் இந்த கர்ணம் சம்பந்தப்பட்டவனென்று இ-பி-கோ-379 அல்லது 411-வது பிரிவுபடி குற்றம்சாட்டப்பட்டு விசாரணையிலிருக்கிறார். இந்த கேசில் ஷை மாஜிஸ்திரேட்டு தமக்குள்ள தாசில்தார் ஹோதாவில் பிரதம விசாரணை நடத்தியதால் கிரிமினல் தரபில் சட்டப்படி விசாரணை செய்யகூடாதென்று வாதிக்கப்பட்டது. கவர்மெண்டு வைக்கிலின் ஆட்சேபத்தையும் கேட்டுக்கொண்டு சென்னை ஐகோர்ட்டு ஜஸ்டிஸ் சுப்பிரமணிய ஐயர் அவர்களும் ஜஸ்டிஸ் ரஸல்துரையவர்களும் ஷை தாலூக்கா ஸ்டேஷனரி மாஜிஸ்திரேட்டு கோர்ட்டுக்கு மாத்திவிட்டார்கள்.

## கேள்வி-கால தோஷம்.

1890௵ எப்பிரல்௴ 30௳ தீர்ப்பு—1902௵ மே௴ 2௳ மனுதாக்கல், கடைசிவாயிதா தினமாகிய 30௳ கோர்ட்டு மூடப்பட்டு மே௴ 2௳ திறக்கப்பட்டது.

கல்கத்தா ஐகோர்ட்டு ரூலிங்கில் கட்சிக்காரனிடம் பிசகில்லாமல் கோர்ட்டு மூடியிருத்தல் முதலிய அசந்தர்ப்பத்தால் தடைபட்டால் அதினால் கட்சிக்காரன் நஷ்டம் அடையக்கூடாதென்று இருப்பதால் கக்ஷிகளின் மனுவை நிறைவேற்றும்படி சென்னை ஐகோர்ட்டு சீப்ஜஸ்டிஸ் சுப்பிரமணிய ஐயர் அவர்களும் ஜஸ்டிஸ் போடாம்துரை அவர்களும் தீர்ப்பு செய்தார்கள்.



## கேள்வி-கால தோஷம்.

1899௵ ஏம்பிரல்௴ 15௳ தீர்ப்புசெய்த டிக்கிரிதொகையை 1902௵ மே௴ 5௳ கொடுத்தமனு காலதோஷத்தால் பாதிக்கப்பட்டதா அல்லவா என்பது வாதம்.

1899௵ மே௴ 5 12-தேதிகளில் சொத்து ஏலம்போடப்பட்டு மே௴ 10-16-தேதிகளில் ஏலதொகை நாஜரால் கஜானா தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. ஜுன்௴ 7-தேதியில் வாதி ஷை தொகையை தனக்கு தரவேணும் என்று வாதா கேட்டுக்கொண்டதும் டிக்கிரியை நிறைவேற்ற வேண்டிய விஷயமாய் கட்சிக்காரனாவது அவர் வக்கீலாவது எவ்விதமாவது டிக்கை டிக்கிரியை நிறைவேற்றும விஷயமாய் நடத்தியிருந்தாலும் அவைகளும் டிக்கிரியை நிறைவேற்ற வேண்டிய மனுவாய் பாவிக்கவேணுமென்று அலகாபாத்து, சென்னை, பம்பாய் ஐகோர்ட்டு ரூலிங்குகளிருப்பதால் ஜுன்௴ 7-தேதி முதல் மூன்று வருஷவாய்தாவென்று சென்னை சுமால்கோர்ட்டு சீப்ஜட்ஜ் அவர்கள் ஒருகேசில் தீர்ப்புசொன்னார்.

## இந்துலா பாயிண்டு.

குடும்ப சொத்தில் மைனருக்குள்ள பாகத்தை பிரிவினை செய்து கொடுக்கவேணும் என்று மைனரின் கார்டியன் மைனரின் சிறியபிதாவின்பேரில் செய்த தாவாவில் மைனரின் நன்மைக்காக இந்த தாவாகொண்டுவரப்பட்டதென்று பிரூதில் கண்டிருந்தாலும் எதிரிகள் அபகரிக்கிறார்கள் என்பதாய் தெரியவருகையாலும் சென்னை ஐகோர்ட்டு ஜஸ்டிஸ் மூர்துரையவர்கள் தாவாவை செலவுடன் தள்ளிவிட்டார்கள்.

---

## தந்தி சமாசாரங்கள்.

ஷாங்கேயிலிருந்து வந்த தந்தியால் போர்ட் ஆர்த்தரில் வசூலாகும் கப்பல் சுங்கம் ருஷியருக்கு ஒருபங்கானால் ருஷியர்அல்லாதவர்களுக்கு 12 மடங்காக வசூல் செய்யவேண்டுமாம்.

ஜெர்மனி சக்கிரவர்த்திக்கு நெஞ்சிற்குள்ளே என்னவோ ஒருபுண்ணுண்டாகி அதை ரணவைத்தியர்கள் அறுத்தார்கள் இரவெல்லாம் சக்கிரவர்த்தி கவலையற்று தூங்கினார். சொஸ்தமடைய எட்டுநாள் செல்லுமாம்.

மஸிடோனியாத்திருத்தம் விஷயமாய் ருஷிய சக்கிரவர்த்தியும் ஆஸ்டிரியா சக்கிரவர்த்தியும் செய்த ஏற்பாட்டை துருக்கி சுல்தான் ஒப்பவில்லை அதைப்பத்தி மறுபடியும் யோசிக்கும்படி சுலதானுக்கு சக்கிரவர்த்திகள் இவர்களும் தங்கள காரியஸ்தர்கள் மூலமாக தெரிவித்திருக்கிறார்கள்.

எட்வார்ட்மகாராஜா ஐரோப்பாகண்டத்துக்கு போய் அங்கே போர்த்துகல் இட்டலி பிராஞ்சு முதலான இராஜ்ஜியத்து அதிபதிகளுடன் கலந்து [illegible]காட்டிலும் அவர்களுடைய அபிமானத்தை வெல்லுவதற்கு வேறொன்றும் அதிகமாய் உபயோகப்பட வில்லை என்றுபிரதான மந்திரியவர்கள் சொல்லுகிறார்.

மழைவெள்ளத்தால் ரயில்ரோட்டுகள் அநேக இடங்களில் உடைபட்டு ரெயில் வண்டிகள் அதிகதாமதப்பட்டு சென்னைக்கு வருகின்றன.

எடனில் குடெபிசாதியாருடன் சண்டைநடந்ததில அச்சாதியாருக்கு வெகுசேதம் உண்டாயிற்று, ஆங்கிலேயர் பக்கத்தில் எட்டுபேர் வெள்ளக்காரஸோல்ஜரும் ஒருசிப்பாயும் காயமடைந்தார்கள்.

---

## News & Notes·

நாளது மீ 10௳ சென்னைவந்து சேர்ந்த அமஹிண்டோ என்னும் கப்பலில் 321. இந்தியர்கள் நெடாலிலிருந்து திரும்பிவந்தார்கள்.

---

சென்னை பொருட்காட்சி சந்தை கூட ரூ 13,000, செலவு செய்து ஒருகொட்டகை கட்டப்போகிறார்கள்.

---

கிருஷ்ணாநதியில் உண்டான பிரவாகத்தால்நேர்ந்த நஷ்டத்தைப் பரிகரிக்க வேண்டி ஐந்தாறுலக்ஷம் ரூபா செலவுசெய்யவேண்டுமாம்.

---

கடப்பைபட்டணம் வெள்ளத்தால் மெத்தசேதப்பட்டு போயிற்று. ஆயிரக்கணக்கான ஜனங்கள் ஒதுங்க நிழலின்றியும் தங்கள் பொருள்களை இழந்து தவித்துக்கொண்டிருக்கிறார்கள்.

---

இந்திய போலீஸ் கான்ஸ்டேபில்களுக்காக போலீஸ் இண்டியன்ஜெர்னல் என்று ஓர் பத்திரிகை கூடிய சீக்கிரத்தில் வெளியாகுமெனத் தெரியவருகிறது,

---

டெல்லியில் வசிக்கும் பாரிஸ்டர் மிஸ்டர் கி-ஸ்பாட்ரிக்என்பவர் தம்மை அவதூறுசெய்தநிமித்தம் அலஹாபாத் ஹைகோர்ட்டில் லக்ஷம்ரூபாய்க்கு மானநஷ்ட வியாஜ்யம் செய்திருக்கிறார்.

---

கல்கத்தாவில் ஒருஸ்திரி தன்அம்மான் உதவியால் தன்பெண்ணை ஒரு பிராமணனுக்கு ரூபா 150 பெற்றுக்கொண்டு விவாகம் செய்து கொடுத்துவிட்டாள். புருஷன் இந்த இருவர்பேரிலும் அலிப்பூர் போலீஸ் மாஜிஸ்திரேட்டாரிடம் தாவாசெய்ததில் எதிரிகள் ஒவ்வொரு வருஷம் கடினகாவல் சிட்சை விதிக்கப்பட்டார்கள்.

இராமேஸ்வரம் தேவஸ்தானத்தின் விசாரணை கர்த்தருக தானடைந்திருந்து தனக்கு யாதொரு லாபகரமான பாத்தியதையுமில்லாமல் இறந்துபோன ஞானசம்மந்த தேசிகர்பேரி லிருக்கும்ரூபா 125,000 மொத்தம் மதிப்புள்ள 32 கவர்னமெண்டு பிராமிசரி நோட்டுகள் வகையில் லெட்டேர்ஸ ஆவ் அட்மினிஸ்டிரேஷன் என்னும் அதிகாரப்பத்திரத்தை மேற்படி தேவஸ்தானத்தின் இப்போது விசாரணைகர்த்தராக வ-ஏல்-வ ஆர் ஆர், யம்-அருணாசலம் செட்டியாருக்கு கொடுப்பதற்காகசென்னபட்டணத்தில் ஹைகோர்ட்டு ஆப் ஜுடிகேச்சரில விண்ணப்பம் செய்யப்பட்டிருக்கிறது. அவர் 1896௵ ஜெனவரிமீ 28-தேதியில் மதுரையில்இறந்துபோய்விட்டார், மொத்தஆஸ்தியும் நிகர ஆஸ்தியும் சேர்ந்து ரூபா 1,52,812 8-0 மாக மதிப்பிடப்பட்டிருக்கின்றது.

---

ஸ்ரீ

கணபதேநம:

THE

# VILLAGE OFFICERS' GAZETTE.

## கிராம உத்யோகஸ்தர் கெஜட்டு.

மதராஸ் கவர்ன்மெண்டு தமிழ் ஜில்லாக்களிலுள்ள

ஜமீன்மிட்டா க்ஷேத்திரியம் தாரர்களின் நன்மைக்காகவும்

கிராமாதிகாரிகளின் சீர்திருத்தத்திற்காகவும்

மாதாந்தரம் வெளியிடப்படும்.

புத். I.] மதராஸ், 1903௵ டிசம்பர்மீ 15௳ [நெ. 7.

## கிராம பஞ்சாயத்து.

நாம் சென்ற பத்திரிகைகளில் வெளியிட்ட பிரகாரமே நம் இந்தியரால் தொன்றுதொட்டு வழங்கிவந்த கிராம பஞ்சாயத்தை பழயபடி வழக்கத்துக்கு கொண்டுவர வேணுமென்று பம்பாய் காட்டிலுள்ள எம். மலபாரியென்ற பார்ஸி தேசாபிமானி நம் இராஜப்பிரதிநிதி அவர்களாகிய லார்டு கர்ஸான் பிரபுவுக்கு ஒரு நிருபம் எழுதினர். அதாவது:— (1) கிராமங்களில் மேய்கால்புறம்போக்கு நிலங்களிருந்தபோதிலும் அதில்கிராமத்தாருக்கு பாத்தியமில்லை என்றும் சர்க்காருக்கு பாத்தியப்பட்டதென்றும் ஏற்பட்டிருக்கிறது. ஆகலால் மேய்கால் புறம்போக்கையும் கிராமத்திலுள்ள சிறுவர்களும் வேலையற்ற காலங்களில் பெரிய

வர்களும் உற்சாகமாக காலங்கழித்து விளையாட வேண்டியதற்கு போதுமான பொது நிலங்களும் கிராமத்தாருக்கு விடவேணுமென்றும், (2) பம்பாய் இராஜதானியைச்சேர்ந்த "சூறத்து" என்னும் நாட்டில் அங்கு வசூலாகும் ரேட்செஸ் தொகையில் 100-க்கு 30 வீதம் கிராம பொது காரியங்களுக்கு முன்னமேயே அவ்விடத்திய லோகல் போர்டாரால் செலவிடப்பட்டு வருவதால் அதுபோலவே மற்ற லோகல் போர்டாரையும் பொது அபிப்பிராயம் ஒத்திருக்கும்பட்சத்தில் நடத்திவரச் செய்தால் ஆங்கிலேய அரசாட்சியார் செய்யும் நற்காரியங்களில் இது ஒன்றாகும் என்று கேட்டுக்கொண்டார். முற்காலத்தில் கிராமத்தில் நேரிடும் எவ்வித வழக்கையும் தீர்க்க பஞ்சாயத்து இருந்தது. வெளியூருக்கு போகவேண்டியதேயில்லை. பழயகாலத்தில் குடிகள் கிராமசாவடி அல்லது கோவில், மண்டபமுதலிய இடங்களில் கூட்டங்கூடி கிராம பொது விஷயங்களாயுள்ள கோவில், குளம், சாவடி, ஆத்துக்கால், ஏரி, ஏர்ப்பாய்ச்சி, துறவு, தோப்பு, பள்ளிக்கூடம், சுகாதாரம் முதலியவற்றையும் பற்றி பிரசங்கித்தும் இன்னம் கிராமத்துக்குவேண்டிய சகல நன்மைகளையும் ஒற்றுமையும் உரிமையும் பாராட்டி கட்டுபாடாயிருந்து கிராமத்திலேயே பொதுவரும்படியால் செய்துக்கொண்டும் தங்களுக்குவேண்டிய நெல், கறிகாய், உப்பு, புளி, மிளகாய்முதலியதையும் பயிரிட்டுக்கொண்டும் மிகுந்ததை அடுத்த கிராமங்களுக்கு கொடுத்தும் தங்களுக்குவேண்டியதை அயலாரிடமிருந்து பெத்துக்கொண்டும் கிராம பொது தொழிலாளிகளாகிய புரோகிதன், வைத்தியன், தச்சன், தட்டான், கொல்லன், இடையன், குடுமி, பணிசெய்வோன், வண்ணான்; நாவிதன், தலையாரி, தோட்டி, காவல்காரன், நீர்கட்டி இவர்களிடம் கிரமப்படி ஊழியம்பெத்து சிறிய குடியரசுபோல் ஆண்டுவந்த உரிமையை பழயபடி குக்கிராமங்களிலுமுள்ள நம் இந்தியர்கள் அடைவார்கள் என்று அவர் அபிப்பிராயப்பட்டு எழுதியிருக்க வேண்டும். இப்போது நம்மவர்களிடம் ஒத்துமையும் உரிமையும் இல்லையென்பதையும் பெரியோருக்கு சிறியோர் கீழ்ப்படிந்து நடக்கும் முறைமை தவறிப்போய் விட்டதையும் குடித்தனக்காரன் பயிர்வேலைபார்க்கும் காலம் நீங்கலாக மற்ற காலத்தில் சொக்கட்டான் சூது ஆடியும் கலகம்



செய்து கட்சியுண்டாக்கியும், வீண்வழக்கை விலைக்குவாங்கியும் பொது நன்மையில் சிறத்தையற்றிருப்பதையும் கவர்ன்மெண்டார்தெரிந்துக்கொண்டு அநேகநாள்களுக்குமுன் அழிந்துபோன கிராம பஞ்சாயத்தை மறுபடி அனுஷ்டானத்துக்கொண்டு வரும்படி முயல்வது பிரயோசனமற்றதென்று இந்தியா கவர்ன்மெண்டார் அபிப்பிராயப்பட்டிருப்பதாகவும் ஒரு கிராமத்தில் மேய்கால் புரம்போக்கு நிலம் இல்லாதிருந்தால் அடுத்த கிராமத்திலுள்ள புரம்போக்கை, இல்லாத கிராமத்தாரும் ஜாயிண்டாக அனுபவித்துக்கொள்ளலாமென்று, பம்பாய் கவர்ன்மெண்டாருக்கு முன்னமேயே இந்தியா கவர்ன்மெண்டார் உத்திரவு அனுப்பியிருப்பதாகவும் நம் இராஜ பிரதிநிதி அவர்களிட அந்தரங்க காரியதரிசி அவர்களிடமிருந்து நாளது வருஷம் அக்டோபர்மீ 24உயில் மேற்படி மலபாரி அவர்களுக்கு வந்த மறுமொழி கடிதத்தால் வெளியாகிறது. மேலும் இந்தியா கவர்ன்மெண்டார் ஏற்படுத்த உத்தேசித்திருக்கிற விவசாயநிதி அனுஷ்டானத்துக்கு வருமாகில் கிராமத்தாருக்கு ஐக்கியமும் ஒத்துமையுமுண்டாகி பொது நன்மைகளை சரிவர நடத்தக்கூடும் என்று கண்டிருக்கிறது.

குடித்தனக்காரர்களை சரிவர நடத்தி தங்களிடத்தில் அவர்களுக்கு அன்பும் பட்சமும் உண்டாகும்படி நடந்துக்கொண்டு இப்போது அனுஷ்டானத்திலிருக்கும் 1889௵ ஆக்டுபடி பஞ்சாயத்தாராக கிராமத்தில் தகுந்த அந்தஸ்துள்ளவர்களை கலெக்டருக்கு எழுதி ஏற்படுத்திக்கொண்டு அவர்கள் உதவியால் கிராமத்தில் உண்டாகும் கேசுகளில்கொலை, களவுமுதலிய பெறும் குற்றங்கள் நீங்கலாக சகலவித சிறிய கிரிமினல் கேசுகள் பெரிய சிவில் கேசுகளையும் பைசல்செய்தால் கிராம உத்தியோகஸ்தர்களுக்கு எவ்வளவோ பெருமையையும் புகழையும் விவேகத்தையும் கொடுக்குமல்லவா. இப்போதும் நூற்றுக்கு ஒன்று இரண்டு வீதம் தேரக்கூடியதாய் சில கிராமங்களில் பழையபடி வருஷத்துக்கு ஒருதரம் சங்கராந்திகழித்த மறுதினங்களில் கூட்டங்கூடி கிராமக்ஷேமத்தைப்பற்றியும் கோவில், குளம் முதலியதைப்பற்றியும் ஆலோசிப்பது மாத்திரம். நடந்தேறிவருகிறது. அதுபோலவே அவசியமான மற்ற காலங்களிலும் குடிகள் ஒன்றுசேர்ந்து தங்களுக்குவேண்டிய சுகதுக்கங்களை எடுத்துப்பேசி அவ

சியமானால் கலெக்டர்முதலானவர்களிடம் மேலும்மேலும் விடாது எழுத்து மூலமாயும் நேராயும் பேசி ஏன் சுகத்தை அடையக்கூடாது. இந்த இராஜதானியிலடங்கிய 22 ஜில்லாக்களிலும் உள்ள கிராமமுன்சீபுகளால் சென்ற வருஷத்தில் பைசல் செய்த கேசு நெம்பர்கள் 85,746, டிஸ்திரிக்டு முன்சீபுகளால், 79,732, ஐ கோர்ட்டு அப்பீல் 3915. முந்தினவருஷத்தைவிட சென்றவருஷத்தில் சர்க்காருக்கு ஜாஸ்தியாக வசூலான ஸ்டாம்பு தொகை 15½ லட்சம் ரூபாய் என்றும், 1902ஸு சிவில் விவகார ரிபோர்ட்டினால் வெளியாகிறது. மேலும் ஜில்லாகோர்ட்டில் முடிவு பெறுவதற்கே சராசரியில் கேசு ஒன்றுக்கு வட ஆர்காடு ஜில்லாவில் 616, கிருஷ்ணாஜில்லாவில் 559, தென் ஆர்காட்டில் 552, கர்னூலில் 542, நாள் சென்றதாம். முன்சீபு கோர்ட்டிலும் ஐகோர்ட்டிலும் பிடித்த நாள் கணக்கு அகப்படவில்லை. இத்துடன் குடிகள் வக்கீலுக்கு பீசும் சாட்சிகளுக்கு படியும் கொடுத்து வக்கீல் வீட்டிலும் கச்சேரி கோர்ட்டுகளிலும் காத்திருப்பது எவ்வளவு காலம். கிராம அதிகாரிகளாகிய முன்சீபு, ரெட்டி, பெரியதனக்காரர் இவர்களுக்கு தங்கள் கிராமத்தில் விளையும் சொல்ப கேசும் உடனே தெரியவருகிறது. அம்மாதிரி நோட்டீசுக்கு வந்தவுடனே ஒருவரை மாத்தி ஒருவராக இருகட்சிக்காரரையும் வரவழைத்து அவர்களுக்கு தக்க புத்திகளை எடுத்துசொல்லி கேசுகளை பைசல் செய்ய முயற்சிசெய்யவேண்டும். இந்த இராஜதானியில் சிவில் விவகார ஸ்டாம்பு வசூலில் முன்வருஷத்தைவிட சென்ற வருஷத்தில் ஜாஸ்தியாக வசூலானதாக தெரியவரும் 15½ லட்சம் ரூபாயும் கிராம குடிகள் பணம் அல்லவா. வயிற்றுக்குச் சரியாக சாப்பிடாமலும் உடுக்காமலும் கடன்வாங்கியும் கோர்ட்டுக்கு செலவு செய்த பணமல்லவா. இதுதவிர வக்கீல்களுக்கு எவ்வளவு செலவழிந்திருக்கவேணும் பிரயாணச் செலவென்ன: கிராமத்தில் கேசுகள் பைசலானால் இத்தியாதி செலவுகள் நேரிடாமல் சௌக்கியத்தையடைவதுடன் பணமும் மிகுதியாகுமல்லவா. இவ்வாறான நியாயஸபைகள் கிராமந்தோறும் இருக்குமாயின் அநியாயமாகக் குடிகளின் பணம் வீணே கோர்ட்டுகளில் செலவழியாமலும் பெரும்பான்மையாக நியாயந் தவறாமலுமிருக்கும். இதை எல்லாம் குடிகளுக்கு எடுத்துக்காட்டி கட்சிக்காரனுக்கு அப்பா



நான் ஏகதேசத்தில் விசாரிப்பதில் சம்மத குறைவாயிருந்தால் உனக்கு சம்மதமான நபரைசொல், அவரை பஞ்சாயத்தில் ஒருவராகவும் அதேமாதிரி மற்ற கட்சிக்காரன் கோரும் நபரையும் பஞ்சாயத்தில் சேர்க்கிறேன். கோரும் சாட்சிகளை விசாரிக்கிறேன், என்று அன்பும் பிரியமும் உண்டாகும்படி எடுத்துச்சொல்லி கேசுகளை பைசல் செய்தால் கிராம அதிகாரிகளிடத்தில் குடிகளுக்கு எவ்வளவு பெருமையையும் மரியாதையையும் உண்டாக்கும். மேலான அதிகாரிகளாலும் புகழையும் கீர்த்தியையும் பெறலாம்.

(இன்னும் வரும்.)

---

## தர்காஸ்த்து.

சப்த தீபங்களிலும் சிறந்த ஜம்புத்தீபத்தின் ஓர்பாகமாகிய இப்பரதகண்டத்தின் தென்கிழக்கு பாகமாகிய சென்னை இராஜதானியானது 1-கெஞ்சம் 2-கோதாவரி 3-விசாகபட்டணம் 4-கிருஷ்ணா 5-நெல்லூர் 6-கர்னூல் 7-கடப்பை 8-பல்லாரி 9-அனந்தபூர் 10-சென்னபட்டணம் 11-செங்கல்பட்டு 12-சேலம் 13-கொயம்புத்தூர் 14-வட ஆர்காடு 15-தென் ஆர்காடு 6-தஞ்சாவூர் 17-திருச்சினாப்பள்ளி 18-மதுரை 19-திருநெல்வேலி 20-மலையாளம் 21-தென்கன்னடம் 22-நீலகிரி என 22 ஜில்லாக்களாகப்பிரிக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு ஜில்லாவும் அநேகதாலூக்காக்களாயும், ஒவ்வொரு தாலூக்காவும், அநேககிராமங்களாயும், ஒவ்வொரு கிராமமும் அநேக சர்வே அல்லது பைமாஷ் நெம்பர்களாயும் பிரிக்கப்பட்டு இருக்கிறது. இவைகளை காட்டத்தகுந்த பிளான்களும் ஏற்பட்டிருக்கிறது. கிராமபிளானில் இந்த சர்வே அல்லது பைமாஷ் நெம்பர் இந்தபாகத்தில் இருக்கிறதென்றும், தாலூக்கா பிளானில் கிராமம் இருக்கும் திசையையும் ஜில்லா பிளானில் தாலூக்கா இருக்கும் திசையையும் இராஜதானி பிளானில் ஜில்லா இருக்கும் திசையையும் இருந்த விடத்திலேயே பார்த்து அதிசுலுவில் தெரிந்து கொள்ளலாம். இம்மாதிரி பிரிக்கப்பட்டிருக்கும் நெம்பர்கள் ஒவ்வொன்றும் கைப்பற்றிலிருக்கிறதா இல்லையா என்பதை சர்வேறிஜிஸ்தரால் தெரிந்துகொள்ளலாம். ஒருவர் கைப்பத்திலும் இராத நெம்பர்களை எந்தகுடும்பியாகிலும் பயிரிட

அபேட்சித்தால் அதைத் தனக்கு அடமானம்செய்யவேணுமென்
றுகோறி எழுதிக்கொள்ளும் மனுவுக்கு தர்காஸ்து என்று பெயர்.
இந்த மனுவை அச்சிட்ட பாரத்தில் கிராமத்தின் பெயர், நெம்பர்
அல்லது புலத்தின் பெயர், விஸ்தீரணம், தீர்வை, கண்டு எழுதி
கலெக்டர், தாசில்தார், டிப்டி தாசில்தார், கிராம முன்சிப்பு
இவர்களிடம் கொடுத்துக் கொள்ளலாம். இந்த அச்சுபாரங்கள்
இனமாக கொடுக்கப்படுகின்றன. அடமானமான பிறகுபெருத்த
லாபத்தைத் தறத்தக்க ஷை மனுவிலடங்கிய நிலங்களின் தீர்
வை சர்க்காருக்கு வசூலாகிறதினால் இப்பாரத்தின் அற்பவிலையை
கவர்ன்மெண்டார் வசூல் செய்கிறதில்லை. கைப்பற்றில் இல்லாத
புலங்கள் பலபிரிவினையுடையது. அவையாவன:—தீர்வை ஏற்பட்
ட தரிசு, தீர்வை ஏற்படாத தரிசு, புரம்போக்கு. தீர்வை ஏற்ப
ட்ட தரிசாக இருந்தால் கிராமமுன்சீபும் தர்காஸ்தை, அனுசரி
த்து கிராமத்தில் ஷை நெம்பரை பலானநபர் சாகுபடி செய்ய
மனு கொடுத்திருக்கிறார். பாதகம் உள்ளவர்கள் 30-நாளைக்குள்ளாக
ஆக்ஷேபமனு கொடுத்துக் கொள்ளலாம், என்று தண்டோரா
மூலமாய் நோட்டீசு ஒன்று பிரசித்தம் செய்து அந்தநோட்டீசை
கிராமத்தில் பபிரங்கமான இடத்தில் ஒட்டிவைக்கவேண்டியது.
தவிற அதற்கு நக்கலாயுள்ள மற்றொரு நோட்டீசில் கிராமத்
தில் உள்ள பட்டாதார்களிடமும் பாயக்காரிகளிடமும், ஷை நெ
மபர்களுக்கு அண்டை புலக்காரர்களிடத்திலும் கையெழுத்துவா
ங்கி அந்த நோட்டீசையும் அசல் தர்க்காஸ்து மனுவையும் ஒன்
றாகச் சேர்த்து நோட்டீசை வாயிதாகாலம் முடிவாகும் வரையில்
தான் வைத்திருக்க வேண்டியது. ஏதாவது ஆக்ஷேபமனுக்கள்
தன்னிடம் வந்தால் அவைகளையும் சேர்த்து தானும் கிராமகர்ண
னும் நிலத்தின் ஸ்திதியைப்பார்த்து எழுதும நிலஸ்திதி கணக்கு
டன் தாலூக்கா தாசில்தார் அல்லது டிப்டி தாசில்தாரிடம் கிராம
முன்சீப்பு மணியக்கார் அனுப்பவேண்டியது. நிலஸ்திதி பார்க்க
வேண்டும்போது மனுதாரனுடனும், ஆக்ஷேபதார்களுடனும்போ
ய் அவர்களையும் புலத்தைக்காட்டும்படி செய்தும் கர்னனுக்கு ஷை
நிலம் அளப்பதிலும் நிலத்திலுள்ள மறந்தலை வகையரு முதலி
யதை கணக்கிடுவதிலும், மதிப்பிடுவதிலும் உதவியாக இருந்து
தன் அபிப்பிறாயத்தையும் கிறும பொது நன்மைககு உபயோகப்



பட்டதும் படக்கூடியதுமாயிருந்தால், அது விவரத்தையும் மனு
தார் ஆக்ஷேபதார்களிட அந்தஸ்துபாத்தியதையும்கண்டு நிலஸ்
திதிகணக்கு தயாரித்து தானும் கையெழுத்து செய்து மேலான
அதிகாரிக்கு அனுப்பவேண்டியது. இந்த இராஜதானியிலுள்ள
22-ஜில்லாக்களில் செங்கல்பட்டு தஞ்சாவூர் இரண்டு மாத்திரம்
மிராசுபாத்தியதையுள்ள ஜில்லாக்கள்-அதாவது பூர்வீகமாயுள்ள
குடிகள் புதியகுடிகளிடத்தில் தர்காஸ்தின்பேரில் அடமானமா
கும் நிலங்களுக்குதீர்வையுடன் ரூபாய் ஒன்றுக்கு அணா இரண்டு
விகிதம் சுதந்தரம் பெறும்படியான கவர்ன்மெண்டாரால் அங்கீ
கரிக்கப்பட்டிருக்கும் பாத்தியதை மிராசுபாத்தியதை என்றுவழ
ங்கிவருகிறது. மிராசுபாத்தியதை | இல்லாத குடிகளுக்கு பிரகுடி
யென்றும் பாயக்காரி என்றும் பெயர்வழங்குகிறது. இந்த ஜில்லா
க்களில் எந்தகிராமத்திலும் பிரகுடி ஒருவன் தர்காஸ்து கொடுத்த
நிலத்துக்கு மிராசுதாரன் ஆக்ஷேபித்தால் அண்டைப்புலம் முத
லியபாத்தியதை இல்லாவிட்டாலும் கிராம மிராசுபாத்தியதையே
முக்கியமானதென்று மிராசுதாருக்கே மேற்படி நிலம் அடமா
னம் செய்யப்படுகிறது. பிறகுடி மேற்படி நிலத்தை விசேஷ
செலவு செய்து சீர்திருத்தியிருந்தாலும் கூட அதை கவனிக்கி
றதே கிடையாது.

(இன்னும் வரும்.)

---

## ஜமாபந்தி பைசல்.

நமது சென்னை இராஜதானியில் அடங்கிய ஜில்லாக்களில்
நடக்கும் ஜமாபந்தியானது அந்தந்த ஜில்லாகலெக்ட்டர்கள் இஷ்
டம் போல் நடந்து வருகிறதே அன்றி ஒரு கவர்னர் அதிகாரத்
துக்குள் பட்ட இந்த 22 ஜில்லாக்களிலும் ஒரேவிதமாய் நடந்தே
றிவரவில்லை. சிலஜில்லாக்களில் கலெக்டர்கள் தாங்களும்தங்களிட
டிவிஷனல் ஆபீசர்களும் இன்னதேதியில் இந்தகிராமம் பைசல்
ஆகப்போகிறதென்பதை அறியாதவர்களாயிருக்கிறார்கள். 9-நவக்
கிறகங்கள்போன்ற தாலூகாவின் 9 குமாஸ்தாக்களிடத்தில் கிரா
மமுன்சீபுகளும் கர்ணம்களும் படும் பாடு இதில் எழுதிமுடியாது.
ஜமாபந்தி குமாஸ்தா எந்த கிராமகணக்கு தயாராயிருக்கிற தெ

ன்று தாசில்தாரிடம் சொல்லுகிறார்கள் தாசில்தார் அந்த கிராமத்தை மறுநாள் ஜமாபந்தி ஆபீசரிடம் பைசலாக வேண்டியதென்று காட்டும் லீஸ்டில்பதிந்து அந்த கிராம கர்ணத்தைக் கலெக்டரிட ஹுஜூர்சிறஸ்தேதார் அல்லது ஜமாபந்தி ஆபீசரிட எட்களார்க்கு இடம் கொண்டுபோய் ஆஜர் படுத்திவிடு, என்று கணக்கப்பிள்ளை தயினுத்து என்று வழங்கும் தாலூக்காபியாத வசம் ஒப்புவித்து விடுகிறார். அப்போது மேற்படி கணக்கப்பிள்ளை தன் கணக்குகள் பூர்த்தியாக தணிகை செய்யப்படாமலிருந்தால் அந்தந்த குமாஸ்தா விடமும் போய் கெஞ்சிக்கேட்பதும் அந்தகாலத்தில் அவர்களில் சிலர் பாராமலிருந்தாலும் கைநாட்டுபோட்டு அனுப்பிவிடுவதும், தணிக்கைசெய்திருந்தாலும் ஏதோ சிறிதுகாரணத்தால் கணக்கைவிசிறி அடிப்பதும்நீங்கி, கிராமாதிகாரிகளும் குடிகளும் சுகமடையும் வண்ணம் இனிமேல் ரெவினியு அதிகாரிகளாகிய ஜமாபந்தி ஆபீசர்கள், தாங்கள்குறித்த கிராமத்தை குறித்த தேதியிலும், முகாமிலும் பைசல்செய்யப்போகிறோம் என்று முன்னாடியே அவர்களுக்கு தெரியப்படுத்தின பிறகுதான் பைசல்செய்யவேணும் என்று ரிவினியுபோர்டார் செய்த சிபார்சின்பேரில் கவர்ன்மெண்டார் உத்திறவுபிறப்பித்து இருக்கிறார்கள். ஆதலால் கிராமாதிகாரிகள் தங்களிட சிறமம் ஒருவாறு நீங்கியதாக நினைக்கவேண்டும். இதனாலேயே தன் கிராமம் கடைசியாக பைசலாகப் போகிறதென்று கணக்குகளை பூர்த்தி செய்யாமல் கர்ணம் சோம்பலாயிருக்க கூடாது. ஜனவரிமாதம் பிறந்த உடனே கிராமமணியம் முன்சீபு கர்ணம் இவர்கள் தாங்கள் செய்யவேண்டிய அடங்கல் அஜ்மாஷை ஒவ்வொரு நெம்பரையும் விடாது பார்த்துபார்த்து நெம்பர் வாரியாய் தங்கள் ஆலோசனைகளில் தேறினஷராவை எழுதி பூர்த்திசெய்து விட்டு, தேதிகண்டு அந்தகணக்கில் மொத்த ஷராவும் எழுதிபூர்த்தி செய்து கையெழுத்துபோட்டு விட்டு ரிவினியு இனிஸ்பெக்டருக்கு எதிர்பார்த்துக் கொண்டு இருக்கவேண்டியது. ரிவினியுஇனிஸ்பெக்டர் அடங்கல் அஜமாஷ் பூர்த்தியானதும் கர்ணம் ஜமாபந்திக்குவேண்டிய சகலகணக்குகளையும் தாலூக்காவுக்கு போய் எழுதிக்கொள்வோம் என்பதை மறந்து விட்டு கிராமத்திலேயே பூர்த்தி செய்துக் கொண்டு தாலூக்காவிலிருந்துவரும் உத்திரவை எதிர்பார்த்து இருக்கவேண்டியது.



தாலூக்காவில் போனதும் புது உத்திரவு ஏதாகிலும் உண்டா என்பதை தெரிந்து கொண்டு அதனப்படி ஏதாகிலும் திருத்தவேண்டியிருந்தால் அதைப்பூர்த்திசெய்துவிட்டு குமாஸ்தாக்களைகேட்டு முன்னமேயே கணக்கை கொடுத்து தணிகைசெய்து வைத்துக்கொள்ளவேண்டியது. குறித்ததேதிக்கு கூடுமானால் ஒருவாரம் முன்னதாகவே தாசில்தார் பைசலும் செய்துகொண்டால் மெத்தநலம் கிராமமுன்சீபு குடிகளை அழைத்துக்கொண்டு கிராமத்தாருக்கு உள்ளசாதகபாதகங்களை குமாஸ்தாக்களிடமும் தாசில்தாரிடமும் ஹுஜூர்கிறஸ்தேதாரிடம்மும் ஜமாபந்தி ஆபிசாரிடமும் சொல்லிக்கொள்ள வேண்டியது. ஜமாபந்தி ஆபீசாரிடம் கடைசி தேதியில் போய்முறையிட்டு கொள்வதில் பிரயோசனப்படாது. ஜமாபந்தி சம்மந்தமாயும் வஜாவிஷயமாயும் கொடுததுக்கொள்ளும் மனுக்களுக்கு ஸ்டாம்பு தேவையயில்லை என்று இப்போது உத்திரவாயிருப்பதால்குடிகளைமுன்னதாகவே மனுகொடுத்துக் கொள்ளும்படி கிராமாதிகாரிகள் சோல்லவேண்டியது. அந்தமனுக்கள் ஜமாபந்தியின்போது கட்டாயம் பைசலுக்கு வரும். இப்புது உத்திறவை கிராமாதிகாரிகள் சரியாக அனுஷ்டித்துவந்தால்சுகமடையலாம். சோம்பலாயிருந்தால்முன் இருந்ததைவிட அதிக கஷ்டத்தையும் துக்கத்தையும் கர்ணம் அடைய வேண்டியிருக்கும் ஆதலால் இதைகியாபகத்தில் வைத்து கணக்குகளை முன்னதாகவே பூர்த்திசெய்து வைத்துக்கொள்வது மெத்தநலம்.

---

## விவசாயநிதிகள்.

நமது இந்தியாதேசத்திலடங்கிய சென்னை, பம்பாய், வங்காளம் - இராஜதானிகளில் உள்ள எல்லாபயிரிடும் ஏழைகுடிகள் உழவுகாலங்களில் மாடு விதைவாங்கவேண்டியதற்கும் பயிருக்குகளை எடுக்கவும் சர்க்கார் கிஸ்திகட்டவும் தங்கள் குடும்ப ஜீவனத்துக்குமாக சௌகார்களிடமும் செட்டிகளிடமும் தானியவட்டிக்கும் அதிகபண வட்டிக்கும் கடன் வாங்கி அதினால் நஷ்டமடைந்து குடிகள் ஜீர்ணித்து போகிறார்கள் என்று நமது இராஜப்பிரதிநிதியாகிய லார்ட்டு காஸான்பிரபு அவர்கள் அபிப்பிராய

ப்பட்டுசென்ற இரண்டு வருஷமாக தம் கீழ் உள்ளகவர்னர்கள் -
லெப்டினெண்டு கவர்னர்கள். கமீஷனர்கள் இவர்களிட அபிப்பி
ராயங்களை தெரிந்து கொண்டு ஒவ்வொரு ஜில்லா தாலூக்கா.
பெருத்த கிராமங்களிலும் குடிகள் சொல்பவட்டிக்கு பணம் சுல
பமாயும் சீக்கிறமாய் குறைந்த வட்டிக்கு கடன் பெறக் கூடியவி
வசாய நிதிகளை ஏற்படுத்தவேண்டுமென்றும் அந்த நிதிகள்ஏற்பட
வேண்டிய முறையையும் பரிபாலனஞ் செய்யவேண்டிய திட்டங்
களையும் உடைய ஒருசட்டமும் உண்டாக்க. கருதி தம் சட்டநிர்
வாகசபையார் கண் உள்ள சிலமெம்பர்களை கொண்டு ஒருமசோ
தாஆக்ட்டு தயாரிக்க ஆக்கியபித்தனர் - சௌகாரிகளிடமும் செ
ட்டிகளிடமும் கடன் வாங்குதலால் குடிகள் அரைவயறும்கால்
வயலுமாக கடன் வாங்கியதைக் கொண்டு சாப்பிட்டு தர்னியம்
விளைந்த உடனே கடன் தீர்ந்து நமக்கும் ஜீவனத்துக்கு போது
மானதானியம் மிகுதியாகும் என்கிற எண்ணத்துடன் ஜலம் இல்
லாத காலத்தில் இராப்பகலாக ஜலம் இறைத்தும் மாடுகண் மே
யாமலும் திருடன் கொண்டுபோகாமலும் பாதுகாத்தும் வந்து
அறுத்து கட்டும் போரை களமேட்டில் போடுகிறான். பூமியில்
எந்த இடத்தில் நமக்கு வசதியான இறையாகக் கூடியபிணம்
இருக்கிறது என்று ஆகாயத்தின் கண்பறந்த வாக்கிலேயேவாச
னையால் கிறகிங்கும் தன்மையையுடைய கழுகுபோல் கடன் கொடு
த்த செட்டி தன் வீட்டிலிருந்த படியே எந்த கடன்காரன் அறு
வடை செய்கிறான் எவன் தானியம் ஒப்படி செய்கிறான் என்
பதை பின்னிட்டு தன்னிடம் கடன்வாங்க வருபவர்களால் தன்
பொக்கிஷப் பெட்டிக்கு இறையாக வரக்கூடிய பணம் எந்த
ஊரில் இருக்கிறதென்பதை தெறிந்து கொண்டு தானியம் ஒப்ப
டியாய்க் கொண்டு இருக்கும் போதே சொந்தக்காரனைப் போல்
தன்வீடு கொண்டுபோய் சேர்க்க வண்டியும் ஆளும் அளக்க
பெரிய மறக்காலும் கையேடு பேரேடு கணக்குசகிதம் களமேட்
டில் வந்து விடுகிறான் - வந்ததும் எஜமான ஒப்பந்தம் சீக்கிறம்
சீக்கிறம் ஒப்படி யாகட்டுமென்று நிர்ப்பந்தமும் செய்கிறான் -
"கடன்பட்டார் நெஞ்சம்போல் கலங்கினான் இலங்கை வேந்தன்"
என்னும் கம்பர்வாக்கியப்படி பயிரிட்டவன் நெஞ்சம் கலங்கி
னன்றும் தோன்றாது செட்டிக்கு பயிரிட்டதை முழுதும் அள



ந்தும் இன்னம் பாக்கிதீறவில்லை என்று செட்டி சொல்லும் சொ
ல்லால் திடுக்கிட்டு தலைமேல்கையை வைத்துக்கொண்டு வீடுவ
ந்து பழபடி செட்டியிடம் சாப்பாட்டுக்கு கடன் வாங்கப்போகி
றான். இது ஒவ்வொருகிராமத்திலும் நடக்கிறது என்பது யாவ
ரும அறிந்த விஷயம் அல்லவா - நல்ல சுபிட்சமான காலத்திலே
யே இம்மாதிரி உள்ள குடிகள் ஷாமகாலத்தில் என்ன கஷ்டப்
படுவார்கள் என்பதையும் ஆலோசித்து விவசாயநிதிகள் ஏற்படு
த்த உத்தேசம். குடிகள் தங்கள் நிலங்களை தாங்கள் வாங்கும் க
டனுக்கு ஈடாகவைத்து கடன் வாங்கி கிணர் வாரகம் ஒப்பந்தம்
வருஷம் கொஞ்சமாக செலுத்தி கடனை அடைத்து விடுவார்கள்
முதல்வருஷத்தில் மிகுதியாகும் தானியத்தால் அடுத்த வருஷத்
தில் கடன் வாங்கநேரிடாது. அனுவசியமாய் கடன் நிதிகளில் வா
ங்கமாட்டார்கள் செட்டிக்கு கொடுக்க வேணும் என்கிறதிலும்
நீங்கிவிடும் கவர்னர் ஜனரல் அவர்கள் உத்திரவுப்படி மசோதா ஆ
க்ட்டு தயாராகி சட்ட நிர்வாக சபையில் பிரஸ்தாபத்துக்கு வந்
ததில் இந்தியாகவர்ன் மெண்டார் சென்னை கவர்னர் அபிப்பிராயத்
தைக் கேட்டார் சென்னை கவர்னர் அவர்கள் குடிகளின் அபிப்பி
ராயத்தை தெரிந்து தெரிவிப்பதாக பதில் சொல்லியிருப்பதாக
தெரியவருகிறது. இந்நிதிகளை கவர்ன்மெண்டார் சுதாவிலேயே
ஏற்ப்படுத்தாமல் நம்நாட்டிலுள்ள தனவான்களை கொண்டு நிதி
கள் ஏற்பாடு செய்யவைத்து அந்நிதிகளை பரிபாலனம் செய்ய
தாங்களும் பணம் ஒத்தாசை செய்வதுடன் கணக்குகளையும் சர்
க்கார் உத்தியோகஸ்தரைக் கொண்டு அப்போதைக்கப்போது
தணிக்கை செய்விப்பதாயும் தெரியவருகிறது. இந்த மசோதா
ஆக்ட்டுபிறசித்தமானபின் அதிலடங்கியவற்றைப் பின்னிட்டுதெ
ரிவிக்கிறோம் - இப்போது பெரிய குடித்தனக்காரர்களாயும் தன
வந்தர்களாயும் உள்ளவர்களும் அந்தந்த கிராம அதிகாரிகளும் தங்
கள் கிராம குடிகளின் க்ஷேமத்தை கோரி தக்கபிரயாசை எடுத்
தகொண்டு மீட்டிங்சேர்த்து தங்கள் அபிப்பிராயங்களை கவர்ன்மெ
ண்டாருக்கு அர்வகள் நியமிக்கும் அதிகாரி மூலமாய் தெரிப்படு
த்திக்கொள்ளலாம். இப்படிகிராமத்துக்கு வேண்டிய பொது நன்
மைகளை செய்வதால் கிராம அதிகாரிகளிடத்தில் குடிகள் அன்
பும் பிரியமுமுள்ளவர்களாய் பெருமை பாறாட்டுவார்கள்.

## கிராமகர்னம் சபை.

நமது சென்னை இராஜதானியின் கவர்னராகிய லார்ட்டு ஆமஹீத்தில் அவர்கள் சுற்றுப்பிரயாணமாகி வருகிறார் என்பதை நெல்லூர் ஜில்லாவிள்ள கிராமகணக்கபிள்ளைகள் தெறிந்து அவர்கள் ஒருசபை கூடி. தங்க்ளுக்கு உள்ள கஷ்டங்களை எடுத்து உபந்நியாசம் செய்து தங்களுக்குள் 10 - நபர்களை டெலிகேட்டுகளாக தெரிந்து எடுத்து அவர்கள் நெல்லூரில் கவர்னர் வரும்போது அவரிடம் தங்களிட குறைகளை சொல்லிக் கொள்ளவேண்டியதென்று முடிவு செய்தார்கள் அம்மாதிரி அனுப்பிய 10 கர்னங்களும் நெல்லூர் ஜில்லாவின் பலமாகாணங்களுக்கு சம்மந்தப்பட்டவர்கள் அவர்களில் முதன்மையாயிருந்து பேசத்க்கினவர் மெடிரிகியுலேஷன் பரிட்சை கொடுத்த ஓர் கர்னம். சென்ற நவம்பர்மாதம் 26உ பகல் இடைவேளை உணவு எடுத்துக் கொண்ட உடனே கவர்னர் இவர்களை வரவேற்றினார் - கவர்னர் இவர்கள் சம்பளத்தைப்பற்றி வினவினார்-மாதம் 1-க்கு 8-ரூ முதல் 15-ரூ வரையில் கிடைப்பதாக பதிலளிக்கப்பட்டது.

அவர்கள் சொல்லிக் கொண்டமுதல் அம்சமாவது - 1879 ௵த்துக்கு முன் தாங்கள் தானியமாய் பெற்றுவந்ததாயும் பின்னிட்டு தங்களுக்கு ரொக்கசம்பளம் ஏற்பட்டிருப்பதாயும். இருப்புபாதை ஏற்பட்டு விலைகள் உயர்ந்து விட்டதால் தங்களுக்கு தர்க்காலம்கிடைக்கும் சம்பளம் போதாமையாயிருக்கிறதென்றும் அதை உயர்த்த வேணும் என்றும் கேட்டுக் கொண்டார்கள் - 1879 ௵த்துக்குமுன் இருந்ததை விட இப்போது கர்ணங்கள் நல்ல ஸ்திதியில் இருப்பதாயும் இந்த சம்பளத்துக்கே கும்பல் கும்பலாக நபர்கள் அகப்படுவதால் சம்புளத்தை உயர்த்த வேண்டிய நிமித்தமில்லை என்று சொல்லிவிட்டார்.

2 வது ஜமாபந்தி காலத்தில் தாலூக்காவில்சற்றேறக் குறைய 2 மாதகாலம் இருக்கவேண்டியிருக்கிறதென்றும் சத்திரத்து சாப்பாடடுக்கே மாதம் 7. ரூ பிடிக்கிறதென்றும் 6 ரூ சம்பளமுள்ள தாலூக்கா பியாதாவுக்கு பத்தாகொடுக்கப்பட்டு வருவதாயும் தங்களுக்கும் பத்தாகொடுக்காமல் கௌரவமாத்திரம் கொடுக்கப்பட்டிருக்கிறதென்றும் சொல்லிக்கொண்டார்கள் இந்தகா



வர்வில் கொஞ்சம் பசை யிருப்பதாயும் இதைப்பத்தி இப்போது முடிவான உத்திரவு சொல்லக்கூடாமை என்றும் கவர்னர் சொன்னார்.

3-வது. கிராம முன்சீபுகள் தொழிலாளிகளை தங்களுக்கு தேவையானபோது உதவுகிறதில்லையென்றும், 4-வதுபோதுமான பேனா பென்சல் காகிதம் முதலிய ஸ்டேஷனரிகொடுக்கிறதில்லை என்றும் சொல்லிக்கொண்டார்கள். இவ்விறண்டைப்பத்தி கலெக்டர்களுக்கு தெரிவித்துக்கொள்ளவேண்டும் என்று ஸ்டேஷனரி போதாமலிருந்தால் ஜாஸ்தியாக கொடுக்கும்படி சந்தேகமின்றி கலெக்டர் உத்திரவுசெய்வார் என்று கவர்னர் சொன்னார்.

கவர்னர் கடைசியாக தன்முன்பாக ஆஜரான கர்னங்கள்எப்படி வேலைசெய்தார்கள் என்று தாசில்தாரைகேட்டார் திருப்திகரமாக வேலைசெய்தார்கள் என்று தாசில்தார்சொன்ன மறுமொழியைக்கேட்டு தான் சந்தோஷப்பட்டதாயும் இனியும் நல்லவேலைசெய்வார்கள் என்றுதான் நம்புவதாகவும் சொன்னார் மேலும் பத்தாவைப்பத்திதான் யோசிப்பதாயும் வற்புறுத்தினார்.

இதையே முகாந்திரமாககொண்டு கர்னங்கள் தங்கள்தங்கள் தாலூக்காகளில் ஒன்று சேர்ந்து தாலூக்கா தாசில்தார் ஜில்லா கலெக்டர் துவாராவாக கவர்ன்மெண்டுக்கு மஹாஜர் எழுதிக்கொண்டால் சீக்கிறத்தில் அனுகூலமான உத்திரவுகிடைக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

---

## குடிகளிடத்தில் அன்பாயிரு.

சென்ற 2 - 3 - வருஷங்களில் காலமழையில்லாமல் விளைவு குறைந்து குடிகள் கஷ்டப்பட்டது யாவரும் அறிந்த விஷயமல்லவா? அதினால் கிராமங்களில் சாவியும் பஞ்சமும் சேர்ந்து கிராமாதிகாரிகளுக்கு சாதாரண வருஷங்களைவிட சென்ற வருஷங்களில் வேலை அதிகப்பட்டு அவர்கள் அதை தங்களால் கூடியவரையில் செய்துவந்தும் ஏரி குளம் வாய்க்கால்களில் ஜலம் இல்லாமல் பயிர் ஜலத்துக்குஏங்கி சாவியாய் போனகாலத்திலும் கிராம அதிகாரிகளாயுள்ள கர்னம், மணியம், முன்சீபுகள் பிடுங்கித்தின்றவண்ணமாகவே இருக்கிறார்கள் என்கிறபெயர் அவர்களைவி

ட்டு நீங்கவில்லை - நாளது வருஷம் காலமழை பெய்துவந்ததால் குடிகள் தங்கள் நிலங்களில் தினை தினை பயிர் ஏத்திவந்ததுடன் நாளது வருஷத்தில் சுகமும் க்ஷேமமும் அடையலாம் என்று எண்ணியிருந்தார்கள் அதைப்பார்த்து கிராம அதிகாரிகளும் தங்களுக்கு நாளது வருஷத்தில் அதிக வேலையிராது நாமும் சுகமாயிருக்கலாம் என்று எதிர்பார்த்து இருந்தார்கள் மனுஷன் ஒன்று நினைக்க தெய்வம் ஒன்று செய்கிறது என்னும் பழமொழி தவராது நாளது நவம்பர்மாதத்தில் பெய்த அதிகமழையின் வெள்ளத்தால் பயிர்கள் சேதப்பட்டும் மண் மணல்மேடிட்டும், நாகதாளி, கள்ளி, சுத்தாழை முதலியதை புலங்களில் விட்டும் குடிகளுக்கு பலவிதத்திலும் தானியத்துக்கு பதிலாய் துன்பத்தை விளைவித்திருக்கின்றன. மழையில்லாத காலத்தில் விளைவில்லையே என்னும் ஒரே துக்கமிருந்தது. மழைபெய்ந்தகாலத்தில் இட்டபயிரும் இழந்து புலங்கள் பள்ளமேடிட்டும்போயின. குதிரைசெத்ததுமன்றி குழிதோண்ட பத்துபணம் செலவு என்பதுபோல் விளைவையிழந்தும் நிலம் சீர்திருத்தவேண்டியும் நேரிட்டிருக்கிறது. நமது இராஜதானியின் தமிழ் ஜில்லாக்களிலுள்ள பாலாறு, செய்யாறு, பெண்ணை. திருமணி முத்தாநதி, வைகை, காவேரி, தாம்றபறணி நதிகளில் வெள்ளம் பெருகியது. அவைகளில் பாலாற்றில் வந்த வெள்ளத்தையும் அதினால் உண்டான நஷ்டத்தையும் சிறிது அயில்கூறுகிறோம். பாலாறு மைசூ சமஸ்தானத்திலிருந்து வருகிறது. மைசூர் சமஸிதானத்திலுள்ள நந்தி-வரையல்-சோமபுறம் அக்கிறகுளம். வயல்செருவு. திண்ணல். பெத்தமங்கலம், இராமசாகரம் என்னும் பொக்கசமுத்திரம ஏரி இவைகள் உடைப்பட்டு வெள்ளம்அதிக உயரமாக ஏககாலத்தில் வாவாதல் கொண்டா என்கிற பிறமாண்டமான உயர்ந்த மலைகளின் மத்தியில் 20 - கெஜமுள்ள ஓர் இடத்தில் அவ்வெள்ளம் எல்லாம் திரண்டு வரவேண்டியதால் அங்குவரும்போது அநேக மறங்களும் வைக்கல் போர்களும் அடைபட்டு 300 - அடி உயறம் 7 - மையில் விஸ்தீர்ணம் ஜலம் தேங்கிவிட்டதாம். அடைபடுவதற்குமுன் வந்தஜலமே வாணியம்பாடி என்னும் பெருத்த ஊரில் பெரும்பாகத்தை பாழாக்கிவிட்டதால் ஏககாலத்தில் இந்தஜலமும் வந்திருந்தால் வாணியம்பாடியில் ஒரு வீடு மனிதனையாவது பார்க்கமு



டியாமல் மணல் தரையாகத்தான் காணமுடியும் என்றும் கடவுள் அவ்வித அணையை அங்குஅகஸ்மாத்தாய் உண்டாக்கினார் என்றும் அந்த அணையில் தங்கிய ஜலம் மூன்றுநாள்வரையில் வடியாமல் அவ்வளவு ஆழமாயிருந்து ஓடியதாகவும் வாணிதாசன் என்பவரால் தெரியவருகிறது. இதினால் ஆயிரம் கணக்கான ஜனங்கள் நிற்க நிழலன்றியும் உண்ண உணவன்றியும் உடுக்கவஸ்திரமின்றியும் இருப்பதுடன் பொது நன்மையை நாடி தர்மம் செய்யும் நண்பர்களின் பணத்தால் தர்க்காலம் ஜீவித்து வருகிறார்கள். இவ்வெள்ளங்கள் அநேகரிடபுலங்களை மேடுபள்ளமாக்கியும் விளைந்தபயிரும் நட்டபயிரும் சேதமாகியும் அழுகியும் போயிருக்கும் ஏரிகுளங்கள் உடைப்பட்டும் ஆத்துக்கால் ஊத்துக்கால் தூந்து எக்கல்படிந்து மணல் மேடிட்டிருக்கும் இவைகளை சீர்திருத்தி பயிரிடவேண்டியது அவசியம் ஆனதால் கிராமாதிகாரிகள் தங்களாலும் தங்கள் உத்தியோகமுறைமையாலும் செய்யக்கூடிய சகாயங்களை குடிகளுக்கு செய்யவேண்டியது. கிராமாதிகாரிகள் முன்னதாக ஒவ்வொரு புலத்தையும் விடாமல் மெறித்துபார்த்து காலஸ்திதிகணக்கு என்று ஒன்று எழுதி தகவலுக்கு வைத்துக்கொள்ளவேண்டியது. அழிவுடர்பு உடனே தயார்செய்து பர்த்திசாகுபடி செய்ய உத்திரவு சீக்கிறம் கொடுக்கவேணும் என்று தனிரிபோர்ட்டு எழுதி தாலூக்கா தாசில்தாருக்கும் பிரகாரிவினியு இனிஸ்பெக்டருக்கும் அனுப்பவேண்டியது. கிராமவெட்டி - தலையாரி- நீர் கட்டி இவர்களையும் குடி மறமத்து செய்ய ஒப்புக் கொண்டு இருக்கும் கிராமங்களில் வழக்கமாய் ஆத்துக்கால் ஊத்துக்கால் செப்பனிட ஏறும் ஆள்களையும் தங்கள் முயற்சியால் சீக்கிரம் சேகரித்து அவர்களைக்கொண்டும் உடைந்த ஏரிகளுக்கு மின்அணைபோட்டுவைத்தும் கால்களை வெட்டிவைத்தும் இனிவரும் மழை ஊத்துஜலம் தங்கி அதின் கீழ் இப்போது இருக்கும் பயிர்களை விளையும்படிசெய்யவேண்டியது. எக்கல்களை எடுத்து மேடுபள்ளத்தை சீர்திருத்த லாண்டு இம்புரூவ்மெண்டு ஆக்ட்படி தங்களால் கூடியவரையில் விதிகளுக்கு அனுசரணையாய் சிபார்சு செய்து சர்க்காரில் வாரகம் வாங்கி கொடுக்கவேண்டியது. மாடு, விதைமுதலியது வாங்க அக்ரிகல்சரல் ஆக்ட்டுபடி குடிகளுக்கு சர்க்காரில் வாரகம் வாங்கி கொடுக்கவேண்டியது. கிராம வெட்

டி, தலையாரி, நீர்கட்டி முதலிய தொழிலாளிகளைக் கொண்டு
கிராமத்தெருவழி முதலிய ஜனங்கள் நடமாடக்கூடிய பொது
இடங்களில் வெள்ளத்தால் கொண்டுவந்து விடப்பட்ட நாகதாளி
முதலிய முள்களை எடுத்து சீர்திருத்தவேண்டியது. கடைசியாக
எவ்வளவோ கஷ்டப்பட்டு உண்டாக்கின பயிர்களை இழந்துஏங்கி
தவிக்கும் குடிகளிடத்தில் கிராமாதிகாரிகள் அன்பாயிருந்து கிற
மப்படி அவர்கள் புலங்களுக்கு ஜமாபந்திகாலத்தில் வஜாவுக்கு
சிபார்சு செய்யவேண்டியது. கிராமாதிகார்களை மேற்சொன்ன
வைகளில் கவனம்செலுத்தி குடிகளிடத்திலும் தங்கள்கீழ்உள்ள
தொழிலாளிகளிடத்தும் நயத்தாலும் பயத்தாலும் வேலைவாங்கி
பொது நன்மையைசெய்தால் தாங்கள் சுகமடைவதுடன்வஜாவுக்
கு இடமில்லாமல்பயிர்களை விளைவிக்கச்செய்வதால் சர்க்காரிலும்
மேஹனத்து அடைகிறார்கள். குடிகளும் கிராமாதிகாரிகள் எடுத்
துக்கொண்ட சிரமத்தை புகழ்ந்து அவர்களிடம் பெருமை பாரா
ட்டுகிறார்கள். பொதுநன்மையை அனுசரித்து மேற்சொன்னவே
லைகளை பெறுதலைப்பற்றி தொழிலாளிகள் மேலான அதிகாரிகளி
டம் தாவாசெய்துக்கொண்டால் தொழிலாளிகள் அவமானமடை
ந்துவருவார்களே அன்றி கிராம அதிகாரிகள் ஒருபோது குற்றம்
கண்டு பிடிக்கப்பட மாட்டார்கள். எவ்விதத்திலும் கிராம அதி
காரிகள் குடிகளிடத்தில் அன்பாயிருக்கவேண்டியது அவர்கள்
கடமை.

---

## சுகாதாரம்.

ஜூலைமாதத்தின் 29 வது பக்கத்தின் தொடர்ச்சி மேற் சொல்லியிரு
க்கும் ஏத்தமதேகத்திற்கு முக்கிய ஆதாரமான வாய்வு - தேய்வு - இவை
களைப்பற்றி சொல்வோம் - வாய்வு என்பது காற்று - தேய்வு என்பது
ஜலம் ஜீவராசிகள் ததா உட்கொள்வது காற்று உட்கொள்ளும் காற்று
சுத்தமானதாக இருக்கவேண்டும் என்பது சகலருக்கும் தெரிந்த விஷயமா
யினும் பெரும்பான்மையோர் அதில்கவனம் செலுத்துகிறதில்லை பகுத்த
றிவு - ஞானம் வகுத்தமானிடப் பிறவிகளாகிய நாம் தேகசுகத்தை நோக்கி
ஸ்வாதஸ்த்தோடு உட்கொள்ள நல்ல காற்றை விருத்தி செய்யவும் கெட்
டகாற்றை குறைக்கவும் வகைதேட வேணும் நமது தேசத்தை ஆளும்
ஆங்கிலேயர்கள் தாங்கள் வசிக்கும் பங்களாக்களில் உள்ளும் புறமும்
தொட்டிகளில் செடிகளில் வைத்து வதிர்க்கிறார்கள் - நாம் வெளியிலே



[illegible]ற்று கெட்டகாற்று, அதை அச் செடிகள் ஆக்கிரமித்துக்கொள்கின்
றன. சில புஷ்பசெடிகளின் புஷ்பவாசனையை அவர்கள் ஸ்வாஸத்தோடு
உட்கொள்ளுகிறார்கள். மேலும் அவைகள் அவர்கள் வீட்டிற்கு அலங்கா
ரத்தையும் அழகையும் விளைப்பதோடு மனசுக்கு ஒருவித சந்தோஷத்தை
யும் கொடுக்கிறது. நமது கிராம வாசிகளோவெனில் தங்கள் வீட்டின்
உள்ளும் தாழ்வாரத்திலும் திண்ணைகளிலும் கொறடுகளிலும் ஆடு, மாடு,
எருமை முதலியதை கட்டிக்கொண்டு அவைகளின் சாணம், கோமயம்
முதலியவற்றால் உண்டாகும் சகிக்கக்கூடாத துர்க்கந்த நாற்றத்தை உட்
கொண்டு பற்பல நோய்களுக்கு ஆதாரம் தாங்களே தேடிக் கொள்ளுகிறா
ர்கள். மேலும் அவர்கள் வீடுகள் தாழ்ந்து இருப்பதால் காற்றுப்போது
மானவரையில் செல்லாததால் அடிநிலம் ஓதமாயும் இருக்கின்றன. வீட
இப்படி இருப்பதால் வீட்டில்விழும் ஜலம் வெளியே [illegible]தியான ஜல
[illegible]ரைகள் இல்லாமலும் தெருக்களில் டிச்சுக்கால்கள் இல்லாமலும் ஜலம்
குட்டைகுட்டையாய்தேங்கி அக்குட்டைகளில் புழுக்களுண்டாகி கெட்ட
நாற்றத்தை வீசுகின்றது. சிலர் மாடுகட்ட பிரத்தியேகமாய் கொட்டகை
[illegible]க்கிறார்கள். தன்சுயசௌகரியத்தை நாடியவீட்டை சுத்தமாய்வை
[illegible]தவன் மாட்டின் சுகத்தைப்பொறுத்த கொட்டகையை எவ்வளவு
[illegible]த்தமாய் வைத்திருப்பான் என்பதை நாமே யூகித்துக்கொள்ளவேண்டும்.
அவர்கள்சாப்பிடும்ஜலம் எவ்வளவுசுத்தமானது என்றுபார்ப்போம்? குடிக
ளுக்கு தங்களூர் ஆறு-குளம்-குட்டை-கிணர்-இவைகளில் உள்ள ஜலம்தா
ன்முக்கியமானது-அவைகளையும் சுத்தமாய்வைக்கிறதில்லை. ஆற்றிலும் ஆற்
[illegible]க்கரையிலும்குளக்கரையிலும் பிரேதங்களைபுதைத்தும் தகனம்செய்தும்
[illegible]கிறார்கள். புதைப்பதோ சென்னையில் புதைக்கிறபடி 6-அடி ஆழம்
[illegible]டி புதைக்கிற தில்லை. முழங்கால் பள்ளத்தில் புதைத்து விடுகிறார்
[illegible] அப்பிணங்களை நாய் நரி இழுத்து வெளியே போட்டு கழுகு, காக்
[illegible]கள் பிடுங்கித் தின்று கிடப்பதையும் நாம் நேரில் பார்த்துவருகிறோம்.
[illegible]னம்செய்யப்பட்ட பிரேதத்தின் எலும்பையும் சாம்பலையும் மழைஜலம்
[illegible]ரி, குளம், குட்டைகளில் கொண்டுவந்து சேர்க்கிறது. மேலோடு புதை
[illegible]கப்பட்டு அழுகி இருக்கும் பிரேதத்தின் ஜலம் ஊற்று வழியாக
[illegible]குளம்-குட்டைக்கு வருகிறது, இதல்லாமல் குடிகள் தங்கள் மாடு
[illegible]த்த தண்ணீரிலேயே கழுவுகிறார்கள், வண்ணான் ஒரு பக்கம் பழ
[illegible]யானவும் தொத்து வியாதியஸ்தர் அணிந்திருந்தவுமான துணி
[illegible] வருகிறான். ஒருபக்கம் குடிகள் ஸ்நானம்செய்து தங்
[illegible]ரத்தின் அழுக்கை சேர்க்கிறார்கள். இப்பேர்பட்ட நீர்நிலையில்
[illegible]துக்கு ஒருபக்கம் குடிகள் ஜலம் எடுத்துப் போய் அதை உட்கொ
[illegible]கள் அல்லவா? ஆங்கிலேயர் ஆளுகையால் விவேகமும் நாகரீக
[illegible] அதிகரித்து வரும் இக்காலத்தில் கிராம அதிகாரிகள் பொது நன்

மையை அனுசரித்து கூடுமானவரையில் கொஞ்சம் கொஞ்சமாய் நாளடைவில் மேல் கண்ட கெட்டவழக்கங்களை நயபயத்தால் மேலும் மேலும் விர்த்திக்கு வராதபடி தடுத்து தங்கள் கிராம ஜனங்களுக்கு சுட்டிக்காட்டி போதித்து சீர்படுத்தி சுகாதாரமான ஏற்பாடுகளை செய்வித்து தாங்களும் குடிகளும் சுகமாயும் சௌக்கியமாயும் இருத்தல் நலம். கிராம அதிகாரிகளாயுள்ளவர்கள் தாங்கள் முன்னதாக தங்கள் வீடு, கொட்டகை, கிணர் முதலியதை சுத்தப்படுத்தி மற்றவர்களை அதுபோல் நடக்கும்படி செய்விக்க வேண்டியது. தன் வீட்டை அசுத்தமாய்வைத்துக் கொண்டு வேறு ஒருவனை சுத்தமாக வை என்றால் அது நடக்குமா? வீட்டிலும் தொழுவங்களிலும் சேரும் குப்பை சாணம் முதலியதை தூரமான இடத்தில்சேர்த்துவைக்க செய்யவேண்டியது, அப்படிசெய்வதால் ஒருவர் சாணத்தை ஒருவர் திருடிப்போய் விடுவார்கள் என்று நினைக்கில் உயரமான சுவர்கள் நாற்புறமும் போட்டு அதின்மத்தியில் கொட்டும்படி செய்ய வேண்டியது. மாடு கழுவ, ஸ்நானம் செய்ய ஒருகுளமும், பானத்துக் கொரு குளமும் இம்மாதிரியாக கிராமத்திலுள்ள ஜல ஆதாரங்களை ஏற்படுத்திக் கொண்டு பானத்துக்கு உபயோகமாக உத்தேசித்த குளக்கரையில் பிரேதம் புதைக்காமலும் தகனம்செய்யாமலும் ஸ்நானம்செய்யாமலும் பாதுகாத்து வரவேண்டியது. அவசியமானால் மாஜிஸ்திரேட்டுக்கு எழுதி அவரிட நோட்டீசை தருவித்து கிராமத்தில் பிரசித்தப்படுத்திவைத்து அதை மீறி நடப்பவர்களைப் பற்றியும் மாஜிஸ்திரேட்டுக்கு ரிபோர்ட்டு செய்து தண்டனைக்கு உள்ளாக்கவேண்டியது. பலபேர் பொருட்டு ஒருவன் துன்பமடையலாம் ஒருவனுக்கு சிட்சைகிடைத்ததை பார்த்தால் மற்றவர்கள் அம்மாதிரி அக்கிரமங்களுக்கு பிறவேசிக்கமாட்டார்கள். இதேமாதிரி வீடு தொழுவம் சுத்தமாய் வைத்திருப்பதைப்பத்தி கிராமத்தின் பேரில் அடிக்கடி பீட்டுவரும் போலீஸ் கான்ஸ்டேபிலைக்கொண்டு ரிபோர்ட்டு செய்வித்து சீர்திருத்தவேண்டும். கிராமத்தாருக்கு முன்னதாகவே சுத்தமாய் வைத்திருக்கும்படி திட்டம் செய்யவேண்டியது. அப்படி பலதடவைகளில் சொல்லியும் கேளாதவர்களைப் பற்றி ரிபோர்ட்டு செய்ய வேண்டியது. இப்படி சுத்தமாயுள்ள கிராமத்தில் எவ்வித தொத்து வியாதியும் பரவாது. கிராமம் எந்த உத்தியோகஸ்தர் எந்த காலத்தில் பார்த்தபோதிலும் கிராமத்தை சுத்தமாய் கிராம அதிகாரிகள் வைத்து இருக்கிறார்கள் என்பார்கள், குடிகளும் நாகரீகமடைவார்கள் - ஆசாரத்துக்கும் சுத்தத்துக்கும் குறைவுயிராது.

---



## ரிவினியுபோர்டாரிட புரோஸீடிங்ஸ்கள், கலெக்டரவர்களிட ஸ்டாண்டிங் ஆர்டர்கள், சர்க்கியுலர்கள்.

## செங்கல்பட்டுஜில்லா கலெக்டர்சர்க்கியுலர்.

வசூலான டிமாண்டு ஜப்திமுதலிய நடவடிக்கைகளுக்கான படியின் மொத்தத்தை வசூலாகவேண்டிய மொத்தமாக ஜமாபந்தி 8 B கணக்கில் காட்டுவது, இந்த ஜில்லாவில் அனேக தாலூகாக்களில் வழக்கமாக இருக்கிறது. இதனால் மோசத்துக்கு எவ்வளவு இடமுண்டாகிறதென்பது ஸ்பஷ்டமானதே. ஆகையால் டிமாண்டு ஜப்தி வகைரா நடவடிக்கைகளுக்காக வரவேண்டியபடியை வசூல்செய்து கணக்குக்கு கொண்டுவரவேண்டிய விஷயத்தில் அடியில்கண்ட உத்திரவு பிறப்பிக்கப்படுகிறது:—

(1) இந்த ஜில்லாவில் அடியில்கண்ட தாமேஷாப்பிரகாரம்படி வசூல் செய்ய கலெக்டரவர்கள் அனுமதிகொடுத்திருக்கிறார்கள்:—

(a) டிமாண்டு நோட்டீஸ் சார்வுசெய்ய பட்டா ஒன்றுக்கு 2-அணா.

(b) அசையும்பொருள் ஜப்தி செய்வதற்காக ஒவ்வொரு பட்டாவுக்கும் 2-அணா அதிகபடி. அசையாப்பொருள ஜப்திசெய்வதற்காக ஒவ்வொரு பட்டாவுக்கும் 4-அணா அதிகபடி.

(c) அசையும் பொருளோ, அசையாப்பொருளோ ஏலம்போடபட்டா ஒன்றுக்கு அதிகபடி 4-அணா. குறிப்பு.—ஒருரூபாய்க்கு குறைந்தபாக்கிக்கு ப்ராஸஸ்படி வசூல் செய்யக்கூடாது.

(2) ப்ராஸஸ் ஸார்வு செய்யும்போது ப்ராஸஸ்ஸர்வர் ஆஜரிருந்தாலும் இல்லாவிட்டாலும் டிமாண்டுபடி வசூல்செய்து விடவேண்டியது.

(3) டிமாண்டுநோட்டீஸ் ஸார்வுசெய்வது அசாத்தியமாயிருந்தால் நோட்டீஸின் ஷெரூகலத்தில் அதன் காரணத்தை காணவேண்டியது.

(4) ப்ராஸஸ் வாப்ஸ்வந்ததும் படியானது சரியாய் விதிக்கப்பட்டு கிரமமாய் வசூல்செய்யப்பட்டதா என்று தாசில்தார்பார்க்கவேண்டியது.

2. ப்ராஸஸ் ஸர்வர்கள் தாங்களே வசூல் ஒன்றும் செய்யவேகூடாது. வசூலெல்லாம் கிராம முன்சிபே செய்யவேண்டியது. ப்ராஸஸ் ஸார்வு செய்யும்போது கிராம முனிசிபு தவராமல் கூட இருக்கவேண்டியது.

3. சர்க்காருக்கு வரவேண்டிய பணத்தை வேணுமென்று கட்டாமல் வஸம்செய்கிற குடிகளிருக்கும் கிராமங்களுக்கல்லாமல் இதர கிராமங்களுக்கு வசூல் வேலைக்காக ப்ராஸஸ் ஸர்வர்களை அனுப்பக் கூடாது. ரிவினியு இன்ஸ்பெக்டர்கள் 1 கெ-டிமாண்டு பிறப்பிக்கும் காலத்தில் வாய்தா கடந்து பாக்கி யிருக்கும் மொத்தத்தை அனுசரித்து இந்த கிராமங்களை குறிப்பிடவேண்டியது. இப்படி குறிப்பிடுவதில் ஒருமுனிசிபினுடைய

வட்டத்திலுள்ள கிராமங்களுக்குமேல் அதிகமான கிராமங்களில் ப்ராஸஸ் சார்வுசெய்ய ப்ராஸஸ் சர்வர்களை அனுப்பாமல் ஜாக்கிறதையாய் பார்த்துக்கொள்ளவேண்டியது.

4. ப்ராஸஸ் சர்வர்களை ஏற்படுத்தினால் உபயோகிக்கவேண்டிய பாரங்களை சிவப்பு காகிதத்தில் அச்சுப்போட்டு தாசில்தார்களுக்கு அனுப்பப்படும்.

தேவையான பாரங்களுக்கு கஜானா டிப்டி கலெக்டரவர்களுக்கு இண்டெண்டு அனுப்பிக்கொள்ளவேண்டியது.

---

சர்வே பரிட்சையில்பாஸ்பண்ணும் கணக்குவேலையில்லாத மனுதாக்கர்களுக்கு ஒவ்வொரு சர்டிபிகேட்டு அல்லது ஒவ்வொரு சர்டிபிகேட்டின் நகல் கொடுக்கும்போது ஒரு ரூபாய் கட்டணம் வசூல் செய்யவேண்டுமென்று 1903ஹு ஜூலைமீ 28உயுள்ள 262 நெ. S. L. R. புரோசிடிங்கில் போர்டார் அவர்கள் உத்திரவு செய்திருக்கிறார்கள்.

---

இந்த ஆபீசிலிருந்து பிறப்பிக்கப்பட்ட மார்ஜனில் குறித்த சர்கியுலர்களில் கிராமத்தலைவர்கள் செய்யும் வேலையைப்பற்றி தினசரி எழுதிவரவேண்டியதென்ற உத்தரவை இதனால் ரத்துசெய்யப் பட்டிருக்கிற சங்கதி எல்லா தாசில்தார்களுக்கும் அறிவிக்கப்பட்டது.

1896ஹு ஜூன்மீ 13உயுள்ள சர்கியுலர்.
1900ஹு ஜனுவரிமீ 27உயுள்ள 1559 D. நெ. சர்கியுலர்.
1900ஹு அக்டோபர்மீ 4உயுள்ள 2144D.நெ. சர்கியுலர்.

## வட ஆர்காடு ஜில்லா கலெக்டர் சர்க்கியுலர்.

இந்த ஜில்லாவில் தீர்வை பைசலாதி செய்யப்படும் ஊழியமானியங்களை சர்வே செய்வதற்காக பிடிக்கும் கல்லுகளின் செலவும் கூலிகளின் செலவும் 1897ஹு மதருஸ் 4 - வது ஆக்டின் 9-வது செக்ஷன்படி முதலில் லோகல் கவர்ன்மெண்டாரால் கொடுக்கப்பட்டு பின்பு இனாம்தார்களிடமிருந்து வசூல் செய்யப்படும்.

---

ஸ்ட்ரெயிட்ஸ் செட்டில்மெண்ட்ஸ் என்னும் இராஜ்ஜியத்தின் கவர்ன்மெண்டாரால் அங்கீகரிக்கப்படும் ரிக்ரூடர்கள் மதுரை கம்பெனியாரால் கொடுக்கப்பட்ட லைசென்சு உடையவர்கள் மாத்திரமே. அப்படி லைசென்சு கொடுக்கப்படாதவும் ஆனால் மதுரை கம்பெனிக்காக ஏஜண்டாராக தன்னை சொல்லிக்கொள்ளும் யேதோ ஒருரிக்ரூடர் கிரிமினலில் விசாரணைக்குள்படலாம்.



2. கிராமங்களின் ஹெட் அதிகாரிகள் தண்டோராமூலமாயும் நேராகச் சொல்லுவதாலும் இந்த விஷயத்தை எல்லாருக்கும் தெரியும்படியாகச் செய்யவேண்டும்.

## தஞ்சாவூர் ஜில்லா கலெக்டருடைய சர்க்கியுலர்.

நெ. 10. 1903ஹு நவம்பர்மீ 17உயுள்ள, 1903ஹுத்திய R Dis. நெ. 1, 147-ரி.

கிராம உத்தியோகஸ்தர்கள் முனிசிபல் கவுன்சிலர்களாக நியமிக்கப்படும் பொருட்டு காண்டிடேட்டுகளாயிருக்க விரும்பினால் இனி ஜில்லா கலெக்ட்டர் துரையவர்களுடைய முந்திய அனுமதியை பெற்றுக்கொள்ள வேண்டுமென்பதாயும் அந்த விஷயங்களில் கலெக்டர் துரையவர்களுடைய உத்தரவுமுடிவானதென்றும் போர்டாரவர்கள் 1903ஹு அக்டோபர்மீ 2உயுள்ள 199-ம் ந. Press ஸா. ரி. புரோசீடிங்கில் உத்தரவு செய்திருக்கிறார்கள்.

2. முனிசிபல் எலெக்ஷன்களில் காண்டிடேட்டுகளாக வர இச்சிக்கும் கிராம உத்தியோகஸ்தர்கள் தாசில்தார், டிவிஷனல் ஆபீசர் துவாரா இந்த ஆபீசுக்கு (ஒவ்வொருகேசிலும் சரியாய் தருந்தகாலத்தில் உத்திரவுகள் பிறப்பிவிக்கும்படியாய்) தங்களுடைய விண்ணப்பங்களை சாங்கிஷனுக்கு அனுப்பவேண்டும்.

## மதுரை ஜில்லா கலெக்டருடைய சர்க்கியுலர்.

ரிஜிஸ்திரார் நோடீஸ்.

1882ஹுத்திய VI-வது பிரிவில் கண்டிருக்கிற இந்தியன் கம்பெனி ஆக்ட்டின் பின்வரும் நிபந்தனையை இந்த ஜில்லாவில் ஷை ஆக்ட்டுப்படி ரிஜிஸ்தர்செய்யப்படாத கம்பெனிகளுக்கு தெரிவிக்கப்படுகிறது:—

"ஒரு கம்பெனியாக இந்த ஆக்டுப்படி ரிஜிஸ்தர் செய்யப்பட்டாவது அல்லது பார்லிமெண்டாரவர்களுடைய சட்டத்தையனுசரித்தாவது ஆலோசனைசபையிலுள்ள கவர்னர்ஜனரலவர்களுடைய வந்த சட்டப்படிக்காவது ராயல் சார்டர்படிக்காவது அல்லது லெட்டர்ஸ் பேடண்டுபடிக்காவது ஏற்படுத்தப் பட்டாலொழிய பணசம்மந்தமான (Banking) காரியங்களை நடத்துவதற்காக 10-பேர்களுக்கு மேற்பட்ட கம்பெனி, சபை, அல்லது கூட்டுப்பங்கு, ஏற்படக்கூடாது. மேலும் கம்பெனி, சபை, கூட்டுப்பங்கு, இவைகளினுலாவது அவைகளில் சேர்ந்த பிரதி மெம்பர்களினுலாவது லாபம் அடைய உத்தேசித்து வேறு காரியங்களை நடத்துவதற்காக இந்த சட்டத்தின்படி கம்பெனியாக ரிஜிஸ்தர்செய்யப்பட்டும், வேறு

ஸ்தானத்துக்கு அழைத்துப் போனதாகவும் அந்தபெண் சுய இச்சையாய் தன் இந்து மதத்திலிருந்து மாறிவிடப்போனாள் என்று சொல்வதை நம்புவது கூடாமை என்றும் தகப்பன் போய் பெண்ணை வீட்டுக்கு அனுப்பும்படி கேட்டும் அப்போது அந்தபெண் தன்சுய இச்சையாய் அவ்விடம் வந்ததாக மறுமொழியளிக்கப்பட இல்லை என்றும் அந்த பெண்ணின் இஷ்டம் எப்படி இருந்த போதிலும் அவள் 18-வயதுக்கு உள்பட்டிருப்பதால் கார்டியனான தகப்பன் கேட்டபோதே போகமாட்டேன் என்று பெண் சொன்ன போதிலும் தகப்பன் வசம் விட்டு விட்டிருக்க வேணும் என்றும் அபிப்பிராயம் கொடுத்து சிட்சையடைந்திருந்த தகப்பனையும் இரண்டு சாட்சிகளையும் விடுதலை செய்யும்படி தீர்ப்பு சொன்னார். தீர்ப்பு, தேதி. (30-11-03.)

---

நாளது௵ அக்டோபர்௴ 28௳ புதன்கிழமை ஹைகோர்ட்டு ஜஸ்டிஸ் பென்சன் துரை அவர்களிடத்தில் சாணார் குலசம்மந்தமான கேள்வியையுடைய ஒரு ரிவிஷன் மனுவைப்பற்றி ஐகோர்ட்டு வக்கீல் கே. ஆர். சுப்பிரமணிய சாஸ்திரி வாதம்செய்தார். திருநெல்வேலிஜில்லாவில் ஒருகிராம முன்சீபு சாணார்வகுப்பில் சேர்ந்த ஒருவனை தொழுக்கட்டையில் அடைக்கும்படி தீர்ப்பு செய்தார். அதைப்பற்றி இந்த ரிவிஷன்மனு. சென்னை 11-வது ரெகுலேஷன்படி இழிகுலத்தோர் மாத்திரம் இம்மாதிரி தெண்டனைக்கு அருகமானவர்கள் என்றும் அம்மாதிரி சாணாரை இழிகுலத்தாராக பாவிக்கக்கூடாதென்றும வக்கீல் தெரிவித்துக் கொண்டார். பறயர்-சக்கிலிகள் மாத்திரம்தான் இழிகுலத்தாராக எடுக்கப்பட்டிருக்கிறார்கள் என்றும் சொன்னார். வைக்கில் அபிப்பிராயத்தில் ஜட்ஜி கலவாமல் சாணார் தாழ்ந்தஜாதிக்கு சம்மந்தப்பட்டவர்கள் என்று தீர்ப்புசொன்னார்.

---

வலவநாடு டிஸ்திரிக்ட்டு முன்சீபு கோர்ட்டில் பிரதிவாதி வக்கீலாகிய கோமன் மேனன் என்பவர் விசாரணைகாலத்தில் வாக்குமூலம் கொடுத்த வாதி சாட்சிசொன்னது ரூ.200-என்றும் 250-ரூ. அல்லவென்றும் தானினைத்து மறுபடி அதே சவால் கேட்டும் சாட்சி ரூ. 250 என்று சொன்னார் அதன்பேரில்



சீபு வக்கீல் கொஞ்சம் செவிடாயிருப்பதால் பிசகிவிட்டார் என்று ரிமார்க்கு செய்தார். வக்கீல் அதற்கு "ஓ" "நான் அல்ல" என்று பதில்சொல்லி அங்கிருந்தவர்களைப்பார்த்து 200 ரூ. என்றும், 250ரூ. அல்லவென்றும் சாட்சி சொன்னதை நீங்கள் கேட்கவில்லையா என்றும் கேட்டார். முன்சீபு இதை கோர்ட்டாரை அலட்சியம் செய்த குற்றமாகபாவித்து மேற்படி வக்கீலுக்கு 10-ரூ: அபராதம் விதித்தார். தென் மலையாளம் ஜில்லாஜட்ஜியிடம் அப்பீல்செய்ததில் வக்கீல் நான் அல்ல என்று சொன்னவார்த்தையானது முன்சீபு பொய்யன் என்று ஏற்படுகிறது. இதைவிட பெருத்தகுற்றம் ஒன்றுமில்லையென்று அபராதத்தை காயம் செய்தார். இதைப்பற்றி ஐகோர்ட்டில் அப்பீல் செய்ததில் முன்சீபு தீர்ப்பில் பிறவேசிக்க காரணம் ஒன்றுமில்லை என்றுசொல்லி அப்பீலை ஜஸ்டிஸ் போடம் துரை அவர்கள் தள்ளிவிட்டார்.

---

## உடந்தையின் சாட்சி.

கொயமபுத்தூர் ஜில்லாவில் ராமசாமி கவுண்டன் பெண்சாதி அங்காயி என்பவள் தனக்கு ஜீவனாம்சம்கொடுக்கும்படி தன்புருஷனைக்கேட்டும் அவன் மறுதலித்ததால் அவன்கொடுக்கும்வரையில் தோட்டத்தைவிட்டு போவதில்லை என்றும பலபேரிடத்தில் சொல்லி அவனை பங்கப்படுத்துவதாகவும் சொன்னாள் அந்தஇராக்காலத்தில் கூட இருந்த 16-வயதுள்ள ஒருபையன் கெட்டபாரை ஒன்றை கொண்டுவந்து கொடுக்க அதனால் இராமசாமிகவுண்டன் தன்பெண்சாதியை அடித்துகொன்றுவிட்டான். பிரேதத்தை ஒரு இடத்தில் உடனே மூடி விடப்பட்டது. 14-நாள் கழித்து பையனால் சங்கதிதெரிந்தது. இந்தபையன் ஒருவன் தான் நேரில்பார்த்தசாட்சி. செஷன்ஜட்ஜி விசாரித்தார். அசெஸ்ஸர்கள் குற்றவாளியை விடுதலைசெய்யவேண்டும் என்று சொன்னார்கள் செஷன்ஜட்ஜி ஒப்பாமல் தூக்கு தண்டனைவிதித்தார். அந்த தீர்ப்பின் பேரில் ஐகோர்ட்டில் அப்பீல் செய்யப்பட்டது. அப்பீல் விசாரணைசெய்த இரண்டு ஜட்ஜிகள் அபிப்பிராயம் பேதப்பட்டு மூன்றாவது ஜட்ஜிக்கு ரிபர்செய்யப்பட்டது. மூன்றாவது ஜட்ஜி பாஷ்யம் ஐயங்கார் சீப் ஜட்ஜி சுப்பிரமணி ஐயர் அபிப்பிராயத்துடன் கலந்து 14 நாள் பொறுத்து சங்கதி வெளியிட்டதினாலேயே

அதை நம்பக்கூடாது என்று இரண்டாவது ஜட்ஜி போடாம்சொ
ல்வதுபோல் சொல்ல நியாயம் இல்லையென்றும் உடந்தையாக பா
விக்கக்கூடாதென்றும் இதர சாட்சிகளால் உறுதிப்படுத்தாமலிரு
ந்தாலும் அவன் சொன்னதை வாஸ்தவம் என்று பாவிக்க வேண்
டுமென்றும் அபிப்பிராயம் சொல்லி தூக்குதண்டனையே விதிக்க
வேணும் என்று தீர்ப்பு சொன்னார். 30-11-03-ல்.

## புறம்போக்கு நிலங்களுக்கு விதிக்கும் [அபராத தீர்வையைப்பற்றி] சென்னை ஐகோர்டாரிட தீர்ப்பு.

சென்னை ஐகோர்ட்டில் சீப்ஜஸ்டிஸ் சுப்பிரமணியஐயர்-ஜஸ்
டிஸ் போடாம்,ஜஸ்டிஸ் பாஷியம் ஐயங்கார், உள்ள-புல்பென்சில்
சில நாள்களுக்கு முன் திருச்சி ஜில்லாவிலிருந்து வந்த இரண்
டாவது அப்பீல் விசாரணையில் 1903ஞ டிசம்பர்மீ 2உ யில்
ஒரு தீர்மானம் செய்தார்கள். அதாவது. புறம் போக்கு நிலங்களி
லும், நஸ்தாக்களிலும குடிகள் உத்திரவன்றி பிரவேசித்து சா
குபடிசெய்தால் அவைகளுக்கு அபராதத்தீர்வைவிதிக்க கவர்ன்மெ
ண்டாருக்கு நியாயமான பாத்தியதை கிடையாது என்று எல்லா
ஜட்ஜிகளும் ஒரேவிதமான அபிப்பிராயப்பட்டு தீர்மானம் செய்
திருக்கிறார்கள். இது நீடித்த நாளாக வசூலாய் வருவதாயிரு
ந்தாலும் இதற்கு போதுமான ஆதரவு இல்லை என்றும் சொல்வ
துடன் ஜஸ்டிஸ் பாஷியம் ஐயங்கார்-ரிவினியுஅதிகாரிகளும்சட்ட
நிரூபண அதிகாரிகளும் நடந்துகொள்ள வேண்டியதற்கு வேறே
பிரேரேபணைகள் செய்திருப்பதாயும் சீப்ஜட்ஜி அவர்கள்குடிகளி
டத்தில்கவர்ன்மெண்டாருக்கு உள்ள பாத்தியதையும் கடமை
யும் விவரமாய் சொல்லியிருக்கிறார் என்றும் தெரியவருகிறது.
இது விஷயமாய் வருகிற பத்திரிகையில் மற்ற விவரம் தெரிவிக்
கப்படும்.

# TELEGRAMS.

## தந்திசமாசாரங்கள்.

### சோமாலி படை எழுச்சி.

ஆங்கிலேயருக்கு சிநேகிதரான இல்லேலோ என்றஜாதியர்
முல்லாவின் வெளிச் சேனையுடன் டாமர்ட் என்றஇடத்தில் ச
டைசெய்து 30 பேரைக்கொன்று அதை துரத்தி யடித்தார்கள்.



சோமாலிலாண்டில் சொமாலிஜாதியாரால் அமைக்கப்பட்ட
பட்டாளம் கலகம்செய்து முல்லாவோடுசேர்ந்துவிட்டார்கள் என்
றவதந்தி கிளம்பி யிருக்கிறது ஆனால் அது இன்
னம் உறுதிப்படவில்லை.

டிசம்மர்மீ 9உ பல்கேரியாகலகக்காரர்கள் சிலர் ஐரோப்பா
துருக்கியிலுள்ள ஆட்ரியாநோபிலின் எல்லையை கடந்து டெவி
டிப் என்ற இடத்தருகில் துருக்கி கோட்டைகளை தாக்கினார்
கள். ஆனால் அவர்கள் மிக நஷ்டத்துடன் தோற்கடிக்கப்பட்டதாக
சொல்லிக்கொள்ளப்படுகிறது.

### டிரான்சுவால் சட்டம்

### லண்டன், டிஸம்பர் 14உ டிரான்ஸ்வால்

சேம்பர் ஆப் காமர்ஸின் எல்லாப் பாகத்தாரும் ஒரு விசே
ஷக்கூட்டமொன்று நாளது மாதம் 18-ந்தேதி கூட்டப்போகி
றார்கள்; அப்போது டிரான்ஸ்வாலில் கடைகள்விஷயமாய் எற்ப
ட்டசட்டத்தைக் கண்டிப்பாய் நடத்தாமல் துரைத்தனத்தார்பின்
வாங்கினதைப்பற்றித் தடுத்துபேசப்படும். இதே கருத்துடன்
ஒருபொது ஜனக்கூட்டமும் நடக்கும்படி எற்பாடுகள் நடந்து
கொண்டிருக்கின்றன.

### இட்டாலியும் கிரேட்பிரிட்டனும்.

லண்டன், டிஸம்பர் 13உ இட்டாலிபாரலிமெண்டில், ஆங்
கிலேயக் கப்பலாகிய மாஹவாக என்ற கப்பலின் காப்டனாகிய
காண்ட் என்பவர் இட்டாலிக்குச்செய்த உபகாரத்தைப்பற்றி இட்
டாலி நன்றியுள்ளதாயிருக்கிறதென்று ஸீனியர்ஸாண்டனியென்
றவர் தம் நாட்டார் பக்கமாய்ச் சொன்னார். இட்டாலிகப்பற்படை
யும் ஆங்கிலேயர் கப்பற்படையும் ஒன்றுக்கொன்று எப்போதும்
அனுதாபமும் மதிப்பும் வைத்து சிநேகத்துடன் ஒற்றுமையாயி
ருக்கின்றன என்று இட்டாலி கப்பற்படை மந்திரி சொன்னார்.
இத்தமாதிரி உபகாரம்செய்த காப்டன் காண்டுக்கு இட்டாலிநாட்
டார்போல் உபசாரமும் வந்தனமும் அனுப்பியிருப்பதாகச் செ
ன்னவுடன் பார்லிமெண்ட் மெம்பர்கள் ரொம்பவும் சந்தோஷப்
பட்டார்கள்.

டிசம்பர்மீ 10உ-வியாழக்கிழமை காலை 5-மணிக்கு சண்டிரிங்ஹாம் மாளிகையில் மகாராணியின் படுக்கை அறையின் இழ் அறையிலிருந்த மிஸ்கொல்வி என்கிற துரைசாணி தன் அறை புகையால் மூடப்பட்டிருப்பதைக்கண்டு உடனே ஓடி மகாராணி அவர்களை எழுப்பினார். இருவரும்படுக்கை உடுப்புடன் வெளியே ஓடிவந்தனர். அவர்கள் படியருகில் வந்ததும் மகாராணியின் படுக்கை அறை நெருப்புக்கு இரையாகி விழுந்துவிட்டது. கர்ந்தக்கம்பி மர உத்திரத்தில் தாக்கி நெருப்பு உண்டாயிற்றாம். நெருப்பு இரண்டு அறை பற்றிய உடனே அணைக்கப்பட்டு விட்டது. மகா இராஜா அவர்கள் அக்காலம் லார்டு இவி என்பவரை பார்க்கபோயிருந்தார். மகாராணி அவர்கள் உடனே அவருக்குதெரியமாய் ஒரு தந்தி அனுப்பினார்.

---

லண்டன், டிசம்பர் 14உ கப்பற்படையதிகாரிகள் ஒருபுதிய உத்தரவு வெளியிட்டிருக்கிறார்கள். அதில் கப்பற்படைத் தலைவர்கள் கப்பற்படையில் உழைக்காமல் போனதால் அதைவிட்டு ஒழியவேண்டிய ஏற்பாட்டு விஷயத்தில் அப்படி உழைக்காதகாலம் 2-3½-வருஷ காலமட்டுக்கும் குறைக்கப்பட்டதென்றும், அப்படைத்தலைவர்கள் கரையில் 5-வருஷம் வரையில் உழைக்கவேண்டுமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது; அன்றி 1907-ம் வருஷத்தில் கப்பற் படைத்தலைவர்கள்: 12. அட்மிரல்கள், 22 - வைஸ் அட்மிரல்கள், 55-ரியர் அட்மிரல்கள், 253 - காப்டன்கள், 371- கம்மாண்டர்கள், இப்படியிருக்கும்படி வரவர அதிகமாவார்கள் என்றுசொல்லப்பட்டிருக்கிறது. இந்த உத்திரவுமிகதிருப்திகாமாய்காணப்படுகிறது. இதனால் கப்பற்படை உத்தியோகஸ்தர்களுக்கு அப்படையில் ஊக்கத்துடனும் ஆவலுடனும் வேலை செய்து மேல் மேலும் உயர் பதவிபெற இடமுண்டாயிருக்கிறதுமன்றி இந்த உத்திரவால் வெகு சாமர்த்தியவான்களே படிப்படியாய் பெரும் வேலைக்குப்போக இடமுண்டு.

---

இதுகாலம்வரையில் தெய்வ சித்தத்தால்தான் மழை பெய்கிறது என்று நம்பியிருக்கிறோம் அல்லவா. ஆஸ்திரியாகண்டத்தில் மெக்கார்த்தி என்பவர் தன் சுயமுயற்சியைக் கொண்டு மழைபெய்வித்ததாக தெரிய வருகிறது.